T. 1749

SRI VENKATESVARA ORIENTAL SERIES—No. 19.

EDITOR :—PROF. P. V. RAMANUJASWAMI, M.A

# சங்கர விலாசம்

சிதம்பரநாதகவி

இயற்றியது.

பதிப்பாசிரியர் :

வித்வான்

T. P. பழனியப்ப பிள்ளை B.O.L.

தமிழ் ஆராய்ச்சியாளர்

SRI VENKATESVARA ORIENTAL INSTITUTE • TIRUPATI •

आनन्दनिलयम्

திருவேங்கடேசுவரன் கீழ்க்கலை ஆராய்ச்சிக் கழகம்

திருப்பதி.

1950

PRINTED AT
T. T. D. PRESS,
TIRUPATI.
250 Copies
24-1-'50

# முகவுரை

சொற்பாவும் பொருள்தெரிந்து தூய்மை நோக்கித
தூங்காதார் மனத்திருளை வாங்கா தானை
நற்பான்மை யறியாத நாயி னேனை
நன்னெறிக்கே செலும்வண்ணம் நல்கி ஞானப்
பற்பாவும் வாயாரப் பாடி யாடிப்
பணிந்தெழுந்து குறைந்தடைந்தார் பாவம் போக்க
கிற்பானைக் கீழ்வேளூ ராளுங் கோவைக்
கேடிலியை நாடுமவர் கேடி லாரே.

சங்கர விலாசம் என்பது சைவ சமய முழுமுதற் கடவுள் ஆகிய சிவ பெருமானுடைய திருவருள் சிறப்புகளைப் பாவி உரைக்கும் நூல் ஆகும். சிவ பெருமான் திருவிளையாடல்களும், சிவபத்தர் வழிபாட்டுத் திறங்களும், சிவநாமம், சிவமந்திரம், சிவசின்னம், சிவ விரதம், சிவதலங்கள் இவற்றின் திறங்களும் இதன்கண் விரிவாக உரைக்கப்பட்டுள்ளன. இது வடமொழியில் புராண நூலின் மரபு பற்றிப் பயிலும் 'விலாசம்' என்ற பெயரைப் பெற்றுத் தமிழ்ச் செய்யுளால் அந்நெறியில் அமைந்துள்ளது. வடமொழியில் அகஸ்திய பக்த விலாசம், உபமந்யு பக்த விலாசம் என இருபெரு நூல்கள் உள்ளன. தெலுங்கு மொழியில் ஸ்ரீ நாதகவி இயற்றிய ஹர விலாசம், கொம்மண்ண கவி இயற்றிய சிவ லீலா விலாசம் என்ற நூல்களும் உள்ளன. இவை போலத் தமிழ் மொழியில் விளங்கும் தலைமையான நூலாகும் இது.

இனி வடமொழியில் பாமினி விலாசம் எனவும் தெலுங்கு மொழியில் மன்னாரு தாச விலாசம் எனவும் வழங்கும் நூல்கள் புராண நெறி தழுவாது காவியத்துக் குரிய ஒன்பது சுவைகளுள் சிருங்காரம் ஒன்று பற்றிப் பயில்வன சில உள்ளன. அவை வேறு நெறியின. அவற்றைப் போன்று தமிழ் மொழியில் சமுத்திர விலாசம், சந்திர விலாசம் எனச் சில நூல்கள் பிற்காலத் தெழுந்து வழங்குகின்றன. இவற்றின் இயல்பும் இந்நூலின் இயல்பும் வேறென அறிந்து கொள்ளற்பாலது.

இந்நூல் பாயிரத்து இறுதிச் செய்யுளில்

" ........................................................

அரிமதர் நெடுங்கட் செவ்வா யாவுடை மடந்தை பாகன்
றருவளாந் தருசீ ராசைச் சங்கா னருளா லோங்கும்
பொருதிரை யுலகில் யாரு முணர்வுறப் புகல லுற்றேன் "

என்று நூலாசிரியர் கூறியுள்ளமையால் இது பாண்டி நாட்டுச் சிவ தலங்களுள் ஒன்று ஆகிய சங்கா நயினார் கோயிலில் எழுந்தருளிய சிவபெருமான் திருநாமம் அமைந்தது என்று அறியப்படுகிறது. ராசை - சங்காநயினார் கோயில் என்ற திருத்தலம். அத்திருத்தலத் துக்கு வடமொழியில் ஸ்ரீராசபுரம் என்றும் தென்மொழியில் கூழை என்றும் பெயர்கள் உண்டென்றும் அவ்வடமொழிப் பெயர் இராசை என மருவி வழங்கும் என்றும் சுவாமியின் திருப்பெயர் சங்கார், சங்கரேசர், சங்கா நாராயணர், சிவசங்கரேசர், ஆவுடை நாயகர், கூழைப்பிரான் என்றும், அம்பிகையின் திருநாமம் ஆவுடை நாயகி, கோமதி என்றும் சங்கா நயினார் கோயிலந்தாதி என்ற நூலின் பதிப் புரையில் மகாமகோபாத்தியாய டாக்டர் - உ. வே. சாமிநாதைய ரவர்கள் எழுதியுள்ள விளக்கம் பற்றிக் கண்டு கொள்ளலாம். இப் பாட்டிலும் இராசை என்ற ஊர்ப்பெயரும், ஆவுடை மடந்தை என்ற அம்பிகை திருப்பெயரும் சங்கரன் எனச் சிவபிரான் திருப்பெயரும் வந்துள்ளமை கண்டு கொள்ளுக.

இது கடவுள் வாழ்த்து, பதிகம் என்ற பகுதிகளை முதலிற் கொண்டு இருபத்து மூன்று அத்தியாயப் பிரிவுகளுடன் 1435 தமிழ் விருத்தச் செய்யுள்களால் அமைந்த தாகும். இஃது ஆசிரியரால் இயற்றப்பட்ட காலம் முதல் இந்நாள் வரை உலகத்தில் நடைபெறு இயலாது ஓலைச் சுவடியின் கண்ணேயே இருந்து சில நூற்றாண்டாக ஏடு போற்றும் பீடுடையார் பாதுகாப்பானும், ஏடு பெயர்த்து எழுது வார் போற்றுதலானும் இறவாதிருந்து பின்னாளில் அன்னாரும் போற்றாக் குறையால் பிரதிகள் சுருங்கி இருளிற் கிடந்து மங்கி யருகுத லாகிப் பெயர்தானும் அறியக் கூடாத வாறு ஒழிந்தது என் பது தமிழறிஞர் இங்கு அறிய வேண்டிய செய்தியாம். 1921-வது ஆண்டு ஆகஸ்டு - செப்டம்பர் திங்களில் வெளியான மதுரைத் தமிழ்ச் சங்கத்துச் செந்தமிழ்ப் பத்திரிகை தொகுதி 19-வது - பகுதி 10-வது 313-315-ம் பக்கங்களில் திருநெல்வேலித் தச்சநல்லூர் பெயர் விழை யான் என்ற பெருந்தமிழறிஞர் " இறந்து கொண்டு வரும் தமிழ்த்

தொன்னூல்கள் " என்ற தலைப்பில் வருந்தி அறிவித்துள்ளதைத் தமி முன்பர்கள் கூர்ந்து பார்க்கக் கடவர். ஆங்கு 1. தத்துவ ரத்நாகரம் 2. ஊசிமுறி - ஆறைப் பொயிலான் உரை 3. மாற னிகண்டு 4. நாம தீப நிகண்டு பழைய உரை 5. கைந்நிலை 6. பரிநூல் 7. தொல்காப் பியம் பொதுப்பாயிரம் ஆத்திரேயன் பேராசிரியனுரை 8. சிறுகுரீஇ யுரை 9. சங்கர விலாசம் 10. மடல் 11. கொண்டல் விடுதூது என்ற தமிழ் நூல்கள் அந்நாளில் வழங்காது மடிய நின்ற நூல்களா மென அப்பெரியார் தமிழுலகிற்கு முறையிட்டால் அறிவித்து இவற் றைப் பாதுகாத்துப் பதிப்பித்தல் தமிழறிஞர் கடப்பாடெனச் சுட்டி வேண்டினார்கள். இவற்றுள் நாமதீப நிகண்டும், கைந்நிலையும் தமிழ்ப் பேரறிஞர்களால் அண்மைக் காலத்திற் பதிப்புப் பெற்று நிலவு கின்றன. எஞ்சியவற்றுள் ஒன்று ஆகிய 'சங்கர விலாசம்' என் பது இப்போது திருவேங்கடேசுவரன் கீழைக்கலை ஆராய்ச்சிக் கழகத் தின் தமிழ் வெளியீடு ஆகப் பதிப்பு எய்தியுள்ளது. தமிழ்ச் செல் வங்களில் ஒன்று ஆகிய இதனை மடிந்தொழியாது போற்றி வெளி யிடும் தமிழ்ப்பணி இக்கழகத்துப் பணியாளன் ஆகிய எளியேனுக்கு வாய்த்தது தமிழன்னையின் திருவருளென எண்ணுகின்றேன்.

இப்பதிப்புக்கு உரிய ஓலைச்சுவடி சென்னை இராசதானிக் கல் லூரித் தமிழாசிரியர் ஆக விளங்கிய கா. நமச்சிவாய முதலியாரவர்க ளிடமிருந்து எம் ஆராய்ச்சிக் கழகத்துக்குப் பெற்று வந்த சுவடி களில் ஒன்று ஆகும். இது 188 ஏட்டிதழ்கள் கொண்டது. ஏடு கள் எல்லாம் செல்லரிப்பால் பெரிதும் துளைபட்டுச் செய்யுளுருக் காணுதலில் மிக்க வருத்தம் கொடுத்தன. சுவடியின் கடைப்பகுதி இருபது ஏடுகளில் இடப்பால் வலப்பால் இருமருங்கும் முதலும் முடிவும் எழுத்துகள் வீழ்ந்து விட்டிருந்தன. பழமையான ஓலைச் சுவடிகளின் இறுதியில் இயல்பாகக் காணப்படும் ஏடு எழுதிய காலம், எழுதினோர் பெயர், ஊர் முதலிய குறிப்புகள் ஒன்றும் இல்லா திருந்தது. அதனால் இவ்வேட்டின் பழமையை அறிந்து கொள்ள இடன் இலதாயிற்று. சுவடியி னுள்ளே ஒரு சில செய்யுட்களின் சில அடிகளை முன்னெழுதிப் பின் முறைமை தவறு எனக் கண்டு அவ் வடிகளை இருதலை நகவளைவி னுள்ளாக ஒழித்துப் பின் செய்யுள் முறையாக எழுதப்பட்டமையும், சில செய்யுட்களில் சில அடிகட் கும் சில தொடர்கட்கும் இடம் விட்டு எழுதியுள்ளமையும் கண்டு இவ்வேடு மிகப் பழமையான ஓர் ஏடு கண்டு அதினின்றும் பெயர்த்து

எழுதப்பட்டதெனத் துணிந்தேன். அன்றியும் பழமையான ஏடுகளில் செய்யுளடிகள் சொற்புணர்ச்சி முறைமை பிறழாது எழுதப்படும் இயல்புக்கு மாறாகச் சொற்றொடர்கள் பலவிடத்துப் புணர்ப்பியலின்றி எழுதப்பட்ட தன்மை கண்டு இவ்வேடு ஒருவர் படிக்க மற்றொருவர் அச்செய்யுளடை கேட்டு எழுதியதாம் என்றும் உணர்ந்தேன். இக்குறிப்புகளினால் இவ்வேடு பழைய தமிழ் நூல் ஒன்று இறந்துபாடு எய்துதல் கூடாதெனக் கருத்துட்கொண்டு பண்டை நல்லறிஞர் முயன்று பெயர்த்து எழுதி வைத்த தாகும் என்று தெளிந்தேன். இச்சுவடியில் ஒரு நூற்றின் மிக்க சொற்பிழைகள் பொதுளி யிருந்தமைக்குக் காரணம் இறுதியில் ஏடு எழுதியோர் அவ்வேட்டினைத் தாம் கண்ணுற்று எழுதாது பிறர் படிக்கக் கேட்டு எழுதிப் பெயர்த்துக் காப்புச் செய்தமையே ஆகும்.

இச்சுவடி எழுதிய காலத்தை அறிய இடனில்லை யாகவே இந்நூல் இயற்றிய காலத்தையேனும் அறிந்துகொள்ள முயன்று அகச்சான்று காணும் பொருட்டு நூற்பொருளைப் படித்துப் பார்த்தேன். கடவுள் வாழ்த்துப் பகுதியில் கண்ட ஆசிரிய வணக்கப் பாடல்களுள் அமைந்த காலக் குறிப்புகள் இந்நூல் ஏறத்தாழ முந்நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்பு இயற்றப்பட்டது எனக் காட்டியமை கண்டேன். அன்றியும் அப்பாடல்களால் இந்நூலாசிரியர் தமிழ் நாட்டில் விளக்க முற்றிருந்த பெரிய சைவ ஞானாசிரியர்கள்பால் உபதேசம் பெற்ற பெரியார் எனவும் தெளிந்தேன். இது தமிழ்ச் சைவ புராண நூல்களுள் ஒன்று ஆகிய பிரமோத்தர காண்டத்தைப் பலதிறத்தால் ஒத்தது எனவும் காலத்தான் முற்பட்ட சில சைவ புராணங்களைத் தழுவிய நெறியின தெனவும் தெரிந்தது. இஃது இத்துணைச் சிறப்பு வாய்ந்த ஒரு தமிழ்ப் பெருநூல் ஆயினமை பற்றியே தச்சநல்லூர்ப் பெரியார் " இறந்து கொண்டு வரும் தமிழ்த்தொன்னூல்களுள் " ஒன்றாக இதனைச் சுட்டி யுரைத்தார்களென எண்ணி இதனை எமது திருவேங்கடேசுவரன் கீழ்க்கலை ஆராய்ச்சிக் கழகத் தமிழ் வெளியீடாகப் பதிப்பிக்கக் கருதினேன். தமிழ் நாட்டிலுள்ள சென்னை அரசாங்கப் பழஞ்சுவடி நூல் நிலையம், தஞ்சை சரபோசி மன்னர் சரசுவதிமால் நூல்நிலையம் இவற்றில் ஒன்றிலேனும் இந்நூற் சுவடி காணப்படாமை கண்டு இதன் அருமைப் பாட்டினை நினைந்து இதிலுள்ள குறை போக்கும் பொருட்டுப் பிற சுவடிகள் பெற விரும்பி 1945-ம் ஆண்டு ஜூலை-திசம்பர் வெளியீடாக எங்கள் திருவேங்கடேசுவரன் ஆராய்ச்சிக்

கழகத்தினின்றும் போந்த ஆருவது தொகுதி—இரண்டாவது பகுதியில் இச்சுவடி பற்றிய அறிவிப்புச் செய்தியில் பல குறிப்புகளைத் தொகுத்துரைத்துத் தமிழறிஞர்கள் தம்மிடத்து இந்நூற் சுவடிகள் இருப்பின் உவந்து உதவுமாறு வேண்டுகோள் விடுத்தனன். இதுவரை ஒருவரும் இதுபற்றி ஒன்றும் செய்யக் கூடாமை கண்டு காலம் தாழ்த்தாது கையிருப்பிலுள்ள சுவடியை அச்சூர்தி ஏற்றிப் பதிப்பித்து வெளியிடத் துணிந்தேன். எளியேன் அளவிற்பட்ட ஆற்றலுக்கு இயைந்தவாறு ஆய்ந்து திருவருள் துணைகொண்டு இதனை இறந்தொழிய விடாது தமிழுலகிற்கு உதவி உலகத்து உலவி நிலவுமாறு செய்துள்ளேன். வேறு பிரதி யுதவி இன்றிப் பல குறைபாடுகளுள்ள இச்சுவடி ஒன்றனையே கொண்டு பதிப்பு எய்தியமையால் தமிழறிஞர்கள் என் முயற்சியில் குறை காண நேரின் அஃது இந்நூற் சுவடியின் குறையால் அமைந்ததெனக் கொண்டு பொறுத்தருளித் தம் மாட்சி மிக்க அறிவால் நலப்பாடு கண்டு கொள்வார்களாக.

# நூலாசிரியர்.

இந்நூலாசிரியர் இதன் முதலில் உள்ள கடவுள் வாழ்த்துப் பகுதியின்கண் பதினொன்று முதல் பதினான்கு ஆகிய நான்கு செய்யுட்களில் முறையே திருப்பரங் குன்ற முனிவர், சத்திய ஞானியார், ஈசான தேவர், தத்துவ நாதர் என்ற நான்கு சைவப் பெரியார்களுக்கு ஆசிரிய வணக்கம் கூறியுள்ளார். ஆதலால் இவர்கள் வரலாறுகத் தமிழறிஞர்க்கு அறிய வந்த செய்திகளைக் கொண்டு இந் நூலாசிரியரின் காலத்தைத் தெரிந்து கொள்ள இடன் உளதாகின்றது. இவர்களுள் சத்திய ஞானியார் என்பார் சைவ முனிவார் என்றும் கமலை வாழ்பவர் என்றும் இவர் பாடலுள் கூறியமையால் இப் பெரியார் திருவாரூரில் சிறப்புற்றிருந்த கமலை ஞானப்பிரகாச தேசிகரென்று நன்கு உணரலாகும். இவர் சிதம்பரநாத மாசிலாமணி கமலை ஞானப் பிரகாச தேசிகர் என்று பெயர் சிறந்து தரும புரத்துச் சைவாதீன பிரதம ஞானாசாரியாராக விளங்கிய ஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக சுவாமிகளுக்கு ஞானோபதேசம் செய்தருளிய பரமாசாரியா ரென்பது அத்திருமடத்து வரலாற்றானே அறியப்படும். இப்பெரியார் காலத்தினைத் துணிந்து கொள்ளுதற்குக் கருவியாக ஒரு கல் வெட்டும் இவர் பாடிய புராண நூற் காலக் குறிப்பும் உள்ளன.

விசய நகரத்து அரசர் ஆகிய சதாசிவ தேவ மஹாராயர் காலத்தில் சோணாட்டுத் தஞ்சாவூர்ச் சீமையில் பிரதிநிதி யாக இருந்த கிருஷ்ணம ராசையன் கட்டளைப்படி சகம் 1483-ல்—திருவாரூர் ஞானப் பிரகாச பண்டாரத்தைப் பரதேசி முத்திரையும் கணக்கெழுத்தும் அடைத்துக் கொள்ளும்படி செய்வித்து அதற்கு அப்பெரியார்க்குச் சர்வ மானியம் அளித்த செய்தி சோழ நாட்டுச் சிக்கல் நவநீதப் பெருமாள் கோயில் கர்ப்பக் கிருகத்திலுள்ள கல்வெட்டு (நெ. 104 of 1922) காட்டுகின்றது. இதன்படி இவர் காலம் கி. பி. 1561-ம் ஆண்டு ஆகின்றது தெளிவு. அன்றியும் இப்பெரியார் இயற்றிய திருமழுவாடிப் புராணத்துள்ள

தழுவிய கலியு கஞ்சேர் சகாத்தமா யிரத்து நானூற்
றழிதரு மெண்பத் தேழாண் டொழிந்தபின் குரோத னண்டின்
மொழிதரு மாசித் திங்கண் முற்பக்க முதனா டன்னின்
மழுவையம் புராணந் தன்னை வகுத்தனன் றமிழி னாலே

என்ற பாடலினால் அப்புராணம்—சாலிவாகன சகாப்தம்—1488-ல் ஆதாவது கி. பி. 1566-ல் செய்யப்பட்ட தென்பது துணைச் சான்று ஆக அறியப் படுகின்றது. இவ் விரண்டு ஆதாரங்களாலும் இப் பெரியார் கி. பி. பதினாறாவது நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவ ரென்று துணிகின்றோம்.

இக் கமலை ஞானப் பிரகாச தேசிகர்க்குச் சத்திய ஞானி, சத் திய ஞான பண்டாரம் என்ற பெயர்கள் வழக்கி லிருந்தன என்பது தஞ்சைச் சரசுவதி மால் நூல் நிலையத்துள்ள "சத்திய ஞான பண்டாரம் பிள்ளைத்தமிழ்" என்று இவர் சீடர் பாடிய தமிழ்ப் பிரபந் தத்தாலும் அறிகின்ற செய்தி யாம். இதனுள் இப் பெரியாரின் சைவாகம ஞானமும், ஞானோபதேசச் சிறப்பும், சீலமும், சைவ விளக்கமும், சீடர் திறமும் பல படியாகப் பாராட்டப் பட்டுள்ளன. இவர் சீடர் பலருள் சேது புராண நூலாசிரியர் ஆகிய நிரம்ப அழகிய தேசிகர் என்பார் ஒருவர் ஆவார். இஃது அவர் எழுதிய சிவஞான சித்தியார் உரைக் காப்புச் செய்யுளால் அறியப்படுகின்றது. அது

ஆரணமும் எக்கலையு மாகமமுங் கற்றாலுந்
தேருமுதன் மூன்றுந் தெரியாதே—பாரிற்
கருணைபொழி ஞானப்ர காசன் கமலச்
சரணமிரண் டில்லையேற் றான் என்பது.

அவர் திருப்பரங்கிரிப் புராணமும் பாடினர். அப்புராணத்தை அச் சிட்ட மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவர் ஆகிய சேற்றூர். ரா. அருணா சலக் கவிராயரும்—அச்சங்கத்துத் தலைமைத் தமிழாசிரிய ராக விளங்கிய திருநாராயண ஐயங்கா ரவர்களும் அப்புராணப் பதிப்பு முகவுரையில் நிரம்ப அழகிய தேசிகர் திருப்பரங்கிரியில் சைவ மடம் அமைத்துக் கொண்டு மடாதிபதியாய் நெடுங்காலம் வாழ்ந்தவ ரென்று குறித்துள்ளார்கள். இந்நூலாசிரியர் அவரைத் திருப்பரங் குன்ற மாமுனிவன் என்று கூறியதும் அதற்கு ஒப்பக் காண்க. ஈண்டுக் கண்டவாற்றால் கமலைச் சத்திய ஞானியா ராகிய ஞானப்பிர காசரும் நிரம்ப அழகிய தேசிகரும் ஒரு காலத்தவரென அறிகின் றோம். இவ்விரு பெரியார்களுக்கும் இந்தச் சங்கா விலாச நூலாசிரி யர் தமது ஞான குரவர் என்ற முறையால் வணக்கம் கூறியுள்ள படி யால் அவர்கள் காலமாகிய கி. பி. 16-வது நூற்றாண்டின் பிற் பகுதியே இந்நூலாசிரியர் காலமும் ஆம் என்பது தெளிவு.

இனி இந்நூலாசிரியர் பதின்மூன்றும் பாட்டில் "ஈசான தேவனைப் பணிவாம்" என்று அவரையும் தமது இயற்றமிழ் ஆசிரியரெனக் கூறி வணக்கம் உரைத்துள்ளமையால் அவரும் இக்காலத்தே வாழ்ந்தவ ரென்பது உறுதியாம். இவ்வீசான தேவர் என்பார் தமிழ்ப் பிரமோத்தா காண்டம் ஆகிய சைவ புராண நூலைப் பாடிய வாதுங்க ராம பாண்டியனாரின் ஆசிரியர் என்பது அவர் அந்நூலுட் பாடிய குரு வணக்கச் செய்யுளால் அறியப்படுகின்றது. அது

தேசான சிவஞானச் செஞ்சுடரான் மும்மலமா
மாசான விருளகற்றி மன்னுயிரைப் புரந்தளித்துத்
தூசானை யுரியசைத்தோன் றொல்சமைய நிறுத்துநிம்பை
ஈசான மாமுனிவ னிணையடியை யிறைஞ்சுவாம் என்பது.

இவ்வாதுங்க ராம பாண்டியனார் அரசு பட்டம் பெற்ற காலம் தென்காசிக் கோயில் சாசனத்தால் விளங்குவது. அது

"நண்புற் றெதிர்ந்தகலி நாலா யிரத்தறுநூற்
றெண்பத்தொன் பானி லிருங்கடல்சூழ்—மண்பெற்று
மன்னுமகு டம்புனைந்தான் வேல்வீர மாறனென
மன்னவர்கோ மானபிரா மன்." என்பது.

இக்கால வரையறைப்படி இவர் காலம் சாலிவாகன சகம்—1510. அதாவது கி. பி.—1584 எனத் தெரிகின்றது. ஆகவே இங்குக் கண்ட வாற்றாலும் ஈசான தேவர் காலமும் இச்சங்கா விலாச நூலாசிரியர் காலமும் கி. பி. 16-வது நூற்றாண்டின் பிற்பகுதி என்பது உறுதியாகின்றது.

நிம்பை என்பது மதுரையை அடுத்துள்ள வேம்பத்தூரைக் குறிக்கும். இந்நிம்பை ஈசான தேவரை வாதுங்க ராம பாண்டியனாரும் இச்சங்கா விலாச நூலாசிரியரும் தமது ஆசிரியராகக் குரு வணக்கம் கூறியுள்ளமைக்கு ஏற்ப இவ்விரு நூலாசிரியர்களின் நூல்கள் ஆகிய பிரமோத்கா காண்டத்துக்கும், சங்கா விலாசத்துக்கும் நூன் மூலம், நூற்பொருள், நூலமைப்பு முதலியவற்றிற் பெரிதும் ஒப்புமை காண்கின்றோம். இவ்விரண்டும் சைவ புராணங்களே. இவ்விரு புராணங்கட்கும் மூலம் ஆகியது சூத புராணிகர் இயற்றிய ஸம்மிதை வடநூலே. அத்தியாயத் தொகையும் பாடற் றொகையும் ஏறத்தாழ ஒரு படியே யாம். ஆகவே இவ்விரு சைவ புராணகாரரும் நிம்பை ஈசான தேவர் ஆகிய ஒரு பேராசிரியர்பால் தமிழ்ப்பயிற்சி

பெற்று அப்புலமைச் சிறப்பால் அணுக்க முடையவராய் வாழ்ந்தவர்களென்று தெரிகின்றது. இதனை உறுதிப் படுத்துதற்கு உரிய கல்வெட்டு ஒன்றும் எளியேன் கண்டு அச்செய்தியை 1945-ம் ஆண்டில் இந்நூல் பற்றி எழுதிய கட்டுரையில் முன்பே காட்டியுள்ளேன். அது திருநெல்வேலி ஜில்லா—தென்காசி நகருக்கு அருகில் உள்ள சாம்பூர் வடகரையி லுள்ள மூலஸ்தாநேசுவரர் கோவில் மகா மண்டபத்தின் வடக்குச் சுவரிற் காணப்படும் கல்வெட்டு. அதனைத் திருவாங்கூர்ப் பழங் கல்வெட் டிலாகா வெளியீடு—தொகுதி ஒன்று—பக்கம் 280-ல் காணலாகும். அதன் பகுதி கீழ்வருமாறு:—

"சோழ வளநாட்டு நடுவு மண்டலத்துப் பெரும்பற்றப் புலியூர் நயினர் திருவம்பலமுடைய நயினர் திருப்பூமண்டபத்தாரில் திருவண்ணுமலைப் புலவர் சிதம்பரநாதன் திருமூலநாத முதலிக்கு பண்டுடை மனையும் பழம்பேரையுந் தவிர்த்துத் திருப்பாட்டுக் காணியாட்சை யாகக் கற்பிக்கும்படிக்கு நம் குமாரன் அழகசொக்கனர் அபிராம பாண்டியன்...........ஓலையும் விடுகையில்...........".

இக்கல்வெட்டின் காலம் கி. பி. 1572. ஆகவே வரதுங்க ராம பாண்டியனர் தாம் இளைஞரா யிருந்த காலத்தே இக்கல்வெட்டிற் குறித்த சிதம்பர நாதர் ஆகிய தமிழ்ப் புலவர்க்குத் திருப்பாட்டுக் காணியாட்சி செய்வித்தா ரென்ற செய்தி இச்சங்கர விலாச நூலாசிரியர் ஆகிய சிதம்பர நாதனரையே சுட்டுகின்ற தென்று கொள்ளுதற்கு இடந்தருகின்றது. இதனல் வரதுங்க ராம பாண்டியனர்க்கு இச் சங்கர விலாச நூலாசிரிய ராகிய சிதம்பர நாதனர்பால் உளதாகிய நட்புரிமை பெரிதும் விளங்குகின்றது.

இக் கல்வெட்டுச் செய்தி கொண்டு நோக்கின் இச்சிதம்பர நாதனர் திருவண்ணுமலைப் புலவர் என்பதும் திருமூலநாதன் என்ற இயற்பெயர் உடையார் என்பதும் சைவ வேளாண் மரபினர் என்பதும், பின்பு பெரும்பற்றப் புலியூர் ஆகிய சிதம்பரத்துக்கு வந்து தில்லைப் பெருமானுக்குத் திருப்பூத் தொடுக்கும் தொண்டில் ஈடுபட்டிருந்தனர் என்பதும் புலப்படுகின்றன. இக்காலத்தே தான் இவர் திருவாரூர்ச் சைவாசாரியார் ஆகிய ஞானப் பிரகாச தேசிகர், திருப்பரங்குன்றச் சைவ மடாதிபதி நிரம்ப அழகிய தேசிகர் இவர்கள்பால் ஞானோபதேசம் பெற்றுராய்த் தெற்குப் பாண்டி நாட்டில் உறைந்த ஈசான தேவர் வரதுங்க ராம பாண்டியனர் இவர்கள்பால்

அனுக்கமும் உடையராய் வாழ்ந்தார் என்று கொள்ளக் கிடைக்கின்றது. பாண்டிய நாட்டில் உறைந்த காரணத்தால் இவர் பாண்டி நாட்டுத் தலம் ஆகிய சங்கர நயினார் கோயிலில் எழுந்தருளிய சிவ பெருமான் திருப்பெயரால் இந்நூலைப் பாடினர் என்பதும் காண்கின்றோம்.

இத்துணையும் இவர் இந்நூலிற் கூறிய குருவணக்கச் செய்யுட்களின் துணை கொண்டு அறிந்த செய்திகளாம். இக்குருவணக்கப் பகுதியுட் குறிக்கப் பட்ட தத்துவ நாதரைப் பற்றி இப்போதுள்ள சைவப் பெரியார்களின் வரலாறுகளுள் ஒரு செய்தியும் இயைபுறத் தெளியுமா றில்லை. சீகாழிச் சிற்றம்பல நாடிகளின் சீடர் ஆகி விளங்கி அவர் அருளிச் செய்த துகளறு போத நூலுக்கு வழியதாக "உண்மை நெறி விளக்கம்" அருளிச்செய்த தத்துவ நாதர் என்ற சைவப் பெரியாரை யுட்கொண்டு கூறிய பரம குருதுதி போலும் என்று எளியேன் எண்ணுகின்றேன். இவர் காலம் சிறிது முற்பட்டதாகும்.

கடவுள் வாழ்த்துப் பிரிவு பத்தொன்பதாம் செய்யுளில் இந்நூலாசிரியர் பெயர் குறிக்கப்பட்ட முறையில் 'விசையை நாரணன் சொற் சிதம்பரநாத பூபதியே' என்றுள்ளமையால் அப்பெயருடையார் ஆதரவினை இவர் பெற்றிருந்தாரெனக் கொள்ளலாம். விசையை நாரணம் என்பது திருநெல்வேலி ஜில்லா நான்குநேரி தாலூகாவில் உள்ள ஓரூராகும். அவ்வூர்ச் செல்வரின் பாராட்டும் பின்னர் இந்நூலாசிரியர் பெற்றார் போலும்.

இந்நூலாசிரியர் இந்நூலின் முதல் அத்தியாயம் ஆகிய உபமன்னியர் திருப்பாற்கடல் பெற்ற வரலாறு கூறுமிடத்து 48-வது செய்யுள் முதல் ஒன்பது பாட்டுகளில் தில்லைத் திருநகரின் சிறப்புகளை விரித்துரைக்கின்றார். இவற்றுள் 50, 51, 52-வது செய்யுட்களில் கூறும் துன்மதன், துற்சகன் வரலாறுகள் தில்லை நகர்க்குரிய புராணமாக உமாபதி சிவாசாரியரால் பாடியருளப்பட்ட கோயிற் புராணத்துள் காணப்படவில்லை. மற்று அக்கோயிற் புராணத்துக்கு ஒரு நூற்றாண்டு பிற்பட்டுப் புராணத் திருமலைநாதர் என்ற பெரியாரால் பாடப்பட்ட சிதம்பர புராணத்துள் உள்ள துன்மதச் சருக்கம், துற்றெரிசனச் சருக்கம் ஆகிய இரு சருக்கங்களில் அவை விரிவாகக் கூறப்பட்டுள்ளன. இச் சிதம்பர புராணத்தினைத் திருமலைநாதர் சகாப்தம் 1430-ல் இயற்றினர் என அதன் செய்யுளால் அறிய

லாம். இதன் காலம் கி. பி. 1508—ஆதலால் தம் காலத்துக்குச் சிறிது முன்னெழுந்த இதன் சிறப்பு நோக்கி இதனுட் கண்ட வரலாறுகளைத் தம் நூலிற் போற்றி உரைக்கின்றமை தெரிகின்றது. இனி, சிதம்பர புராணத்துக்கு ஒரு நூற்றாண்டு முன்னதாகிய உமாபதி சிவனார் கோயிற் புராண வரலாறுகளையும் விடாது தம் புராண நூலுள் பிற செய்யுட்களில் கூறினாராயினும் அவர் கூறாது விட்ட புராணச் செய்திகளையும் இவர் கூட்டிக் கூறியுள்ளமையால் இவர் பண்டை நூலாராய்ச்சியின் திறம் நன்கு விளங்குகின்றது. இவர் திகழ்ந்த காலம் சைவ புராணங்கள் தமிழிற் பலவாகத் தோன்றிய காலமாகும்.

எம் ஆராய்ச்சிக் கழகத்து மந்திரத் துணைவர்களுள் ஒருவர் ஆகிய உயர்திருவாளர். S. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் B.A., L.T. (அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துப் பதிவாளர்) எம் ஆராய்ச்சிக் கழக நூற்பதிப்புக்கு உரியதாகப் பழைய சைவ நூலொன்று கிட்டின் நன்று என்று பலகால் எளியேனிடம் கூறியதுண்டு. அவர்கள் உள்ளம் கனிந்த விருப்பிற்கு ஏற்பச் சிவ பெருமான் திருவருள் விலாசமாக அமைந்துள்ள இப்பழமையான தமிழ் நூல் புராணப் பொருள் பற்றியதேனும் நடை, தொடை, பொருட்படை முதலியவற்றுள் பல அருமைப் பாடுகளுடையதாய் விளங்குவதனால் போற்றற் பாலதாகும்.

தமிழ் மொழியில் தலையாய நூலாகிய திருக்குறளுக்கு அமைந்த பழைய உரைகளாகிய காலிங்கர்—பரிப்பெருமாள் உரைகள் இரண்டினையும் இறந்தொழிய விடாது எளியேன் முயன்று பதிப்பித்து வெளியிட்டு அறிஞர் கையேறச் செய்தது போன்று பழமையான இந்நூலும் இறந்தொழியாது சிறந்துலவச் செய்யுமாறு முற்பட்டேன். என் எளிய முயற்சிக்குத் தமிழுலகு ஆதரவு புரியும் என நம்புகின்றேன்.

இம்முயற்சியில் எளியேனைப் புகுமாறு செய்து தோன்றாத் துணையாயிருந்து நிறைவேற்றிய தில்லைத் திருவாளன் கூத்துடைக் குரை கழலைக் கும்பிட்டு வழுத்துகின்றேன்.

தி. பொ. பழனியப்ப பிள்ளை.

---

த - பு.—பிழை திருத்தப் பக்கம் பார்த்துத் திருத்திக் கொள்ளுக.

# பொருள் அடக்கம்


கடவுள் வாழ்த்து. 2

பதிகம். 5

1. உபமன்னியர் திருப்பாற்கடல் பெற்ற அத்தியாயம். ... 7
2. சிவன் தாருகாவனத்திற் பலியிரந்த அத்தியாயம். ... 28
3. சுவேத முனிவர் காலனைக் கடந்த அத்தியாயம். ... 37
4. சிவன் தாருகாவனத்து ரிஷிகளுக்கு அருள்புரிந்த அத்தியாயம். 43
5. ததீசிப் பிரமரிஷி வச்சிரவாக்கை வரம்பெற்ற அத்தியாயம். ... 50
6. நந்திகேசுரர் சரிதை உரைத்த அத்தியாயம். ... 63
7. விட்டுணுவுக்குப் பிருகு சாபம் வந்த கதை உரைத்த அத்தியாயம். 78
8. விட்டுணு மன்மதனைப் பெறச் சிவார்ச்சனை பண்ணின அத்தியாயம். ... 97
9. விட்டுணு சக்கரம் பெறச் சிவார்ச்சனை பண்ணின அத்தியாயம்... 101
10. வசுசுருதன் பத்தியோக மகிமை உரைத்த அத்தியாயம். ... 104
11. பிருங்கி பிரதெக்கிண மகிமை உரைத்த அத்தியாயம். ... 112
12. இராசா பிரதெக்கிணம் பண்ணின கதை உரைத்த அத்தியாயம். 127
13. பஞ்சாக்கர மகிமை உரைத்த அத்தியாயம். ... 132
14. சுத்துய்மினன் சிவநாமம் பகர்ந்த மகிமை உரைத்த அத்தியாயம். 146
15. விபூதி மகிமை உரைத்த அத்தியாயம். ... 150
16. உருத்திராக்ஷ மகிமை உரைத்த அத்தியாயம். ... 159
17. சோமவார விரத மான்மியம் உரைத்த அத்தியாயம். ... 162
18. கமலாலய மான்மியம் உரைத்த அத்தியாயம். ... 170
19. காஞ்சிபுர மான்மியம் உரைத்த அத்தியாயம். ... 182
20. திருக்காளத்தி மான்மியம் உரைத்த அத்தியாயம். ... 195
21. சிரீசயில மகிமை உரைத்த அத்தியாயம். ... 199
22. உருத்திரகோடி மான்மியம் உரைத்த அத்தியாயம். ... 201
23. கோதாவிரி மகிமை உரைத்த அத்தியாயம். ... 204


திருவிருத்தம். 1435.

# சங்கர விலாசம்.

ஹரி : நன்றாக.

## மூத்த பிள்ளையார் வணக்கம்.

அறுசீர் ஆசிரிய விருத்தம்.

மழைதொடுஞ் சிகரம் பூத்த மந்தாரஞ் சுழல வோங்கி
யிழைபடர்ந் திமைக்கும் பொம்ம லிளமுலைப் பவளச் செவ்வாய்க்
குழைகடந் துலவும் வேற்கட் குலவரைக் குமரி யீன்ற
புழைநெடுந் தடக்கை நால்வாய்ப் பொருப்பினைப் போற்றல் செய்வாம்.

## கலைமகள் வணக்கம்.

உள்ளநெக் குருகு மன்ப ருறுபவப் புனலை நீக்கித்
தெள்ளுமன் பினிய தீம்பாற் றெளிசுவை பருகித் தேக்கும்
வெள்ளிவெண் கமலக் கோயில் விளங்கிய கலைக ளோதும்
பிள்ளையோ திமத்தின் பாதம் பெரிதுவந் தகத்துள் வைப்பாம்.

சங்கரேசன் துணை.

ஹரி : நன்ருக.

# சங்கரவிலாசம்

## கடவுள் வாழ்த்து.

### கலிநிலைத்துறை.

நிலவு வார்கலை நிறைமதி யெனச்சடை நிலவக்
குலவு வார்திரைப் பகிரதி குறுந்துளி கொழிப்பப்
பலவு மாருயிர் தழைத்திடப் பைம்பொனம் பலத்தி
னுலவு நாடகத் தொருவனை யுள்ளம்வைத் துவப்பாம். (1)

கொழுத்த தீங்கனித் தேறலு மமுதமுங் குழைத்துப்
பழுத்த பாண்மொழிப் பனிவரை யுயிர்த்தருள் பாவை
முழுத்த நான்மறை மொழிதரு முடிவின்வீற் றிருக்கு
மழுத்து பஞ்சடிப் பல்லவஞ் சென்னிமீ தணிவாம். (2)

கடங்க வுட்குழி கடல்மடை திறந்தெனக் கவிழ்ந்து
முடங்கு வெண்பிறை முடியின னகைநிலா முகிழ்க்கப்
படங்கொள் பாந்தளம் புயவரை யெட்டினும் படர்ந்து
நடங்கொள் வாரணச் சேவடி நாவினுற் புகழ்வாம். (3)

கவந்த முங்கொடுங் கணங்களுங் கைகலந் தாட
நிவந்த நீண்மதிட் சூர்நகர் பொடிபட நெடுவே
லுவந்த சேவக னென்மனப் பாறைபுக் குலவிச்
சிவந்த தண்டையஞ் சீறடி சென்னிமீ தணிவாம். (4)

வங்க வெண்டிரை மறுகடல் மயிலைமா நகரின்
வெங்கண் வெம்பணி தீண்டிய வேல்விழி மடந்தை
யங்க மின்புரை யழகுரு வமைதர வழைத்தோன்
பங்க யச்செழுந் துணைமலர்ச் சேவடி பணிவாம். (5)

உரவு மொண்சிலை புணையென வளக்கர்மீ துகைத்து
விரவு வண்புகழ் மேதினி வரைப்பெலாம் விளங்க
வரவ கங்கண னடியிணைக் கன்புபூண் டருளிப்
பரவு முத்தமிழ் நாவினுக் கரசினைப் பணிவாம். (6)

அந்த ரத்திமை யோர்களு மதிசயித் திடவே
மந்த ரத்துணை வனமுலைப் பரவைவாழ் மனையிற்
சந்தி ரச்சடை மவுலியைச் சந்தினுக் கிசைத்த
சுந்த ரப்பெயர்க் குருசில்பொன் னிணையடி தொழுவாம். (7)

அறுசீர் ஆசிரிய விருத்தம்.

பாடற் சுரும்ப ருழுதுழக்கிப் பசுந்தேன் மடுக்கு மலங்கலினுன்
கூடற் பதிகாத் தினிதளிக்குங் குரிசில் மகிழக் குதிரைமிசை
யாடற்பரம னெழுந்தருள வமிழ்தந் தருஞ்சொற் றமிழ்தெரித்தோ
னூடற் கரிய துணைச்சரண நாட்பொற் கமலந் தலைக்கொள்வாம். (8)

அறுசீர் ஆசிரிய விருத்தம்.

அதிர்திரைக் கடலி னஞ்ச மமுதென வருந்து மெந்தை
புதுமதிக் கண்ணி கங்கை புனைமுடி துளக்கிக் கேட்ப
மதுரமுத் தமிழாற் பாடு மாளிகைத் தேவ னாதி
சதுரமெய்த் தவத்தோர் பைம்பொற் றாண்மலர் தலைமேற் கொள்வாம். (9)

கலிவிருத்தம்.

நெடிய வெண்டிரை நேமி வளைதரும்
படியி னெண்ணரும் பத்தி புரிந்தர
னடிவ ணங்கு மறுபத்து மூவர்பொற்
கடிம லர்ப்பதங் கைதொழு தேத்துவாம். (10)

எழுசீர் விருத்தம்.

பருகிநாத் தெவிட்டிக் கனைத்தெதி ரெடுத்துப்
பாட்டளி பேட்டொடுந் துயில
முருகுகொப் புளிக்கு மிதழிவே ணியனை
முறையொடும் பூசனை புரியத்
திருவருள் புரிந்தென் குடிமுழு தாண்ட
திருப்பாங் குன்றமா முனிவன்
மருமலர் கமலச் சேவடித் துணைகள்
வணங்கியெஞ் சென்னிமீ தணிவாம். (11)

அறுசீர் விருத்தம்.

கத்திகைக் கருமென் கூந்தற் கன்னிய ரிடத்தி லார்வம்
வைத்துழும் மலத்தி னாழ்ந்து மருளுறு தெளியேற் கின்ப
முத்தியை வழங்குஞ் சைவ முனிவரன் கமலை வாழுஞ்
சத்திய ஞானி செம்பொற் சரணிணை தலைமேற் கொள்வாம். (12)

## எழுசீர் விருத்தம்.

அல்லலுற் றழுங்கும் பிறவியங் கடலி
    னாழ்ந்திடு மிருவினை யுணாரப்
புல்லொழுக் கினர்பாற் பொருந்திடா திதழிப்
    புனிதனை நாவினுற் புகழச்
சொல்லுமுத் தமிழி னிலக்கணப் பகுதி
    தொகுத்தளித் தென்னையாண் டருளு
மெல்லையிட் டளவா வின்பவீ டுணரு
    மீசான தேவனைப் பணிவாம். (13)

## அறுசீர் விருத்தம்.

அங்கமலப் பீடிகையோன் மணிநாவில்
    வீற்றிருக்கு மமுதந் தூற்றுந்
திங்கணுதற் கலைமடந்தை யென்னுவி
    லுறைந்தரசு செலுத்தச் செய்தான்
பைங்கண்மழ விடையுகைக்கும் பரமனிரு
    பதங்கருதிப் பரவு மையன்
பொங்குபெருங் கருணைபொழி தத்துவநா
    தன்மலர்த்தாள் புந்தி வைப்பாம். (14)

## அறுசீர் விருத்தம்.

மாதவ முனிவர் வாழ்க மனுமுறை யரசர் வாழ்க
மேதினி வளங்கண் மல்க விண்முகின் முறையிற் பெய்க
மூதுணர் வளிக்குஞ் சைவ முழுநெறி தழைத்து வாழ்க
வோதிய பரமன் காதை யுலகெலாம் பொலிக மாதோ. (15)

பிறைமுடிச் சடில நாதன் பெருமையிவ் வளவைத் தென்றே
முறைதெரிந் துணர வோதி முகுந்தனு மொழிதற் பாற்றோ?
வறைகட லுலகோர் தத்த மறிவள வளக்க லாமே
னிறையறி வில்லா விஞ்சைச் சிறியனு நிகழ்த்த லாமால். (16)

மாதவச் சூதன் சொன்ன மாக்கதை வடித்து மாநீர்ப்
பூதலத் தெளியேன் றீய புன்சொலாற் புகலுந் தன்மை
தாதிணர்க் கமலம் வெய்யோன் பருவஞ்செய் தகைமை செய்வா
னேதமுற் றிருக்குங் கீட மின்மினி யிசைத்த லன்றே. (17)

இருளற விளங்கிக் காலு மெரிமணி பொதிந்த பொல்லா
மருளுறு மழுக்கி ஞய கலையும்வண் கைக்கொள் வார்போற்
றெருளுறு மேலோர் ஞானச் சிவனருட் காதை யாற்சொற்
பொருளறிந் துரையா நாயேன் புன்சொல்லுங் கொள்வா ரம்மா.(18)

### எழுசீர் விருத்தம்.

பொலன்கிரி குழைத்த பான்புரா ணத்திற்
புகல்கதை விசிட்டமோர்ந் தெடுத்து
நலம்பெறத் திரட்டுஞ் சங்கர விலாச
நற்றமிழ் வடித்தினி துரைத்தான்
வலம்புரிக் குலங்கள் சூலுளைந் தல்ற
வழிநறு மலரிறோ திமங்கள்
சிலம்புதண் பழன விசையைநா ரணன்சொற்
சிதம்பர நாதபூ பதியே. (19)

## கடவுள் வாழ்த்து முற்றும்.

## பதிகம்.

### அறுசீர் விருத்தம்.

திருமலி கனக மன்றிற் சிவன்கழல் வழிபட் டேத்த
மருமல ரெடுப்பான் வேண்டி வள்ளுகிர்ப் புலிக்கால் பெற்ற
வருமறை முனிவன் மைந்த னமலனை யருச்சித் தான்பாற்
பருமணி கொழிக்குந் தெய்வப் பாற்கட லடைந்த வாறும். (1)

சந்திர மவுலி யெந்தை தனித்தொரு வடிவ மாகிப்
பைந்தரு வனத்தி லெய்திப் பலிதலை யிரந்த வாறு
மந்தமு முதலு மில்லா வண்ணலைச் சுவேதன் போற்றி
மந்தர மனைய திண்டோண் மறலியைக் கடந்த வாறும். (2)

தருவனத் தடைந்து பின்னர்த் தழல்விழிப் பரமன் செய்ய
பொருடரு தவத்தி னோர்க்குப் புகலருள் புரிந்த வாறு
மருமல ரிதழி யோனை வணங்கியே வயிர மேனி
யருளுயர் ததீசி தூய வரங்களித் தடைந்த வாறும் (3)

பனிமதி முடியிற் சூடும் பரமனை வணங்கி நந்தி
தனிவர மடைந்தி யார்க்குந் தலைமைபெற் றுயர்ந்த வாறு
முனிவொடும் பிருகு நீங்கா மொழிந்திடுஞ் சாப வெந்தீக்
கனிமற வுயிர்க்குந் தண்டார்க் கரியவற் கடைந்த வாறும் (4)

மணிநிற வண்ணன் வென்றி மதனனை யளிக்க நாடிப்
பணிநெடுஞ் சடையிற் சூடும் பரமனை வழுத்து மாறு
மணிகிளர் பருதி மானு மாழிபெற் றுயர வன்னான்
றிணிநெடுங் காங்கள் கூப்பிச் சிவனைவந் தித்த வாறும் (5)

சத்தியத் துவச னன்பிற் றருவசு சுருத வேந்தன்
பத்தியோ கத்தின் றன்மைப் பரிவொடும் பகர்ந்த வாறு
முத்தியைக் கருதும் வேத முனிவரன் பிருங்கி வேணி
யத்தனை வலஞ்செய் தின்ப வருட்கதி யடைந்த வாறும் (6)

புற்றிடத் துறையு முக்கட் புனிதனைத் திருவா ரூரின்
மற்றடந் திணிதோள் வேந்தன் வலஞ்செய்த லுரைத்த வாறு
முற்றவஞ் செழுத்தால் ஞானச் சதானந்த யோகி யென்பான்
பற்றிவென் னிரையத் தோர்கள் பவந்தொலைத் துயர்ந்த வாறும் (7)

சுடரெறி வேலி னுன்சுத் துய்மின னென்னும் வேந்தன்
கடுவுறழ் மிடற்றோ னுமங் கழறிய துரைத்த வாறு
மடலவிழ் கமலச் செந்தார்க் கருணனு மறையோன் றூய
பொடிகொள்வெண் பூதி யாலே புகாற விளங்கு மாறும் (8)

மழுவல னுயர்த்த வண்ணல் வயங்கிய விழியிற் றோன்றுங்
கெழுமுசீர் மணியின் றன்மை கிளர்வுற வுரைத்த வாறுந்
தழைதரு தரும மிக்க தானியப் பட்ட னன்பின்
விழுமிய சோம வார விரதநோற் றுயர்ந்த வாறும் (9)

ஆடலஞ் சிலையிற் செம்பொ னணிவரை குழைத்த நாதன்
மாடநீள் கமலை மூதூர் மான்மிய முரைத்த வாறும்
கோடிய ரிமைய மீன்ற கோற்றொடி யானைப் போற்றும்
பீடுயர் வளங்கூர் காஞ்சிப் பெருமையை யுரைத்த வாறும் (10).

கைச்சிலை யெயினர் கோமான் கனியித ழுதுக்குஞ் சூட்டு
னெச்சிலுண் டவன்கா ளத்தி மகிமையை யிசைத்த வாறு
முச்சிசெங் கதிரிற் றோய வுயர்சிரீ சயில மென்னும்
வச்சிர மிமைக்கும் வெற்பின் மான்மிய முரைத்த வாறும் (11)

அருத்தியி னிர்ந்து காந்தத் தலந்தொறு மவிர்வெண் டிங்கள்
விரித்திள நிலவு கால விடும்புனற் றிவலை தோய்ந்து
திருத்திவா யலகு கோட்டிப் பசுங்கிளி சிறக ராற்று
முருத்திர கோடி வெற்பின் மான்மிய முரைத்த வாறும் (12)

விரிதிரை சுருட்டு கோதா விரிவா யுரைத்த வாறு
மரிமதர் நெடுங்கட் செவ்வா யாவுடை மடந்தை பாகன்
றருவளந் தருசீ ராசைச் சங்கர னருளா லோங்கும்
பொருதிரை யுலகில் யாரு முணர்வுறப் புகல லுற்றேன். (13)

பாயிர முற்றும்.

## 1. உபமன்னியர் திருப்பாற்கடல் பெற்ற அத்தியாயம்.

கலிநிலைத்துறை.

நிலவு வேணியன் காஞ்சிமா நகரிடை நின்று
மலரி னுன்முகன் விடுத்திடு தருப்பைபோய் வளைந்து
குலவு வெங்கலி யடைந்திடா திவணெனக் குணித்த
விலகு மாதவம் விளங்கிய தெய்வத விருக்கை. (1)

மீன்ம றைத்துமேன் மண்டல வெளியெலாம் விரிந்து
பான்ம றைத்தவெண் ணிலவுமண் டலமிசைப் படர்ந்து
வான்ம றைத்தெழு பொதும்பரின் மழலையங் கிளிக
ளூன்ம றைத்தொகை மொழிதரு நயிமிசா ரணியம். (2)

அத்த லத்திக லனங்கவே ளைங்கணை கடிந்த
வித்த கத்திரு முனிவரர் வேள்வியாங் கியற்றக்
கைத்த லத்தொரு தண்டமுங் காகமுந் தாங்க
முத்தி வைப்பென வனைவரு முறைமுறை புகுந்தார். (3)

அன்ன காலையிற் றிசைமுகத் தொருவனை யனைய
சொன்ன மாதவச் சூதமா முனிவந்து தோன்ற
மன்னு தாபத ரிருக்கையீய்ந் தெமக்குமா மதியச்
சென்னி மாதவ னிருங்கதை செப்புதி யென்றார். (4)

ஆதி மாதவத் துறையுளீர் நன்றுநன் றறைந்தீர்
சீத வார்புனல் வேணியன் கதையொன்று தெரிக்கி
லோது நான்மறை யுரைத்திடு முத்தியை யுதவும்
பூத நாயகன் காதையின் பெருமையார் புகல்வார். (5)

முன்னு மெம்பிரான் புராணங்க ளொருங்குற மொழிந்தே
னின்னு மன்னவை யிடத்துரை விசிட்டமோர்ந் தெடுத்துப்
பன்னி மாக்கதை சிலவதி சயமுறப் பகர்வேன்
றுன்னு செஞ்சடை முனிவரீர் கேட்கெனத் தொகுத்தே (6)

வேத நான்கையும் விளம்பிய வியாசனைப் பரவி
யாதி நந்திமெய்ச் சனற்கும ரனுக்கறைந் தனனென்
றோது சீருப மன்னியர் பாற்கட லடைந்த
காதை யன்பொடுஞ் சூதமா முனிவான் கழறும். (7)

சீத வண்புயல் சிவனரு ளுருவெனச் சிறந்து
காதல் கொண்டொரு வழிப்பட விண்ணெறி கடந்து
மோது தெண்டிரைக் கருங்கட லெறிபுனன் முகந்து
மாத வன்றிரு வுருவினில் வயங்கிமீண் டனவே. (8)

அரவ கன்பட முடக்கிய சடையின னகங்கை
விரவு வெங்கன லொளியெனத் திசைதொறு மின்னிப்
பரவு புங்கவன் றுடியினி லதிர்ந்துயிர்ப் பசுக்கோர்
புரவு கொண்டவன் கருணையிற் குடகினிற் பொழிந்த. (9)

பொழிந்த வெண்புனல் குடகுயர் குவட்டின்மேற் புரண்டு
சுழிந்து வீழ்தரு மருவிவண் டிமிர்பசுந் துளவோன்
விழைந்து விண்டொடக் கிளர்ந்தநாண் மணிமுடி விடுக்க
வழிந்து வார்திரைச் சுரநதி வருவதொத் துளதால். (10)

கரிம ருப்புதிர் தாளமுங் கனகமுங் கதிர்கான்
றெரியி மைத்திடு மனலமும் வயிரமு மெறிந்து
பொரிய ரைச்செழுஞ் சூதமும் பனசமும் புரட்டி
விரிதி ரைக்கடல் கிழிபட விரைந்துசென் றதுவே. (11)

பொருது போரலை புரட்டிய பொன்னிமா நதிபோய்
மருத மாநில வளங்கெழு வயலெலாம் வழங்கிப்
பெருகு கேணியுங் குளங்களும் பலபல பெருக்கி
யிருநி லத்தவர்க் குயிரென வெழுந்துல வியதால். (12)

பள்ள வாய்மடை யுடைத்துழும் பழனங்கள் பரந்து
வெள்ள நீர்புகு முழக்கமும் விரிசிறை யடித்துப்
புள்ளி னஞ்சிலம் போதையும் பூட்டுமேர் துரந்து
மள்ளர் பாய்விடு மமலையுங் கடலொலி மறுத்த. (13)

கும்ப மொத்தவெங் கடகரிக் கோட்டினைக் குழைத்து
வம்ப டர்த்தெழு வனமுலை சுமந்தொளிர் வஞ்சிக்
கொம்பெ னப்பொலி கடைசியர் நடச்செயுங் குரவைக்
கம்ப லைக்கிணை கவிஞரோ ரளவையிற் கணிப்பார். (14)

மழைத்த டம்புய லகடுறக் கிழித்துவெண் மதிபோய்க்
குழைத்த மென்சுரி குருத்தெறி யாம்பையங் குலைகள்
பழுத்த தீங்கனி கனிந்தொழு கியமதுப் பாய்ந்து
தழைத்து விண்ணுறக் கிளர்ந்தன வயனடுஞ் சாலி. (15)

பாட்டு வண்டினம் பருமுகை முருக்குடைத் தவிழ்த்துப்
பேட்டு வண்டொடுந் துயில்கொளுங் கமலங்கள் பிரசத்
தோட்டு வண்கருங் குவளைகள் களையெனத் தொடுவார்
வாட்ட டங்கணும் வதனமுங் களைசெய்வ மருதம். (16)

சினையு ளைந்துவெண் பணிலங்க ளுயிர்த்தயல் சிதறப்
புனல்வ ரன்றிடு தாளம்வெண் ணிலவெனப் பொழிதேன்
கனைசு ரும்பர்பா ணிரைத்துணுங் கமலங்கண் முகிழ்க்க
கனைய விழ்ந்துநாண் மலரினிற் குமுதங்க ணகுமால். (17)

நெஞ்ச நெக்குவிட் டுருகுபு நினைந்தயா வுயிர்த்தே
யஞ்சி நீர்கிடந் தலம்வரு மிளங்கய லதுக்கிப்
பஞ்சின் மெல்லிய சிறகரி ஞெதுக்கிய பசலைக்
குஞ்சி னுக்கிரை கொடுத்துவா யலகிடுங் குருகு. (18)

குடவ ளைக்கணந் தவழ்ந்தல ரிளநிலாக் கொழித்துப்
படல மென்மடற் கமலவண் சேக்கையிற் படிய
வடல்கெ ழும்பொலன் சேவன்முன் மணந்ததென் றயிர்த்து
மடவ னப்பெடை புலவியின் மாறுகொண் டகலும். (19)

தொள்ளி தூங்கிய பணைதொறுஞ் சுரிகழுத் தாமை
வெள்ள நீர்பொரு கரைதொறு மிளிரும்வெண் பணில
முள்ள ரைச்செழுங் கமலங்க டொறுமுறக் குடைத்துப்
பிள்ளை வண்டொடும் பேடைவண் டடைகொளும் பெருக்கே. (20)

பைங்கு லைக்கதிர் விளைந்தநெற் பயிரரி படுத்திக்
கொங்கு யிர்த்ததார் மள்ளர்கள் குவித்தபோர்க் குவையின்
மங்கு லிற்றெடு மால்வரை தவழ்ந்தொளி வயங்குந்
திங்க ளிற்பொலிந் திலங்கொளி வலம்புரி திரியும். (21)

மாட கத்தனி யாழ்மொழி மடந்தையர் மலர்கொய்
கோட கத்திள மழவரா லுகளுதல் குறித்துச்
சூட கத்தளிர்க் கரங்களால் வளைத்தவை தொடர்ந்து
பாட கப்பதந் தங்களிற் பற்றுவர் படிந்தே. (22)

அறுசீர் விருத்தம்.

பஞ்சடிப் பவளச் செவ்வாய்க் கடைசியர் பரிவி னூட்டு
மஞ்சினிற் கரிய கூந்தன் மணங்கெழு தகரந் தோய்ந்த
வஞ்சிறைச் சுரும்பர் செந்தே னளைந்துவாய் மடுப்ப வீழுங்
கஞ்சமைத் தலரு காமர்க் கருநெய்தல் கடுக்கு மாதோ. (23)

பாலடைத் தெழுந்த சாலிப் பசுங்கதிர் கறித்துப் பாயு
மாலையிற் பெருகுந் தீம்பா லாறலைத் தழுநர் கோலுங்
கால்வழிந் தொழுக மாந்திக் கன்னியங் கமுக நீண்ட
சோலைவாய் நீழன் மேதி துணைவிழி துயிலு மாதோ. (24)

அன்னமுஞ் சுரும்பு மார்க்க வலம்வரு மாரல் பார்த்து
மின்னவிர் பவளச் செங்கால் வெண்சிறை நாரை தாவும்
பின்னிவெண் டிவலை சிந்திப் பெருந்திரை சுருட்டு மாவி
மன்னுநான் முகத்துப் புத்தேள் மானத நிகர்த்த வாமால். (25)

வரிவிழி புகையச் சீறி வாளையம் பகடு வான்போய்
விரிதலை யரம்பை சாடி விண்டுதேன் சொரியப் பாளை
நெரிபசுங் கமுகஞ் சாய்த்துத் தெங்கினெண் பழங்கள் வீழ்த்திக்
கருமுகில் கிழித்துத் தாரை மழையொடுங் கலந்து மீளும். (26)

மங்குல்கண் படுத்து மோட்டு வயிறுளைந் தினிதி னீன்ற
திங்களிற் கதிர்கால் வீசுஞ் செழுநிலாத் தாளத் தோடுங்
கொங்குயிர்த் தரும்பு பைந்தார்க் கொழுமுகை நெகிழ்ந்து தூற்றும்
பொங்குதேத் திவலைச் செய்ய மனவமும் பொழிவ சோலை. (27)

வெண்டுகில் கழும வூட்டும் விரைநறும் புகையும் பாகு
மண்டுவெந் தழலிற் காய மடுத்திடு புகையுங் கோலக்
கொண்டலிற் றவழக் கண்டு குயிலின மொளித்த மூசி
வண்டின முரன்று பாட மடமயி லாலு மாதோ. (28)

சுழியெலாங் கனகஞ் சிந்துந் துறைநதிக் கரைக டோறும்
விழியெலாங் கழுநீர் காட்டு மெல்லியர் விரும்புங் காமப்
பழியெலாங் கடந்த மேலோ ரிருக்கைகள் படர்ந்த தண்கா
வழியெலாம் வறியோர்க் கூட்டு மணிநெடுஞ் சாலை மாதோ. (29)

அந்தணர் மகத்தி லெய்து மமரர்க ளரம்பை மாதர்
வந்தன ரிவண்கொ லென்று மருளுறு தொலிநீர் வைப்பின்
பைந்தொடி யவரென் றன்னார் படைநெடுஞ் சுடர்வேற் கண்ணுஞ்
செந்தளிர்ச் சிலம்பு பூண்ட சீறடிச் சுவடுங் காட்டும். (30)

கன்னலஞ் சிலைவே ளன்ன காளையர் புயங்க ளென்று
மின்னவிர் பொலன்செய் பைம்பூண் மிளிர்வன மின்னனார்செம்
பொன்னொளிர் திதலைத் தத்திப் புணர்முலைப் பூசு சாந்தச்
சென்னிமற் றவர்கள் பொன்னஞ் சேவடிச் சிவந்த பஞ்சே. (31)

ஆயிரந் தடங்கண் வேந்த னாசுவீற் றிருக்கு நாடும்
பாயிர மறையோ னாடும் பசுந்துழாய் முகுந்த னாடு
மாயிரு ஞால மேத்தும் வளவனா டதனுக் கொவ்வா
தூயவண் டமிழோர் யாரே யதன்வளந் தொகுக்கற் பாலார். (32)

கலிநிலைத்துறை.

இங்கி யான்புகழ்ந் தேத்திய வளவனாட் டினுக்கோர்
தங்கு மாமணித் திலகமொத் துளதுபோற் சயில
நங்கை பங்குடை நாயகன் றிருநட நடிக்குந்
திங்க ளஞ்சடை யெம்பிரான் றெய்வமா நகரம். (33)

தலங்கொ ணீண்மதிட் கிடையிடை குயிற்றிய தாளந்
துலங்கு வெண்கதிர் விரித்தலிற் சுற்றுபே ரகழி
யலங்கல் வேணிய னருந்தவன் புதல்வனுக் களித்த
கலங்கு வார்திரைப் பாற்கடல் கிடந்தது கடுக்கும். (34)

மட லுடைத்தலர் தாமரை வளங்கெழு மகழி
லடன்ம தக்கரி யுழக்குத லலைசுருட் டெறியுங்
கடல்க லக்குறத் தடவரை திருப்புதல் கடுக்கும்
படர்வ ளைக்குல மமுதமென் குமிழியைப் பகரும். (35)

ஓங்கு கற்பகப் பொன்னகர் நெளிந்திடா துறுதி
தாங்கு தா(ளுயர்) தமனியத் தடிப்படை சமைத்துத்
தேங்கு தேமலர்க் கிழவனன் றமைத்தது சிறக்கும்
வாங்கு போலை யகழிசூழ் கிடந்தபொன் மதிளே. (36)

(கற்றை) வேணிய னுடலஞ் சேவடி காண்பான்
கொற்ற வெங்கதிர்த் திகிரியோ னுன்முகன் குலிசன்
மற்றை வானவ ரனைவரும் வருவதற் கமைத்த
பொற்ற செங்கதிர்ப் பொற்படி யனையகோ புரங்கள். (37)

நெருங்கு வெண்சுட ராயிர மதியென நிலவி
வருங்க திர்ப்படை வச்சிர மெடுத்து வானவர்கோன்
முருங்க வெஞ்சிறை யரியுநாள் வரைக்குல முழுது
மொருங்கு வந்திருந் தனையவின் னுயர்நெடு மாடம். (38)

கொழித்த செங்கதிர் மணிநெடு மாடவெண் கொடிகள்
கிழித்து மஞ்சுதொட் டசையன கிளர்ந்தமே னிலத்தி
னிழைத்த நுண்ணிடை மடந்தையர் வளர்த்தவெள் ளெகினஞ்
சுழித்த வானதி படியமேற் சுழல்வன துலக்கும். (39)

புயல்கி டந்தொளிர் மேனிலை யிடந்தொறும் புகுந்து
முயல்கி டந்தொளிர் வெண்மதி மடந்தையர் முகங்கள்
கயல்கி டந்துள மதிகொலோ விவையெனக் கருதி
யயல்கி டந்துபார்த் தழுகினு லதிசயித் தயரும். (40)

ஓவி யங்கெழு முயர்மணி மாளிகை யுறையும்
பூவை கேட்குறிற் புறமிடு மென்றுமே னிலைபோய்க்
கோவை வாயித ழுண்டுபொற் குவிமுலை குழையப்
பாவை மார்மகிழ் கலவிக ளாடவர் பயில்வார். (41)

இந்து காந்தவெண் மணிகளி னிழைத்தமே னிலத்தின்
வந்து வெண்மதி தவழ்தலின் மறிபுனல் வழிந்து
சிந்து குங்குமச் சேறுசெய் தெருவெலாங் கழீஇக்கொண்
டுந்து தெண்டிரை யாறலைத் தெங்கணு மொழுகும். (42)

கால மஞ்சிவர்ந் திலகிய கொடுமுடி கலந்த
நீல வொண்சுடர் மணிசெய்பொற் குன்றின்மே னெடுங்கட்
கோல மங்கையர் கலவியில் வெறுத்தெறி குளிர்வெண்
மாலை நித்திலம் வீழ்வன வருவிகள் மானும். (43)

முரித டந்திரை முத்தவெண் ணிலவுமிழ் முகப்பும்
பொருவில் செம்மணிப் பூரண கும்பமும் பொலன்று
ளெரிப சுப்பொனின் கமுகமு மினியதீங் கரும்பும்
விரியு நெட்டிலைக் கதலியும் வளங்கெழும் வீதி. (44)

உரைகொ ளாடக மாகதக் குவைமறிந் துதறுந்
திரைகொ ணித்திலம் பவளமென் செறிமயிர்க் கவரி
விரைகொள் சந்தன மான்மதம் விண்முகில் விரவும்
வரைகொள் காரகில் மலிதரு மாவண மறுகே. (45)

கொண்ட விற்கத மதகரி குளிரிய குரலுந்
திண்டி றற்கருங் கொய்யுளைப் புரவியின் சிரிப்பு
மெண்டி சைப்பரப் படங்கலுந் துளங்கிட விமையோ
ரண்ட முங்கடந் தப்புறத் தெல்லையுந் தீரும். (46)

ஐந்து தேங்கணைக் குமரனி லழகெனப் பழிச்சு
மைந்தர் யாவரும் மறைநெறி வழக்கினை வழுவார்
கந்த நாண்மலர்க் கன்னியர் யாவருங் களபச்
சந்த மாமுலை யருந்ததி கற்பினுந் தலையார். (47)

எழுசீராசிரிய விருத்தம்.

கருக்கிளர் பிறவித் தடங்கட லினுக்கோர்
கழலெனும் புணைநடித் துயர்த்த
வுருக்கிளர் பெருமான் பவளவாய் மலர்ந்தே
யொருவன்யா னிவரிலென் றுரைத்த
தருக்கிளர் தடங்கைச் சதுமறை முனிவர்
தண்ணளி சுரந்துவீற் றிருக்கும்
திருக்கிளர் மடமூ வாயிரம் பொலிந்து
திருந்திய தில்லைமா நகரம். (48)

வலங்கெழும் பருதிச் சக்கரக் கடவுண்
மணிமுடி குடங்கையிற் கிடத்திக்
கலங்குசெங் குருதிப் புலவுவாய் கமழும்
கதிர்ப்படை மழுவலா னடனத்
திலங்கொளி மணியி னரிச்சிலம் பெடுத்த
விணைப்பதத் தொன்றுகண் டிறைஞ்சத்
தலம்புகழ் சபைமுன் வரங்கிடந் தருளுந்
தனிநகர் பெரும்பற்றப் புலியூர். (49)

தீங்குறு பவத்தி னடைவுசெய் கொடிய
துன்மதன் செழுந்துவர்க் கனிவாய்
வீங்கிளங் குவவுக் குவிமுலை மடவா
ராடலை விரும்பியே குதனு

மாங்கர வசைத்த சடைமுடிப் பரம
    னம்பலத் தருணடந் தெரியப்
பாங்கிரு விழியா னோக்கிவீ டடைந்த
    பழம்பதி சிதம்பர நகரம். (50)

மையலங் காடக் கடமலை யுகைத்து
    மானவேற் சேரலர் பெருமா
னையன திலகு பொதுநடம் பரவ
    வரும்வழி யருஞ்சுமை பொறுத்த
வெய்யதுற் சகனு மங்நக ரடைந்து
    மெலிவொடு மிளைப்பினில் வருந்து
பொய்யுடம் பகலச் சிவகதி யடைந்த
    பொருவிலாப் புண்ணிய நகரம். (51)

பாயிருண் மடுத்துப் பருகுசெங் கதிரின்
    பகைகெடப் புனற்கடும் பகழி
மாயிரும் புவியி லனுதினம் விடுக்கு
    மறையவர் பிதிர்தினத் தளித்த
வேயிரும் புழுக்க லலகெடுத் துதற
    விருமறைக் கிழவன்வாய்ப் படலாற்
காயிரும் பவம்போய்க் கடம்வா னுலகங்
    கலந்தவக் கடவுண்மா நகரம். (52)

குமரிவண் டுழக்கக் குறுமுகை நெகிழ்ந்து
    கொழுநறு வொழுகுதண் டெரிய
லமரெனப் பணைத்த முழவுறழ் தடந்தோ
    ளரசர்கோன் கவுடநா டளிப்போன்
கமழ்மறி திமிரு முடலினிற் சுதைபோய்க்
    கனகவெண் ணிறம்பெறக் கொடுத்த
தமரவெண் டிரைய வாநதி பெருகு
    தடந்தரு தருமமா மூதூர். (53)

மலர்தலை யுலக முழுவதுஞ் சுமக்கு
    மணிமுடிப் பஃறலைக் கவைநா
நிலவுகொப் புளிக்கு நெட்டுடற் புயங்க
    முனிவா னிலைபெற வழுத்திக்

கலகமிட் டடர்ந்து குழைபொரு தடங்கட்
கவுரிகண் டுளங்களி களிக்க
வுலவுமத் திருக்கூத் தருள்கவென் றிரங்க
வெம்பிரா னுலவுமா நகரம். (54)

முரிகரு மருப்புக் கவையடி யெருமை
முலைவழிந் தொழுகிய நறும்பால்
பருகிவெள் ளெகினப் பார்ப்பினங் களிக்கும்,
பண்ணைசூழ் கமலையம் பதியி
லருமறை துதிக்குங் காசிமா நகரிற்
பிறப்பது மிறப்பது மரிதாற்
றெரிசனை யளவிற் பாகதி யளிக்குஞ்
சிற்பரன் சிதம்பர நகரம். (55)

வம்பினைக் கறுத்துப் புடைத்தடி பரந்து
வட்டமிட் டவிரிழை சுமக்குங்
கும்பமொத் தெழுந்த பணைமுலைக் கனிவாய்க்
கோற்றொடி யுமையவள் கொழுநன்
செம்பொனிற் றிகழு மாடநீள் புரிசைச்
சிதம்பரத் திருநகர்ப் பெருமை
யம்புயத் தாசுஞ் சுருதியு மளத்தற்
கமைவதோ யாவரே யளப்பார். (56)

அறுசீராசிரிய விருத்தம்.

இன்னணம் பகர்ந்த தெய்வச் சிதம்பரத் தெந்தை யார்செம்
பொன்னடிக் கமலம் வாழ்த்திப் பூசனை புரிந்து போற்ற
மன்னிய தருக்க டோறு மருமல ரெடுப்பான் வேண்டி
யுன்னரும் புலிக்கால் பெற்ற வொருவனற் றவத்தின் மிக்கான். (57)

கண்களித் தளவில் ஞானக் கருணையா னந்தஞ் சிந்தப்
பெண்கொடி யிமைய மீன்ற பெய்வளை யொருபால் வைத்த
தண்பிறை மிலைத்த சென்னிச் சங்கர னடன மன்பாற்
பண்பொடுந் தெரிசித் தேத்தும் பத்தியிற் றலைமை பூண்டோன். (58)

ஓதுநூற் கல்வி சொல்லு மாகம வொழுக்கஞ் சீல
நீதியி னிரக்க முண்மை பொறையறந் திறம்பா நீர்மை
யீதலே முதலா யுள்ள வனைத்தையு மியல்பிற் சார்ந்தோன்
வேதமா முனிவன் சைவ வியாக்கிர பாத னென்பான். (59)

நினைவரும் புலன்கள் யாவு மொருவழி நிறுவி யெம்மான்
கனைகழற் கழலே யென்றுங் கடைப்பிடி யாகக் கொண்டு
வினைவழி யகற்றி யேழு பிறப்பையும் விலக்கு மென்று
மனையறந் தழுவி ஞான மைந்தனை மகிழ்வி னீன்றான். (60)

ஓங்கரும் புதல்வற் கேற்ப வுபமன்னு வென்னு நாமம்
வாங்குதெண் டிரைநீர் சூழும் வையகம் புகழச் சாற்றி
நீங்கருஞ் சிலம்பு தண்டை யரைவட நிலவச் சேர்த்தித்
தேங்கமழ் திலகந் தீட்டித் திருவொடும் வளர்க்கு நாளில். (61)

கன்னிவண் டறையு மாலைக் கருங்குழல் மடந்தை யாய
வன்னைதன் முன்னர்த் தோன்று மருமறைக் குரவ னானுஞ்
சின்னெறி பலவுந் தீர்ந்த வசிட்டனைக் காண்பான் றெய்வப்
பன்னசா லையிற்புக் கெய்தப் பாலனு மெய்தி னானல். (62)

கண்டனன் வசிட்டன் வாரி யுச்சியுங் கவுளு மோந்து
கொண்டனன் மருகன் றன்னைக் குறங்கின்மீ திருத்திக் கோலப்
பண்டரு மழலைத் தேற லமுதெனப் பருகிக் காதா
லுண்டன னளவி லாத வுவகைபூத் தொளிரு கின்றான். (63)

கற்பக நகரத் துள்ள கடவுண்மாச் சுரபித் தீம்பா
லற்பொடு மினிது தேக்கி யஞ்சனம் விழியிற் போக்கிப்
பொற்புறுங் குஞ்சி கோதிப் புழுகுநெய் யிழுகி யாட்டி
நற்பணி புனைந்தா ணம்பிக் கருந்ததி யென்னு நங்கை. (64)

இத்தகை யிவர்க ளாற்றச் சில்பகல் வசிட்ட னீன்ற
புத்திரர் தங்க ளோடும் புழுதியாட் டயர்ந்து தீம்பால்
சித்தமன் பயர மாந்தி யிருந்தனன் றிரும்பித் தாயர்
வைத்தபொன் னிருக்கை சார மைந்தனும் வந்து சார்ந்தான். (65)

சார்ந்தபின் பசியின் வெந்தீத் தலைக்கொளத் தளர்ந்து வாடிச்
சோர்ந்தன னமுத மன்ன சுவைநறுந் தீம்பால் கேட்டே
யார்ந்தசீர் கொழித்த கற்பி னனைமுகங் குறித்து நோக்கி
வார்ந்தநீர் கண்கண் மல்க வாய்திறந் தழுது நின்றான். (66)

அய்யனே யரசே ஞான வமுதமே யழகு பூத்த
செய்யனே பசிய பொன்னே தீஞ்சுவை கனிந்த தேனே
மையநொந் துருக வாடி யழுவது தகைமைத் தாமோ
வெய்யனேன் கொடிய பாவி யென்செய்வே னென்று மீண்டும் (67)

விழிசொரி தாரை மாரி வெள்ளமென் காத்தான் மாற்றி
வழிசுவைத் தீம்பா லிந்த வனத்திடைக் கிடையா தென்னப்
பழிகெழு கொடிய வேற்கட் பைந்தொடி பகர வந்த
மொழிசெவிப் படலுங் கேளா தழுதனன் முழங்கிப் பின்னும். (68)

அருந்தவப் பயனு மைந்த னழுவதுக் கிரங்கி யன்னை
வருந்தினள் விலக்கக் கேளா னென்றுநென் மாவை யள்ளித்
திருந்திலை வள்ளத் தாக்கிக் கரைத்துநற் றீம்பா லையா
பொருந்தநீ யுண்க வென்று கொடுத்தனள் புதல்வன் றன்பால். (69)

காதலாற் கொடுத்த மாவைக் கனியிதழ் வைத்து நோக்கி
யாதிது வன்னை கூடு மினிமையு மில்லை யந்த
மாதுலன் மைந்த ரோடு மருந்திய மதுரத் தீம்பால்
கோதறு மினிமை யுண்டு கொதித்தலு முண்டா லென்றான். (70)

என்றலு மவனை யீன்றாள் சிலமொழி யிசைப்ப தானு
மன்றுநீ யழுது வாடி நலிந்திடுங் குறையை மாற்றத்
துன்றுசெஞ் சாலி மாவை யளித்தனன் சுவைக்குந் தீம்பா
லன்றவர் செய்கை யெல்லாம் யானெடுத் துறையக் கேண்மோ. (71)

வாநதி துளும்புஞ் சென்னி வாதனை வழுத்தி யன்பா
லிருவிசும் புறையுந் தெய்வச் சுரவியு நிதியு மீட்டும்
பெருவள மனைத்தும் பெற்றார் மாதுலன் மைந்தர் பேறு
தருசிவ பூசை முன்னர்ச் செய்திடா தவனீ யென்றான் (72)

உரைத்திடு மொழியுட் கொண்டான் சிவனெனு மொருவ னுண்டேல்
விரைக்கழ லரிச்சித் தந்த மாதுலன் வியந்து பெற்றோர்
தரைத்தரு சுரவி யன்றோ பெற்றனர் தனமேற் றந்து
திரைத்திருப் பாலி னாழி பெறுவது திண்ண மென்றான். (73)

அழுதயர் செய்கை யெல்லாந் துறந்தன னன்னை பொற்று
டொழுதுவீழ்ந் திறைஞ்சி நின்று வலஞ்செய்து தொலைவி லாத
முழுநெறித் தவஞ்செய் வான்போய் முரிதிரை முகந்து மாரி
பொழிபுய லுறங்கு சோலைத் தவவனம் வேறு புக்கான். (74)

அவ்வன மடைந்து மைந்த னடலரும் புனல்க ளெல்லாஞ்
வெவ்வழிப் படுத்தி வேறோர் சிந்தனை யொன்று மின்றிக்
கொவ்வையங் கனிவாய் பங்கன் குரைகழ லரிச்சித் தேத்தத்
திவ்விய விருக்கை யொன்று சமைத்தனன் சிவந்த கையால். (75)

அகநில முழுதும் வாழ வாகம சைவ மல்லா
திகல்கொள்புன் சமய மெல்லா மிழிபட வினையில் ஞானச்
சகளநிட் களமாய் நின்ற சதாசிவ மூர்த்த மாய
புகலரு மிலிங்க மொன்று புரிந்தனன் பூசை செய்தான். (76)

புண்ணிய மனைத்துங் கூடித் திரண்டுருப் பொலிந்த ஞானக்
கண்ணுதற் கடவுளானைக் கயிலையஞ் சயிலச் செந்தீ
வண்ணனை யென்னை யாளும் வரதனை வழுத்தி நாளு
மெண்ணரு மெழுத்தோ ரஞ்சு மெண்ணின னிருந்த காலை (77)

வெஞ்சின முருத்து நாட்டம் வெந்தழல் கொழுந்தச் சேந்த
குஞ்சியு மடித்த வாயும் பிறையெனக் குனித்த பல்லுஞ்
செஞ்சவே விளங்கித் தோன்றச் செருவினைத் தடர்ந்து சீறி
யஞ்சமெய்த் தவத்தி னுன்முன் னலகைக ளடைந்த வன்றே. (78)

வந்தெதிர் வளைந்து நின்ற வலகைகள் வடிவ நோக்கி
யந்தணன் மழுவ லாள னஞ்செழுத் தடைவை யெண்ணிச்
சிந்தையி னினைந்து பார்த்தான் றீர்ந்தது சாபம் வெம்பேய்
முந்திய வுருவ மாறி முனிவ ராயி னரால். (79)

அன்னவ ருவகை பொங்கிக் களித்தன ராசி கூறிப்
பொன்னவிர் தருண மேனிப் புங்கவ முனிவ ரேறே
நின்னைவந் தடைய யாங்கள் பெற்றது நிகழ்த்தற் பாற்றோ
வென்னமா தவங்கள் செய்தே மென்றன ரிறைஞ்சி நின்றே. (80)

கங்குலி னிருளை வாரிக் கைமடுத் துண்டு காலுஞ்
செங்கதிர்ப் பருவஞ் செய்யத் தெய்வதப் பொகுட்டுப் பொன்னம்
பங்கயா சனத்துப் புத்தேள் பகர்மக மியற்றுஞ் சாலை
யங்குயாம் வணக்க மின்றி யடைந்தன மடைந்த காலை (81)

மையறு மகன்ற கேள்வி மரீசியெங் குழுவை நோக்கி
வெய்யவெம் பேய்க ளாகச் சபித்தனன் வெருவி யாங்கள்
கையிணை முகிழ்த்துக் காட்டித் துதிபல கழறி யைய
வெய்தும்வெஞ் சாபந் தீர்வ தென்றென விரங்கி யன்னோன் (82)

காண்டகு வனப்பின் மிக்க கனகநற் பொதுவி லெந்தை
தாண்டவ நடிக்க வன்பு தலையழிந் திரந்து நின்று
வேண்டிய முனிவன் சைவ வியாக்கிர பாதன் மைந்த
னீண்டசெஞ் சடையி னானைக் காண்குறி னீங்கு மென்றான். (83)

மருந்தெனப் புவனம் யாவு மம்மர்தீர்த் தருளா நின்ற
விருந்தவ முனிவ நின்னை யிறைஞ்சுநாள் காறுந் தீது
தருந்தகை யலகை யாகித் திரிந்தனந் தாழா தின்று
பெருந்தகை முனிவ ரானேந் தவத்தினும் பெரிய துண்டோ. (84)

உருவமும் வயது மென்னே யொலிகட லுலகிற் றோன்றிக்
கருவிகள் குலைந்து மூப்பு நரைதிரை கலந்திட் டாலுந்
திருவருண் முயங்கு ஞானந் திறம்பின ரவரே பாலர்
பருவமெய்ஞ் ஞானம் பெற்ற பாலரே விருத்த ராவார். (85)

எனவெடுத் துரைத்தி யாங்க ளுனதுழை யிருக்க ஞான
வனகனே யருள்க வென்ன வருந்தவ மியற்று மைந்தன்
றனதுழை யிருத்தி யன்னோர் தவம்பல வியற்றச் செய்து
மனமகிழ் வரவே யின்னும் வரதனை யிறைஞ்சு நாளில். (86)

கருமுகிற் றலையிற் சேர்ந்து கனலெனத் திரண்ட மேகம்
பிரிவறப் பொருந்த லென்னச் செப்பொளி பிறங்கு குஞ்சி
வருதலை யகன்ற பேழ்வாய் மலையெனப் பணைத்து வீங்கு
பொருபுயத் தாக்கர் வந்து வளைந்தனர் பொருவி லானை. (87)

செங்கர முனக்கு வாய்ந்த சிறுத்தலை யெனக்குச் செய்ய
வங்கமுங் குடரு மந்த வரக்கனுக் கென்று தாமே
தங்களி லுரைத்துச் சீறித் தடம்புயங் குலுங்கக் கொட்டி
நுங்கவென் றருகு வந்து நோக்கினர் நோக்குங் காலை (88)

குருமதி நிலவு காலுங் கொழுஞ்சடைப் பவள மேனி
யொருவனல் லெழுத்தா மஞ்சு முணர்வினி லுணா நோக்கித்
திருவருள் புரிந்தான் பால னன்னவர் சாபந் தீர்ந்து
பொருவரு முருவந் தாங்கி முனிவராய்ப் பணிந்து போனார். (89)

ஆயவர் போய பின்ன ரொருபக லழன்று காந்து
தீயுமிழ் கொடிய செங்கட் குறியதாட் சிவந்த குஞ்சிக்
காய்சினங் கதழப் பொங்குங் கருவரை யனைய பூதர்
மேயினர் புதல்வர் முன்னர் வெஞ்சமர் விளைக்க வென்றே. (90)

தோன்றிய பூதர் தங்க டொகுதியைக் குறித்துத் தானே
யீன்றுல களிக்கு நாத னியல்பினஞ் செழுத்தை யோதி
யான்றரு ளமுதப் பார்வை யளித்தனன் குமா னன்னோர்
கான்றபொன் னுலக மெய்தக் கடவுள ராயி னால். (91)

இனையன வியற்றி மைந்த னெறிகதிர் பாப்பு பொன்னம்
பனிவரை யுயிர்த்த செவ்வாய்ப் பரிமளக் கொடியோர் பாகன்
கனைகழற் சரணம் போற்றிக் கருதருந் தவமே யீட்டக்
குனிதிரை யுலகங் கண்டு குணிக்கருந் துயரங் கொண்ட (92)
ஈதலா வியக்கர் சித்த ரிமையவர் முனிவோர் யாருங்
கோதிலான் றவத்தைக் கண்டு குணிக்கருந் துயரு ளாழ்ந்தா
ராதலா லமரர் கோமா னித்தகை யனைத்து ஞானப்
பாதிமா மதிய வேணிப் பாமனுக் குரைப்பே னென்று (93)

## அறுசீராசிரிய விருத்தம்.

செங்கட் குருதி பிதிரொழுகச் செருவி னெதிர்த்துச் சினச்சிங்கம்
வெங்கட் கரியி னிணைமருப்பு விசைத்துப் பிடுங்கிக் குருத்துடைக்க
வங்கட் சொரியு மணிநிலவு மகலக் குவட்டுக் குடுமிதவழ்
திங்கட் கொழுந்தி னிளநிலவுந் திவழ்ந்து திவழ்ந்து தலைமயங்கும்.(94)
பிறையிற் றயங்கும் வளைமருப்புப் பேழ்வாய்த் தறுகட் கருங்கேழ
லறையிற் கிடக்கும் பெரும்பாந்த ளாழ்ந்து கிழிக்கப் பணச்சுடிகை
நிறையப் பொதிந்த மணிசிதறி நிலவு கதிரு நெடுமுகடு
மறையத் தவழுஞ் செழும்பருதி வழங்குங் கதிருந் தலைமயங்கும்.(95)
தூங்கு மருவிக் கிடங்குதொறுந் துள்ளு மிளங்கன் றுளங்களிக்க
வீங்கு செருத்த லமுதருந்தி மேதிக் குலங்கள் கண்படுக்கும்
பாங்கர்க் கெழுவும் பசுங்கழையின் பனிவெண் மதியத் தமுதொழுகித்
தேங்கி யொழுகும் பேர்யாற்றிற் சிறைப்புள் ளினங்கள் விளையாடும். (96)
கோட்டிற் கிடந்த விருற்படலங் குறுகிப் புழைக்கை தொடத்தடவி
மோட்டுக் காடக் களியானை முருக்கிப் பிழியு நறவாற்றிற்
பாட்டுச் சுரும்பர் நிரையிரியப் படருங் கொடிப்பூப் பறித்தெறிந்து
வேட்டுப் புணர்ந்த புதுப்பிடிகண் மிடைந்து மிடைந்து படிந்தாடும். (97)
வண்ணங் கரிய கருமந்தி மணந்த பிணவி னுடுமகிழ்ந்து
தண்ணஞ் சுருட்டுக் குருத்தெறிந்து தழையுங் கதலிக் கனியுண்டு
பண்ணங் குதலைக் குயில்மிழற்றித் தாலாட் டெடுப்பப் பணைபரப்பி
விண்ணம் படர்ந்து கனியுதிர்க்குந் தேமாம் பொழிலின் விழிதுயிலும். (98)
கொங்கு விரிய முகைவிரியுங் கொழுங்கற் பகப்பொன் னகரிழிந்து
தங்கு நெடுங்கண் ணரம்பையர்க டத்தங் கொழுநர் தமைநோக்கி
மங்குல் படியும் பொலன்குவட்டு மறியு மடமா னிளங்குருளை
செங்கை பிடித்துத் தருதிரெனச் செவ்வா யிரந்து காமுகிழ்ப்பார்.(99)

பொலன்கொள் கிளைபோம் பசியநெடுங் கழைக்கண் வெடித்துப் பொழிதாள
மலங்கு குலைய செங்காந்த ளணிமென் மலரின் மிசைவீழ்த
னலங்கொள் வரையா மகளொருத்தி நகுவெண் கதிரின் காழ்முத்த
மிலங்கு சுடர்ப்பூண் முலைக்கணிய விருகை யெடுத்தே யேற்பதுவாம். (100)

அண்டர் மகளிர் குடைந்தாடு மருவி தவழும் பொலன்குவட்டுத்
துண்ட மதியக் கொழுந்துதவழ் சோலை தோறுஞ் சுழல்கமஞ்சூழ்
கொண்டல் படர்ந்து கனக்மழை பொழிய விகலிக் கொழுங்காமர்
வண்டு படியா நறவேங்கை மலரின் கனக மழைபொழியும். (101)

மன்றற் செழுஞ்சங் கனப்பொதும்பர் மலரிற் றவழ்ந்து வடிவாளின்
வென்றித் துணைக்க ணரம்பையர்கண் மேகக் குழலின் புழுகளைந்து
தென்றற் குழவி தளர்நடையிட் டசைந்து திரிந்து விளையாடிக்
குன்றத் தமரர் திணிதடந்தோட் குவட்டிற் படர்ந்து கொழுந்தேறும். (102)

இனைய கயிலைத் தடவரையி னிடங்க ளனைத்துங் கடந்துமதி
புனையு முகட்டிற் றிகழ்நாப்பண் பொங்கு மிருள்சீய்த் தெரியிமைக்கு
மனவ நெடுங்கோ புரவாயி லடைந்தா னந்தி மலரடியிற்
கனக நறுங்கற் பகப்போது தூவிப் பணிந்தான் கடைவிடுத்தான். (103)

நந்தி பணிக்க நனையவிழ்த்து நறவு பிலிற்றித் திவலைபடச்
சிந்து தருநா டினிதளிக்குந் தேவர் பெருமான் பிறைவயங்கு
மந்தி நிறத்துப் பவர்த்தசடை யம்மான் முனிவர்க் கருள்பெருகித்
தந்தி யுரியை யரைக்கசைத்தோன் மகிழ்கூர் திருச்சன்னிதி புகுந்தான். (104)

சிரம்பொன் மலரி னலங்கன்முடி நிலத்திற் பணிந்து தெண்டனிட்டான்
கரங்கள் குவித்தான் கண்பனித்தான் கவுளிற் புடைத்தான் வலம்வந்தா
னிரங்கி நகைச்செந் தழற்கொழுந்தீ யிமைப்பிற் கரிந்து பொடிநீறப்
புரங்க ளொருமூன் றெரித்தவனைப் பழிச்சிப் பழிச்சிப் புகன்றனனால். (105)

அடரும் வயிரப் படையோன்பாற் றிருநோக் களித்துத் துவள்கொடியிற்
படருஞ் சடையோன் புரந்தரநீ வந்த பரிசு பகர்தியெனக்
குடருந் தசையு மெறிந்துநிணங் குமிழி பெருகக் குறுகலர்மீ
தடரு மயிரா வணத்துலவு மரச னுரைப்ப தாயினன். (106)

## கோச்சகக்கலிப்பா.

ஓங்காரத் துள்ளொளியே வேதத் தொடுங்காதா
யாங்காத லன்ப ரகத்தடங்கு மாரணனே
நீங்கா வுடற்கூ னிலவு திரைத்துநதி
தேங்கா வுவட்டெடுக்குங் கோடீரச் செம்மலையே (107)

ஆதியா யீருய் நடுவா யறியாத
சோதியா யெண்ணிறந்த தொல்லுயிர்க்குந் தோற்றமாய்
நீதியாய் நீதி நிலையாய் நிலைசிறிதும்
பேதியா தோங்கும் பெருங்கருணைப் போரே. (108)

கண்ணார் கழைச்சிலையோற் காய்ந்தருளுங் கண்ணுதலே
நண்ணார் புர்மூன்றும் வேவ நகைத்தோனே
தண்ணா ரமுதே மறைநான்குஞ் சாற்றுதழல்
வண்ணா பேரின்பம் வழிந்தூறும் வாரிதியே. (109)

வாமக் கனகவரை மங்கையொரு பங்காளா
தாமச் சுடரடுபோர்ச் சூலத் தனிப்படையா
யீமப் பெருந்தழல்வாய் நின்ருடு மெம்மானே
காமத் தழலவித்தோ ருள்ளாடுங் காரணனே. (110)

மற்ருேர் நினைவின்றி யுன்மலர்த்தாள் வந்தனைக்கன்
புற்ருேன் கருணை யுபமன் னியமுனிவன்
கற்ருேர் வணங்கு தவம்பழுத்த காட்சியினன்
சொற்ருேறு நின்னஞ் செழுத்தன்றிச் சொல்லாதான். (111)

ஆடுந் திரைப்பாற் கடல்பெறுவா னைசயினற்
றேடுந் தவம்பெரிது செய்கின்ருன் செய்வதனு
னீடும் புவன நிலமயங்கி நின்றிரங்கி
வாடுங் கொடுந்துயர மம்ம ருழந்தனவால். (112)

பண்டோதும் வேதம் பகுத்துப் பகுத்தெடுத்துக்
கொண்டோ தினவெல்லா நின்மேற் குறிப்பாமா
லெண்டோட் பெரும நினையல்லா லெவ்வுயிர்க்கு
முண்டோ தலைபுரப்பான் வேண்டு மொருபொருளே. (113)

மின்னார் சடைமுனிவன் வேட்டவா நல்கிலையேற்
பன்னாளு மன்னா னியற்றுதவப் பான்மையினா
லின்னா வடைந்துலக மெல்லா மிறந்தனவாம்
பொன்னார் சிறைவண் டுழு துழக்கும் பூந்தாரோய். (114)

மங்கை யயிராணி வாரேறு தண்களபக்
கொங்கை பணைத்தேறு தோளா னிவைகூறக்
கங்கை மணாளன் முடிதுளக்கிக் காட்டுபூஞ்
செங்கை யபயம் புரிந்து திருவாக்கு (115)

மந்தார மாலை மணிமுடியோய் மாதவத்தோன்
சிந்தா குலமனைத்துந் தீர்த்துத் திரைபுரட்டு
நந்தாத் திருப்பாற் கடலவற்கு நல்குவல்யான்
சந்தாப மெவ்வுலகு நீங்கவெனச் சாற்றினான். (116)

பூணார் தடந்தோட் புயல்வண்ண னான்முகத்தோன்
காணாத ஞானக் கருணைத் திருவுருவஞ்
சேணா டரசுரிமைத் தேவர் பெருமானின்
மாணா ருருவா யொளிவயங்க மன்னினான். (117)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நீலநெடு வரைநிவந்த பொலன்குவட்டு மழகிரண நிலவு கோலி
வாலகதிர் வதிந்திமைத்து வயங்கலென மறிதிரைநீர் மருங்கு சூழ்ந்த
ஞாலமுழு வதும்புதைத்து விழுங்குபிழம் பிருளிரிய நகைக்குஞ் சாதிக்
கோலமணித் திருமவுலிச் செழுங்கதிர்க ளெண்டிசை போய்க் குலவி வீச. (118)

உருகுகொழுங் கிளிச்சிறைய வசும்புபசும் பொன்னிழைத்த வொளிருஞ் செவ்வி
யிருகுழையுஞ் சுடரெறிய வெழுவனைய திணிதடந் தோளிணைவெற் பேந்து
கருவிடநாக் கடைபுரட்டு துளையெயிற்றுக் கறையணற்செங் கனலிற் காந்து
பொருவரிய மணிச்சுடிகை நெடும்புயங்க புயங்கபடம் பொலிந்து காட்டி. (119)

சினைமுதிரும் வயிறுளைந்து சங்கநிதி வாய்வெடித்துச் சிதறு முத்தத்
துணைகதிர்விட் டொன்றுமொரு கண்டசா மிளநிலவுச் சுடரிற் காட்ட
நனைபொதுளி நறையொழுகு மந்தார முகிழ்த்தமலர் நறுந்தா ரோடும்
வனைதருபைந் தருவளித்த பொன்னரியா மாலைமணி மார்பிற் சூழ. (120)

அணியினிறை வகுத்தவிரிந் திரநீல மிடைதிவள வருளுஞ் சிந்தா
மணியுதவு சிவந்தமணித் திருவுதர பந்தனஞ்சீர் மலிந்து மல்கத்
தணிவருபே ரொளிதழைக்கும் பொன்னுடை தனிமருங்கு தயங்க வாய்ந்த
பணிமுகத்தாள் பிணித்தமணித் திருவீரக் கழல்கழலிற் பரிவி னார்ப்ப (121)

திருகுசினந் தலைக்கொழுந்தப் பகையரக்க ரிடுசெருவிற் சீறி யாவி
பருகிநெடுங் குடரளைந்த நிணப்புலவு கழுவுதற்குப் படர்வா னீட்டி
யருகுநுரை கலக்கிவ்ர நதியுடைக்கும் பணைப்புழைக்கை யருவி தூங்கும்
பெருகுமகக் கவுட்சுவட்டு நான்மருப்பு வெள்ளானைப் பிடரி னேறி (122)

எண்ணரிய கணத்தலைவர் தேவர்திரு வுருவெடுத்தே யிறைஞ்சிச் சூழ
விண்ணவரு முனிவரு மயங்கிமுதற் கடவுளரு மிடைந்து போற்ற
வண்ண லுரு வேறெடுத்துச் செங்கதிர்ச்சா மரையிரட்ட வமிழ்த மூறும்
பண்ணமையாழ் மதுரமொழி யயிராணி கொழுநனெடுங் கவிகை பற்ற (123)

சல்லரிதுந் துமியுடுக்கை குடமுழவ மிடக்கையொடு தடாரி யாய
பல்லியமார்த் தெழக்காளம் விருதொலிப்ப வலம்புரிவெண் பணில மார்ப்பச்
சில்லரிக்கட் கனியிதழ்வா யரம்பையர்கள் வீணையிசை திருத்திப் பாடச்
சொல்லரிய கனகமழை மலர்மாரி யிருமுகிலுஞ் சொரிந்து தூங்க (124)

புண்டரிக மலர்ப்பாதப் பொருவில்முனி யளித்தருளும் புதல்வன் றன்பா
லண்டர்பிரா னெனக்கயிலை யமலர்பிரா னெழுந்தருளி யடைத லன்பாற்
கண்டனன்கண் ணுதற்பரனென் றறிந்திலனிந் திரனெனவே கருதி யேத்தித்
தொண்டுபுரிந் தடியிணைவீழ்ந் திறைஞ்சியருந் துதிகள்பல துதித்து
நின்றான். (125)

மறைமுனிவ னின்னணமே நிற்பதுகண் டவனைமதி வதன நோக்கிப்
பொறைநெறியின் றுறைபோய முனிவரனிற் றவமெவராற் புகழ்தற் பாற்றே
குறைவறநீ கேட்டவரந் தருகுவன்யான் யாதுவரங் குறித்தா யென்னப்
பிறைமவுலிச் சடைகரந்து புரந்தரனி னழகொளிரும் பெருமான்
சொன்னான். (126)

இனையமொழி தருமாற்ற முனிக்குமரன் செவிப்புகலு மிளவே றன்னான்
தனிமழவெள் விடையுயர்த்தோன் பதம்பரவுந் தலையறிவே தழைதல் வேண்டு
மனையவன்பொன் னடிவணங்கி நினைந்தவரம் பெறுகுவதே யன்றி நின்பாற்
புனைமுடிதாங் கரசுலக மளித்தாலு மடைவதற்குப் பொருந்தே
னென்றான். (127)

மழலைமுனி யிவைமொழிதல் மயிலூர்தி மொழியினும்போய் மதுரந் தேங்கிக்
குழலைமொழி யெனத்தருபொற் கொடிபாகன் செவிக்கடைபோய்க்
குறுகுதோறும்
விழைவுதரு முளமிரங்கிக் களிப்பொழுகப் புறத்தினவன் விருப்ப மோர்வா
னழல்சிதறி விழிசிவப்பக் கோபமொடு மொருமாற்ற மறைவ தானான். (128)

வரந்தழைக்கு மெனதாணைத் தனித்திகிரி புறம்போக்கி வையை மூன்றும்
புரந்தருளு மொருநாத னெனக்குநிக ரெவரினிய போகந் துய்ப்போ
ரரந்தைமொழி பகர்ந்தனையாற் சிறுகுழவி யென்பதிவ ணறிந்தே னென்பா
னிரந்தபெருங் கருத்தினிய வன்பர்பெறுந் தகையினியா னிகழ்த்தக்
கேண்மோ. (129)

செந்தளிர்க்கற் பகமுகிழ்த்த செழுந்துணர்வாய்க் கொழுந்தேறற் றிவலை தூற்றம்
பைந்தளிர்க்கை யரம்பையர்சா மரையிரட்டக் கணிகையர்கள் பரத மாடக்
கந்தமலர்க் கருங்குழற்கின் னரமடவார் யாழ்வடித்துக் கானம் பாடச்
சந்ததமு மிருநிதிய நினைந்தனவெல் லாமளித்துச் சரணம் போற்ற (130)

மின்னவிருங் குருமணிச்சூட் டரவநெடும் படமனைய விரிந்த வல்குற்
கன்னல்வரிச் சிலைகுழைத்த பிறைநுதற்செங் கனியிதழ்வாய்க் கலக வேற்கட்
பொன்னவிருந் திதலைமுலை யரமகளிர் புதுக்கலவிப் போக மாந்தி
யின்னறவக் கற்பகநாட் டளவையிலா வூழிகளித் தினிது வாழ்வார். (131)

அடுசினவெம் புலியாடை மருங்கசைத்து வரியரவ மதன்மேல் வீக்கிச்
சுடுசுடலைப் பொடிபூசி விரிசடைமே லென்பறுகு தும்பை சூடிக்
கடுவிடமுண் டோடேந்தி மனைகடொறும் பலியிரக்குங் கடவு ளன்ப
ரிடுபலியுண் டவன்போலத் திரிவரது விரும்புவரோ விளமை மிக்கார். (132)

உந்தையெனக் குயிர்த்துணைவன் முனிவரநீ யாதலினா லுரிமைத் தாய
மைந்தனினக் கரனிடத்து வழிபாடே னத்துயரில் வருந்த லென்னே
சிந்தனைமற் றெதுநினைந்தாய் சிறுவநினக் கெண்ணரிய தெய்வப் போகம்
புந்திமகிழ்ந் தருந்துவதே தலைத்தருமம் யானவைகள் புரிவே னென்னா (133)

கொண்டல்படி தடங்கடல்வாய் மந்தரமத் தெறிதோறுங் குனிக்குங் காள
முண்டபிரா னிவைபுகல முனிவரன்வெந் தழற்கோப முறுத்துச் சீறித்
துண்டமதி நுதல்குறுவேர் பொடிப்பவிழி பசுங்குருதி துளித்துச் சோர
விண்டகனி வாயதரந் துடிதுடிப்ப மெய்யும்விதிர் விதிர்ப்ப தாகி (134)

அன்னையிள நிலவெறிக்குங் கவர்மதியப் பவர்சடையோ னலர்த்தா ளேத்தி
முன்னாருச் சனைபுரிந்த தில்லையென முனமொழிதன் முடிந்த தாமாற்
பன்னகவே ணியனைமலர்ப் பதம்வணங்கி நனைமலராற் பரவக் காணே
னின்னவிவை விளைவதுகொல் பழவினையின் றொடர்ச்சியென வெடுத்துக் கூறி (135)

முத்தலைவேற் படையுயர்த்தோ னன்பர்தமக் கடிமைநெறி முழுதும் பூண்டோ
ரெத்தகைசெய் தியற்றார்க ளவரளிப்ப ரிந்திரபோ கங்க ளெல்லாம்
பித்தனிவ னீதுரைத்தா னசுரனள விறந்தபெரு மாய மாய
வத்தனையும் புரிபவனிந் திரனாகி யெனதுதவ மழிக்க வந்தான். (136)

வென்றியட லலகையிராக் கதர்பூத ரிடையூறு விளைத்து முன்னர்த்
துன்றினரும் சிவனையிகழ்ந் திலரிகழ்ந்தா னிவனரனைத் துகள்சொற் றோரை
கன்றிநெடு நாக்கரிந்தோர் மூவேழு தலைமுறையோர் கடவு ளுடு
சென்றடைவ ரறியாதார் வெந்நிரையத் திடையழுந்தித் திரிவ ரம்மா. (137)

இன்னவனே நாக்கரிந்தா ருயிர்துறந்தே யளியேனு மிறப்பே னென்னு
மன்னியவெண் டிருநீற்றைப் பாவனையா லகோரநெடு வாளி செய்து
தன்னரிய மேனியினும் விடுத்துவரிச் சிறைச்சுரும்பர் ததையுங் கொன்றை
மின்னவிருஞ் சடையான்பொன் மேனியினும் பொடிவாளி மிடையத்
தூர்த்தான். (138)

தூர்த்தபொடி வாளிமுனி மேனியினிற் படாது தோகை பாகன்
பார்த்ததனைத் தடுத்தனனப் பரமனழல் மேனியினிற் படரு நீற்றை
யார்த்தவருட் கடலனைய நந்திதடுத் தனனினைய வமையந் தன்னி
லீர்த்தமதி மிலைந்தபிரான் மழவிடைமேற் றனதுருவ மிசைந்து
தோன்றி (139)

திருத்தகுபொற் புயநான்குஞ் சுடர்நயன மொருமூன்றுந் திவளு நீலத்
துருத்திகழு மணிக்களமு மபயவர தமுமழுமா னுயர்த்த கையு
மருக்கரொரு கோடியெழுந் தெனநின்று னின்றிமையத் தமுத மன்ன
முருக்கிதழஞ் சாயல்மயி லினைநினைந்தா னருகுறமொய் குழலு நின்றாள். (140)

கள்ளொழுகு மலங்கலந்தார் மதிமுடித்த சடைமௌலிக் கடவுள் யானை
யள்ளிலைவெண் ணிணம்பிலிற்று சுடர்நெடுவேற் படையுயர்த்த வமலன் வாச
வள்ளிதழ்ப்பொற் பசுங்கமலச் செழுங்காடு பூத்ததிரு மழைக்கார் வண்ணன்
புள்ளொகின முகைத்ததிசை முகக்கடவுள் முதல்வானோர் புடையிற்
சூழ்ந்தார். (141)

சுருதியளந் துயர்ந்தவியாக் கிரபாதன் வசிட்டமுனி தொல்லை ஞாலங்
கருதரிய முனிவர்குழா மனைவரும்வந் தீண்டினராற் கருணை மேனி
தருதிருவி னனுக்கினையாற் சைவவுப மன்னியரைத் தந்தாள் வந்தாள்
பொருவருதுந் துமிமுழக்க வானவர்கள் பூமாரி பொழிந்தார் மாதோ. (142)

ஆலவிடம் பழுத்தொழுகு கறைமிடற்றோன் மழவிடைமே லமரா நின்ற
கோலமதின் செயல்குறித்துத் தொழுதனன்சே வடியிணையிற் குறுகி வீழ்ந்தான்
சீலமறைத் துதிமுழக்கி வலநடந்தா னன்புருகிச் சிந்தை யன்னோன்
பாலணவப் பரவசத்த னயினன்பொற் புலிப்பதத்தோன் பயந்த பாலன். (143)

புத்தமுதங் குமிழியெழ வெடுத்தெறிந்து கரைபொருது புரண்டு சாய்ந்து
தத்துதிரைப் பாலாழி ததிக்கடனெய் கெழுமளக்கர் தணப்பி லாத
வொத்திரதங் கனிந்தூறு பழக்குவடு பணியாரத் தோங்கல் கோடி
யெத்திசையும் படர்ந்தனவா லீசனடி யார்க்கெவையு மெளிய வம்மா. (144)

வரநதிவெண் டிவலைபட வரவநெடும் படமொதுக்கி மறியும் வேணி
பாரகதியின் றுறைபோய முனிவரன சிறுதாங்கம் பரந்து பாய்ந்து
விரவுதிரைப் பாலாழி முதலனவெல் லாமுனக்கு வியந்து தந்தாள்
குரவநறுங் குழலுமையென் றிளநிலவுச் சிறுமுறுவல் கோட்டி னனல். (145)

பொருந்துபெருங் கிளைஞரொடுந் தாதையொடு மாவலித்துப் புலம்பா நின்ற
திருந்திழைமா தன்னையொடுங் களித்தருந்தி யொழியாத செல்வந் துய்த்துக்
கருந்தடங்க ணருந்ததியா ருயிர்க்குயிரா யுலகனைத்துங் கருதா நின்ற
வருந்தவத்தி னிலைதெரிந்த வசிட்டமுனி புதல்வருக்கு மளித்தி
யென்ன (146)

அங்கணனீ துரைத்தருளி யினையளித்தோர் புவனமெலா மளித்தோர் ஞானப்
புங்கவனு நந்திதனக் கிணையாகிக் கணத்தலைமை புரியு நீர்மை
யிங்குனக்கின் றருள்புரிந்தே நித்தியமா மிளமைநல மீய்ந்தேன் மின்னுந்
தங்குதவ முனிக்கரசே வேண்டுவரங் கேட்டியெனச் சாற்றிப் பின்னும் (147)

பணிக்கடகக் கரத்தேந்தி யுச்சிமோந் திமையவரைப் பாவை செம்பொன்
மணிக்கடகக் கரங்கொடுக்க வப்பரிசாற் றிப்புதல்வ வால னாகித்
தணிப்பருபே ருலகுதொழ வெந்நாளும் வாழியெனச் சாற்றி யீச
னணிக்கமலக் கரங்கொடுத்தாள் வாழ்த்திவிடுத் தனன்கடல்சூ ழவனி
மீது. (148)

வெய்யபுலிக் கால்முனிவன் பயந்தமுனி விழிக்கருணை வெள்ளஞ் சிந்தக்
கையிணையுச் சியின்முகிழ்த்துத் தலையழிந்த வார்வநெடுங் கடலி னாழ்ந்தே
யையவொரு வரநினது மலர்ச்சரண மம்பிகையா மன்னை பாத
முய்யும்வகை மறவாதே யெனக்கினிநீன் றருள்கவென வுரைத்து
நின்றான். (149)

பிள்ளைமுனி யிதுபகர வினையவரா மகிழ்வினொடும் பெரிது நல்கித்
துள்ளுதடங் கடற்றுயின்றோன் முதலியவா னவர்கள்புடை சூழ்ந்து போற்றக்
கள்ளமெறிந் தலங்கிலைவேற் கடைகுழைத்த கருநெடுங்கட் கன்னி யோடும்
புள்ளியெழு புலவுகமழ் மழுப்படையோன் றடங்கயிலைப் பொருப்பிற்
போனான். (150)

தண்டிவலை நறவொழுகத் தாதளைந்து கான்மடுத்துத் ததையும் பாடல் [தோன்
வண்டுமூரல் பசுந்துளவப் படலையினன் மணிமுடிமேன் மலர்த்தாள் வைத்
புண்டரிகச் சரணமுனி மகன்சரிதத் தோரெழுத்துப் புகலக் கேட்டோ
ரண்டமளித் தழித்தபிரான் றடங்கயிலைக் கணநாத ராகி வாழ்வார். (151)

**கலிவிருத்தம்.**

துரிச றுத்துயர் சூத முனிவரன்
பரிவி னோடுமிக் காதை பகர்தலு
மரிய மாதவ ரன்பொடுங் கேட்டனர்
தெருளு றுங்களிச் சிந்தை திளைத்தனர். (152)

**முதலாவது உபமன்னியர் திருப்பாற்கடல் பெற்ற**
**அத்தியாயம் முற்றிற்று.**

## 2. சிவன் தாருகாவனத்திற் பலியிரந்த அத்தியாயம்.

கலிநிலைத்துறை.

காத லிற்சிவன் றாருகா வனத்திடைக் கலந்து
தீதி னற்பலி யிரந்திடுங் கதைதிரு நந்தி
மாத வச்சனற் குமர னுக் கினிதறை வண்ண
மோ து கேனெனச் சூதமா முனிவா னுரைக்கும். (1)

விண்ட நாண்மலர்ப் பொதும்பரின் விளரிவீழ்ந் திசைத்து
வண்டு கான்மடுத் துழுதுதேத் திவலைவாய் மடுக்குந்
துண்ட வாண்மதி யூற்றிருந் திடையறுத் துவலை
கொண்ட வாமு திளஞ்சகோ ரங்கள்வாய் குதட்டும். (2)

மங்குல் கண்படு தடஞ்சினை பரப்பிய மலர்மேன்
பொங்கர் வெம்பசும் புரவியேழ் தனிநுகப் பூட்டு
தங்க மோடவைத் திணக்கிய சில்லியந் தடந்தேர்ச்
செங்க திர்க்கொரு வீடுசெய் தனவெனச் சிவணும். (3)

மண்டு தீஞ்சுளைக் குடக்கனி மருங்கினின் வதியக்
கொண்ட லூடுபோய்த் தட்டற வுருவிமேற் குலவி
யண்ட கோடிகள் யாவையு மயிர்நுனை யடங்கப்
பண்டு தாங்கிய பரமனைப் பொருவின பனசம். (4)

அருந்த வம்புரி முனிவரர் மகத்தவி யமுதம்
விருந்து கூட்டுணத் தேவரை வருகென விரைந்து
பொருந்து செந்தளிர்க் கரங்களா லழைப்பன போலுந்
திருந்து வானகர் படர்ந்தசை தருசெழுந் தேமா. (5)

குலவு நெட்டிலை மாகதத் துயலொளி கொழிப்ப
நிலவு பாந்தளம் பாளைவாய் கிழிபட நிறைந்து
மலரும் வெண்மடற் பூநிறைந் தாறுகான் மடுத்துக்
கலைம திக்கொரு சாமரை யிரட்டுவ கமுகம். (6)

முடங்கு தெண்டிரைத் தடந்தொறுங் குவளைவாய் முழங்கி
யடங்கு வண்டினம் பெடையொடுங் கிளர்தர வாற்ற
விடங்கர் பாழியங் கயநெடு வாய்தொட விரிந்து
மடங்க வாலடித் தப்புறந் தாவுறு மலங்கு. (7)

பொங்கு நீர்பொரு வாவியிற் கமலமென் போதிற்
றங்கி நீள்கரை முல்லைதூங் துணர்முலை தயங்க
லெங்க ணுயக னிடுபலிக் கெய்திடு மென்னாக்
கங்கை செங்கரத் தடிசில்வைத் தேந்துதல் கடுக்கும். (8)

இன்ன தன்மைய தாகிய தருவனத் தெய்திக்
கன்ம மேபலந் தருமெனக் கடவுளைக் கருதாப்
புன்மை சேர்சம யத்துழல் முனிவரார்ப் புரப்பான்
றொன்மை யன்புவந் திரங்கினன் புரிசடைத் தோன்றல். (9)

கோடி யன்மதர் வனப்பொரு வழிகுறு கிடினு
நீடு பைங்கதிர் கோடிவந் துதிக்கினு நிமல
னூடு தண்டையம் புறவடி யழகினுக் கஞ்சி
யோடு மல்லது சிவனுமென் றெவர்களே யுரைப்பார். (10)

அரும்பு புண்டரக் கீற்றொளிர் நெற்றியி னழகோ
விரும்பு செஞ்சுடர் மணிக்குழை யசைதரும் விதமோ
சுரும்பு கூட்டுணு மலங்கலந் தடவரைத் தோளோ
கரும்பு போன்மொழிப் பன்னியர் நாண்கவர் வதுவே. (11)

என்ன வோர்வடி வெடுத்தன னென்னையா ளெந்தை
பொன்ன மேனியில் வெண்பொடி தூளிதம் புனைந்தா
னன்னல் லார்கணக் குருகிடத் திகம்பா னாகித்
தன்னை நேர்நிகர் தாருகா வனத்திடைச் சார்ந்தான். (12)

துண்ணெ னத்திசை திசைதொறு முழங்கிய துடியு
மெண்ண ரும்பொலன் கடிஞையு மலர்க்கரத் தேந்திப்
பண்ண வாமிசை மிழற்றுபு பவளவாய் பதைக்க
நண்ணி டும்பலி யிரந்தனன் மனைதொறு நாதன். (13)

கண்டு நின்றனர் முனிவரர் விரும்புகா தலிமார்
கொண்டு நின்றனர் தணிப்பருங் காமவெங் கொழுந்தீ
விண்டு நின்றன ரன்னவ னழகினை வியந்தே
யுண்டு நின்றனர் நாணமு மடமுமீ தொழிய. (14)

காம மிக்குவந் தமலனைக் கண்ணுறக் கருதி
நாம வெங்கொலை வேல்விழி நித்தில நகையா
ரேம வெண்கதிர்க் கடிஞையிற் பலியிடு வார்போற்
றும மைக்காக் தளர்வுறத் தைமகட் களிப்பார். (15)

கலக்கு பாற்கட லமுதெனுங் கனிமொழி குழறி
யலக்க ணுற்றுவெங் காமநோய்ப் புணரியி னமிழ்ந்தி
மலர்க்க ரங்களிற் பெய்திரு வரிவளை யிழப்பா
யிலக்க மாடைபெற் றொளிர்மணிக் கலைகளு மிழப்பார். (16)

குன்றெ னப்பணைத் திளகிய வனமுலைக் குவட்டுத்
துன்று வெண்சுடர் பரப்பிய நித்திலத் தொடைய
லொன்று றுவகை கரிந்திடச் சாந்தம்வெந் தொழிய
நின்று நின்றுபார்த் தயர்வுற நெட்டுயிர்ப் பெறிவார். (17)

கந்த மென்மலர்க் கூருங் குழற் கிழுகுறுங் கமழ்நெய்
சந்த மென்முலைத் தடந்தொறுந் தடந்தொறுந் தடவி
யந்தி வெண்பிறைத் திருநுதற் கணிதர வெழுதுஞ்
சிந்து ரப்பொடி யங்கையாற் கூந்தலிற் செறிப்பார். (18)

மருங்கு லிற்புனை காஞ்சியும் விரிசிகை வகையு
நெருங்கு வெம்முலைக் குரும்பையி லணிந்தொளி நிலவு
தருங்க திர்ச்சுடர் மணிகெழு தமனியத் தணிவார்
சுருங்கு நுண்ணிடைப் புடைதொறும் புடைதொறுஞ் சூழ்வார். (19)

சேந்த பஞ்சியிட் டனிச்சமென் மலர்தொடச் சிவக்கும்
பூந்து கிர்க்கொடி கிளைத்தன மெல்விரற் பொலந்தா
ளேந்து பொன்னரிச் சிலம்புசெங் கரத்திடை யிடுவார்
காந்த ளங்கரத் திடுதொடி பதங்களிற் கலப்பார். (20)

வண்ண மேகலை கலையொடு நெகிழ்ந்தது மருங்கு
திண்ண மேயினி முலைத்துணைக் கிறுமெனச் சிலம்பி
யெண்ண மேகொடு பரிபுரங் கோவென விரங்க
விண்ண மேகமைக் குழல்சரிந் திடநடை விரைவார். (21)

தளரு மின்னிடை மணிக்கலை யொருகரந் தகையக்
கிளரும் பொன்முலைக் கச்சின்மீ தொருகரங் கிடத்தி
யுளரும் வெந்துயர்ச் சுடுதழ லுள்புகுந் துலவ
வளருங் காமமுன் னிழுத்திடப் பின்னொடும் வருவார். (22)

இலங்கு வெண்ணிற மூரலம் பலிக்கென விசைவீ
ரலங்கு சீர்கெழு தனப்பலி கொள்கிலீ ரந்தோ
துலங்கு போறி வென்னைகொ லுமக்கெனச் சொல்வார்
கலங்கி நெஞ்சுலர்ந் தென்புமட் டுருகுபு கவல்வார். (23)

பிள்ளை வெண்பிறை நுதலியர் மனைதொறும் பிச்சை
கொள்ளல் செய்துபொற் கடிஞையி னமுதுணக் குறிப்பீர்
பள்ள நீரெறி பாவையிற் படர்ந்தசெம் பவள
வள்ள வாயமு துண்ணுமென் றொருவழி மறிப்பார். (24)

மார னங்கணை கூற்றமோ வெனச்சிலர் வலிப்பா
ரீர வெண்டிரைக் கொடுவிட மெனச்சில ரிசைப்பா
ராரம் வெந்தழற் பிழம்புகொ லெனச்சில ரறைவார்
வீர ரெம்முயிர்ப் பலிகொள்வ ரெனச்சிலர் மெலிவார். •(25)

இன்ன வாறிவர் விரகமுற் றிடரிடைப் படலும்
பொன்னு லாஞ்சடைப் புங்கவன் மோனமே புரிந்தான்
புன்னு நான்மறை முனிவரர் குழுக்கொடு பார்த்தார்
கன்னி பாகன்வெண் பலியிரந் திடுஞ்செயல் கண்டார். (26)

நன்று நன்றுநா மீட்டிய தவமென நவின்று
ரின்றி வன்செய்த குறையிது வென்கொலோ வென்றூர்
கன்றி வெஞ்சினக் கடையனல் விழிக்கடை கனலக்
குன்ற வில்லியைச் சபித்தனர் சாபவெங் கொடுந்தீ. (27)

விலகி வில்லுமிழ் சுடர்மணிச் சுடிகைவெம் பாந்தள்
மலர்க டுக்கையின் புடையொ துங் கிடநதி வருக்குங்
கலைம திச்சடை வானவன் றன்னுழைக் கலவா
தலர்செ ழுங்கதிர் முன்னெழுங் கங்குலொத் தகன்ற. (28)

முனிவர் கூறிய சாபமுன் முளரியம் பொகுட்டுத்
தனிமு தல்வனைத் தொடர்ந்தது பிருகுசா பத்தாற்
குனித டஞ்சிலை தாங்கிய பசுந்துழாய்க் குவட்டுப்
புனித னும்பிறப் பொருபது மடைந்தனன் புகலின். (29)

ஈத லான்முனி சாபம்வந் தன்னவ னிரைத்து
மோது தெண்டிரைப் பாற்கடல் முதலிய துரந்து
மாது பாகனைக் காசியில் மதுரிய நறும்பால்
போது தோறும்வந் தாட்டினன் பூசனை புரிந்தான். (30)

அழல ரும்பிய நுதல்விழி யந்தண னளிக்கப்
பழைய பாற்கட லடைந்தனன் பகர்துரு வாசர்
மொழியுஞ் சாபத்திற் பின்னரு மவண்முடி புனையா
விழிபு தங்கிய யாதவர் குலத்துவந் துதித்தான். (31)

அம்பொன் மால்வரை யிமயமீன் றளித்தவ ளமலன்
செம்பொன் மேனியிற் பாதியும் பெறச்சிவ விரத
மிம்பர்க் காட்டிய கவுதம னிசைத்தசா பத்தா
லும்பர் கோமகன் வெருவர வாண்குறி யொழிந்தான். (32)

கந்த நாண்மலர்க் கமலவட் டவணைவிற் றிருக்கு
மந்த ணாளனிற் சுருதிதேர் வசிட்டனன் றறைய
வந்த சாபத்தால் வலிதரு வசுக்களெண் மருநீ
ருந்து தெண்டிரை யுடுத்தபா ருலகினிற் பிறந்தார். (33)

நீளி ருஞ்சடை முனிவரர் நிகழ்த்துசா பத்தால்
வாள ராவுரு வெடுத்தன னகுடன்மாண் டவியர்
மூளும் வெஞ்சினந் தலைக்கொளச் சாபமுன் மொழியக்
கோளி லந்தக னுதித்தனன் சூத்திர குலத்தில். (34)

வடித்த நான்மறை முனிவரர் வழங்கிய சாபம்
பிடித்து நின்றவ ரன்றிமற் றெவர்களே பிழைத்தா
ரெடுத்து ரைப்பதெ னிறைவனெவ் வுயிர்க்குமென் பதினாற்
றடுத்து நின்றன னெம்பிரான் விலக்கருஞ் சாபம். (35)

வெய்ய சாபம்வெண் பொடியணி விமலனை விரவாச்
செய்கை கண்டனர் முனிவரர் தளர்ந்தனர் திகைத்தா
ரய்ய னென்னுடைப் பயங்கடிந் தாட்கொளு மமலன்
மைய லங்கட கரியுரித் துடுத்தவன் மறைந்தான். (36)

வெள்ளி மால்வரை வித்தகன் மறைந்தபின் வெருவி
யுள்ள மோர்ந்தனர் புகலருங் குறையெடுத் துரைப்பான்
றெள்ளு நான்மறை முனிவர ரனைவருந் திரண்டு
முள்ள ரைக்கம லாலயன் மூதுல கடைந்தார். (37)

ஆதி நான்முகத் தொருவனைக் கண்டக முருகிப்
போது தூய்மலர்ப் பொன்னடி பூசனை புரிந்து
சீத வெண்மதி மிலைத்தவன் செய்தன வனைத்து
மோதி னார்துயர்ப் பெருக்கெறி யுவரிபுக் குடைந்தோர். (38)

உரைத்த வாசகங் கேட்டன னிட்டையி னோர்ந்து
திரைத்த பாற்கட னஞ்சமுண் டவன்செய லென்னாக்
கரைத்த வன்பொடு மெழுந்திரு கரங்குவித் தமலன்
விரைத்த நாண்மலர்ப் பதநினைந் தெண்கணான் விளம்பும். (39)

அருண வெங்கதி ரளவிய தருவனத் தடைந்து
தருண வெம்முலை மடந்தையர் மயல்கொளத் தவள
வருண வெண்பொடி புனைந்துவண் பலிகொள வந்தோன்
கருணை தங்கிய சிவனெனக் கருதினீ ரிலையால். (40)

ஆதி நாதனை யவ்வனத் தகன்றிட விடுத்தீ
ரேது மாதவ மியற்றியென் னிமையமீன் றளித்த
மாது பாகனை வழுத்திலா ருய்வரோ வழங்கீர்
காத லார்கரத் தெய்திய செம்பொனைக் களைந்தீர். (41)

வரைந்த சாதியும் வண்ணமு மிழந்துவந் திடினு
மரந்தை நீக்கிநின் றதிதிகள் பூசனை யடைவே
விரைந்து செய்துநல் லில்லறம் விளைத்திடு விதியுங்
கரந்து சாபமும் விளைப்பரோ புலனெறி கடந்தோர். (42)

கலிவிருத்தம்.

தங்கு மாதவர் தாரகை யிற்செழுந்
திங்கள் போலத் திகழ்ந்திடுஞ் செய்கையான்
துங்க ஞானச் சுதரிச னன்மனை
மங்கை கற்பி னருந்ததி மானுவாள். (43)

விண்டு நீலம் விளங்கிய வாவியோ?
மண்டு சைவலம் வார்ந்து வளர்ந்ததோ?
பண்டை மாரன் படுகொலை வேழமோ?
கொண்ட லோ? மென் கருநெடுங் கூந்தலே. (44)

மின்னும் வெங்கணை யோ? வயில் வேல்கொலோ?
மன்னு கோப மறலிகைப் பாசமோ?
பின்னு மூசற் குழையிற் பிறங்குசெம்
பொன்னி னூலை புறமிடுங் கண்களே. (45)

ஆரு மின்ப வமுதுபெய் கும்பமோ?
வேரி மாலை துயல்வரு மேருவோ?
வார றுத்து மதத்திறு மாந்துவெங்
கோர மிட்டடிக் கொண்டெழு கொங்கையே. (45)

கூறு கொண்ட விழைவகிர்க் கோலமோ?
வேறு பைம்பொ னிணர்த்தரு வல்லியோ?
வீறு பொங்கொளி வீசிய மின்னெடு
மாறு கொண்டு நுடங்கு மருங்குலே. (47)

என்ன நல்லெழில் வாய்ந்த விலங்கிழை
தன்னை நோக்கி மகிழ்வொடுஞ் சாற்றுவா
னன்ன மன்னவள் கேட்டி யதிதியிற்
சன்னி பாத னுருக்கொடு சாட்டுவான். (48)

ஆய தாலவ் வதிதிகள் பூசனை
நேய மோடு நினைந்தன யாவையு
மேய நல்கி யெறிசுடர் வேற்படைச்
சேய ரிக்கண்ணி செய்குதி யென்றனன். (49)

மாத வஞ்செய் வரமுனி யாகிய
காத லன்னுரை மேற்கொடு கற்பினா
ளாத ரத்தி னதிதிகள் வந்தனை
யேத மின்றி யியற்றிய நாளினில் (50)

முரித்த கோட்டு முகிலிற் பொலிதரும்
பருத்த மேதிப் பகடுகைக் குஞ்சம
னருத்தி யோடு மவர்புரி பத்தியின்
கருத்தி னுண்மை யறியக் கருதினன். (51)

வஞ்ச வேட மறையவ னாகியே
விஞ்சை மாதவ னீங்கிய வேலையி
லெஞ்சி டாதவ் விருக்கைவந் தெய்தினா
னஞ்சி லோதிகண் டஞ்சலி பண்ணினாள். (52)

ஏசி லானை யிறைஞ்சிப் பரிமளம்
வீசு சாந்தம் விரைமலர் மாலிகை
யாசி லாத வடிசில்க ளாதியாற்
பூசை செய்து முடித்தனள் பூங்கொடி. (53)

அரிய வந்தனை செய்தபின் னந்தகன்
றெரிவை கேட்டியென் சிந்தை களிப்பதற்
குரிய வந்தனை யீதென் றுவப்பொடு
மருவ வேண்டு மெனவலித் தானரோ. (54)

பகர்ந்த வாசகங் கேட்டனள் பைந்தொடி
யகங்கொ ளன்பி னதிதிகள் பூசனை
யிகழ்ந்தி டாதவ ரிச்சையி னின்புற
முகந்தி ருத்தி முறைபுரி வாயென (55)

உற்ற காதற் கொழுநன் னுரைத்தது
முற்று மேற்கொளல் கற்பின் முறையெனுக்
கொற்ற வேற்கண் புதைத்தொரு கொம்பரிற்
பொற்பு வாய்ந்தவள் புந்தி பொருந்தினள். (56)

அறுசீரடி விருத்தம்.

துப்புற ழமுதச் செவ்வாய்த் துடியிடைக் களபக் கொங்கை
மைப்புய லனைய வோதி யின்னணம் வழங்குங் காலை
முப்பொரு ளுணர்ந்து காம முதலிய குணங்க ணீத்த
செப்பரு முனிவன் செம்பொற் றிருமனை வாயில் சேர்ந்தான். (57)

முனிவரன் வருத னோக்கி மறலிபோய் முன்னர் நின்று
புனிதமா தவத்தோய் கேட்டி நின்மனைப் பூவை தன்னை
யினிதுறப் போகந் துய்த்தற் கருளுதி யென்ன வன்னோன்
கனிதரு மனத்த னாகி யளித்தனன் கற்பி னாளை. (58)

ஆரமு தனையா ளின்ப மருந்திடு மவரே போல
வார்பொரு களபக் கொங்கை மடமயி லருகி னோர்பாற்
சீர்மனை யகவை நண்ணித் தீண்டல னாகி லவைகக்
கார்தரு குழலி கற்பு முனிவரன் கருத்துங் கண்டான். (59)

சிந்தையின் மகிழ்வு கூர்ந்து திரும்பிமா முனிவன் றன்பால்
வந்தனன் மறையோன் வேட மாறினன் மறலி யாய
சுந்தர வுருவ மாகு னளப்பருஞ் சுருதி தேரு
மெந்தைநின் பத்தி காண்பா னிவண்வா வெய்தி னேனால். (60)

மருதநீர் வேலி நாடு வளநகர் மகுடஞ் செங்கோல்
பொருவரும் வாவி யீட்டும் புண்ணிய மளித்திட் டாலும்
பெருகுதெண் டிரைநீர் வைப்பின் மனையெனும் பெரிய வாழ்க்கைத்
திருவினை யெவர்க ளேனுங் கொடுப்பரோ சிவன்வந் தாலும் (61)

யாவரு மியற்றற் கொண்ணு விருந்தவ மிணையொன் றில்லாத்
தேவியைக் கொடுத்தல் செய்த லீங்கது செய்தாய் நின்போற்
பூவுல கத்தி னுகர் பொன்னினுட் டிம்ப ராய
தேவுல கத்தி லுண்டோ தவநெறி செயலின் மிக்கோர். (62)

விரிசடை முனிவ மாதை விரும்பினே னல்லேன் றெய்வப்
புரிகுழல் மடந்தை யோடு மனையறம் புரிந்து வாழி
யரியநின் பேர்சொற் றோர்க்கு மவமிருத் தில்லை யென்னுத்
தெரிவரு முறையிற் சாற்றித் தென்றிசைக் கடவுள் போனுன். (63)

இன்னதா மதிதி பூசை யிகழ்வரோ வென்ன வாசப்
பொன்னருக் கமலப் புத்தே ளுரைத்தனன் பொருவி லாதான்
சொன்னவா சகத்தி னுண்மை தெரிந்தனர் முனிவர் தேர்ந்தார்
சென்னிமேற் காங்கள் கூப்பிச் சிலமொழி பகர்வ தானார். (64)

ஈரவெண் பிறைக்கோ டேற்ற வின்னமு தொழுகுங் கொன்றைத்
தார்நெடுஞ் சடிவி மீது நிந்தையார் சாபங் கூறிச்
சீர்பெறு தவங்கள் யாவுஞ் சிதைந்தனர் சிறியோ ரின்னு
மாருயிர் தரித்து வாழ்தல் வேண்டுமோ வறையுங் காலே. (65)

வண்ணமைக் கரிய கூந்தல் வாணிதன் கொழுந ஞானப்
பண்ணமை வேத நீதி பகுத்தவ நினது செம்பொன்
னண்ணலங் கமல பாதத் தடைக்கல மாக வந்தேங்
கண்ணுதற் பரமற் காளாய்க் காண்பதற் கருள்வா யென்றார். (66)

என்றுமா தவத்தோர் கூற நான்முகத் திறைவ னோதுந்
துன்றுசெஞ் சடையீர் தெய்வச் சுருதியோர் குலத்து வந்தோர்
நன்றரு மறைக ளோர்ந்து நவின்றிடும் வயதீ ராறின்
மன்றலங் குழலி ளொரை மணவினை விதியின் வேட்டே (67)

சிறுவரைப் பயந்தன் னோர்க்கு வேண்டுவ தெல்லாஞ் செய்து
மறுவறு பருவ மீரா றல்லதத் தொகையா மாதங்
குறைவறு தினமீ ராறே யாயினுங் குறித்துக் கொண்டல்
செறிபொழில் வனத்தி லெய்தி யாவினின் னமுதந் தேக்கி (68)

புண்ணிய நதிதீ ரங்கள் புனிதமாந் தலங்கள் வைகி
யெண்ணுமக் கினிட்டோ மம்மென் றிசைத்திடு வேள்வி யாதி
பண்ணிவெண் ணிலவு வேணிப் பரமனே யாதி யாய
விண்ணவ ரனைத்துள் ளோர்க்கு மவியின்வெள் ளமுத மூட்டி (69)

அணிநிதி யாடை செந்நெ லகனில மடிசி லாதி
யுணவுக ளனைத்தும் வேத மறையவர்க் குதவித் திங்கள்
மணிமுக டுரிஞ்சும் வெள்ளி வரைவரும் வாதன் செம்பொற்
றுணையடிக் கமலம் போற்றித் தொலைவிலாக் கதியிற் சார்வார். (70)

இத்தகை புரிதற் கெண்ணு மிருநிதி வளமில் லோர்கள்
சித்தநல் லொழுக்க மெய்தித் துறவறந் திருந்தச் செய்து
முத்தலை நெடுவே லேந்து முதல்வனைக் கனக வெற்பை
யத்தனைக் கழற்கா லேத்தி யளப்பருங் கதியி னுவார். (71)

இவைபுரிந் தறியார் கூற்றி னீர்வயி னகப்பட் டேங்கித்
தவலறு நிரையத் தெய்தி யழுங்குவர் சாத மன்றிப்
பவமகன் றினிய முத்தி பரிப்பரிவ் வறங்கள் வேண்டார்
சிவனைநெஞ் சிருத்தி யன்னோன் சேவடி வழுத்தி னோரே. (72)

உரைதரு மறையின் வல்லான் சுவேதனென் றொருவ னோடுந்
திரைபொரு கங்கை யேற்ற சென்னிவா னவனை வந்தித்
திரைகட லெழுந்த வால விடமென வெதிர்ந்த நீல
வரைபொரு வயிரத்திண் டோண் மறலியைக் கடந்தா னன்றே. (73)

சுடர்விடு மணிச்செஞ் சூட்டுப் பாந்தளந் தொடித்தோ ளானைப்
பொடியணி பவள மேனிப் புனிதனை யெவர்க ளேனு
மடியிணை வழுத்தல் செய்வோர்க் கரியதொன் றுளதோ வென்று
கடிமலர்த் தவிசின் மேவு கருணையங் கடவுள் சொன்னான். (74)

இரண்டாவது சிவன் தாருகாவனத்திற் பலியிரந்த
அத்தியாயம் முற்றிற்று.

## 3. சுவேத முனிவர் காலனைக் கடந்த அத்தியாயம்.

எழுசீரடி யாசிரிய விருத்தம்.

முருகுயிர்த் தொழுகி வழிதரு வளைந்து
மொண்டுவண் டினங்கள்வாய் மடுத்துப்
பருகிமொய்த் திரைக்குந் துணர்மலர் சொரியும்
பைந்தரு வனத்துமா தவத்தோ
ரருமறைப் பொருளை விரித்துணர் சுவேத
னலங்குமுத் தலையவே லுயர்த்த
பொருவிலந் தகனைக் கடந்திடுங் காதை
புகலெனத் திசைமுகன் புகலும். (1)

ஓட்டற வுருக்கிக் குழைத்திடைத் தெளிந்த
வொள்ளொளிக் கனகமொத் தொளிருந்
தோட்டல ரலங்கற் பிறைநிலாத் திளைக்குந்
துவள்கொடிப் படர்சடைப் பெருமான்

ருட்டுணைக் கமலத் தன்புவைத் திரங்கும்
தண்ணளிப் பெருக்கெறி கடலான்
கோட்டமில் லறத்தின் றுறைநெறி போய
குணத்தினன் சுவேதமா முனிவன். (2)

கண்விழித் திமைக்கு மளவையிற் கோடி
கருதரும் பிறப்பினி லழுந்தித்
திண்ணமற் றுழலு முயிரிள மையினிற்
சிதையுநா ளடுத்ததென் றுணர்ந்தா
னெண்ணமுற் றிதனைத் தடுப்பதற் கொருவர்
சிவனல்லா தில்லையென் றிமைய
வண்ணல் வெற்பளித்த மடக்கொடி கொழுந
னரிச்சனை புரிகுவா னினைந்தான். (3)

மூதுல கடங்க விழுங்கிருட் பிழம்பு
முழுதறக் கொழுங்கதிர் விரிக்கு
மாதவன் சுடர்த்தேர்ப் பசும்பரி தடுக்கு
மணிகிளர் சிகரமால் வரையின்
மீதுசென் றடைந்தோர் முழையின்வீற் றிருந்து
விண்ணவர் தொழவிடை யுகைக்கும்
நாதனை யிலிங்க முகத்தினில் வழுத்தி
நாட்சில கழித்திடுங் காலை (4)

துரிசறுத் துயர்ந்த சிந்தைமா தவத்தோ
னின்னுயிர் துறந்திடத் துணிந்தே
யெரிகனற் கொழுந்திக் குருதிகொப் புளிக்குங்
கண்களு மிதழ்மடித் ததுக்கும்
புரிமுறுக் கெயிறும் பொலியமைம் முகிலிற்
புலவுமூ விலைப்படை யுயர்த்துக்
கரியகூன் மருப்புக் கவையடிப் பகட்டிற்
கடுங்கொலைக் காலன்வந் தடைந்தான். (5)

வெஞ்சின முருத்துக் கொடியவெம் மறலி
யெதிர்ப்பட நோக்கினன் வெருக்கொண்
டஞ்சின னிரங்கி யழுதனன் சிவனுக்
கபயமென் றறைந்தன னிருந்தா

னஞ்சணி மிடற்று னடியரை யிவனே
நாடிவந் துயிர்துறந் திடுமென்
றஞ்சலின் மனத்திற் கருதினன் பூசை
யியற்றின னஞ்செழுத் தெடுத்தே. (6)

ஆயதோ ரமையத் தந்தகன் சிறுபுன்
முறுவல்பூத் தரும்பின னறையு
நேயமோ டானை வழுத்திலென் சிறுவ
னுதலா னீயிது நினைந்தாய்
பாயமால் விடையூர் பரமனு மலங்கற்
பைந்துழாய்க் கரியமைம் முகிலு
மேயநான் முகனும் வரினும்யான் கொடுபோ
மாருயிர் விலக்குத லரிதே. (7)

ஈதெடுத் துரைக்கக் கேட்டருள் சுவேத
னெறிகதிர்க் கணிச்சியெம் பெருமான்
பாதபங் கயமே கடைப்பிடித் தவற்கு
விதியினாற் பயமுமொன் றுளதோ
தீதுறு கொடியோய் நின்னையஞ் சுவரோ
வெனத்தெரித் துரைத்தனன் சிவனை
மாதுபங் கினனை யிறுகிடத் தழுவி
மறையினாற் றோத்திரம் புரிந்தான். (8)

கேட்டனன் மறலி யண்டமும் வெடிக்கக்
கிளுகிளுத் திருகாம் புடைத்து
நாட்டம்வெம் புகையும் வடவையுஞ் சிதற
மலையென வெதிர்நடந் தணுகி
மோட்டிளங் குவவுத் தடம்புயந் திருக
முடுகிமெல் லுடனடு நடுங்கப்
பூட்டிய கொடிய பாசவெங் கயிறு
புண்ணியப் புனிதமா தவனை (9)

வந்தனை புரிந்து விதியையு மெனது
வலியையு மறுத்திட நினைந்த
சிந்தனை யழகி லிங்கமா முகத்திற்
சிவன்வரக் காண்கிலே னென்னே

புந்திகெட் டொழிந்த சிறுவதென் றிசைக்குப்
போதியென் றிறுக்குவெம் பாச
முந்துறத் தொடுத்து வலித்தனன் வலிக்கப்
பரமனை முழுவது நினைந்தே (10)

அடையலர் கொடிய திரிபுர மெரிய
வழனகை முகிழ்த்தவா வபயம்
படைமத னெரிய நுதல்விழி விழித்த
பண்ணவா பரமனே வபயம்
கடல்படு சலதி விடமடுத் தயின்ற
கண்ணுதற் கடவுளே யபயம்
புடைபடு மெயிற்றுப் பணியணி யணிந்த
புண்ணியப் புனிதனே யபயம். (11)

இரங்கிமெய்த் தவத்தோ னின்னணம் பகர்த
லெம்பிரான் றிருச்செவிப் படலும்
புரங்கரிந் தெரியக் கதமுருத் ததுபோற்
புங்கவன் சினத்துருப் பொலிந்து
வரங்கெழு மிலிங்க மணிமுகத் தெழுந்து
மலைமகள் புடைவர வந்தான்
கரங்குவித் திறைஞ்சி நந்தியே முதலாங்
கணங்களெம் மருங்கினுங் கலந்தார். (12)

செந்துவர்ப் பவளத் தடவரை யனைய
செம்மனின் றருள்செய்ய நோக்கி
யந்தகன் வெருக்கொண் டஞ்சிமெய் யயர்ந்து
நெட்டுயிர்ப் பெறிந்துவா யாற்றி
முந்துநற் றவத்து முனிவரன் றிருமுன்
வீழ்ந்தன னுருயிர் முடிந்து
வெந்தசெம் பனைய குருதிவா யொழுகி
வேலைதொட் டிழிந்திடக் கிடந்தான். (13)

அறுசீரடி விருத்தம்.

மல்லுயர் வயிரத் திண்டோண் மறலியா ருயிர்போய் மாண்டு
செல்லெனக் கிடக்கை கண்டு சிந்தையின் மகிழ்வு கூர்ந்து
சொல்லருஞ் சுருதி தேருஞ் சுவேதமா முனிவன் மேரு
வில்லியைத் தொழுது சூழ்ந்து விரைமலர்ச் சரணில் வீழ்ந்தான். (14)

சங்கரா போற்றி தேவர் தலைவனே போற்றி யோவா
தெங்குமாய் நின்றாய் போற்றி யென்னுயிர்க் குயிரே போற்றி
மங்கையோர் பங்கா போற்றி வழித்துணை மருந்தே போற்றி
செங்கைமா னுயர்த்தாய் போற்றி சிற்பரா சிவனே போற்றி. (15)

மாயையை நீங்கி ஞான வடிவெடுத் தவனே போற்றி
தாயென வுயிர்கட் கெல்லாந் தண்ணளி சுரந்தாய் போற்றி
பாய்திரைக் கடனஞ் சுண்ட பண்ணவர் பரனே போற்றி
தீயவர்க் கரியாய் போற்றி சிற்பரா சிவனே போற்றி. (16)

கரியுரித் துடுத்தாய் போற்றி கண்ணுதற் கடவுள் போற்றி
வரியர வசைத்தாய் போற்றி மதிமுடிச் சடிலா போற்றி
பொருசிலைக் கழைக்கை மாரன் பொடிபட விழித்தாய் போற்றி
திரிபுர மெரித்தாய் போற்றி சிற்பரா சிவனே போற்றி. (17)

ஈண்டுபே ரண்ட மெல்லா மீன்றளி புரந்தாய் போற்றி
மீண்டுமவ் வண்ட மாய்த்து வெண்பொடி புனைந்தாய் போற்றி
மாண்டுவந் துதிக்கு மாய வன்பிறப் பறுப்பாய் போற்றி
சேண்டொடு விடையாய் போற்றி சிற்பரா சிவனே போற்றி. (18)

என்றுதோத் திரங்கள் செய்தே யிருகண்ணீர் வழிந்து வாரப்
பொன்றிகழ் சடையி னானைப் பூசனை புரிந்து நின்றான்
வென்றிவா னவர்க ளெல்லாம் விமலனை வீழ்ந்து போற்றித்
துன்றுகற் பகப்பூ மாரி சுவேதன்மா முடியிற் பெய்தார். (19)

மறுவறு மதியஞ் சூடும் வரதனைப் பணிந்து நந்தி
சிறியவர் தீமை செய்தாற் பொறுப்பதுன் செய்கை யாமே
யறிவகல் மறலி யாவி யளித்தியென் றிரந்து வேண்டக்
கறைமிடற் றமல னெந்தை காதலாற் கருணை செய்தான். (20)

தருமனு ருயிர்பெற் றுய்ந்து தவழ்நிலா முடியோய் நீசெய்
பெருமையா ரறிவார் நாயேன் பிழைபொறுத் தருள்க வென்று
மருமலர்ப் போது தூவி வரதனை மலர்த்தாள் போற்றித்
திருவருட் செங்கோல் பெற்றுத் தென்றிசை நகரஞ் சேர்ந்தான். (21)

அரும்புமெய் யன்பு மாறச் சுவேதனை யருட்க ணோக்கி
விரும்புநல் விளமை யாதி வேண்டிய வரங்க ணல்கிச்
சுரும்புபாட் டயரு நீலத் துழாய்முகில் முதலோர் போற்றக்
கரும்புறழ் மொழியாள் பாகன் கயிலைமால் வரையிற் சார்ந்தான். (22)

குருத்துவெண் ணிலவு வேணி வந்தனை குறித்துச் செய்வோர்
மிருத்துவுங் கடப்ப ரன்றோ ரியற்றிடா வினையு முண்டோ
வருத்தியி னடைவர் தெய்வ வறம்பொரு ளின்பம் வீடு
திருத்தகு பூசை யன்றிச் செய்வதொன் றுளதோ மேலோய். (23)

அளப்பரு மகங்கள் கோடி யாற்றினு மழனீர் மூழ்கித்
துளக்கற நாப்ப ணின்று தொல்லைமா தவஞ்செய் தானு
முளத்தினுங் கருதற் கெட்டா யோகுகள் பயின்றிட் டாலுங்
கொளத்தகு பத்திக் கல்லாற் குறுகிடான் குழக னன்றே. (24)

ஆதலால் பத்தி யோடு மமலனை யரிச்சித் தோர்க
ளேதிலாக் கருணை ஞானத் தின்பமுற் றெடுத்த வாக்கை
பேதமாய்க் கழியுங் காலை முத்தியும் பெறுவ ரென்றூற்
காதலா லிதனை யன்றோ கடைப்பிடித் தியற்றல் வேண்டும். (25)

தத்துவ வடிவ மாய சகளமா யனைத்து நீங்குஞ்
சுத்தநிட் களமாய்த் தோன்றுந் தொல்வடி விலிங்க மாகு
மத்தனை யிலிங்கந் தன்னில் வான்முறை வழுத்தல் செய்த
லுத்தம மென்று வேதா கமமெடுத் துரைக்கு மாதோ. (26)

இன்னதே யன்றி யெல்லாத் தேவர்க்கு மிறைவ னான
துன்னுநீள் சடிலத் தெந்தை பிரளயந் தொடுக்குங் காலை
மன்னுபே ரண்ட மெல்லா மொழித்தவை வழங்கிக் காப்பா
னன்னவைக் குருவ மூன்று மமலனே யமைவ னம்மா. (27)

அவ்வுருத் தெரிக்குங் காலை யிராசதத் தருளின் மூர்த்தஞ்
செவ்விதி னுணரின் யாமாஞ் சிறந்தசாத் திகத்தின் கூறு
பவ்வமேற் றுயிலும் பச்சைப் பசுந்துழாய்ப் படலை மேகந்
திவ்விய தாமதத்தின் வடிவமாஞ் சிவந்த செந்தீ. (28)

உடைத்திடு கருணை பொங்க வொருமுறை புவன மெல்லாம்
படைத்திடு வடிவங் காவல் பரித்திடு வடிவ மெல்லாந்
துடைத்திடு வடிவந் தன்னி லடங்குறு மதனுற் சோதி
மிடைத்திடு மெரியே யீசன் வியப்புறும் வடிவ மாமால். (29)

அன்னதா லட்ட கோண மிரட்டிகோ ணளவை நீங்கா
மின்னுமண் டங்க ளாதி சமைந்திடு வேதி நாப்பண்
மன்னுசெந் தழலிற் பூசை வான்முறை வகுத்துச் செய்த
லென்னையா ளுடைய நாதற் கின்புறு பூசை யாகும். (30)

ஓதுமிம் முறைக ளன்றி யொளிமணி குயிற்று செம்பொற்
சிதநீர்க் கடங்க ளாதி யிடத்தினுந் திருந்து பூசை
காதலிற் புரிந்தால் ஞானக் கண்ணுதற் கடவு ளாய
நாதனன் புருகி யுள்ள நயந்துகொண் டருளா நிற்பன். (31)

இனையபன் முறையிற் கூறும் பூசைநும் மிருக்கை யெய்தி
மனமொருப் படவே செய்க மாதவத் துறையு ளீர்கா
ணனைமல ரிதழி சூடு நாயக னடன மூர்த்தி
நினைவதன் முன்ன ரெய்தி நின்றருள் புரிவ னன்றே. (32)

பங்கயத் தவிசின் மூர்த்தி யின்னணம் பகர வார்வம்
பொங்கிய மனத்த ராகி முனிவார் புனலார் வேணிச்
சங்கரன் மலர்த்தா ளேத்தத் தாருகா வனத்தில் வாய்ந்த
செங்கதிர் முகிழ்த்து வீழ்ந்து திசைமுகற் றொழுது போனார். (33)

வஞ்சி விருத்தம்.

இன்ன காதை சூதனயந்
துன்னி யோத மாதவர்
மின்னு ஞான வித்தெனு
மன்னு மார்வ மல்கினர். (34)

**சுவேதன் காலனைக் கடந்த அத்தியாயம் முற்றிற்று.**

## 4. சிவன் தாருகாவனத்து ரிஷிகளுக்கு அருள்புரிந்த அத்தியாயம்.

கோச்சகக் கலிப்பா.

திரைத்தவா நதியுவட்டுஞ் செஞ்சடைவா னவன்மகிழ்ந்து
விரைத்தமலர்த் தாருவன மெய்த்தவரைப் புரந்தகதை
தரைத்தலத்தி னதிபுகழ்ச்சிச் சனக்குமர பகவானுக்
குரைத்தமுறை யுரைப்பலெனச் சூதமுனி யுரைத்தருளும். (1)

வந்துமுனி வார்திரண்டு மலர்த்தாரு வனமடைந்து
முந்தைமலர்ப் பீடிகையோன் மொழிந்தருளும் வான்முறையே
யெந்தைபிரா னெனக்கனிந்தே யென்பளவு நெகிழ்ந்துருகிச்
சிந்தையொருப் படநினைந்து சிவபூசைத் திறம்புரிந்தார். (2)

தீயகொடும் பனிவாடை குளிரிறைப்பத் திரைவாவி
மேயபெரும் புனன்மூழ்கி மெய்ந்நடுங்கத் தனிநின்றார்
பாயமடற் பசும்புரவி நுகம்பிணித்த படர்கொடித்தேர்க்
காயவெழு கதிர்காந்தக் கங்குலினுந் துயிலொழிந்தார். (3)

உண்ணரிய வுணவொழிந்த சைவலமுண் டொழுகுபுனற்
புண்ணியமா நதிதிரைத்த புளினநெடுங் குன்றுதொறு
நண்ணியவீ ராசனத்து நயந்திருந்தஞ் செழுத்தோதிக்
கண்ணுதலை வரநினைந்து கனிந்துகனிந் துளங்கரைந்தார். (4)

இத்தகைமா தவர்வருந்தி யொருபருவ மியற்றிடலு
மைத்தகுகார்க் களத்தமலன் மகிழ்ந்துதிகம் பரனாகி
வித்தகவெண் டிருநீற்று வெண்ணிலவு மெய்கொழிப்பத்
தத்தளிதா தாட்டயருந் தாருகா வனமடைந்தான். (5)

மாதவர்க ளிருக்கைபுகுந் தோரிடைபோய் மகிழ்ந்தாடு
மேதமிலா வழகெறிப்ப வோரிடைபோ யிசைபாடுஞ்
சீதநிலாப் புன்முறுவ லோரிடைபோய்ச் செய்தருளுங்
காதலொடு மோரிடைபோய்ப் பிச்சையெனக் கரமேந்தும். (6)

செங்கண்மழ விடையுயர்த்தோ னிவ்வண்ணந் திரிதரலும்
பைங்கண்மல ரளிகுடையும் படர்தாரு காவனத்தி
னெங்கணும்வீற் றிருக்கின்ற வரமுனிவ ரினிதோர்ந்தா
ரங்கணனென் றறிந்தார்க ளாடினா ரகங்களித்தார். (7)

வெண்டிவலை வரநதிபாய் வேணியாய் நின்பெருமை
முண்டகச்செந் திருநாவி முகுந்தனுக்குந் தெரியாதால்
மண்டுதுவர்க் கடற்பிறவி மாயவலை யிடைப்பட்டுக்
கொண்டநெறிச் சிறியோர்கள் குணித்துணர்தற் கெளிதாமோ. (8)

மைந்தரெது விளைத்தாலு மனக்கொளா தருள்பெருகித்
தந்தைமகிழ்ந் தினிதளிக்குந் தகையுரைக்கில் வழக்கன்றோ
சிந்தைமருண் டெளியேங்கள் செய்தபெரும் பிழையனைத்து
மெந்தைபொறுத் தருள்கவென விணைக்கமலச் சரண்வீழ்ந்தார். (9)

நறைக்கமலப் பொகுட்டுறையு நாயகனாத் தழும்பவரு
மறைக்கடலுட் படிந்தெடுத்துத் துதியமுதம் வழங்குதலும்
பிறைக்கனகச் சடைமவுலிப் பெருமானன் பினிதிரங்கிக்
கறைக்களமுந் தழல்விழியுங் காரான்குங் காட்டினான். (10)

கலிவிருத்தம்.

அன்னமெய்த் திருவடி வழுகு காண்பதற்
குன்னருந் தவத்தினோர்க் குறுதி பேரொளி
துன்னிருந் தெய்வதச் சுடர்க்க ணல்கினன்
பன்னக வேணியான் படிவ நோக்கினர். (11)

பார்த்தனர் பரவச மடைந்து பன்முறை
யார்த்தன ருவகையங் கடலு ளாழ்ந்தனர்
சேர்த்தனர் செங்கா முகிழ்த்துச் சென்னிமேற்
றார்த்தனர் மார்பிடை விழியின் சோணநீர். (12)

கோதறு சுடர்மணிக் கும்ப நீரெடுத்
தாதர வொடுமுறை யாட்டி னார்கழற்
போதினை யருத்தியிற் பூசை செய்தனர்
மாதொரு பாகனை வணங்கி வீழ்ந்தனர். (13)

இத்தகை முனிவர ரிறைஞ்சு மேல்வையிற்
கொத்தலர் கருங்குழற் கொம்மை வெம்முலை
முத்தொளி ரிளநிலா முறுவல் பங்கினன்
றொத்தல ரிதழியான் களித்து ளங்கினன். (14)

அரியசொன் மறைபயி லருந்த வத்துளீர்
பிரிவற வுலகினிற் பிறக்கும் பெண்ணுருத்
தெரிதரிற் பனிவரை யுயிர்த்த தேமொழிப்
பரிமளப் பவளவாய்ப் பாவை பங்கின. (15)

ஓதுகே ணுணரு வனைத்து முற்றுணர்
நீதியே யெனதுபங் காகி நிற்பன
வாதலா லெவரையு மரந்தை பேசியே
சாதியா லிகழ்வரோ வீடு சார்ந்துளோர். (16)

தெண்டிரை யுலகினில் ஞானத் தேறல்மோந்
துண்டொரு பித்தரிற் கலையொ ழிந்துலாய்க்
கண்டிகை வெண்பொடி புனைந்து காட்டிய
தொண்டரைப் பழிப்பதுஞ் சுருதி சொற்றதோ. (17)

பாலரிற் பித்தரிற் பலவுங் காட்டியே
சூலமு மழுவுமொண் டுடியுந் தாங்கிய
நீலமைக் களத்தெமை நிந்தை யின்றியே
சாலவும் வரம்பறத் தழைக்கு மன்பினால். (18)

பாதக மொருவிநல் லொழுக்கம் பற்றியே
தீதறு முண்டித ராகித் தெய்வவெண்
பூதியாற் றுனமும் புரிந்து கண்டிகை
காதுவண் சிரங்கரங் களத்துத் தாங்கியே. (19)

விதிமுறை யடைந்தெமை மிக்க பூசைசெய்
மதியின ரெம்முடை வடிவு தாங்கியெம்
பதிதரு போகங்கள் பலவும் துய்த்திடு
கதியினை யடைந்துமேல் வீடுங் காண்பரால். (20)

அத்தகை யடியரை யரிச்சித் தேத்தினோர்
முத்தரி லெம்மையே முழுது மேத்தினோர்
மத்தரி லவர்களை வழுவி நீத்தவர்
பித்தரி லெம்மையே நீத்த பெற்றியோர். (21)

சிந்தனை நீக்கியே நீவிர் நுங்கண்மெய்ச்
சிந்தையின் றிருக்கொழிந் தெம்மைச் சிந்தைசெய்
மைந்துறு மடியரை வழிபட் டேத்துவீ
ரந்தமில் பிறப்பெனு மாழி நீந்துவீர். (22)

ஈண்டுநின் றெம்மடி யிறைஞ்சி நீவிர்செய்
பாண்டரு துதியினு லுவகை பற்றினேந்
தூண்டுபே ரன்பினிற் சொற்ற நல்வரம்
வேண்டுவ தருவம்யாம் விளம்பு வீரெனு. (23)

பண்ணெலா மொருவழிப் படுத்த பான்மொழிப்
பெண்ணல்லா ளொருபுறம் பசந்த பிஞ்ஞகன்
வெண்ணிலாக் கொழுஞ்சுடர் விரிக்கும் வேணியெம்
மண்ணலான் பகர்ந்தன னனைத்துங் கேட்டனர். (24)

ஆசிலா முனிவரி லருள்ப ழுத்துளோர்
கோசிக னங்கிரா வசிட்டன் கோதமன்
காசிப னத்திரி பிருகு காய்சின
மேசறு புலத்தியன் புலக னென்பவர். (25)

வெய்யவெங் கொலைபழுத் துமிழும் வேற்படை
யையனைப் பயந்தரு ளமல நீபகர்
செய்யவர்க் கமுதிரு செவிம டுப்பயாம்
பொய்யுறு பிறவியாம் புணரி போக்கினேம். (26)

மற்றொரு தவமினி வழங்கல் வேண்டுமே
பொற்கழல் வழுத்திநின் பூசை செய்வது
பெற்றன மெமக்கொரு பிறப்பு முள்ளதோ
கற்றையஞ் சடைமுடிக் கருணை வெள்ளமே. (27)

பொங்கொளி கொழித்தவெண் பூதி மான்மியந்
தங்கிய கலையது தணந்து ளோர்தகை
யங்கண னின்னையேத் தெடுக்கு மாகம
மிங்கியா முணர்வதற் கியம்பல் வேண்டுமால். (28)

என்னநின் றகங்குழைந் திரங்கி நாண்மதிப்
பொன்னவிர் புரிசடைப் பொருப்பைப் போற்றின
ரன்னவன் குறுநகை யரும்பி யாங்கவை
மன்னிரும் பவளவாய் மலர்ந்து கூறுவான். (29)

இரைத்தெழு சேப்பொளி யெறியுஞ் செந்தழ
லுரைப்பதெ னம்முரு வாகு மூழியி
னிரைத்தெழு முலகமோர் நொடியி னீடியே
நுரைக்கட லமுதென நுங்க நீறெழும். (30)

இலங்குமப் பொடிபரந் தெறிக்குந் தன்மையா
லலங்குபே ருலகெலா மசுத்த நீங்கிடுங்
கலங்கிவெம் பிறவியங் கடலு ளாழ்ந்தவர்
மலங்களைந் திடுமரு மருந்த தாகுமே. (31)

சுற்றிய பவமெலாந் தொலைக்கு நீர்மையாற்
சிற்பர மயமதா மெம்மிற் றெய்வதப்
பொற்பொளிர் விளர்ப்பொலி பொருந்து மாற்றலாற்
பற்பமென் றொருபெயர் படைத்து நின்றதே. (32)

மறைபுகல் சோமமா மகத்துக் கேற்பன
வறைதரு மந்திர மாதி யுள்ளவை
பிறைநுத லுமையுருப் பிறங்கு செந்தழ
னிறையுமெம் முருவத னிலவு வெண்பொடி. (33)

சிலைநுத லுமையொடுஞ் சேர்ந்த யாமென
வுலகினி லமைதரு மதனை யோர்ந்துயிர்
புலனழி காலையிற் புனைந்த நீர்மையோ
ரலகிலா வெம்முரு வடைந்த முத்தியோர். (34)

கருத்தினும் விழியினுங் காண்கில் யாவரும்
வெருக்கொள் வரும்பழி வினைஞ ராயினுந்
திருத்தகு வெண்பொடி புனையிற் றீவினை
முருக்கின ரவர்களே முத்தி நேடினோர். (35)

தகைபெறு விதிவழி சந்தி மூன்றினும்
பகர்தரு வெண்பொடி புனைந்த பான்மையோர்
மகபதி நான்முகன் வணங்கி வாழ்த்தவே
புகாறு கணந்தலை புரந்து வாழுவார். (36)

பொருவில்சற் கதிதரு பூதி மான்மியப்
பெருமையை யளவினிற் பேசற் பாலதோ
விரிசடை முனிவரீர் வியந்து நக்கினர்
தெரிவரும் பெருமையாம் செப்பக் கேண்மினோ. (37)

நிலமகட் கரும்பொறை யென்ன நீடுவெம்
புலன்வழித் தனிமனம் போக்கி வீரியத்
தலம்வருங் கொடியர்பொன் னுடை வீக்கினு
முலகினிற் காண்குறு தொழியு நக்கினர். (38)

சிந்தைநீ ராற்புலத் தீயெ ழாதவித்
துந்துபே ரிருவினை யொப்பு நோக்கியே
விந்துவின் வீரிய மடக்கி மேதகை
வந்தநக் கினர்கள்பொன் னுடை வாய்த்தவர். (39)

இறப்பரும் புலன்வழி யெய்தி டாமையாற்
சிறப்புறு முனிவரர் தேவர் மற்றையோ
ருறப்பெறு முதாரநின் றுடைது றந்தவர்
பிறப்பதற் குள்ளதோ பழியின் பெற்றியே. (40)

இன்னவர் முத்தியி னெல்லை காண்குறு
மன்னமா தவத்துநக் கினர்க ளாயினோர்
முன்னரா தரித்தெமை முழுதும் போற்றினோர்
பன்னியாங் கவர்திறம் பகர்தற் பாலதோ. (41)

ஈங்கிது நிற்கமற் றெம்மை யேத்துமோர்
பாங்குறு மாகமம் பகரக் கேட்குதி
ரோங்கிய வுலகெலா மொழித்துப் பின்னருந்
தீங்கற வன்னவை சிருட்டி செய்யுநாள். (42)

விரதமும் யோகமும் விரும்பு முத்தியின்
சாதமா மரியபா சுபத சைவமுஞ்
சிரதல முறுப்பினிற் சிறந்த தென்னமெய்
காதல நெல்லியங் கனியிற் காட்டவே (43)

தெரிந்தியாம் படைத்தன மவையிற் சின்மயந்
தருந்தகை யுதவுபா சுபத சைவத்தி
னருந்தவத் துறையுளீ ராய்ந்து நிற்குனர்
பெருந்தனி முத்தியின் பேறு காண்பவர். (41)

கணிக்குமிவ் வாகமங் கருதி யன்பினுற்
றணிப்பருந் தெக்கணஞ் சார்ந்த நீதியோர்
மணித்தரு வளநகர் வணங்க வேந்தரிற்
துணித்தணி மாதியும் கொண்டு வாழுவார். (45)

உரைக்குமுத் தாநெறி யொழுக்க நின்றவர்
விரைச்செழுங் கமலபீ டிகையின் வேதியன்
றிரைக்கடற் றுயில்வளர் செங்கண் மாயவன்
வரைத்தறி யாப்பா முத்தி மன்னுவார். (46)

நீவிரிச் சமயத்தி னிலைநின் றேத்தியே
யோவிலா முத்தியி னுறைகு வீரென
மேவல ராருயிர் விழுங்கி வெண்ணிணத்
தூவுமிழ் சூலத்தான் சொல்லிப் போயினன். (47)

கருமதர் வரிநெடுங் கண்ணி பங்கின
னுரைதரு மாகமத் துரிமை மேற்கொடு
துரிசற யாவையுந் துறந்து மாதவர்
பரிவொடு நின்றரன் பதியை நண்ணினர். (48)

ஆதிநான் மறைபயி லருந்த வத்தினோர்
சோதிவா னவனைவாழ்த் தெடுத்த சொற்றுதி
யோதினர் கணங்களா யும்ப ரேத்தவே
காதலார் வெள்ளியங் கயிலை காண்பரால். (49)

வெண்ணிலாக் கவிகையோன் விழவு செய்யுநாட்
பண்ணுலா மொழியுமை பாகன் றாருகா
வண்ணன்மா தவர்க்கரு ளளித்த காதையை
நண்ணியே கேட்பவர் முத்தி நண்ணினோர். (50)

என் றுமும் மலக்குறும் பெறிந்த வித்தகத்
துன் றுசெஞ் சடைமுடிச் சூத ஞேதிடக்
கொன்றைவே ணியன்செயல் குறித்து மாதவர்
நன் றுநன் றெனவுள நயந்து விம்மினர். (51)

சிவன் தாருகாவனத்து ரிஷிகளுக்கு அருள் புரிந்த
அத்தியாயம் முற்றிற்று.

## 5. ததீசிப் பிரமரிஷி வச்சிரவாக்கை வரம்பெற்ற அத்தியாயம்.

எழுசீர் விருத்தம்.

ஐயரி பரந்து மதர்மதர்த் திலகு
மம்பலைத் தமர்புரி நெடுங்கட்
டையல்பங் கினன்பொற் சரணிலன் பிறைக்குந்
ததீசிமா முனிவரன் பெருமை
மெய்யுணர் கருணைச் சனற்கும ரனுக்கு
மெய்த்தவ நந்தியன் றுரைத்த
மையறு காதை புகலுகே னென்னச்
சூதமா முனிவரன் வழங்கும். (1)

கட்கடை யிறுதிக் கடைக்கன லெழுப்பக்
குழைசெவிக் காற்றுவிட் டிறைத்து
முட்படை விலக்கி யெதிர்பொரு மாசர்
மூளையுங் குருதியுஞ் சிதறப்
பெட்புறக் கிரண மணிநிலா மகுடம்
பிதிர்படப் பெயர்த்தடி மிதித்து
விட்புலன் றடவி மதிக்குள கெடுக்க
வெங்காம் விடுக்குமா னையினன். (2)

முத்தினிற் றிரண்டு குறுந்துளி சிதற
விலாழிகொப் புளித்துமூ தண்டப்
பித்திகை குலுங்கி மடமடத் தலறிப்
பிளக்கமாக் கனைகுரற் சிரித்துப்

பைத்தலை மடக்கி நாக்கடை புரட்டிச்
சேடனும் பதைபதைத் தொடுங்கத்
தத்துவெங் கவனக் கொய்யுளைக் கிரணத்
தமனியக் கலினவாம் பரியான். (3)

பேனவார் திரைக்குண் டகழிசூ ழுலகிற்
செருவலர் பெருங்குடர்க் கொடியு
மானவே லரசர் வாமண மகளிர்
மங்கல நாணெடுங் கொடியுங்
கோனகர்ப் புரிசை வாயிலன் னவர்க
ணிறுத்திய கொற்றவெண் கொடியு
நானிலப் பாப்பு மிடையறக் கிடக்க
நடக்கும்வெற் றியங்கொடி யுயர்த்தோன். (4)

மீதலத் தழுந்திக் கூன்முது குழுக்க
வீங்குமோட் டாமைமேற் படர்ந்த
மூதுல கனைத்து மளவையிட் டறிய
முளரியோ னெல்லைதொட் டமைத்த
பூதரத் தளவை யாவையுங் கடந்து
புவியெலாம் பொதுவறப் பரந்து
மாதிரக் களிறுட் படுத்தியப் புறமுங்
கவித்திடு மதியவெண் குடையோன். (5)

முடங்குவெண் பிறையி னகடுகீண் டுரிஞ்சி
முட்டிய கொடிநெடுந் தடந்தேர்
வடங்கெழு கலனும் வயவர்கை புடைத்து
வாய்விடு மமலையும் வழங்கிக்
குடங்கையி லடக்கி யெடுத்துமா தவத்தோன்
குடித்துமீண் டுமிழ்தாக் குனிக்குங்
தடங்கடல் சிறுகப் பரப்பியெண் டிசைபோய்ச்
சமர்பொரு தானையங் கடலான். (6)

ஆற்றலங் குவவுத் தடம்புயம் பொருமி
யங்கதம் பொடிபொடி யுதிரச்
சீற்றநின் றுருத்துச் சினவயப் புலியிற்
செருவினைத் தெதிரிடுங் கொடிய

மாற்றலர் குடருங் குருதியு மளைந்து
காகமும் பருந்தும்வாய் மடுப்பக்
கூற்றமு மருள வுறைவிடு நெடிய
கொலைபழுத் தொழுகுவேற் படையோன். (7)

தொங்கல்வெண் கவிகைப் புகர்முகத் தறுகட்
சூழிமால் யானைவே லாசர்
செங்கைமெல் லணையிற் கதிர்முடி கிடத்தித்
திறைகொணர்ந் துணங்கிவாய் புலர்ந்து
தங்களிற் கலங்கி யுளந்துணுக் கெறியுந்
தன்மையி விடைதனி லிலவாய்
மங்குலிற் றயங்கிப் பசும்பொன்வார் விசித்த
மணிமுர சிரட்டுமுன் றிலினன். (8)

வணங்கல ருளத்திற் றிருக்கிரு ளகற்ற
மறுவறச் செலுத்துபே ராணை
யிணங்கிய திகிரிச் சுடர்க்கொழுங் கதிரு
மிரவெனு மிரவுவிட் டகலக்
குணங்கொளக் கருத்தின் குறிப்புணர்ந் தளந்து
கொடுத்திடுங் கீர்த்திவெண் ணிலவு
மணங்கா வெடுத்த வுலகெலாம் விரியப்
பொதுவற வரசுகாத் தளிப்போன். (9)

திருவுயிர்த் திரைக்கும் பாற்கடற் றுயிலுஞ்
செங்கணு னுந்தியங் கமலத்
தருமறைக் கிழவன் றும்மலிற் பிறந்தோ
னஞ்சிறைச் சுரும்பர்பாட் டயரு
மருமல ரலங்கற் சேட்டிளம் பருதி
மார்பினன் வயங்கொளி யெறிக்குங்
குருமணி வலையப் பொருப்புறழ் தடந்தோட்
குபனெனப் பெயரிய குரிசில் (10)

துயலொளி வயிரத் தொடுகரு விருத்திச்
செம்மணிச் சுவர்த்தல மெழுப்பிப்
பயிலுமொப் பனையிட் டிந்திர நீலப்
பலகைசேர்த் துத்திரம் படுத்துச்

செயிரற விளங்கு மிந்துகாந் தத்தான்
மேய்ந்திடை செழும்பொனிற் றடவி
வெயிலுமி ழூரக மணிநிறை குயிற்றி
விரிகதிர்த் தூவிமே லமைத்து (11)

கண்வழுக் கறுத்து நோக்கிமெல் லெனவே
கான்மடுத் தடியிடுந் தோறுந்
தண்ணெனக் குளிர்ந்து மயிர்ப்புறம் பொடித்து
நடுக்குறச் சாணெதொட் டிழைத்த
வெண்ணிறம் பழுத்த படிகம்வைத் திணக்கி
விரிவெழுத் தரைத்தலம் வகுத்துப்
பண்ணுமண் டபத்து நாப்பணோர் பீடம்
பற்மாா கத்தினு லுயர்த்து (12)

ஆங்கரி யணையிட் டின்னிசை மகதி
யாழ்வடித் தணங்கனு ரிசைக்கப்
பாங்கிரு புறமுங் கவரிகா லசைப்பக்
கணிகையர் நாடகம் பயில
வாங்குதெண் டிரையிற் பல்லிய மியம்ப
மன்னவர் மணிமுடி வணங்கிப்
பூங்கழல் வழுத்தி முறைமுறை பாவப்
புரவல னரசுவீற் றிருந்தான். (13)

வீழ்புல னடக்கித் துரிசறுத் துயர்ந்து
வேதவா ருதிகரை கடந்த
தாழ்சடை மவுலித் ததீசிமா முனிவன்
வருதலுந் தானேவேந் தெதிர்ந்து
காழ்மணித் தாளத் தொடிக்கா முகிழ்த்துக்
கண்களித் தொளிறுநா வலம்பொற்
கேழ்கிளர் தவிசிட் டிருத்தினன் பழைய
கேண்மையி னளவளா யிருந்தான். (14)

மூதுல கடங்க நடத்திய தனிக்கோன்
முரண்வலித் தடம்புயத் தரசன்
மாதவத் ததீசி திருமுக நோக்கி
மறையவர் பிரமமோ வாசர்

தீதற வியற்று மறங்கொலோ பெரிதென்
றுரைத்தியென் றிசைத்தனன் றிருந்து
போதமுற் றெழுந்த முனிமுகங் கோட்டிப்
புதுநிலாச் சிறுநகை புரிந்தான். (15)

அன்னது நோக்கி யதிகமீ தெனவே
யறைவதை யன்றிமற் றவையிற்
புன்னகை புரிந்த தென்கொலோ வென்று
புரவலன் கதழுருத் தெழுந்தான்
மன்னவ னுலகின் மனுநெறி வழாது
வளர்த்து நன்றுநன் றெனவே
யுன்னருந் தவத்துத் ததீசிமா மறையோர்
பிரமமே யதிகமென் றுரைத்தான். (16)

அவ்வுரை மறுத்து நிருபன்மா முனிவ
வந்தணர் விதிமா புதித்தோர்
திவ்விய வாசர் திசைவளம் புரக்குஞ்
செல்வர் மாமரபுவந் துதித்தோர்
பவ்வநீ ருலகி லரசரை மறையோர்
பரவுதல் வேண்டுமென் றிசைத்தான்
வெவ்வழற் கொழுந்த வுருத்தனன் முனிவன்
வேந்தனை மார்பிடை யுதைத்தான். (17)

உதைத்திடு மளவிற் பசுந்துழாய்ப் படலை
யொருவனைப் பரவிவாங் கியதோர்
கதிர்க்கொடு திகிரிப் படையினு னிருபன்
முனிவனைச் சிரங்கடிந் திடலும்
வதைத்துமா தவத்தோன் பார்க்கவற் கருதி
மண்மிசை யிறந்துவீழ்ந் தனனாற்
பதைத்தன ரெவரு மிரங்கின ரழுதார்
பின்வரும் பான்மையொன் றுணரார். (18)

கருதியே யிறந்த முனிவனை நோக்கிப்
பார்க்கவன் கடிதுவந் திறவாச்
சுருதியு மறமுந் தலைதடு மாறத்
தொடுகட லுடுத்தபா ருலகிற்

குருதிகொப் புளித்தா ருயிர்துறந் துணங்கு
கொள்கையை நோக்கினன் குறித்தா
னரிதுதொட் டெடுத்து மடியின்மேற் கிடத்தி
யழுதனன் மம்மருற் றழிந்தான். (19)

மீண்டவன் கருத்தைத் திருப்பமா முனிவோர்
விண்ணவ ரேனையோ ரெவரு
மீண்டிவன் சிவனை வழுத்திய பெருமை
யென்கொலோ வென்னநின் றிசைப்ப
மாண்டபே ருயிர்பெற் றுய்ந்திடச் சிரத்தை
மலர்க்கையாற் பொருந்தலுந் துணிந்த
நீண்டபே ருடலிற் பொருந்திமெய்த் ததீசி
பண்டுபோ லெழுந்தன னின்றான். (20)

எழுந்தமா தவத்துத் ததீசிமா முனிவ
னரசன்மேன் முனிவுகூர்ந் திடலு
மருந்துபே ரன்பின் பார்க்கவ னதனைத்
தடுத்தொரு வாசக மறைவான்
செழுந்துழா யலங்கற் புயத்திறேற் பரவி
யவன்பெறுந் தெய்வதப் படையால்
விழுந்து கூறுகி நின்னுடல் கிடக்க
வீட்டிற னன்னது விலக்க (21)

நறைமடுத் தருந்தித் தெவிட்டிமூச் செறிந்து
நாத்தழும் பெழவிசை படித்துச்
சிறையளி குடையுங் கடுக்கைவார் சடையோ
னன்றியோர் தெய்வம் வேறுளதோ
முறைமுறை வழுத்தி மிருதசஞ் சீவி
முதலன வுள்ளவை யனைத்துங்
குறைவற வவன்பாற் பெற்றனன் முனிவ
நீயுமன் னவன்கழல் குறுகி (22)

மருக்கமழ் மலரா லரிச்சனை புரிந்து
மகிழ்கதிர்த் திகிரியை யாற்றச்
சுருக்கமில் வரங்கள் பெரிதுற வடைந்து
தோன்றலை வெல்கவென் றிசைத்து

முருக்கிதழ்க் கனிவா யுமையவள் கொழுநன்
மொழிந்தருண் மிருதசஞ் சீவி
திருக்கற வளித்துப் பார்க்கவ னடைந்தான்
றதீசியுஞ் சிந்தையிற் களித்தான். (23)

புதிதுயி ரளிக்கு மிருதசஞ் சீவி
யுரைத்திரும் புனல்மடுத் தருந்தி
விதிமுறை வழியி னிலிங்கமொன் றமைத்து
விமலனை யருச்சனை புரிந்தான்
முதியசொன் மறையாற் றுதிபல வெடுத்து
மொழிந்தனன் முனிவனுக் கிரங்கி
மதிபுனை குடில வேணியெம் பெருமான்
மழுவிடை யுகைத்துவந் தனனால். (24)

கன்னலங் குதலை யிமயமீன் றளித்த
கனங்குழை யொருபுறம் பசந்த
பொன்னவி ரிதழிப் பொருப்புறழ் தடந்தோட்
புங்கவன் றனைமுனி குழைந்து
சென்னியிற் கரங்கண் முகிழ்த்துவே ரோட்டிச்
சேவடிக் கமலம்வீழ்ந் திறைஞ்சிப்
பின்னலஞ் சடிலங் கொடியினிற் றுவள
வாடினன் பின்னுகன் மகிழ்ந்தான். (25)

சேறுதொட் டலரா முளரிபூத் தலர்ந்த
செங்கணன் முதலியோ ரெவரு
மாறுதொட் டெழினும் படையினு லிறவா
வச்சிர யாக்கையு மளித்தான்
வீறுதொட் டலரு மன்புமீக் கிளர
விரும்பிய வரமெலா முதவி
யாறுதொட் டுலவு சடைமுடிக் கடவுள்
வெள்ளியங் கயிலைசென் றடைந்தான். (26)

கலிநிலைத்துறை.

ஓல வெண்டிரைப் பாற்கடல் விடமடுத் துண்டோன்
சால நல்கிய தனிவரத் துயர்தரு ததீசி
ஞால மெங்கணும் புரந்தருள் குபனவை நணுகிக்
கோல மோலியி லுதைத்தனன் களித்தனன் குனித்தான். (27)

தெள்ளு நான்மறை முனிவனைச் சினத்தகந் திருகி
வெள்ளி வெண்குடை மன்னவன் கனற்பொறி விழித்து
வள்ளெ ழுங்கதிர்த் திகிரியி னெறிந்தனன் வயிரத்
தொள்ளொ ளித்திரு மேனிபட் டொடிந்ததத் திகிரி. (28)

அங்கண் மாநிலம் புரந்தரு ளரசநீ யடைந்த
செங்கண் மாயவன் திகிரியு மென்னையென் செய்யும்
வெங்க ணுதலைப் பார்ப்பதென் றெனநகை விளைத்தான்
றங்க ணுன்மத னுடலெரித் தவற்பணி தவத்தோன். (29)

கரத்தை நோக்குமத் திகிரியை நோக்குமுட் கலங்கிச்
சிரத்தை நோக்குமம் முனிவனை நோக்கும்வெஞ் சினத்தா
லுரத்தை நோக்கும்வெள் விடைக்கொடி வலனெடுத் துயர்த்தோன்
வரத்தை நோக்குமென் றிதழ்கறித் தருக்கும்வேன் மன்னன். (30)

சொல்ல ருந்தவ முனிவனை யாருயிர் துறந்து
செல்வ தற்கொரு தனிவரம் வேண்டுமென் றுணர்ந்து
குல்லை யந்துழாய் முகுந்தனைக் குரைகழல் வழுத்த
வொல்லை யிற்கடி தேகினன் றணிக்குடை யுரவோன். (31)

புனித மாமொரு தவவனந் தேடினன் புகுந்தா
னினிய நான்மறைப் பிரமனை யரிதினீன் றெடுத்த
கனியுந் தேனுமிழ் பசுந்துழாய்க் கண்ணியம் பானை
மனதி னோர்ந்தன னருந்தவம் புரிந்தனன் வணங்கி. (32)

அறுசீர் விருத்தம்.

வணங்கி நற்றவம் புரிந்திடு மாசன்முன் வானவர் பணியாற்ற
விணங்கு மேருவிற் பசுங்கதி ரெழுந்தெனக் கருடன்மாப் பிடரேறிப்
பிணங்கு வெண்டிரைப் பாற்கட லகத்தொளி பிறங்கிய மணியேந்தும்
பணங்கொள் பாப்பணைக் கண்டுயில் சக்கரப் படைநெடு முகில்வந்தான். (33)

கண்க ளித்திடு முவகையிற் கண்டனன் கனைகழற் கழல்வீழ்ந்தான்
விண்க ளித்திடு பூசனை மகிழ்வொடு விதிமுறை தனியாற்றிப்
பண்க ளித்திடு மறைவடித் தளப்பருந் தோத்திரம் பலசெய்தான்
மண்க ளித்திடு மனுமுறை வழங்கிய மணிமுடி வயவேந்தன். (34)

ஆதி யாகியு மண்டமு மகண்டமு மசைவறப் பொலிந்தோங்கு
சோதி யாகியுந் தத்துவ மாகியுந் தோன்றிய துளவோய்நின்
போத மாகிய சாத்திகத் துதித்தவன் புதுமது மலர்ப்போதன்
றீதி லாதெழு தாமதத் துதித்தவ னடம்புரி சிவனென்போன். (35)

ஏழ்பி லத்தலப் பாப்புநின் னிணையடி யெறிதிரை குனித்தாடு
மாழ்த டங்கட லேழுநின் மணிக்கலை யம்பரந் திருநாபி
வாழ்பெ ருந்திசை யெட்டுநின் மலர்க்காம் வானெடு முடியேத்துங்
கேழ்கெ ழுஞ்சுட ரிருவிழி வாதநின் னுசிகை கிளர்பூங்கால். (36)

இத்த கைத்திற மாகிய நின்னையா னிறைஞ்சுதற் கெளிதாமோ
பத்தி யாலுனைப் பாவுதற் கேழையேன் றீவினைப் படிறேற்றும்
பித்த னேன்செயும் பூசனை தினைத்துணை யாயினும் பிறழாது
முத்த மாதவர் பூசையின் முழுநெறி கொள்வதுன் முறையாமால்.(37)

இனைய கூறிநின் றிரங்கினன் பின்னரு மெடுத்தெடுத் திசைக்கின்றா
னினைவ ருந்தவ மியற்றிய ததீசிமா முனிவனென் பவனீடு
நனைக டுக்கையஞ் சடிலிபொற் சேவடி நாண்மலர் தொழுதேத்திப்
புனித வச்சிர யாக்கையும் வரங்களு மடைந்தனன் புகழ்பெற்றான்.(38)

மறைவ ழங்கிய சைவமென் றொருசிவ மதத்தருந் துறைபோகிப்
பொறைகொள் பூதலத் தொருவரை மதிக்கில னென்னொடும் புகல்காலைக்
குறைவ றுந்தகைக் கெண்மையி னிருந்தனன் பிரிந்துவெஞ் சலங்கொண்டா
னிறைய ழிந்திட விடப்பதங் கொடுதலை நெடுமுடி யுதைத்திட்டான். (39)

பொங்கு நீர்க்கட லுலகொரு கவிகையிற் புரந்துனைப் புகழ்வேனைத்
திங்கள் வேணியன் வரத்தினா லவையிலென் சிரத்தடர்த் துதைத்திட்ட
தங்கு மாதவத் ததீசியை வெல்வதற் கொருவரந் தரவேண்டு
மெங்க ளையக வென்றன னென்றனு மீர்ந்துழாய் மணிமார்பன். (40)

உழுது பாட்டளி முழக்கிய தார்புனை யொருதனிக் குடைவேந்தே
தொழுகு லத்தவ ரெவரையு மதிக்குன ரலாவர் துணிந்தீட்டும்
பழுத றக்கிளர் தவப்பய னின்றெனிற் பானுவும் வெயில்வீசா
னிழுத கற்றினர் பெருமையை யெங்ஙன மெடுத்துரைப் பதுவாமே. (41)

குலனி ழுந்தவ ராயினுஞ் சிவன்கழல் குறித்துணர்ந் தருணீரார்
வலனு றுந்தனி மழுப்படை யோனலா லொருவரை மதித்தோரார்
புலன டக்கிமெய்த் தொழுகுலத் துதித்தரன் பொலன்கழ னினைந்தேத்து
மலகின் மாதவத் ததீசிமா முனிவனை வெல்வதற் கரிதாமால். (42)

மனத்து மாசறு முனிவனை வென்றிட வயங்கொளி மணிப்பூணோய்
நினக்கி யான்வர மளிக்குவ னலனவ னிலைபெறு மிடனெய்தி
யனத்தம் யாவையும் விளக்குவ னன்னதா னருந்தவத் துறைசார்ந்தோன்
சினத்தி னாலெனைச் சபிப்பனக் காரிய மயர்வறத் தெளிந்தோதில் (43)

முக்க ணுன்றனைப் பிழைத்தொரு தாண்மலர் முளரிநான் முகனீன்ற
தக்கன் மாமக மியற்றுவ னுங்கதிற் றேவர்க டம்மோடும்
புக்க போதினி லுழந்திட வென்னையுந் துயர்க்கடற் புகச்செய்வான்
மிக்க சேவெடுத் துயர்த்தவ னளித்தருள் வீரனென் றொருவீரன்.(44)

ஆய காலம்வந் தடுத்ததா லிவ்வண்ண மறைந்தனை யெனைநோக்கி
நேயம் வைத்தனை யாருயிர் வருந்திட நினைப்பருந் தவஞ்செய்தாய்
தீய காரிய மாயினு மன்பர்தங் கருத்தினிற் செயல்வேண்டு
மோய்வ ருந்துயர் மறுத்தியென் றுரைத்தன னுவணம்விட் டுருமாறி. (45)

சேட்டி ளங்கதிர்க் கவுத்துவ மார்பினன் சிலையென வுடல்கூனி
நாட்ட ரும்படர் பஞ்சினில் விளர்ப்புறு நரைக்குடு மியுந்தாழ
மோட்டு வண்புயந் துவளுறு நூலொடு முதியவே தியனாகித்
தாட்டு ணைக்கம லந்தளர் நடைகொடு ததீசிதன் னுழைசார்ந்தான். (46)

மின்கி ளைத்தெழு விழுதுவிட் டனசண்ட மெய்த்தவன் றிருமுன்ன
ரென்கி ளைத்தவ மாகிய முனிவகே ளொருவர மெளியேற்கு
முன்கி ளைத்தெழத் தருதியென் றிருகர முகிழ்த்தனன் முறைவீழ்ந்தான்
கொன்கி ளைத்தெழு சக்கரந் தாங்கிய கொண்டலிற் பொலிகோமான். (47)

வந்து சொல்லிய முகுந்தனை நோக்கினன் மாயனென் றினிதோர்ந்தா
னந்தி வேணிய னருள்கொடு மூவகைக் காலமு மளப்பேன்யான்
சிந்து சோரிவேற் குபன்விட வருசிலைச் செங்கண்மா யவனன்றே
முந்து மன்பர்தம் மனக்குறை தவிர்ப்பதுன் முறைநெறிச் செயலாமால். (48)

முன்னர் மைம்முகி லுருக்கொடு வந்தவை முனையுளி நெ...யபபைம்(?)
பொன்ன மேருவிற் புள்ளுகைத் தேறிய புங்கவ புகலென்று
மன்னு மாதவ முனிவர னுரைத்தனன் கேட்டனன் மறைநான்குஞ்
சொன்ன நான்முகத் தொருவனைப் பயந்தரு டுளவணி தடமார்பன். (49)

திருந்து முன்னுரு வெடுத்தனன் சிவன்கழற் சேவடி நினைந்தேத்து
மருந்த வத்தினர்க் கெவர்களு மெளியரே யாயினு மெனைநோக்கிப்
பெருந்த வம்புரிந் தனன்குப னன்னவன் கேட்குறப் பிரமத்திற்
பொருந்தும் வேந்தர்க ளியற்றிடு மறநெறி பெரிதெனப் புகலென்றான். (50)

உரைசெய் வாசகங் கேட்டலும் வாமுனி யருமறை யொருவிப்பே
ரரச ரந்தணர் தங்களி லதிகமென் றறைகுவ திலையென்றான்
பிரச நாண்மலர்த் துளவணி கருமுகில் பின்னருந் தவத்தோனை
விரைசெய் தாமரைத் திருமுக மலர்தாத் துதிபல வியர்ந்தோதி (51)

ஈது கூறுவ தரிதெனின் மன்னவ னிருசெவிப் புலன்கேட்கப்
பேதி யாதுனக் கஞ்சுவ னெனத்தனி பேசுக வெனச்சொன்னான்
பாதி மாமதி வேணிய னடியன்யா னினைப்பயந் திவ்வார்த்தை
யோது கேனல னென்றனன் வாமுனி யுருத்தெழுந் தனன்மாயன். (52)

சொற்ற வாசக மனைத்தையு மறுத்தனை நின்னுயிர் துறப்பேனென்
றுற்ற கோபவெங் கனற்பொறி விழிக்கடை யுதறிடப் பெலத்தோடுங்
கொற்ற மாப்படைத் திகிரிவிட் டோச்சினன் கூர்நுதி மடங்கிப்போ
யிற்று வீழ்ந்தது நோக்கினன் முனிவரன் புன்சிரிப் பெழநின்றான்.(53)

சங்க மேந்திய வாதநின் செங்கரச் சக்கர மொளிகாலுந்
திங்கள் வேணிய னடியரை யாருயிர் செகுத்திட லரிதாகுந்
துங்க நான்முகன் படைமுத லனைத்தையு மென்னுடற் றூரந்தாவி
நுங்க வேவுதி யவைபடுந் தனிமையு நோக்குதியெனச் சொன்னான். (54)

கறங்கு பாற்கடற் கரியவன் படைமடற் கமலபீ டிகைவேதன்
பிறங்கு தெய்வதப் படைமுதல் யாவையும் விடுத்தனன் பெயர்ந்தோடி
யறங்கொண் மாதவன் றனைவலஞ் செய்தல கதிசய முறமீண்டே
யுறங்கு தாணியி லடங்கின தேவர்கள் குழுமிவந் தொருங்கீண்டி (55)

ஆழி மாயனுக் காகிநின் றருந்தவன் றன்னுழை யமரேற்றார்
வாழி மாமுனி தருப்பையொன் றெடுத்தனன் வாதனை மனத்தெண்ணிச்
சூழும் வானவர் குழுவினை நுங்கவென் றெறிந்தன னதுசூழ்போய்ப்
பாழி மூவிலைப் படையெனக் கனன்மடுத் துண்டதப் படையெல்லாம். (56)

பொருத வானவ ரின்னண மாயினர் பூந்துழாய் நெடுமேகக்
கரிய மேனியி லாயிரங் கோடிவெங் கணங்களைப் பிறப்பித்தா
னெரியும் வெஞ்சமர் புரிபுய வலிதா னெனினு மடங்கீய்ந்தா
னரிய மாதவன் வெருக்கொள வமர்மடுத் தாற்றுக வெனச்சொன்னான். (57)

மிக்க வெஞ்சிலை தாங்கிய விண்ணவ னேவலின் மிடைந்தேறு
மக்க ணங்களைத் தருப்பைவெங் காலவெந் தீயினி லழன்றோடித்
தக்க வாருயிர் விழுங்கிமெய் யெரித்துவெண் சாம்பர்செய் ததுபார்த்து
நக்கு நின்றனன் முனிவரன் றிருமக ளையகன துகண்டான். (58)

மூண்டெ ழுஞ்சமர்க் கிளைத்தில னிவனெனக் கருதினன் முடிவோர்ந்தான்
காண்டல் செய்திடி ற்றுணுக்கெறிந் துள்ளுயிர் கலங்கிமெய் நிலைசோர
வீண்டு மண்டலங்கண் மயிர்தொறுந் தூங்குபு வதிசயம் பலவெய்த
நீண்டு நின்றனன் மணிமுடி வெளிதொட நெடுந்திரைக் கடன்மேனி. (59)

மாய வன்புரி மாயையி லாயிர மிரட்டிமா முனிசெய்தான்
றாய தெய்வதச் சுடர்விழி தருகுவ னேக்குதி யெனச்சொன்ன
னீயி ழைத்தது மாயைகொண் டென்னது நீங்கிநின் ளெழியாது
காயும் வெஞ்சமர் விளைத்திட வருதியென் றழைத்தனன் கரியோனே. (60)

நீல மேனியன் முனிநிலை நோக்கினன் மாயையி னுருநீங்கிச்
சால வெஞ்சமர் விளைத்தனன் வானவ ரோடினர் தளர்வுற்றான்
கால காலனுக் கடியனென் றுணர்ந்தில னவனெனக் களிகொண்டான்
சூல பாணியைத் துதித்தன னருந்தவத் துறைநெறி நிலைநின்றான். (6 )

அன்ன காலையிற் பிரமன்வந் தடைந்தனன் றதீசியை யடிபோற்றிப்
பின்னி வெண்டிரை மடுத்தெறி பாற்கடற் கண்டுயில் பெருமானை
யென்ன காரிய நினைந்தனை யென்றனை னிகறடுத் தனனின்றான்
கன்னி பாகனுக் கன்பர்தம் பெருமையைக் கணித்திடற் கெளிதாமோ. (62)

அலங்கு மைம்படைத் திருமறு மார்பனை யருந்தவன் முகநோக்கிச்
சலங்கொள் வெஞ்சினக் கொடியைநீ வானவர் தம்மொடு மொருதக்க
னிலங்கு செந்தழல் வேள்வியி லுமைமக னெறிசுடர்க் கதைபட்டுக்
கலங்கி நெஞ்சயர்ந் தெண்ணரும் பெருந்துயர்க் கடற்படு கெனச்சொன்னான்.()

நின்னை யேத்திய வன்பருங் கலைமதி நிலவிய சடையீசன்
றன்னை யேத்தில ராகிவெந் நரகிடைத் தாழ்வரென் றுரைசெய்தா
னன்ன மீப்பொலிந் துகைப்பவன் றன்னொடு மலங்கலந் துளவோனும்
பின்ன லஞ்சடை முனிவனை வணங்கினர் பெயர்ந்தனர் விடைகொண்டார். ()

மருவ லார்தொழுங் குருதியுண் டொளிறுவேற் குபனென்னும் வயவேந்தன்
பொருவ ருந்தவ முனிவனை வணங்கினன் பொன்னடித் துணைவீழ்ந்தான்
றிருகு வெஞ்சினப் பாதகப் புலையன்யான் விளைத்திடுந் தீங்கெல்லா
மரிய மெய்த்தவப் புண்ணிய பொறுத்தியென் றிரங்கியன் பொடுநின்றான். ()

வேத வேதியர் பெருமையை யிருங்கடல் வெவ்விட மடுத்துண்ட
சோதி நாயக னன்றியெத் தேவருந் தொகுத்தறி குதறேற்றார்
தீத கற்றிமும் மலக்கிழங் ககழ்ந்திடு தெய்வதத் தவச்செல்வ
போத மற்றெரு சிற்றறி வினிற்சுழன் மனிதரோ புகல்வாரே. (66)

புள்ளி வெம்புலான் மழுவலான் மலர்க்கழல் பூசனை புரிந்தேத்தி
விள்ள ருந்தவத் தலைமைபெற் றுயர்ந்தவர் நினையலால் வேறுண்டோ
வள்ளி தட்கம லத்தடங் கண்ண னும் வானக ருறைவோரும்
பள்ள நீர்நிலத் தென்னினிற் கொடியவெம் பதகரும் பிழைத்தென்னும். (67)

### எழுசீர் விருத்தம்.

சாற்றிடுங் கொடிய வஞ்சனே னினது
சரண்மலர்க் கபயமென் றடைந்தான்
வேற்றலர் குருதி யூற்றிருந் தொழுகிக்
கழுகொடும் வெஞ்சமங் கறுவிப்
பாற்றினஞ் சுழலுஞ் சுடரிலை நெடுவேற்
பார்த்திப வஞ்சலென் றுரைத்தான்
கூற்றுறழ் திகிரி மாகதப் பொருப்பைக்
கடந்திடுங் கொடிச்சடை/முனிவன். (68)

பனிமதிக் குழவித் திங்கள்வீற் றிருக்கும்
படர்சடைப் பண்ணவன் றிருத்தாள்
கனிமதுத் துளிக்கு மலரெடுத் திறைஞ்சி
முனிவரைக் காத்தியென் றிசைத்தான்
றுனிதவிர்த் தளிகள் பெடையொடுங் களிக்குஞ்
சோலைசூழ் கழனிநா டளிக்குங்
குனிசிலைத் தடக்கைக் குபன்பெருந் தவத்தோன்
வாசகந் தெளிந்துளங் குறித்தான். (69)

ஐந்தவித் துயர்ந்த முனிவனை வணங்கி
யரசர்கோன் றிருநக ரடைந்து
மைந்துறுங் கிரணப் பருதியிற் சுடரு
மழுவலான் மலரடி வழுத்திச்
சிந்தையிற் களித்து மனுநெறி வழங்கித்
தெய்வமா முனிவரர்ப் புரந்து
கந்தனைப் பயந்த கண்ணுதற் பெருமான்
கயிலையங் கிரியில்வீற் றிருந்தான். (70)

தண்ணளி கொழித்துப் பெருக்கெடுத் தொழுகுந்
ததீசிமா முனிவரன் கயிலை
யண்ணறன் கமலச் சேவடி வழுத்தி
யாழியஞ் சுடர்ப்படை தரித்த
மண்ணளித் தருந்து பவளவாய்ப் பொருப்பை
யமரினிற் கடந்தனன் மறைநூ
லெண்ணருந் தவத்துச் சனகரா திகளி
லிருந்தவத் தலைமைபெற் றுயர்ந்தான். (71)

இத்தகை முனிவ ரிருந்தவ மியற்று
மிருக்கைதா னேச்சுர மெனும்பே
ரத்தலம் புகுந்தோர் முத்தியை யடைவ
ரமரினிற் காதையை வடித்துச்
சித்தமன் புருகிப் பகர்ந்தெதிர் நடக்கிற்
செயம்வரு மிருத்துவு மகலும்
பத்தியிற் படித்தோர் கேட்பவர் யாநும்
பாகதி நெறிவழா தடைவார். (72)

கலி விருத்தம்.

ஏத நீங்கி யிருந்தகை பெற்றுயர்
சூத னின்ன கதையினைச் சொற்றலும்
வேத நான்கும் விளங்க வுணர்ந்தருண்
மாத வத்தினர் சிந்தை மகிழ்ந்தனர். (73)

ததீசிப் பிரமருஷி வச்சிரவாக்கை வரம்பெற்ற அத்தியாயம் முற்றிற்று.

## 6. நந்திகேசுரர் சரிதை உரைத்த அத்தியாயம்.

அறுசீர் விருத்தம்.

பந்தமற் றுயர்ந்து பேதம் பகர்சனற் குமா னென்பா
னெந்தைநின் சரிதை முற்று முரைத்தியென் றிசைப்பத் தெய்வ
நந்திவாய் மலர்ந்து பேசுங் கதையினை நவில்கெ னென்று
முந்துமா தவத்தோர் கேட்பச் சூதமா முனிவன் கூறும். (1)

அறுதொழின் முறையி னாற்றி யருமறை முழுதுந் தேர்ந்து
தெறுசினந் தணிந்த சிந்தைச் சிலாதமா முனிவன் ஞானப்
பெறுகதி யளிக்குந் தெய்வப் பிள்ளையை விரும்பி மேலா
யுறுதவ நெடுநா ளீட்டி யிருந்தன னுளருங் காலை (2)

அன்னவன் றவத்தை நோக்கி யதிசயித் தமா ரேத்தப்
பொன்னகர் புரக்கும் வென்றிப் புரந்தா னுவகை பொங்கிக்
கன்னம்விட் டொழுகு தாரை கடன்மடை திறந்த தென்னப்
பின்னிமைக் கடம்பாய் வெள்ளிப் பிறங்கன்மாப் பிடர்மேற் கொண்டு (3)

அரம்பையர் கவரி வீசக் கின்னர ரமுதந் தூங்கிப்
பரம்பிசை மகதி யாழிந் பையயத் தடவிப் பாடக்
கரங்கிள ருடுக்கை பேரி சல்லியங் கறங்கி யார்ப்ப
வரங்கெழு கவிகை மாலை மதியினில் வயங்கிச் சூழ (4)

வந்தனன் றவத்தோன் முன்னர் வரமுனி யெதிர்போய்க் கண்டு
சிந்தையின் மகிழ்வு கூர்ந்து செங்கரஞ் சிரமேற் கூப்பிப்
பைந்துணர்ப் போது தூவிப் பதமலர் வழுந்தி யேத்தி
யெந்தைநீ வருதற் கிம்ப ரெத்தவ மிழைத்தே னென்றான். (5)

மெய்குழைந் திறைஞ்சி நின்ற வித்தக முனியை நோக்கிப்
பொய்யறுத் துயர்ந்த சிந்தைப் புனிதநீ பொருந்தி யாற்று
மையறு தவங்கண் டுள்ள மகிழ்ந்தன நினக்கு வேண்டுஞ்
செய்யநல் வரங்க ணல்கத் தெரித்துரை புகல்க வென்றான். (6)

வரைக்குறும் பெறிந்த வெள்வாள் வச்சிர னீது கூறக்
கரைத்தபே ரன்புமிக்க முனிவரன் கழறு மெந்தா
யுரைத்திடு மிருத்து வின்றி யோனியிற் பிறவா னாகித்
திரைக்கட லமுத மன்ன சிறுவனைத் தருதி யென்றான். (7)

அன்னவா சகமுட் கொண்டு புரந்தர னறைவ தானா
னென்னைநீ மொழிந்தா யோனி யிடைப்பிற வாது வேதஞ்
சொன்னதோர் மிருத்து வின்றி யிருக்குனர் யாரே சொற்ற
மன்னுமித் தகைய மைந்தன் பிரமனும் வழங்கற் பாற்றோ. (8)

விண்டலர் கமலக் கோயில் மெல்லியல் வடிக்க ணீல
வண்டுழு துழக்கும் பைந்தார் மணிநெடும் புயத்து மாயன்
பண்டைநான் மறையின் செல்வ னவர்களும் பகரும் யோனி
யெண்டரும் பொருவி லண்டந் தாமரை யிடத்து வந்தோர். (9)

எண்ணருங் கற்ப மெல்லா மொருபக லிரிய வாழு
மண்ணக முழுதும் வாரி வாய்மடுத் தலையில் ஞானக்
கண்வளர்ந் தருளுங் கொற்றக் கதிர்ப்படைத் திகிரி யேய்ந்த
வண்ணலு மளக்குங் காலை யுயிர்துறந் தழிவ னம்மா. (10)

வடவரை குழைய வாங்கி வரிசிலை குனித்து நாணிற்
படவர வசைத்து நின்ற பரமனு முமையு மீன்ற
தடமலர் முளரி மேய சதுமுகன் றனக்கும் வாழ்நா
ளடைவினில் வகுத்துக் கூறி னளவிரு பரார்த்த மாகும். (11)

இத்தகை யிவர்கள் யோனி யிடைப்பிறந் திறப்ப ரென்றான்
முத்தியின் றுறைபோந் தெய்வ முனிவரீ மொழியா நின்ற
வித்தகக் குமான் றன்னை விரும்புத லறிவோ மற்றை
யுத்தம மகவொன் றின்னே தருவலென் றுரைத்திட் டானே. (12)

உருக்கரும் புயலூர் வோனீ துரைத்தலு முனிவன் கூறு
மருக்கமழ் மலரோன் முன்முன் வரியாப் பிணங்கு வேணி
நெருப்புற ழுடலிற் றோன்றி நின்றது நெடுந்தாட் போதிற்
றிருத்தகப் பிறந்த தண்டஞ் சிவணிவந் துதித்த தெல்லாம் (13)

அன்னவ னுணர்த்தல் செய்தா னவன்மக னளித்த பாடற்
கன்னிவண் டாற்றுங் கூந்தற் கவுரிபா லுதித்த நீர்மை
யென்னகா ரணமிங் கோவா தியம்புதி யென்ன மாலைக்
கொன்னவிர் குலிச மேந்துங் கோமக னறைவ தானுன். (14)

அறுசீர் விருத்தம்.

துண்டமதி மிலைத்தருளுந் துவள்சடையோன் பணித்தருளத் துதைந்துபாடல்
வண்டுழுது விளையாடுந் தாமரைமென் பொகுட்டுறையு மறையோன் சோதித்
தண்டாள மணிமுறுவற் றையலொரு பங்கிருந்தோன் சரணம் போற்றி
யண்டமெல்லா முறைபடைத்துச் சராசரமா மனைத்துயிரு மளிக்கு நாளில் (15)

கந்தடுவெங் காடமதக் களியானை யுரித்தருளுங் கடவு டன்னை
யிந்திரகற் பத்தின்வரு திவ்வியவாண் டாயிரநின் றிடைவி டாது
பைந்துளபக் கதிர்நிலவு மணிமவுலிக் கொடுந்திகிரிப் படைக்கை மாயன்
மைந்துறுமைம் மழைமுகிலி னுருவெடுத்துத் தாங்கியுடல் வருந்தி னுல். (16)

அன்னதுகண் டருள்பெருகு முளமிரங்கி விடையுயர்த்த வமலன் ஞானப்
பன்னகமெல் லணைக்கிடக்கும் பச்சைநெடும் புயலைமுகப் பதும நோக்கி
யென்னவரங் கருதினையென் றிசைத்தருள வீர்ந்துளவோ னெண்க ணுனிற்
பொன்னவிருஞ் சடைமுடியோய் தனிபடைக்க வினிதுவரம் புரிக வென்முன்.

கங்கைமடுத் தலைபுரட்டுஞ் சடைப்பவளக் கொடிபடருங் கனகக் குன்றம்
பொங்குபெருங் களிப்பொழுக வன்னவர மளித்தனன்பொற் புழற்காற் றெய்வப்
பங்கயனிற் றனிபடைத்துக் கவுத்துவச்செம் மணித்தவிசிற் பரிவி னேறி
மங்குன்மலர்க் கருங்கூந்தன் மயிலிருக்கு மறுமார்பன் மகிழ்ந்தா னன்றே. (18)

உறிதடவி வெண்ணெய்தனக் கங்காந்த செம்பவளத் தொருவ னின்ன
நெறிபடரு முலகனைத்தும் படைப்பதுகண் டுளநடுங்கி நீறிச் சோரி
யெரிகுடரின் புலவுகமழ் வச்சிரத்தோ னிறந்திடுநா ளெல்லை காறு
மறிகடல்வெவ் விடமருந்தும் பெருமானை மலர்ப்பிரமன் வழுத்தி னனே. (19)

மையன்மனத் திருள்பருக வடியர்தமக் கழுதகலே வழங்கும் வாணி
தொய்யிலிள முலேக்குவட்டுச் சுவடுபடுந் தடந்தோளான் றுயர நோக்கிப்
பையரவ முடித்தபிரான் வெளிப்படலு மறைக்கிழவன் பரவி நின்று
னய்யனவன் முகநோக்கி நினேந்தபடி நிகழ்த்தியென வறைவ தானுன். (20)

மூவர்புர மழல்கொழுந்த நகைமுகிழ்க்கு முழுமுதலே முடிவி லாதாய்
தூவழல்முத் தலேப்படையோய் நின்னிடப்பால் வந்தவன்பைந் துழவத்
தோன்ற
லோவறவே நின்வலப்பால் வந்தவன்யா னென்போல வுலக மெல்லாங்
காவல்புரிந் தினிதளிப்போன் படைப்பதனு லுள்ளுருகிக் கவலுற் றேனல்.(21)

மழைமுகிலி னுருவெடுத்து மணிவண்ணன் பொறுத்தற்கு மகிழ்ந்தாய்நின்னேக்
குழையுமனத் தொடும்வணங்கும் பத்தியினி லென்னிலவற் குணிக்க லாமோ
விழைவினெடுஞ் செகமயனும் வரமளிக்க வேண்டுமென விரிஞ்சன் கூறத்
தழையவிழு மலரிதழித் தாழ்சடையா னன்னவரந் தகையி னீந்தான். (22)

இன்னதகை வரமளித்தே யேறுயர்த்தோன் மறைந்தனனவ் வெல்லைதன்னில்
மன்னுலக மொருமூன்றும் பாழ்படுத்திப் பிரளயநீர் வந்து மூடப்
பன்னுமறைப் பிரமனுக்கோர் பகற்போது கழிந்திரவு படர்த னோக்கி
யன்னவனு முவகையெழப் பசுந்துளவக் கரியவன்பா லடைத லோர்ந்தான். ()

வெள்ளிவரைத் தனிமுதல்வன் கொடுத்தருளும் வரத்தினெடும் விரைவி
னெய்திப்
பள்ளநெடுந் திரைசுருட்டும் பாற்கடலிற் பாப்பணேமேற் பள்ளி கொள்ளு
முள்ளரைய செழுமுளரித் திருநாவிக் கரியமணி முகிலே நோக்கி
தெள்ளுமறை வடித்தெடுத்தோன் றுயிலெழுப்ப விழிக்கமலந் திறந்தான்
செல்வன். (24)

நிறநிலவு வளேக்கரத்தோ யெனேமுதனு ணீவிழுங்கு நீர்மை போல
விறல்கெழும நின்னேயினி விழுங்குவலென் றருமறையோன் விழுங்க வேரி
நறவுபொழி துளவுதயல் மணிமார்பன் சிறுமுறுவ னகைத்துக் காட்டிப்
பறவையுரு வெடுத்தெகின முகைத்தபிரான் றிருவுதரம் படிந்தா னன்றே.(25)

அங்கமலப் பீடிகையோன் றிருவயிற்றி லமர்ந்தருளு மாழி யானேத்
திங்கணுதற் புருவகடுத் திருட்டித்தான் பிறந்தநெடுஞ் செங்கண் மாயன்
பங்கயனேச் செழுங்கமல முகநோக்கி விழிசெலுத்திப் பார்த்து நின்றுன்
றங்கவரைச் சிலேகுழைத்தோ னிவர்களிடை யவ்வேலே சார்ந்தா னன்றே.(26)

பாலொளிய திருநீற்றுப் பனிப்படலே நிலவெறிக்கும் பவள வெற்பைக்
காலமுடி வினிற்பாக்குங் கனலுருவ மெடுத்தருளுங் கடவு ளானே
மாலவனு மலரவனு மடிபணிந்து மருமலர்தூய் வழுத்தல் செய்தார்
சாலவிவ ரிருவருக்குங் கருணேபுரிந் தான்கயிலேச் சயிலஞ் சார்ந்தான். (27)

மையிலங்கு கறைக்களத்தோன் மறைந்ததற்பின் சதுமுகனை வணங்கி நோக்கி
நெய்யிலங்கு திகிரியினு னுரைத்தருளு மெவ்விடமு நிறைந்து நின்ற
பையிலங்கு பாந்தண்முடிப் பண்ணவனே யாவருக்கும் பரமா மூர்த்தி
மெய்யிலங்கு மவனிடப்பால் வந்தவன்யான் வலப்பானீ வியந்து வந்தோன்.()

என்னமுது மறையுமுனி வாருமெடுத் திசைப்பரென விசைத்துக் கொன்றை
மின்னவிரும் பவர்சடிலப் பெருமான்பொன் னடிநினைந்து விரும்பி வாழ்த்தக்
கன்னிமட கொழுங்கமலத் திசைமுகனுஞ் சிவன்கழலே கருதி ஞானப்
பன்னுமறை தெளித்தெடுத்துப் பாடியருந் துதிகள்பல பலவுஞ் செய்தான்.(29)

இத்தகையி னிவர்கள்புரிந் தினிதுகளித் திருந்தருளு மெல்லை யீண்டு
மைத்தகுகா ரிருளகலப் புலரிபடு வதுகண்டு மலரோ னன்பின்
சித்தமிரங் கினன்படைக்க மாயனவன் செயலுணர்ந்து சிவனை யேத்தித்
தத்துதிரைப் பிரளயநீ ரிடையமிழ்ந்துந் தரையெடுத்துச் சமன்செய் தானே.()

பூங்கமலத் திருமடந்தை கொழுநனிது புரிந்ததற்பின் பூமேல் வந்தோன்
வீங்குதட வரைநதிகள் வெண்டிவலை நுரைசிதறி விரிந்து பாய்ந்து
தேங்குதிரைக் கடலனைத்துந் தத்தநிலை யினினமைத்துத் திருந்து ஞான
மோங்குபெருந் தவத்துயர்ந்து சதுமறையி னுபநிடத முணருந் தேவர். (31)

சனகர்முத லினரிருபு ததீசிமுனி பிருகுசிவன் சரணப் போது
புனையுமுடி யங்கிராப் புலத்தியர்சேய் புலகர்புசக் கிருது போத
மனம்விரவு வசிட்டர்கலை தெரிதக்க ரத்திரிமா மறைகள் யாரு
நினைவரிய சங்கற்ப தருமமிவை முறைமுறையே நெறிநீங் காது. (32)

படைத்தருளிப் பல்லுயிரு மளித்துகமு முகதருமம் பலவு மீன்று
நடத்தியுல கனைத்தினையும் வளர்த்தனனத் தகைதருநான் முகனுக் கோவா
தடைத்தருளுஞ் சதுரயுக மாயிரமோர் பகலாக வளவை யிட்டுத்
தொடுத்திசைக்கு மோரிரண்டு பரார்த்தமுமுள் ளனமுறையே தொலைந்த
பின்னர். (33)

கருதுகரைக் குறும்பெறிந்து பல்லுயிரு முழுவதையும் கவர்ந்து மோதிப்
பொருதுதிரை தடவரையிற் குனித்துவரும் பிரளயநீர் பொங்கி மூடச்
சுருதிபகர் பூதத்தி னேனையவும் புனலுருவாய்த் தோன்றச் செங்கேழ்ப்
பருதியொளி மழுகுமிருட் படாம்புதைத்து நெடுங்காலம் படர்ந்த தென்றே.()

இன்னணமூ துலகிடிந்து கிடந்ததற்பி னேறுயர்த்தோ னேவ லாலே
யன்னமுகைத் தவன்படைக்க நினைந்தனன்மா தரைப்படைக்க வறியா னுகி
மன்னுமனத் தான்வகுத்தான் வகுத்தவெல்லா மாணுருவாய் வழங்க லாலே
சொன்னதனி யுலகமெல்லாம் பெருகாம லிருந்தனவாற் றுயரி னுழ்ந்தான்.(35)

மானத்தாற் படைத்தருளு மைந்தரொடு மதிபவுலி வானை நோக்கி
யானபெருந் தவமிழைத்தா னதுகண்டு மழவிடையோ னருள்கூர்ந் தன்பின்
ஞானவுருப் பெண்ணுருவு மாணுருவு மாகவெதிர் நடந்து தோன்றிக்
கானமலர்ப் பீடிகையோன் மைந்தர்நெடு மாலெரியக் கனலிற் காய்ந்தான். (36)

பாதியுடம் பகலாத பைந்தொடியைப் புணர்ந்துதுழாய்ப் படலை பூத்த
வாதிமுகுந் தனையுமல ரமலனையு மவளிடத்தி லளித்தான் ஞானக்
கோதில்குணத் திருவருக்கும் படைத்தருளச் சத்தியையுங் கொடுத்தான் றெய்வச்
சோதிதரு மாயையினைப் பெண்ணெனவு மாணெனவுந் தொகுத்தல் செய்தே.

மோகமுறப் புணர்ப்பித்து மூதுலகும் படைத்தனர்பொன் முளரி பூத்த
மேகநிறப் பெருமானை வேதியனைப் பயந்துலகம் விளங்க வேண்டி
நாகமதி புனைந்தபிரான் பெண்ணொருபாற் பொலிந்தனனென் முகத்தோன் செந்தேன்
பாகமெழுங் குதலைமொழி யுமையிடத்துப் பிறந்தகதை பகர்ந்தே னின்று. (38)

ஊற்றிருக்கும் பசுந்தேறல் வாய்மடுத்துச் சிறைச்சுரும்ப ருழுது பாடு
நூற்றிதழ்ப்பொற் செங்கமலத் தினிதிருக்குந் திசைமுகத்தோனென்மைசார்ந்த
சாற்றரிய மறைமுழுது மனத்துணர்ந்து பேரறிவு தலைப்பட் டெய்திக்
கூற்றுதைத்தோன் கழல்கருத வெறுப்படைந்த கதையினையான் கூறக் கேண்மோ. (39)

மலர்மடந்தை வீற்றிருக்கு மணிமார்பன் றனதுதிரு வடிவந் தன்னை
யலகிலழ கொளிருமொரு பெண்ணுருவு மாணுருவு மாகக் காட்டி
யுலகனைத்தும் பயந்துமறைப் பிரமனையுந் திருட்டித்தா னுணரும் வேத
னிலவுமதி முடிபுனைந்த வுருத்திரனை யினிதளித்தா னேயத் தோடும். (40)

பரவுமுருத் திரனரியைப் பிரமனையன் பினிற்படைத்தான் பதும நாதன்
விரவுபுகழ் மணிநிறத்து விண்ணவனைப் பயந்தனனவ் வேதன் றன்னை
யுரவுதடங் கிரிவணக்கிப் புரமூன்று மெரித்தருளு மொருவன் சீறு
மரவொடுஞ் சடைக்கணிந்த வண்ணலகங் களிசுரக்க வளித்தா னன்றே. (41)

வேறுபடு திருட்டிதொறு மின்னணமே பிறப்படைந்து மெலிதலெண்ணிக்
கூறுபடு மறைக்கிழவன் புலனடக்கி யோகநிலை குறித்து ஞான
வீறுபடு முளக்கமல மேற்படுத்தி விரியும்விரைப் பொருட்டு நாப்ப
ணுறுபடு சடையானை யினிதிருத்தி மலர்க்கழல்க ளரிச்சித் தேத்தி (42)

பருவநிவப் புறுமயுதங் களித்திருந்தா னுளக்கமலப் பரமன் வேதன்
புருவநடுப் பிளந்துதித்து முன்னர்மகிழ் வொடுநின்றான் புனிதன் சோதி
யுருவமுவப் புறக்கண்டு முதுமறையோ னன்புருகி யுலகு மேலு
மருவமென நிறைந்தோனை யட்டவித மாய்க்கருதி யருளா நின்றான். (43)

அன்னவன்கண் டடிபணிய வட்டமூர்த் தத்துருவ மமர்ந்தான் யார்க்கு
முன்னவனுக் கன்றமுத ஞமமட்ட மூர்த்தியென மொழியும் வேதங்
கொன்னவிர்முத் தலைப்படைவேற் குழகன்மலர்ச் சதுமுகத்துக் குன்றை
நோக்கி
யின்னமூல கனைத்தினையும் படைத்தியெனத் தனிபடைத்தா னென்க
ஞனே. (44)

இப்படியோர் கற்பமெல்லாம் படைத்துமுடிந் ததற்பின்ன ரிரைக்கும் பாந்தட்
பைப்படியு மூலகமுறை படைப்பதற்குத் தோன்றாது பாவை யீன்ற
மைப்படியுங் களத்தமலன் றனைநோக்கித் தவம்புரிந்தான் மறையோன் றெய்வக்
கைப்படியு மழுவுயர்த்தோன் வந்திலனன் னதுகுறித்துக் கதங்கொண் டானே.

கறித்தித்தழை யதுக்கிவரு சினந்திருகித் தலைக்கொளுந்தக் கடைக்கா லத்துப்
பொறித்தழற்கட் கடைக்கதுவ விழித்தனனவ் விழியினெழும் புனல்கள்
சோர்ந்த
மறித்தொழுகு பெரும்புனலிற் குறுந்தாட்டெண் ணிலவுதெறு வளையும்
வெண்பற்
சிறுத்தசுருட் படர்குஞ்சிப் பூதமொடு பேயினிரை திரண்டு தோன்ற (46)

செங்கமலப் பொகுட்டுறைவோ னன்னவைதோன் றியசெயலைத் தெரித்தான்
சிந்தை
யழுங்கியிவை முன்பிறந்த வழுகிதென வதிசயித்தா னவி மாய்த்தா
னெழுங்கருணைப் பெருக்கெறிய வவ்வேலை யிளங்கதிரா யிரமா மென்னக்
கொழுங்குதலை மொழிபாகன் பாதியுருப் பெண்ணுருவிற் குலவ வந்தான்.(47)

தன்னுருவி லழியாத பதினொருவ ருருத்திரரைச் சமைத்தான் பாதி
மின்னுருவி லுமையைவகுத் தினிதளித்தா னளித்தருளும் விமலை செல்வப்
பொன்னுருவத் திருமகளே முதலாய சத்திகளைப் புரிந்தான் பின்னர்
மன்னுருவத் துயிரளித்துப் பிரமனைநின் றெழுப்பினன்கூர் மழுவ லானே. ()

எழுந்தமலர்ப் பிரமனிரு காமுகிழ்த்துச் சிவன்கழற்கா விறைஞ்சித் திங்கட்
கொழுந்துபடர் சடையாய்நீ யாயபதி னொருவடிவங் கொண்டு நின்றாய்
தொழுந்தகைய கன்னியிவ ளளவிறந்த சத்திகளாற் சூழ நின்றா
ளெழுந்துயர்ப் படுமெளியே னறிகிலனீ பகர்தியென வமலன் சாற்றும். (49)

இன்னதகை யுலகினையு நின்னுயிரு மளித்திடுதற் கியைந்தேந் தெய்வக்
கன்னியினை யாதிசத்தி யெனவுமெனைப் பரமெனவுங் கருது தூவி
யன்னமுகைத் திடுசிறுவ வெனவறைந்தே யலர்முளரி கங்கை கொண்டு
சென்னிதட வினன்களித்துத் திசைமுகத்தோ னினியமொழி தெரிப்ப
தானுன். (50)

இறந்துபிறந் தினிச்சுழலு மின்னனெடுங் கடற்படியா தெளியேற் கன்பு
சிறந்தருள வேண்டுமென வந்தனைசெய் தருந்துதிகள் செய்யா நின்றான்
துறந்தவர்கள் கனியுமனத் திருமனையிற் குடியிருக்குஞ் சோதி நாத
னறந்தருநான் முகக்கடவு ளுளக்கமலத் திருக்கோயி லமர்ந்தா னன்றே. (51)

துத்தியரா வணைத்துயிலுந் தளவோ னுஞ் சுருதிதெரி தோன்றலா னு
மித்தகைய யோனிபிறந் திறப்பரெனி லெவர்களிவை யிசையா நிற்போர்
மத்தமதி புனைந்தபிரா னன்றியெவ ரின்னவரம் வழங்க வல்லார்
சித்தமவன் பாலிருத்து கெனவுரைத்துத் தேவர்தொழு தேவன் போனான். ()

கலிவிருத்தம்.

ஏம நன்னக ரிந்திரன் போயபின்
காம நீத்த கருத்தி னருந்தவன்
ருாம நீள்சடைச் சம்புவை யெண்ணியே
தோம றுந்தவஞ் செய்யத் தொடங்கினான். (53)

மேய தெய்வத விண்ணவ ராண்டினி
லாயி ரம்பரு வந்தவ மாற்றினான்
மாயி ரும்புவி தன்னில்வன் மீகஞ்சூழ்
போயன் னவனைப் பொதிந்து வளர்ந்ததே. (54)

அன்ன மண்ணை யரிவைய ருண்டனர்
துன்னு மென்றசை சோரியு மின்றியே
மின்னு மென்பு விளங்க விருந்தபின்
பொன்ன மேனிப் புனித னிரங்கினான். (55)

மாய மால்விடை யேறிமுன் வந்தன
னேய மோடு முனியை நினைந்தன
னைய காலை யருந்தவன் முன்னரிற்
றாய மேனி துலங்க வெழுந்தனன். (56)

மாத வஞ்செய் வருந்தந் தவிர்ந்தனன்
போத வுள்ள முவகையிற் பொங்கினான்
சீத வாண்மதி செஞ்சடை சூடிய
நாதன் சேவடி நாண்யல ரேத்தினான். (57)

முத்தி ஞான முனிவரன் செய்தருள்
பத்தி யாய பரவை படிந்தன
னத்த னுருயிர்க் காரமு தாகிய
நித்த னேர்திரு வாக்கு நிகழ்த்துவான். (58)

யாது நீவா மெண்ணினை யெண்ணிய
கோதி லாவா நல்குவன் கூறென
மாது பாகன் வழங்கலு மாதவ
னோது வான்மனத் துண்மை வெளிப்பட. (59)

எந்தை நின்பொ னிணையடிக் காட்பட
வந்த மெய்து மவமிருத் தின்றியே
யுந்து வெந்துயர் யோனியிற் றங்குறு
மைந்த னின்று வழங்குதி யென்றனன். (60)

என்ற வாசகங் கேட்டலு மெம்பிரான்
மன்ற லங்கம லாலய வானவன்
வென்றி மாதவர் விண்ணவர் யாவருஞ்
சென்ற காலத்துப் பூசனை செய்தெமை (61)

பூத லத்தில் வருகெனப் போற்றினு
ராத லானின் னருமக வாகிநீ
யோதும் வண்ண முறைகுவ னென்றுரைத்
தேதி லாத்தனி யெந்தை மறைந்தனன். (62)

மங்கை பங்கன் மறைந்தபின் மாமுனி
பொங்கு மோகைப் புணரியி னாழ்ந்தன
னங்கண் மாமகச் சாலை யமைத்தனன்
றங்கு வேள்வி தனிமுறை செய்தனன். (63)

வேத நூல்வழி யாற்றிய வேள்வியிற்
சோதி நாத னுருவினிற் றோன்றியே
காத லன்பிறந் தானது கண்டனர்
போது தூவினர் பொன்னகர் வானவர். (64)

விட்டெ றிக்கும் விரிசுட ரிற்பொலி
வட்ட வேணியும் வார்குழை யிற்புனைந்
திட்ட வச்சிரக் குண்டல மும்மிழை
தொட்ட நான்கு புயமுந் துலங்கவே. (65)

கையிற் சூல மிடங்கங் கதையொடு
செய்ய வச்சிரந் தாங்கிச் சிறுவனின்
மைய ளாவு மழைமுகில் போலவார்த்
தையன் வாய்விட் டாற்றிக் கிடந்தனன். (66)

மாய ஞன்முக னிந்திரன் வானவர்
தூய மாதவர் சூழ்ந்து துதித்தனர்
காயு மைம்புல னீங்கிக் கருவுறுந்
தீய்மை தீர்ந்த சிலாதன் மகிழ்ந்தனன். (67)

பாய்ந்த நீரிற் பரக்குங் குமிழியில்
வீய்ந்து திக்கும் வினைச்சுழல் வோர்களு
மாய்ந்து கேட்கி லருங்கண மாகவே
வாய்ந்த வேதம் வடித்துத் துதிசெய்தான். (68)

முந்து மூவுல குங்களி மூழ்குற
வந்த தெய்வ மகத்துவத் தாலிருஞ்
சிந்தை யிற்குணித் தேதிரு வாக்கினு
னந்தி யென்றொரு நாமமுஞ் சாற்றினன். (69)

தரும நன்மகச் சாலையை நீங்கியே
விரியுஞ் செஞ்சடை மெய்த்தவன் வீறினி
லரிய மைந்தனை யன்பொடுங் கொண்டுதன்
பொருவி லாத விருக்கை புகுந்தனன். (70)

போந்தி ருக்கை புகுந்தபின் பொன்னொளி
யேந்து செஞ்சடை மைந்தனுக் கோர்தரு
காந்தி செய்யுங் கடவுள் வடிவம்போய்
மாந்தர் தங்கள் வடிவ மடைந்ததே. (71)

சிறந்த மைந்த னருருச் சேர்ந்தபி
னறந்த ருதவத் தோனுமெம் மையன்முன்
பிறந்த நீதிப் பெருமையின் செய்கையை
மறந்து போயினன் மாயையின் றன்மையால். (72)

மலைவி லாத சிலாதன் வரந்தரு
மலைவி லாத மகனுக் கணிகிளர்
தொலைவி லாவய தேழினுட் சொல்லருங்
கலைகள் யாவுங் கருதிப் பயிற்றினன். (73)

பருவ மேழு படர்ந்தருள் காலையி
லருமை மைந்தனைக் காண்குற வாதரத்
துரிமை யோடு முணர்வுறு மித்திரா
வருண ரென்றிரு மாதவர் வந்தனர். (74)

கண்டு மைந்தனைக் கையுறப் புல்லிவாய்
விண்டு நின்றொரு வார்த்தை விளம்புவார்
மண்டு மின்ன வயதில் வருமிருத்
துண்டு காணுமக் கென்னவு ரைத்தனர். (75)

சொற்ற வார்த்தை சிலாதன் செவித்துளை
முற்றும் வெந்த முனையின் சலாகைபாய்ந்
துற்ற தென்ன வொழுக்கக் கொடுந்துய
ரற்ற மின்றி யறிவழிந் தானரோ. (76)

கலிவிருத்தம்.

வண்டு மூழ்ந்துணர் மலரின் வாடியே
கொண்ட வெந்துயர் கொதிக்குஞ் சிந்தையான்
பண்டு மாதவம் புரிந்து பாலனைக்
கண்ட காட்சியின் கடனி தோவென (77)

கண்ணி னிற்புனல் கலங்கி யோடவே
மண்ணி னிற்புரண் டழுது மாமறை
பண்ணி னிற்சொலும் பவள வாய்க்குரல்
விண்ணி னிற்செல வழுது விம்மினன். (78)

முன்னை யென்கிளை முழுது முய்ந்திடப்
பொன்ன னன்னமெய்ப் பொருவின் மைந்தனே
நின்னை யெண்ணியே நினைந்த காரிய
மென்னை யோவெனக் கதுவி ளைந்ததே. (79)

சுலவு வார்திரைத் தொல்லை மாநிலத்
துலவு மாமறை யொழுக்க முள்ளவை
பலவு மாய்ந்தறி பழுதி லாமகன்
குலவு மாருயிர் கூற்று முண்ணுமே. (80)

என்ன நைந்துநைந் திரங்கிச் சோர்ந்தனன்
மன்னு மாவினெய் யறுகு மாமதத்
துன்னு மாகுதி யயுதந் தூண்டினு
னன்ன காலையி னந்தி யண்ணலான். (81)

ஈது கண்டன னிடரை மாற்றவே
மாது பாகனை வழுத்தல் செய்திடத்
தாதை பொன்மலர்ச் சரணம் போற்றியே
போது கேனெனப் புகன்று போயினன். (82)

ஆற்றி னுப்பணை ராச னத்திருந்
தேற்று வாகனத் தெம்பி ரான்வரக்
கூற்று தைத்தபொற் குரைக ழற்பதம்
போற்றி னன்றவப் புனித முன்னமே. (83)

வந்து மாதொடும் வாதன் றேன்றினு
னந்தி நின்னுயிர் நலித்து நீக்கவே
யந்த கற்குமோ ராற்ற லுள்ளதோ
வுந்தை மானிடத் தருவ மன்றியே. (84)

தெய்வ நின்னுருத் தெரிதல் காண்கிலான்
பொய்கொண் மாயையாற் புலம்பி நின்றனை
னைய வென்னிடத் தவத ரித்தரு
ளெய்த வந்தநீ யாமன் றேவெனு. (85)

உறுதி சொல்லியே யுனது நல்லுயிர்க்
கிறுதி யில்லையென் றிருகை யாலெடுத்
தறிவின் ஞானங்க ளளவி லாதுநீ
பெறுதி யென்னவே பேசி வாழ்த்தினன். (86)

அருகு வைத்தன னருங்க ணம்புரந்
துரிமை செய்கென வுதவி னன்வா
மருவு நித்தியத் துவம்வ ழங்கினன்
முருகி னேர்தொடை முளரி சூட்டினன். (87)

திங்க ளஞ்சடைச் சிலம்பு கங்கைநீ
ரங்கை யான்மடுத் தாட்டி னனது
பொங்கு பேரியா றுகிப் போதவே
தங்கு பேர்சடா தகியென் றேதினன். (88)

அடுத்துப் பின்னரு மமலன் மைந்தனை
யெடுத்து நின்னரு மகவென் றேழைபாற்
கொடுத்த னன்றணைக் கோலச் செங்கையான்
மடுத்து வாங்கினன் மலையின் வல்லியே. (89)

மெய்யி னீரமுந் துடைத்து மென்சடைச்
செய்ய வுச்சிமோந் துவகை சிந்தினு
டொய்யில் வெம்முலைச் சுவடு கண்டிறந்
துய்ய வென்னவே யொழுகு பாலினல். (90)

சந்தக்கலி விருத்தம்.

மும்மைமுறை யாட்டினன் முழுக்கருணை செய்தா
ளம்மைமுலை யூறியவ னுடிய நறும்பால்
செம்மைகொடு மூவகை திரைத்துநதி யென்ன
வெம்மைபட மேதினியின் வேலையி னிழிந்த. (91)

தெண்டிரை சுருட்டுநதி செல்வது குறித்துக்
கண்டுதிறல் வெள்விடை களிப்பொழுக நின்றே
யெண்டிசை யடங்கவரு மேழ்கடலு முண்ட
கொண்டலின் முழங்கியது கோளகை வெடிப்ப. (92)

அய்யனட லாடல்விடை யார்த்தசெய லெண்ணி
யெய்திய நதிக்குமிட பத்தொனி யெனப்பேர்
செய்தனன் மறைக்குழவி சென்னிகுழை தாங்கி
வெய்யவ னுதித்தென விளங்குகதிர் மோலி. (93)

மண்டல மதிக்கிரண வச்சிர மிணக்கு
குண்டலம் விரும்பியிதை யந்தனி குறித்தா
னெண்டலம் விளங்கவவை யேந்தியெதிர் நின்றான்
விண்டலம் வியப்பவரும் விண்ணவர்கண் ணுளன். (94)

சோதிமகு டங்குழை யெடுத்தணி தொகுத்தா
னுதன்மக னுக்கா னடத்துசெயல் கண்டே
கோதறு செழும்புயல் பிழிந்துகுளிர் தெண்ணீ
ராதவன் மறைக்குமா னம்பொன்முடி பெய்தான். (95)

அன்னபுனல் பொங்கிநுரை யாறென வழங்கச்
சொன்னவுத கத்திரை சுலாயநதி யென்ன
மின்னவிர் நெடுஞ்சடில விண்ணவ னுரைத்தா
னின்னநதி யைந்தினையு மெண்ணியொரு நாமம். (96)

பஞ்சநத மென்றுரை பகர்ந்தனன் மகிழ்ந்து
தஞ்சமென வந்நதி படிந்துதகை யோடு
மெஞ்சலற வாழ்வுறுசெப் பேசுரனை யேத்தில்
விஞ்சிவரும் வெந்துயர வெம்பிறவி மாறும். (97)

என்றுரை யிசைத்துமொழி பின்னரு மெடுத்தே
குன்றனைய வார்மருவு கொங்கையிணை தாங்கி
மின்றிகழு நுண்ணிடை மெலிந்துதளர் பைந்தார்
மன்றல்கமழ் கொந்தளக மங்கையொடு சொல்வான். (98)

ஆதர மிருங்கண மனைத்தையு மளிக்க
வேதமக னுக்கொளி விளங்குமுடி யின்று
காதல்கொடு சூட்டுவ மெனக்கடவுள் கூற
மாதுமது நன்றென மகிழ்ந்துரை மொழிந்தாள். (99)

கன்னிமொழி யக்கனி கனிந்துளம் விரும்பி
மன்னிய கணத்தொகை வரத்தனி நினைந்தா
னன்னபொழு திற்கண மகங்களி திருந்தத்
துன்னியவண் வந்தன தொகுத்துரை வகுப்பாம். (100)

பேரிகை யிடக்கைபட வம்பெருகு பெட்பின்
றாரிய முருட்டுநிரை சொல்லுமிரு தங்கஞ்
சீரிய குறட்டியொடு திண்டிம முழங்கி
வாரிபொரு பேரொலி வழக்கற மறுக்க. (101)

வீணைதிவள் மாடகம் விசித்திடு நரம்பின்
யாணர்திகழ் பொன்மகதி யாழிசை பரம்ப
மாணிழை குயிற்றிய மணிக்கதிர்கள் சென்று
சேணுலவு செங்கதிரி னிற்றிசை விளக்க (102)

விண்ணளவு பொற்கொடி மிடைந்திடு தடந்தேர்
மண்ணளவு செங்கைதொடு மத்தமத யானை
கண்ணளவி னுங்கடிய கால்பொரு துரங்க
மெண்ணள விலாதநெடு மானமிசை யேறி (103)

பொங்குகன லிற்படர்பொ லன்சடையு மண்டு
தொங்கல்வரை யாயிரமெனச் சுடர்செய் தோளுந்
திங்கள்வகி ரன்னவெயி றுந்தனி சிவந்த
மங்குலென வெங்கணு மனந்தகணம் வந்த. (104)

ஆடின தனித்தனி யளந்துமறை வேதம்
பாடின முடித்தலை பராபரன் மலர்த்தாள்
சூடின தொழும்பரை யழைத்தவகை சொல்கென்
றோடின களித்தன வுலாவின திரண்ட. (105)

மாயனை வெருட்டியவன் வாரியை மடுக்கோ
வாயுமறை வேதனை யருஞ்சிறையின் வைக்கோ
தீயவசு ரக்கிளை செகுத்துயிர் குடிக்கோ
நாயக வெனப்பல தனித்தனி நவிற்றி (106)

அறுசீர் விருத்தம்.

அருகி னின்னணம் வணங்கிய கணங்களை யழைத்தன னமுதூறிப்
பெருகு கண்களி னோக்கினன் றுதையிற் பெருந்தய வுறநின்றான்
கரும மொன்றுள தறைகுவன் யான்பெறுங் காதலன் கனிதேறல்
முருகு லாந்தொடை நந்தியை யுங்களுக் கரசென முடிசூட்ட (107)

இவண ழைத்தன மென்றனன் பிறைமுடி யெம்பிரா னதுகேட்டுத்
தவல றுங்களி துளங்கின கணங்கள்பின் சக்கரன் முதலானோ
ரெவர்க ளுள்ளவர் தேவர்க ளவர்களை நினைந்தன னெதிர்நின்றார்
சிவக ணங்களு மமரரு நிறைந்தனர் திசையனைத் தினுநீடி. (108)

சிகர மாமுடி வெள்ளியங் கிரியுறை சிற்பரன் மறையாவும்
பகரும் வேதனைப் பார்த்தருங் கணங்களைப் பரிப்பதற் காசாகப்
புகா றுந்தவ நந்தியா மளித்தருள் புதல்வனன் னவற்கின்று
நிகரின் மாமுடி சூட்டுக வென்றலு நெடியமா யவனீன்றோன். (109)

விலகி வில்லுமி ழெரிமணி குயிற்றிய விறலரி யணைவைத்து
நிலவு செம்மணி யிணக்கிடு சலாகையிற் சதநிறைந் திடுவட்ட
விலகு வெண்குடை கவித்திடச் சாமரை யிரட்டுறக் கரியெட்டுங்
குலவு பொற்குடத் தேந்திய புண்ணிய தீர்த்தங்கள் கொணர்ந்தாட்டி. (110)

பொன்னி னாற்செய்த விருகலை யெடுத்தரை புனைந்துசெம் மணிபூட்டு
மின்னு பொன்னரை ஞாணணி யணிந்தொளி விளங்கிய கேயூர
மன்னு தோள்வரை மிலைந்திரு ளிரிந்திட வாங்கிய தாளத்தாற்
பின்னு மாலிகை முழுமதி யுதிர்த்தெனப் பிறங்குமார் பிடைச்சாத்தி. (111)

ஆதி யாகிய ஞானமா மயமென யாவரு மறைகின்ற
வேத மோதிய விதிமுறை யனைத்தையும் விருப்புறத் தனியாற்றிக்
கோதி லாவயி ரப்படை கொடுத்தனன் குண்டலம் புனைந்திட்டான்
சோதி மாமுடி நந்திதன் சிரமிசைச் சூட்டினன் களிகூர்ந்தான். (112)

பொன்னந் தாமரை பூத்தலர் கரும்புயல் முதலிய புத்தேளிர்
முன்னும் பின்னுமெம் மருங்கினு மடைந்தனர் மொழிந்தனர் மறையாசி
தென்னங் குன்றினிற் பிறந்திடை திரிதரு தென்றல்வந் திளைப்பாற்றச்
சொன்ன மாமழை கடையுகப் பொழுதெனச் சொரிந்தன முகிலீட்டம். (113)

இத்த கைபுரிந் தருளின பின்னரு மெம்பிரான் புதல்வற்குச்
சத்த மாமருத் துதவிய சுயசையைத் தனிமணம் புணர்வித்தான்
மைத்த டங்கணு ளுமையொரு நித்தில மாலிகை மகிழ்ந்தீய்ந்தாள்
வித்த கத்திறத் திந்திரன் களித்தொரு வெள்ளிப மளித்திட்டான். (114)

சிங்க னென்பவன் சிங்கங்கள் பிணைத்திடு தேரினைக் கொடுத்தானு
லெங்க ளையக னுமையொடு வதுவையி னின்னமு தெடுத்துண்டான்
பொங்கு மெய்த்தவ மியற்றிப நந்தியம் புங்கவ னிவைபெற்றான்
கங்கை சூடித னன்பருக் கரியதோர் காரிய மினியுண்டோ. (115)

நந்தி நாயகன் மழுவிடைப் பரமனை நாண்மலர்ப் பதம்போற்றி
மூந்து வெஞ்சின மிருத்துவுங் கடந்தருங் கணங்களை முழுதாண்டே
யெந்தை யாகம மருமறை யாவர்க்கு மியம்பிய குருவானு
னிந்தை நீங்கிய பூசனை தனக்கிணை நிகழ்த்தவோர் தவமுண்டே. (116)

திரைத்த டங்கட லாரணன் முதலிய தேவர்கள் முடிசாய
விரைச்செ ழுங்கம லக்கர மசைத்தொரு வேத்திர மெடுத்தோச்சு
முரைக்கு நான்மறை நந்திதன் காதையி னேரெழுத் தெனுங்கேட்போர்
தரைத்த லந்தனி லெடுத்திடு மாக்கையின் முத்திநன் னெறிசார்வார். (117)

கலிவிருத்தம்.

இக்கதை சூத னெடுத்துரை செய்யத்
தக்கத வத்துறை தாபத ரெல்லாந்
தொக்க பெரும்பிற வித்துயர் சூழா
மிக்க மருந்திது வென்று மகிழ்ந்தார். (118)

நந்திகேசுரர் சரிதை உரைத்த அத்தியாயம் முற்றிற்று.

## 7. விட்டுணுவுக்குப் பிருகு சாபம் வந்த கதை உரைத்த அத்தியாயம்.

கலிநிலைத்துறை.

அரும றைப்பொரு ளுணர்முனி வாற்கணி லாதன்
விரிதி ரைக்கடற் கண்டுயில் விண்ணவன் றனக்குப்
பிருகு சாபம்வந் ததைந்தவை பேசிய வண்ண
முருகு காதலிற் சூதமா முனிவா னுரைக்கும். (1)

வஞ்ச நீங்கிய தவத்தணி லாதனை வணங்கி
விஞ்சு மாதவர் விளம்புவ ரிளம்பிறை மிலைந்த
செஞ்ச டாடவிப் பண்ணவன் பெருமையுந் திருந்தத்
தஞ்ச மென்றவன் சரணிணை பணிந்தவர் தகையும். (2)

முன்னும் வேண்டிய வுரைத்தனை யுரைத்திடு முறையே
யன்ன வாசகங் கேட்டுமெம் விருப்படங் கிலவா
லின்னுங் கேட்குற விரும்பின மடியருக் கெளியாய்
பன்னி யாங்கவை களிப்பொடும் பகரெனப் பகர்ந்தார். (3)

மொழிந்த வாசகங் கேட்டலு முனிவரன் முழுது
மழுந்து மன்பொடு விழிபுன லரும்பிட வறையுஞ்
சுழிந்த தெண்டிரைப் பாற்கடன் மணிதொகை யிடினும்
விழைந்து நீர்பகர் தன்மையை விளம்புத லரிதால். (4)

எல்லை யின்றிய காலங்க ளிறந்திடா திருந்து
சொல்லு நாவொரு கோடிகொண் டறையினுந் தொலையா
வல்லெ றிந்தொளிர் களத்தினன் பெருமையு மவன்றன்
மல்ல லன்பர்கள் பெருமையு மளந்துரை வகுக்கில் (5)

அரிய நான்மறைத் துறையுளீ ரறிந்தவை யின்னுந்
தெரிய வோதுவன் கேட்குதி ரெனவுரை தெரித்தே
புரியுஞ் செஞ்சடைப் புனிதனைப் புகழ்ந்தக மிருத்தி
விரியு மன்பொடு முனிவர னினிதுற விளம்பும். (6)

மூன்று மாயையுங் கடந்தொரு முழுமுத லாகி
யான்ற வைந்தொழில் களும்புரிந் தசலமாய் நிறைந்தே
யேன்ற வாருயிர்க் காருயி ராகியெவ் விடனுந்
தோன்று நீறணி கடவுளே பரமெனுஞ் சுருதி. (7)

பங்க யத்தடம் பொகுட்டுறை பண்ணவன் படைப்பும்
பொங்கு வெண்டிரைப் பாற்கடற் கருமுகில் புரப்பும்
மங்க வெண்டலை சூடிதன் னழிப்பினின் மயங்குங்
கங்கை நாயகற் கிணையெவர் தேவரிற் கணிக்கில். (8)

எழுசீர் விருத்தம்.

உளங்களிந் துருகி வியாதமா முனிவ
னுவப்பொடு மன்புமீக் கொழுந்தக்
களங்கனி யனைய கறைமிடற் றமலன்
கமலநாண் மலர்ப்பதம் வழுத்தத்
துளங்கிடை கொழுந னன்னவற் கிரங்கி
யருளினன் றுரிசற வதனால்
விளங்கிய மறையு மாகம புராணப்
பரவையுங் கடந்தனன் விரும்பி. (9)

பைத்தலை விடவாய்ப் பாந்தளா பரணப்
பண்ணவன் பழம்புலால் கமழு
முத்தலை நெடுவேற் பரமனே யெவர்க்கு
முதன்மையென் பதைமனத் துணர்ந்தான்
அத்தலை நெறிநின் றருட்சிவா னந்தத்
தகங்களித் தழுந்தின னொருநாண்
மைத்தலர் கொடிய வாணவச் செருக்கால்
வாணியங் கரைமருங் கடைந்தான். (10)

தனிவரை குழைத்துப் புரந்தழற் படுத்துந்
தமனியப் பொருப்பினைப் பரசு
மினியதேன் பிழியு மகதியாழ் முனிவன்
முதலியோ ரிருடிக ளுளத்திற்
கனியுமன் புருகத் திளைத்தபே ரறிவின்
யோகிகள் கணத்திடை வந்தா
னனிதரு களிப்பி னாதன் முதலோ
ரன்னவன் றனக்கெதிர் நடந்தார். (11)

ஆங்கவற் பாவி யழைத்தனர் கொணர்ந்தா
ராசனத் திருத்தினர் வியப்புற்
றோங்கிய வுளத்தாற் செய்வன யாவு
முதவினர் வழியினைப் பொழித்தார்
பாங்கிரு புறமும் வதிந்தன ரவரோ
டளவளாய்த் தனித்தனி பழகி
நீங்கல ராகி யிருந்தன னிருக்கு
மேல்வையி னிவப்புறு தவத்தோர் (12)

தெண்ணிலாச் சடையோன் றிருவரு ளடைந்தாய்
வேதங்க ளன்கெனத் தெரித்தா
யண்ணல்மா தவத்தின் றலைநெறி நின்று
யளப்பருங் கலையெலா மளந்தா
யெண்ணிலாக் கருணை முழுவதுந் திரட்டி
யெடுத்தன வொருவடி வெடுத்தாய்
கண்ணிலா வுயிர்கட் கறிவினைத் தெரியக்
கண்ணெனத் தனியவ தரித்தாய். (13)

முரிதிரைக் கடல்வாய்ப் படுவிட மருந்து
முக்கணன் பெருமையை முற்றுந்
தெரிதா முன்னு முரைத்தனை யவன்றன்
சிற்பா மயத்தினைத் தெரிதற்
குரியவா றின்றித் தெருமருங் கொடிய
வுளத்தினே மெமக்கிவ ணுறுதி
யரிதினிற் பகர்தி யாதியங் கடவுட்
டன்மையை யெனவெடுத் தறைந்தார். (14)

கேட்டன னிதனை யாணவச் செருக்கால்
வியாதமா முனிவரன் கிளக்கு
மூட்டாக் கெறியுஞ் சிலம்படி யிடத்தோற்
கித்தகை முதன்மையொன் றுளதோ
வீட்டுபே றுலகத் துயிர்க்குயி ராகி
யின்னருள் புரிந்துகாத் தளிக்கும்
பாட்டளி முரலும் பசுந்துழா யவற்கே
பரத்துவ முதன்மையென் றிசைத்தான். (15)

வரமுனி யுரைத்த தீமொழி கேட்டு
மாதவத் துறையுளோ ரெவரு
மாகா வெனவே செவித்துளை புதைத்தா
ரழலெழ விழிக்கடை சிவந்தார்
பரம்ய முதன்மை சிவனென வெமக்குப்
பகர்ந்தனை முன்னது கிடப்பத்
திரமுறு கடவுள் வேறெடுத் துரைத்தா
யயர்த்தனை பழமறைத் தெளிவு. (16)

எனமுனித் தலைவர் வலிப்பவன் னவன்றன்
சீடரு மனக்கொளா திகழ்ந்தா
ரனைவருந் திரண்டு வியாதனை நோக்கி
முனிவகே ணீயறை மாற்ற
நினைவருங் காசி யெம்பிரான் றிருமுன்
னெடுந்திரைக் கங்கைநீர் நின்று
மனமொருப் படவே யுரைத்தியே லுரைத்த
வழிமுறை வணங்குவோ மென்றார். (17)

ஈதெடுத் தியம்பக் கேட்டருள் வியாதன்
யானிதற் கிசைவனென் றெழுந்து
மாதவத் தலைவர் தம்மொடு நடந்தான்
வளந்தரு காசிசென் றடைந்தான்
சீதவெண் டிவலைப் பகிரதி படிந்து
திங்களஞ் சடைமுடிப் பெருமான்
பாதபங் கயத்தைப் பரவினன் சுருதி
முனிவரும் வான்முறை பணிந்தார். (18)

தடந்திரை சுருட்டும் பகிரதி யிறங்கித்
தனிவலக் கரமெடுத் துயர்த்தே
மடந்தருங் கொடிய வாணவத் துழலும்
வியாதன்மா முனிவரீர் கேண்மின்
படந்தரு மரவப் பாயல்மேற் றுயிலும்
பைந்துழாய்ப் படலைபூத் தலர்ந்த
விடந்தரு திணிதோட் கரியநா ரணற்கே
பரத்துவ முதன்மையென் றிசைத்தான். (19)

சொற்றநா வயா வுயர்த்திய தடக்கை
முடக்கிடா தடுகொலைச் சூலக்
கொற்றமார் கால வயிரவக் கடவுள்
புரிந்தன னன்னது குறித்தே
கற்றமா தவன்றன் சீடருங் கயிலைக்
கடவுளைத் தொழுதகங் களித்தார்
மற்றைவா னவருங் கற்பக மலர்தூய்
மழவிடைப் பாகனைப் பணிந்தார். (20)

உயர்வுறு தடக்கை யசைக்கல னாகி
நாவுமொன் றுரைக்கல னாகி
மயர்வுறுங் கவலை மனத்தனாய் நின்றான்
வாமுனி வளைநில வொருபாற்
செயமுறுந் திகிரிக் கொழுங்கதி ரொருபாற்
றிளைப்புறச் செம்பொன்மின் னுடங்கும்
புயலெனப் பொலிந்து பசுந்துழாய்ப் பொருப்புப்
புள்ளர சுகைத்தவ னடைந்தான். (21)

ஆரண மறைக்கு மாகமந் தனக்கு
மளப்பரும் புராணவா ருதிக்கு
மோர ணுத் திரட்கு மெம்மனோர் முதலா
மூவப்புறு கடவுள ரெவர்க்குங்
காரண மாகிப் பரத்துவ முதன்மைக்
கடவுளா யிருப்பவன் கடப்போர்
வாரண முரித்த பரமனே யன்றி
மற்றெவ ரறிந்தது மறந்தாய். (22)

ஒருபொரு ளாகி யைந்தொழி னடத்த
வொப்பிலாக் கடவுளாந் தாகிப்
பொருவரு முலகப் பரப்பெலாம் படைத்தே
யுயிர்தொறு முயிர்தொறும் புகுந்து
பிரிவில ளுகிப் பரப்பியும் பிரிந்த
பெற்றியோ டிருப்பவன் பெரிய
வருமறைக் கரிய னடியவர்க் கெளிய
னரனென வுணர்ந்திலை போலும். (23)

குருத்திளந் திங்கட் சடிலிதன் பெருமை
யாவராற் குணித்திடக் கூடுந்
தெரிப்பது தெரிக்கி லாதிநா யகன்றன்
றிருந்திய திருவரு ளளித்து
விரிக்குமேல் விளங்கு மீதறிந் திலைநின்
மெய்யறி வனைத்துமே மருண்டா
யொருப்பட வெமக்கும் பெரும்பிழை விளைத்தா
யெனமுனி வனைமறுத் துரைத்தே (24)

அருந்தவத் துறைபோ மாதவர்க் குரைக்கு
மலங்கிலை மழுவல னுயர்த்த
பெருந்தகைப் பரனை யாவரு முணராப்
பராபரன் யாமுமப் பெரியோன்
றிருந்தரு ளதனு லுயிர்புரந் தருளச்
செய்குது மீதுசத் தியமென்
றிருங்கதிர்த் திகிரிக் கரமெடுத் துரைத்தான்
முனிவரர் யாவரும் வியந்தார். (25)

கீற்றிளந் திங்கட் டிருநுதன் மடந்தை
 பச்செனவொருபுறங் கிளைத்த
நீற்றொளி பழுத்த பவளமால் வரையை
 நெஞ்சகத் துள்ளுற விருத்தி
யூற்றினன் றடங்கட் குளிர்புனல் வழுத்தி
 யுவகையங் கடலிடை யாழ்ந்தான்
கூற்றுள மருள வடையலர்ச் செகுப்பக்
 குனிசிலை வணக்குமோர் கொண்டல். (26)

இன்னணம் பரவி யியாதனை நோக்கி
 யெறிதிருத் திவலையூற் றெழுகும்
பொன்னவிர் கடுக்கைச் சடிலியைத் தொழுது
 புகழ்கென மாயவன் விளம்ப
வந்திலை வணங்கிப் பழிச்சிடக் காமும்
 நாவுமங் கசைந்திலை யதனை
மன்னவி னயத்தாற் காட்டினன் கரியோன்
 வாதனஞ் செழுத்தையு முணர்த்த (27)

செம்மலர்க் காமு மயர்ந்திடு நாவுந்
 திருந்திட முனிவரன் றிகைத்து
வெம்மையின் கவலை யுளந்திறை பிடிக்க
 மெய்யெலாம் விதிர்விதிர்ப் பெறிய
மைம்முகி லனைய திகிரிமா யவனோர்
 மருங்குநின் றிமையமீன் றெடுத்த
கொம்மைவெண் டாளக் குவிமுலை கொழுநன்
 குரைகழல் வணங்கியே புகழ்வான். (28)

சந்த விருத்தம்.

முந்தாண வத்தி னிருண்மூடு சிந்தை
 யெளியேன் மொழிந்த பிழையைப்
பைந்தா துழக்கி வரிவண்டு கோடி
 படிகின்ற பைம்பொ னறவக்
கொந்தார் கடுக்கை திரையாறு திங்கள்
 முடிமீ தணிந்த குழகா
வெந்தா யெவர்க்கு முதலாகி நின்ற
 விறைவா பொறுத்தி யினியே. (29)

பொன்னிற் பொலிந்த திருமேனி கொண்ட
புனிதா வணுக்கண் முறையே
பன்னித் துதித்த புகழும் பழித்த
பழியும் பகுத்து வரைதல்
முன்னிற் றிருந்த வளவற்ற கோடி
யுயிர்முற் றுமீனு மொருதாய்
தன்னிற் புரக்கு மொருநாத னென்ற
தலைமைக் கடுத்த தலவே. (30)

ஒன்றாகி யைந்து விதமாகி யெண்ணி
லுயிரிற் பொருந்து முயிரா
யன்றாகி நெஞ்சி னினைதற்கு மெட்ட
லரிதாகி நின்ற வமலா
கன்றான தற்கு மனநெக்கு டைந்து
கனிகின்ற வாவி னடியார்
துன்றாண வத்தி னிருளைக் கலக்கு
சுடரே யிரங்கி யருளே. (31)

இவ்வண்ண மென்ப தறிகின் றிலாத
வருவாகி யெய்து முருவாய்
மைவண்ண மாயன் முதலோ ரெயர்க்கு
முதலாகி நின்ற வாத
ஊவண்ண மாய முகமைந்து கொண்ட
வானென் றுரைக்கு மறையின்
செவ்வண்ண நின்று மருளற் றுரைத்த
சிறியேற் கிரங்கி யருளே. (32)

எனநின்று வேத முறைதந்த வுண்மை
தவறா திசைத்து முனிவன்
மனனைந் திரங்கு செயல்கண்டு சிந்தை
மகிழ்வந் தமர்தல் பெருக
நனைவிண்ட கொன்றை திரைபொங்கு கங்கை
நதிதும்பை நஞ்ச முமிழும்
பனகம் படர்ந்த சடிலம் புனைந்த
பரமேசன் வந்த ருளினான். (33)

கள்ளங் கரந்த மொழிசொற் றிடைந்த
முனிவன் கரைகொண் டெழுகி
னுள்ளங் கரைந்து வெருவுற் றுணங்கி
யிருசெங்கை யுச்சி குவிய
வெள்ளம் பனித்து விழிசிந்த நின்று
விமலன் பதம்பா வினுன்
றெள்ளுந் திறத்து மறைநூ லுணர்ந்த
திருநந்தி தேவ னறைவான். (34)

பண்ணுற்ற வேத முழுதுந் திருந்து
பதினெண் புராண முழுது
மெண்ணுற் றுணர்ந்த மறையோது முண்மை
யெதுவென் றுணர்ந்தி லையிருட்
கண்ணுற்ற சிந்தை புனல்பட் டிழிந்த
கமலத்தின் வட்ட வடையாய்
நண்ணுற்ற தீமை யலையிற் படிந்து
நலிவெய்தி நைந்தனை கொலாம். (35)

சங்கந் தரித்த பலகோடி மாயர்
தலைமாலை நீடு தவள
வங்கந் தலைக்கொள் பெருமானை யாதி
நடுவந்த மின்றி யருவா
யெங்கும் புரக்கு முதலாய் நிறைந்த
விறையோனை ஞான வொளியைப்
பங்கம் படுத்தி யெதுநீ நினைந்து
பகருற்ற தேழை முனிநீ. (36)

இதுசொற்ற நாவு முயர்வுற்ற கையு
மரிதக்க வின்று வெருவி
மதுமொய்த்த கொன்றை வானைப் பணிந்த
வகைகண்டு செய்தி லனெஞ
முதுமெய்த் தவத்தி னருணந்தி கூற
முனியஞ்சி நின்று தொழுதான்
புதுநித்தி லத்தி னிலவொத்த மூரல்
புனிதன் புரிந்த னனரோ. (37)

மாயைப் படத்தின் மறைபட்டு நைந்து
மருள்கூர் வியாத முனிவ
னேயத் திறைஞ்சு வழிபாடு கண்டு
நெறிகொன் றுரைத்த பிழையைத்
தாயிற் சிறந்து புவனம் புரந்து
தனிநின்ற நாதன் வளரும்
வேலொத்த தோளி யுமைநங்கை பங்கன்
விமலன் பொறுத்தேகி னான். (38)

ஆலத்தை யுண்ட பெருமானை நின்று
பாவுற்ற வாதி முனிவோர்
சீலத்தி னோடு தமவெல்லை சென்று
சிவபூசை செய்தரு ளினார்
நீலப் பொருப்பு நிகர்பச்சை மேனி
நெடுமால் பணிந்து பாவிப்
பாலத்த முற்கண் ணிறைபண் டளித்த
படராழி யெய்தி னனரோ. (39)

கறைகொண்ட கண்ட னுயர்வுற்ற தன்மை
கணியா வியாத முனிவன்
முறைகொண்டு தெய்வ மணிகங்கை மூழ்கி
முதுஞான வாரி படியும்
பிறைகொண்ட வேணி யானைப் பணிந்து
பிழைசொற்ற தீமை யகல
நிறைகொண்ட வன்பின் மிகுபூசை செய்து
நெறியால் விளங்கி னனரோ. (40)

எழுசீர் விருத்தம்.

இன்னண முரைத்த தன்றியே யின்னு
மிசைப்பல்யான் கேட்குதி ரெறிக்கும்
பொன்னவிர் திதலைப் புணர்முலைத் துவர்வாய்ப்
பூங்கொடி யுமையவண் மணத்திற்
றுன்னிருஞ் சடிலப் பிஞ்ஞக னருளாற்
றுழாய்துயல் திணிதரு தடந்தோட்
பன்னக வணையான் முதலிய தேவ
ரனைவரும் பதைப்பொழிந் திருந்தார். (41)

வட்டமென் கமலத் தவிசுவீற் றிருக்கு
மறையவன் மைந்தன்மா மகத்தி
லிட்டபொற் றவிசுங் கலன்களுஞ் சிதறக்
கரியமா லிமையவ ரெவருங்
கட்டழல் கதுவு வீரபத் திரன்கைக்
கதையினாற் சிதைந்துயிர் துறந்து
பட்டபா டனைத்தும் வேறுவே றெடுத்து
நாவினாற் பகர்வதற் கெளிதோ. (42)

விண்முக டணவக் கிளர்ந்துகால் பெயர்த்து
வெள்ளிவெற் பெனநடை பயின்று
மண்ணிடை முழுது மொருபிறை மருப்பு
வயங்கெழு நுதிகொடுத் தெடுத்த
வண்ணல்வெள் ளேனத் திருவுரு வெடுத்த
வமலனைக் கிளையொடுந் தொலைத்தான்
பண்ணலங் கனிந்த தமிழ்தொகுத் துரைத்த
பன்னிரு தடம்புயப் பாமன். (43)

மாவலிப் பெயரி னசுரனைப் பெலத்திட்
டரியவா மனனுல கடையக்
காவல்செய் தளித்துத் தனிக்குரு தலத்துக்
கண்ணுதற் பண்ணவன் கமலப்
பூவலர் கழற்கால் விதிமுறை வழுத்திப்
புந்திநெக் குடைந்துடைந் துருகி
யாவலிற் பணிந்து மலக்கிழங் ககழ்ந்தா
னன்னவன் முதன்மைகொண் டுயர்ந்தான். (44)

ஈங்கிவை பகர்ந்தே னடல்விடை யுகைக்கு
மெம்பிரான் பெருமையன் னவன்றன்
பூங்கழல் வழுத்து மன்பர்தம் பெருமை
புகலுகேன் புடைத்திறு மாந்த
கோங்கிளங் குரும்பைக் குவிமுலை வாணி
கொழுநனி னுலகெலாம் படைப்பர்
வாங்குதெண் டிரைவெண் பாற்கடற் றுயிலும்
வரதனி னினிதுகாத் தளிப்பர். (45)

வரிச்சிறைச் சுரும்ப ருழுதுதேன் மடுக்கும்
வண்டுழாய்ப் படலைபூத் தலர்ந்த
பொருப்புறழ் தடந்தோட் கரியமைம் முகிலும்
போதனு மிறப்பர்சென் றடைந்தோர்
கருக்கட லுடைக்குங் கங்கைசூழ் கிடந்த
காசியுங் கதிர்மழுப் படையோன்
திருக்கிளர் சாணம் வணங்குமன் பினருஞ்
சிதைந்திடா ரெனமறை தெரிக்கும். (46)

பத்தியிற் பரமன் பதம்பணிந் திறைஞ்சும்
பான்மையோர் திருவுளங் கறுக்கி
லெத்தகைத் திறத்துக் கடவுள ரேனு
மிடையறுத் துயருழந் திறப்பர்
முத்திநன் னெறியின் மனமொருப் படுத்து
முழுமறை தெரிதரு வாசர்ச்
சித்தநொந் துரைத்த சாபவெந் தழலிற்
கண்ணனு முயிர்திறம் பினனல். (47)

புண்ணிய மனைத்துந் திரண்டொரு வடிவம்
பொருந்திய கருணைமா தவத்தோ
னெண்ணரு மறையின் றுறைநெறி போய
பிருகுவன் றிசைத்தசா பத்தாற்
கண்ணகன் ஞால முண்டுமிழ்ந் தளித்த
கரியவ னொருபது பிறப்பு
நண்ணினன் னினிமற் றெவர்களே பரம
னடியரை நலிந்துயிர் பிழைத்தோர். (48)

இன்னவா றரிய தவத்தணி லாத
னியம்பலு முனிவ ரிறைஞ்சிச்
சொன்னமாக் கதைகள் கேட்டுளங் களித்துத்
துரிசறுத் துயர்ந்தனஞ் சுருதி
மன்னுதா பதன்மெய்ப் பிருகுளங் கனன்று
மாயனைச் சபித்திடுங் காதை
பன்னிநீண் டெமக்குத் தெரிதரப் பகர்தி
யென்றலு முனிவான் பகரும். (49)

கற்பக முயிர்க்குங் கடிமணங் கமழும்
கதிருலாம் பொன்னகர் புரக்கும்
பொற்புறு குலிசப் புரந்தான் முதல
தேவரும் புன்றொழிற் கொடிய
மற்றிணி தடந்தோட் கரியதா னவரு
மாறின்வெஞ் சமமுடற் றினரால்
வெற்றிவா னவர்கட் காற்றல ராகி
வென்கொடுத் தசுரர்க ளிரிந்தார். (50)

அருந்தவ மியற்றுஞ் சுக்கிர னிருக்கை
யடைந்தனர் குரவனைப் பணிந்தார்
பெருந்தகை யிழந்து விண்ணவர்க் கிடைந்த
தன்மையைப் பெரிதெடுத் துரைத்தார்
வருந்திநின் றுணங்கு மசுரரை நோக்கி
யன்னவன் மனங்கரைந் திரங்கிப்
பொருந்துபே ரமரிற் றேவரைச் செகுப்பப்
புந்தியிற் சூட்சிமே னினைந்தான். (51)

மண்டுவெஞ் சமர்க்கு நீவிர்போ யெதிர்க்கில்
வானவர்க் குடைந்துயிர் துறப்பீர்
பண்டுபோ லுமக்கு வலியில பொறையி
னிருக்குதி ரெனவுரை பகர்ந்து
துண்டவெண் பிறைச்செஞ் சடிலியை வணங்கி
வரம்பெறச் சுக்கிரன் விழைந்து
கொண்டல்கண் படுக்குங் கொழுங்கதி ருரிஞ்சுங்
குடுமிநீ ளிமயவெற் படைந்தான். (52)

நறவுகொப் புளிக்கு மிதழியஞ் சடில
நாதனைக் கண்டுவீழ்ந் திறைஞ்சி
யறநிலை வழுவா விமையவர்க் காற்றா
வசுரர்க ளிழைத்தன வெல்லாந்
திறனுற வுரைத்துத் தேவரை வெல்வான்
வி[illegible]யொன் றருள்கெனச் செப்ப
விறல்கெழு சூலத் தனிப்படை யுயர்த்தீ
விண்ணவ னினிதுற விளம்பும். (53)

மாயவன் முதலோ ரெவர்களு மடையா
விஞ்சையை விரும்பினை வருந்தி
யாயிரம் பருவந் தலைநிலத் துறவே
யழற்புகை யுண்டொருப் பட்டுத்
தூயநற் றவஞ் புரிந்திடி லரிய
துகளறு வித்தைவந் தடையு
மேயமொ டிதனைப் புரிகென நிமல
னிகழ்த்தலுஞ் சுக்கிரன் மகிழ்ந்தான். (54)

அவ்வரை யிடத்தி னன்னதன் மையவா
மருந்தவஞ் சுக்கிரன் புரிய
விவ்வகை யனைத்தும் புரந்தர னுணர்ந்தா
னிவையெலா மெறிதிரை சுருட்டும்
பவ்வமேற் றுயிலுங் கரியவற் குரைத்துப்
பார்க்கவன் படருமுன் னெய்திக்
கவ்வைகொண் டழுங்கு மசுரர்தங் கிளையைத்
தொலைப்பதே கருமமென் றெழுந்தான். (55)

வெள்ளிப முகைத்துப் பாற்கட லடைந்து
நாரணன் விரைமலர்க் கழற்கா
ளுள்ளநெக் குருகிப் பணிந்துபார்க் கவனுண்
டிழைத்திடுஞ் செயன்முறை யுரைத்தான்
கொள்ளைவண் டிமிருந் துழவினே யசுரர்
குலம்பொடி படத்தொலைத் திலையேற்
றெள்ளுநான் மறையின் றுறைநெறி கடவாத்
தேவரு முறுவரோ வென்றான். (56)

புரந்தர னுரைக்கக் கேசவ னிரங்கிப்
புள்ளர சுகைத்தன னெழுந்தான்
பரந்திடு மசுரக் கருங்கடல் கலக்கிப்
பதைபதைத் திடச்சமம் விளைத்தான்
காந்தன ரசுரர் பிருகுவாச் சிரம
மன்னவர் கலங்கிடத் தொடர்ந்து
வாந்திகழ் திகிரிப் படைக்கைமா யவனுந்
தேவரு மிருக்கைபோய் வளைந்தார். (57)

தீதுறுங் கொடிய வசுரரைத் தொலைக்கச்
சக்கர முயர்த்தனன் றிருமால்
மாதவப் பிருகு பன்னிதிவ் வியைக்கண்
டடைக்கல.மாகவந் தடைந்த
பேதையோ ரிவரைக் கோறலை முகுந்த
வென்னலும் பிறங்குவச் சிரத்தோன்
காதிவெஞ் சமருக் கெழுந்தன னவனைக்
கைதொழா துளர்ந்திடத் தடுத்தாள். (58)

வச்சிரக் கரத்தைத் திவ்வியை தடுத்தாள்
மாயவ கொடியதா னவரை
யச்சமுற் றழுங்கப் பொருவதற் கெளியேற்
கருள்புரி யென்னலும் பகுவாய்
நச்சர வணையோன் முனிவா னில்லா
விருக்கைபோய் நணுகுதல் கடனே
கைச்சினப் பொருப்பை விலக்குதி யெனவே
யிந்திரன் கவலைகொண் டுரைக்கும். (59)

புற்றெழுழிற் கொடிய தீயரை புருக்கா
தறநெறி தெரிப்பதென் பொருதி
மன்றலந் துளவப் படலையோ யென்றூன்
றிவ்வியை மனங்கொதித் தழன்று
துன்றுபோர் புரிய வருதியே னினையுந்
தொடுகடற் றுயின்றதோன் றலையு
மின்றுயிர் துறப்ப னென்றன ணெடியோ
னெரியெழ விழிக்கடை சிவந்தான். (60)

கலிநிலைத்துறை.

அலங்கு சக்கரப் படையெறிந் தவள்சிர மறுத்தான்
கலங்கு செம்புனற் குருதிமென் சேற்றிடைக் கழுமி
யிலங்கு வஞ்சியம் பசுங்கொடி யுணங்கிய தென்னத்
துலங்கு செங்கதிர் மணித்தொடி யுறங்கினள் சோர்ந்து. (61)

அன்ன காலையிற் கதுமென வருந்தவப் பிருகு
கன்னி மென்றளிர்த் தருப்பையுஞ் சமிதையுங் கைக்கொண்
டுன்னி வந்தன னிருக்கையுட் புகுந்தன னுயிர்போய்ப்
பன்னி மாயயில் கிடந்தது பார்த்தனன் பதைத்தான். (62)

வளைத்த வள்ளுகிர்க் கருடன்மேல் வரதனைக் கண்டான்
முளைத்த பன்னெரித் தடுசினந் தலைக்கொடு மூளச்
திளைத்த செந்தழல் விழிக்கடை யுகவெதிர் சென்று
தளைத்த குல்லையம் படலையோய் கேளெனச் சபிக்கும். (63)

ஓது நான்மறை நெறிதரு முறையெலா மொருவி
மாதி ரோருயிர் வதைத்தனை நின்மலர்ப் பதத்திற்
காதல் வைத்தவர் வெந்துயர்க் கடலிடைக் கவிழ்ந்து
தீது றுந்தழ னரகிடைச் செல்வரீ தன்றி (64)

அனையர் தம்மொடு மடுத்தொரு வாசக மறைந்தோர்
புனையு மாடையு நிதியமும் பூமியு மவர்க்கே
மனம கிழ்ந்தினி தளித்தவர் யாவரு மருண்டு
நினைவ ருந்தழ னரகிடை நீந்துவர் நீயும் (65)

விரியும் வெண்டிரைப் பரவையின் மீனமும் விரிந்து
சுரியும் வண்கமுத் தாமையு மெனவுருத் தோன்றிக்
குருதி யுங்கொழுந் தசைகளுங் கொடும்பசி தணியப்
பருகி மம்மருற் றயருதி பன்னெடுங் காலம். (66)

தீண்டு தற்கரி தென்றிக மேனமாய்ச் செனித்தே
யூண்டு றக்கவுண் ணுதன வனைத்தையு முண்டு
நீண்ட வாய்ப்பிறை மருப்பினு னெடுநிலப் பரப்பைக்
கீண்டி ளைப்புற வருந்துதி கிளர்நெடுங் காலம். (67)

பிடர்நு டங்குளை மானுட மடங்கலாய்ப் பிறந்தே
யிடரு ழந்துசெஞ் சோரியு மீருளு மிழையுங்
குடரும் வாய்மடுத் தங்கமுங் குறுமயிர் சிலிர்ப்ப
வடர்வெ றிக்குணத் தருந்துதி யளப்பரும் பருவம். (68)

பகருந் தீவினை நாருரு வைந்தெனப் பழைய
வகனி லத்தினிற் பிறந்துவெம் பவத்திடை யமிழ்ந்திச்
சுகமெ னப்புகல் பணிமொழி மனைவியைத் துறந்து
மிகவ ருந்துதி யாவரு மிகழ்ந்துரை விளம்ப. (69)

மற்ப டுங்கதி முதலன வைந்தையும் வழங்கி
யெற்ப கற்பொழு தரைநொடி யிடைவிடா திரப்
புற்க றித்துவெம் பசிதணி யாதுவாய் புலருங்
கற்கி யாகவும் பிறந்துளங் கவல்கவென் றிசைத்தான். (70)

இறந்த பன்னிதன் சிரத்தினை யுடலொடு மிசைத்து
மறந்துஞ் சத்திய மல்லது நாவினில் வழங்கே
னறந்த ருஞ்சிவன் கழலல்லான் மற்றொன் றுமறியேன்
சிறந்த வன்பருஞ் சிவனெனத் திண்ணமுற் றிருப்பேன். (71)

இவைகண் மெய்யெனி லெழுகவென் றிசைத்தன னிலகு
கவைய றத்தனித் திருநுத லெழுந்தனள் கண்டா
னுவகை பூத்தனன் முகுந்தனை நோக்கின னுருத்தா
னவம திப்புறப் பலபல வாசக மறைந்தான். (72)

தீய சாபமெய்ப் பிருகுநின் றிசைத்தபின் றிகைத்து
மாய னஞ்சின னெட்டுயிர்ப் பெறிந்தனன் வளைத்துக்
காயும் வெம்பவ மகன்றிடக் கணிச்சியோற் பாவிப்
பாயு நற்றவம் புரிந்திட மந்தர மடைந்தான். (73)

திருந்து வார்சிலை கொடியினிற் செஞ்சடை திரித்துப்
பரிந்து தீவினை கிளைத்தெழும் வேறறப் பறிக்கும்
விரிந்த தெண்ணில வரும்பிய வெண்பொடி மிலைந்து
பொருந்து மேனியி லுருத்திர வக்கமும் புனைந்தான். (74)

அரிய சாந்திரா யணமுதல் விரதங்க ளனைத்துந்
தெரிய நான்மறை விதிவழி யியற்றினன் றெய்வப்
பருவ மாயிரங் கால்மடுத் தருந்தினன் பரமர்க்
குரிய வஞ்செழுத் தோதின னிருந்தன னுருகி. (75)

பைந்து ழாய்முகி லின்னண மிருப்பது பார்த்தே
நந்தி நாயகன் றிருவுள மிரங்கின னறுந்தேன்
சிந்து கொன்றையஞ் சடைமுடிக் கடவுள்பாற் சென்றே
யெந்தை கேளெனத் தொழுதொரு வாசக மிசைக்கும். (76)

மணங்கொ டாமரை மலர்மக ளுறைமணி மார்ப
னணங்கு சக்கர முதலவைம் படைகளுந் துறந்து
பிணங்கு நீள்சடை முடித்தொளி பிறங்கிய மேனி
யுணங்கி யாவரு மளப்பரும் பெருந்தவத் துழன்றான். (77)

அய்ய நின்றிரு வுளங்களிந் தருள்புரி கெனலு
மைய ளாவிய வடிக்கணை குழைத்தடர் மழைக்கட்
டையல் பங்கினன் சிந்தையிற் றண்ணளி சுரந்தே
வெய்ய வெள்விடை யுகைத்தன னரிமுனம் விரைந்து. (78)

கொண்டன் மேனியன் றசையறத் தவம்புரி கோலங்
கண்டு புண்ணியத் திருவுளம் பெரிதுறக் களித்தா
னண்ட முண்டவ வெவ்வரங் கருதினை யறிய
விண்டு சொல்லுதி யென்றன னென்னையாள் விமலன். (79)

இன்ன வாசக மமுதினிற் செவித்துளை யெய்தக்
கன்னி யந்துழாய்க் கருமுகில் கண்கணீர் மல்க
மின்னு றழ்சடை விமலனை வலஞ்செய்து வீழ்ந்து
பொன்ன நாண்மலர்ப் பதந்தொழு தினிதுரை புகலும். (80)

கோச்சகக் கலிப்பா.

சீதப் பனிநிலவுத் திங்கண் முடிபொறுத்த
நாதத் தனிச்சுடரே நான்மறையி னுட்பொருளே
காதற் றொழும்படியார் தீவினைகள் கட்டறுத்துப்
பாதத் துணைக்கால வீடளிக்கும் பண்ணவனே. (81)

சிந்தா குலமடையத் தீமை சிறியேன்பால்
வந்தா லுனையன்றி யார்தணிக்க வல்லார்
நந்தா மணிவிளக்கே நாமக் கொலைமழுவோ
யெந்தாய் பலவுலகும் புரந்தருளு மெம்மானே. (82)

தண்ணார் கருணைத் தவப்பிருகு மாமுனிவன்
விண்ணு ரமர ருயிர்வீட்டச் சமருடற்று
மெண்ணு ரசுரர்தமைக் காத்தருள்வா னெண்ணியெனைக்
கண்ணார் தழற்கதுவக் காய்ந்தான் கடுஞ்சாபம். (83)

தீய துயர்பிறப்பி லீரைந்து தீண்டவுஞ்சீர்
மேய மனையாளை நீங்கி மெலிவுறவு
நேய மெனதிடத்தி னீங்காத நெஞ்சினரைப்
பாயு நிரயம் புகவும் பகர்ந்தனனால். (84)

அன்ன தழற்சாப மாற்றநினை யாதரித்தே
யின்ன தவம்யா னிழைத்தே னெனப்புகன்றான்
கன்னி யொருபாற் கலந்தோ னதுகேட்டு
மன்னுஞ் சிறுமுறுவல் கோட்டி வலித்தருளும். (85)

காமருபூங் கூந்தற் கமலை பிரியாத
தேமருபைந் தாமச் செழும்புயலே கேட்குதியால்
யாமுரைக்குஞ் சாப மகன்றாலு மெம்மடியார்
தாமுரைத்த சாபந் தவிர்வ தரிதரிதே. (86)

பொன்னஞ் சடைப்பிருகு புந்தி புகைந்தழன்று
முன்னம் பகர்கொடிய சாப முறைபிறந்தா
லன்ன பிறப்புத் தொறுமடங்கா மாயையினு
லின்ன லுறுங்காலம் யாம்வந் துனைக்காப்பேம். (87)

சொற்ற நார்வடிவம் தோன்று மொருபிறப்பிற்
கற்றைக் கரியகுழற் காதலியை விட்டகன்றே
யுற்ற துயருழந்து கூடுகநீ யென்றுரைத்து
மற்றைப் பிறப்பிலது வாரா வகையளித்தான். (88)

புந்தித் துரிசறுத்துப் புண்ணியரா யெம்மடிகள்
சிந்திக்கு மன்பர்தமைச் செந்தேன் மலரெடுத்து
வந்திக்கு நின்னடியார் தங்களிடம் வாராது
நிந்தித் தருமறையோன் மைந்த னிகழ்சாபம். (89)

ஓதரிய பத்துப் பிறப்பு மொருவியபி
ஞதி நினதுருவந் தாங்குதியென் றுதாத்தாற்
சோதி யமுதத் துவர்வாய் மலர்ந்துரைக்க
நீதி நெடுமான் மனங்களித்து நின்றிசைப்பான். (90)

செய்ய வறிவளிக்குந் தேசிகனு நீயன்றே
வைய நினது சமயத் தகம்புகுந்த
மெய்யி னடியார் நெறிவிளங்ப வேண்டுமென
நெய்யிலங்கு சூல நிமல னிகழ்த்தவனுல். (91)

அறுசீர் விருத்தம்.

மிக்க தவத்தின் றதீசிமுனி பிரம சரியம் விதியனைய
தக்க குணத்தின் கவுதமனே சாற்று மொருகா ருகவத்த
மைக்கொண் மலத்தை யறுத்தகூறு முனிவன் வானப் பிரத்தம்வரு
துக்க மறுத்த துருவாசர் சொல்ல வரிய சன்னுசம். (92)

இன்ன தகையி னிவர்நால்வர் முதலோ ரென்னை யிறைஞ்சினர்கள்
மன்னு தவத்தி னிவர்களைப்போல் வதிவா ரவரே யெம்மடியா
ரன்ன தகையோ ரன்றியன்பா லறிந்து மறியா திறைஞ்சுனருந்
துன்னு பிறவிக் கடலமிழ்ந்தா ரவருந் தொழும்ப ரெமக்கென்றுன். (93)

செங்கை கொடுமா யனைத்தழுவி யுச்சி மோந்து சிவன்மறைந்தான்
மங்கு லனைய நெடியோனு மகிழ்ந்து பொலன்புள் ளரசுகைத்துப்
பொங்கு திரைப்பாற் கடற்குவட சுவேதத் தீவிற் புகுந்திருக்கை
யங்கை குவித்துத் தொழும்பர்தொழ வரியா சனத்து வீற்றிருந்தான். (94)

திருந்து மடியர் தமைநோக்கி நடந்த காதை செப்பினன்வெண்
முருந்த முறுவ லுமைகேள்வ னடியார் முளரித் துணைச்சரணம்
பொருந்து முறைபூ சனைபுரிதிர் பூசை புரியா திகழ்ந்தீரே
லெரிந்த தழல்வாய் நிரையத்தே யெய்திச் சுழலுற் றிடருழப்பீர்.(95)

மறைகள் பரவு முருத்திரர்கண் மகிழு மேகா தெசிவிரதங்
குறைக ளறவே போற்றிடுக வதனு லெமக்குங் கொழுங்களிப்பென்
றறைபத் தொழும்ப ரகங்களித்தே யன்ன தகைநன் னெறியடைந்தார்
பிறைகொண் மவுலி யரனடியார் பெருமை கடந்த தெதுபேசில் (96)

எந்தை பெருமை யவனடியார் பெருமை யறிந்த தெடுத்திசைத்தேன்
சிந்தை கனிந்து நீவிருமத் திறத்தாச் சிரமச் செய்கையினில்
முந்து பெரும்பூ சனைபுரிதி ரென்ன முனிவோர் தமக்கரிய
சந்த மறைதே ரணிலாதன் சாற்ற வவரத் தகைநின்றார். (97)

வீசு திவலைப் பாற்கடலில் விடநா கணையில் விழிதுயிலும்
பூசல் விளக்குங் கதிர்த்திகிரிப் பொருப்பைப் பிருகு சபித்தகதை
பேசுங் கருணைப் பெரியோருங் கேட்போர் தாமும் பிறைமவுலி
யீச னுலக மினிதடைந்தே யழியா வின்ப மெய்துவரால். (98)

கலிவிருத்தம்.

துவள்கொ டிச்சடைச் சூதன் மகிழ்வொடும்
பவம கற்றுமிக் காதை பகர்ந்திட
வுவமை யின்றிய நான்மறை யோதிடுந்
தவல ருந்தவ ரார்வந் தழைத்தனர். (99)

விட்டுணுவுக்குப் பிருகு சாபம் வந்த கதை உரைத்த அத்தியாயம் முற்றிற்று.

## 8. விட்டுணு மன்மதனைப் பெறச் சிவார்ச்சனை பண்ணின அத்தியாயம்.

அறுசீர் விருத்தம்.

ஐங்கணைக் குமரன் றன்னைப் பெறுவதற் காழி யண்ணல்
சங்கரன் கமலப் பொற்றாள் வழுத்திய சரித முற்று
மிங்குமக் குரைப்ப னென்று முனிவா ரிசைந்து கேட்கத்
துங்கநற் றவத்து ஞானச் சூத மாமுனிவன் சொல்லும். (1)

தொல்லுல களிக்குஞ் செங்கோற் சுவாயம்பு மனுவி னீற்றி
னெல்லற விமைக்குந் திங்க ளெறிகதிர்த் தவள மேனி
மல்லலந் திணிதோட் கொற்ற மாயவன் மகவை வேண்டிச்
சில்லரி நெடுங்கட் செவ்வாய்த் திருவொடுஞ் சிறப்பிற் போந்தே (2)

இணர்முகை யுடைந்து செந்தே னெறிகுறுந் திவலை தூற்று
மணமலி தெய்வத் தாரு வனத்திடை வதிந்து ஞானக்
குணமிகு மிலிங்க மொன்று குறித்தமைத் தினிய வன்பின்
பணவா வசைத்த சென்னிப் பரமனைப் பூசை செய்தான். (3)

எண்ணுறு பருவ மோரா யிரந்தனி யிறைஞ்சல் கண்டு
கண்ணுத லமுத மூறுங் கவிரிதழ் மடந்தை யோடும்
வண்ணவெண் ணிலவு பூத்த மழவிடை யுகைத்து வந்தான்
றண்ணற விதழித் தண்டார்ச் சடைமுடி துளக்கிச் சாற்றும். (4)

கொழுங்கதிர் மருட்டுந் தெய்வக் குருமணி கிடக்கு மார்ப
வொழுங்குற நீசெய் பூசைக் குளம்பெரி துவந்தே மின்னே
யழுங்குற னுமக்கு வேண்டும் வரமெலா மளிப்பே மென்ன
வெழுங்களி துளங்க நேமி யெம்பிரான் பணிந்து சொல்வான். (5)

ஆருயிர் முழுதுங் காக்க வருளினை யளவி லாத
சீர்கெழு கமல மேய திருவினை யளித்தாய் செய்ய
பார்மட மகளை யீந்தாய் பாக்கிய மினிமற் றுண்டோ
வோதரு மகவொன் றில்லாக் குறையுள தெளியேற் கெந்தாய். (6)

உலகினி லுவமை யில்லா வொருமக னுதவ வேண்டு
நிலவுகொப் புளிக்குந் திங்க ணெடுஞ்சடைப் பரமா வென்னப்
புலவுவாய் கமழுஞ் சூலப் புங்கவன் மகிழ்வு கூர்ந்தே
யலகிலா வழகின் மைந்தற் பெறுவா மளித்தா னன்றே. (7)

மருவரு துளவ மாலை மாயனை மகிழ்வி னோக்கிப்
பொருதிரை யிரட்டும் வெண்பாற் புணரியிற் போதி யென்று
கருமணி நிகர்க்குங் கண்டன் கழறியே மறையுங் காலைத்
திருகிய மனத்த ளாகிச் செம்பொன்மா லிமயச் செல்வி (8)

உந்துவெண் டிரையி னப்ப னுறங்குவெண் புயலை நோக்கி
யெந்தையார் பூசை யாற்றி லரிச்சனைக் கியைந்து ளோரைப்
புந்தியி னினிமை கூர வந்தனை புரிக லாதார்ச்
சந்திர மோலி பூசைப் பலத்தினைச் சாரா ரன்றே. (9)

ஆதலா லுனக்கு நாத னருளிய வாத்தி னெய்துங்
காதலன் பிறந்த காலைக் கடிதுயிர் துறக்க வன்றே
யீதலா லுரிமை மைந்த னிறந்திடுஞ் சோகத் தாலே
கோதிலா நினது சிந்தை கொதிகொதித் திடுக வென்றாள். (10)

இவ்வுரை வழங்கி யம்மை யிறையொடு மறைந்து போனாள்
கவ்வையங் கடலி னாழ்ந்து கனிநறுந் துளவ மாயன்
கொவ்வையங் கனிவாய்த் தீஞ்சொற் குளிர்வரை பயந்தாள் கூறு
மவ்வுரை நினையுந் தோறு மழுதழு திரங்கிச் சோர்ந்தான். (11)

அலங்கிழை யுமையை ஞான வமலனை யுருவிற் பண்ணி
யிலங்கொளி மணியிற் செய்த வேகவா சனத்தின் வைத்துப்
புலன்களைந் தடக்கி யன்னோர் பொன்னடிக் கமலம் போற்றி
நலங்கிளர் பூசை செய்தா னன்மறை துதித்துப் பாடி. (12)

இத்தகைப் பூசை மாயன் பருவமொன் றியற்றக் கண்டு
முத்துறழ் முறுவற் செவ்வாய் முகிண்முலை மடந்தை யோடுங்
கொத்தல ரிதழி சாய்க்குங் குழவிவெண் டிங்கள் வேணி
வித்தகன் கருணை பொங்க வெள்விடை யுகைத்து வந்தான். (13)

நரைவிடை யுகைத்து வந்த நாதனை யுமையைப் போற்றி
விரைமலர்க் கமலத் தாளில் வியப்புறு பூசை செய்தான்
சுரைபடு மனத்த னாகிக் கண்கணீர் கலுழ்ந்து நின்றான்
வரைதரு மயிலை நோக்கித் துதிபல வகுப்ப தானான். (14)

கலிவிருத்தம்.

கானே யளகக் கனியே கருதுந்
தேனே யமுதே யமுதின் றெளிவே
மானே மயிலே மடவோ திமமே
பானேர் மொழியே சுபசுங் கிளியே. (15)

தண்ணே றுசுடர்த் தாளத் தனநற்
பண்ணே றளிபா டளகப் படலம்
விண்ணே றுமிளம் பிறைவே ணியான்
கண்ணே றவளர்ந் தருள்கா ரொளியே. (16)

ஒன்று யுணர்வுக் குணர்வா மொளியா
யன்று யுருவைந் தெனவைம் முகனாய்
நின்று னருளர் கியநே ரிழையே
குன்று தநிறங் கிளர்கோ மளமே. (17)

என்னே நினையன் பினிறைஞ் சிலனு
முன்னே சிறியேன் செய்முழுப் பிழையை
மின்னே ரிடைமெல் லியலே யிமையப்
பொன்னே நினையா துபொறுத் தருளே. (18)

என்னத் துதிமா யனியம் புதலுந்
துன்னிச் சிறைவண் டுழுதொங் கனெடும்
பின்னற் சடையெங் கையிடம் பிரியாக்
கன்னிக் குயிலன் புகனிந்து சொல்வாள். (19)

அறுசீர் விருத்தம்.

வளரொளித் தவள மேனி மாயவ கேட்க யாமுன்
னுளமழன் றுரைத்த சாப மொழியுமோ வுனக்கு மைந்த
னளவரு பருவ மெல்லா மிறந்திடா தழகின் மிக்க
விளவலா யிருந்து பின்ன ரிறந்துயிர் திரும்ப வெய்தி (20)

அனங்கனு யுலகி லுள்ள வலகிலா வுயிர்க டோறு
மனங்களில் வியாபி யாகி வாழ்வுறக் கடவ னென்று
தனங்கினர் பொலன்கொம் பென்னுந் தற்பரை யுரைத்தா ளன்ன
கனங்குழை யோடு மீசன் கயிலையங் குவட்டிற் போனான். (21)

தொண்டை வாய்த் திருவி னேடுந் துதைந்துகால் வளைத்துக் கிண்டி
வண்டுவாய் மடுக்குந் தோறும் வழிநறுந் திவலை தூற்றுந்
தண்டுழா யலங்கல் பூத்த தடம்புயன் மகிழ்வு பொங்கப்
பண்டைநான் மறைகள் வாழ்த்தப் பாற்கடற் பள்ளி சேர்ந்தான். (22)

மூவரின் முதல்வ னான முக்கணன் பூசை தன்னில்
யாவர்கள் பூசை பண்ணத் தக்கவ ரெனவே யெண்ணி
யோவறு பூசை பண்ணு துறுதுய ரடைந்தான் றெய்வக்
காவல்செய் கடவு ளென்றால் யாவரே கணித்தி டாதார். (23)

துகளறு மனத்த னுய சூதனிக் காதை யோர்ந்து
பகர்தலு மறைதேர்ந் துள்ளப் பற்றறுத் துயர்ந்த தெய்வ
மகநனி முறையி னூற்று மலர்ப்பொழி லிருக்கை மேய
நிகரருந் தவத்தோர் யாரு நெஞ்சகங் களித்தா ரன்றே. (24)

மன்மதனைப் பெற விட்டுணுச் சிவார்ச்சனை பண்ணின அத்தியாயம் முற்றிற்று.

# 9. விட்டுணு சக்கரம் பெறச் சிவார்ச்சனை பண்ணின அத்தியாயம்.

### அறுசீர் விருத்தம்.

பொருதிரை கலக்கித் தெய்வப் புத்தமு திமையோர்க் கீய்ந்த
கரியவ னெயில்கண் மூன்றுங் காய்ந்தவன் கழற்கால் போற்றி
விரிகதிர்த் திகிரி பெற்ற காதையை விரிப்ப னென்னாத்
துரிசறு முனிவர் கேட்பச் சூதமா முனிவன் சொல்லும். (1)

இந்திரன் முதலா யுள்ள விமையவ ரெவருந் தீய
வெந்திறற் கொடிய தானை யசுரரு மிடைந்த போரின்
மைந்துறு நிருதர்க் காற்றா திடைந்தனர் வானோ ரோடிப்
பைந்துழாய் முகிலை நாடிப் பாற்கட லடைந்தா ரன்றே. (2)

விண்ணவர் வரவை நோக்கி மாயவன் விளம்பு மோடித்
துண்ணென வெருண்டு வந்தீ ரென்கொலோ சொல்க வென்ன
மண்ணக முழுது முள்ள வரையெறி வயிரச் செங்கை
யண்ணல்செம் பவள வாய்விண் டினையன வறைவ தானான். (3)

கொன்றுயிர் குடிக்குங் கூற்றிற் கொலைபுரிந் துலகம் வீட்டும்
புன்றொழி னிருத ராற்றும் போரினுக் கஞ்சிப் போந்தே
மன்றலம் பூவை மேனி மாயவ நின்னை யன்றி
யின்றெமைக் களைக ணாக யாவரே காக்க வல்லார். (4)

தானவ ரளவி லாத தனிவர மடைந்த வாற்றால்
யானடல் கெழுமும் வானோ ரெவர்களு மெதிர்க்கி லாற்றேந்
தேனகு பசும்பொற் போது சிந்துபைந் தருக்க ளார்ந்த
வானக முழுதும் பாழாக் கிடந்தது வளங்க ளின்றி. (5)

தோமரஞ் சூலங் குந்தஞ் சுடரிலை நெடுவேல் வாசத்
தாமவெண் ணிலவு காலும் வச்சிரந் தழலோன் வாளி
பூமகள் படைகு போன் பொருகணை பொருவி லாத
நாமவா ருணமற் றுள்ள படைகளு நலிந்த வன்றே. (6)

கருதரும் படைகள் யாவுங் கலந்திடுஞ் சமரில் வஞ்ச
நிருதர்மேற் செல்லி னீறு மன்னவர் நெடிய வாக்கைக்
குருதியுங் குடரு முண்ணக் கொழுங்கதிர் விரிக்கும் வாலப்
பருதியை யனைய செங்கேழ்ப் படைக்கொடுந் திகிரி வேண்டும். (7)

சீரிய நினது செம்பொற் றிருக்கரத் திருந்த தெய்வச்
சூரியன் மண்ட லத்திற் றேன்றிய திகிரி முன்னம்
போரினிற் றதீசி தன்னுற் பொடிந்ததே புலவுச் சூல
வேரியங் கடுக்கை மாலே வேணியின் ணவனே காலம் (8)

சலந்தா னுயிரை வீட்டச் சமைத்தசக் காத்தை வாங்கிக்
கலங்குற வசுரர் தங்க ளுயிரினைக் கவர வேண்டு
மலங்கலந் துளவோ யென்ன வறைந்தன னறைத லோடு
நலங்கிள ரிமையோர்க் கெல்லா நன்றெென வபய நல்கி (9)

கலிவிருத்தம்.

பெருகு செங்கதிர்ச் சக்காம் பெற்றிட
வருள்ப ழுத்த வலங்கிழை பங்கனே
யுருகு காத லுளத்தொடு மாயவன்
பொருவி லாத்தனிப் பூசை புரிந்தனன். (10)

எண்ணி லாயிர மோம மியற்றினு
னண்ண லாயிர நாம மறைந்துபொற்
றண்ணு லாந்துணர்த் தாமரைப் போதினு
னண்ணு மர்ச்சனே நாடொறுஞ் செய்தனன். (11)

வழுவி லர்ச்சனே யாற்றிய மாயவன்
குழையு மன்பு ணசக்குறித் தோர்தினம்
புழைநெ டுங்கைப் பொருப்புரித் தோனறை
யொழுகு தாமரை யொன்றை யொழித்தனன். (12)

அன்றை யர்ச்சனே செய்வதற் கம்மல
ரொன்று கண்டில னுள்ள முடைந்தனன்
கொன்றை சூடுங் குழக னரிச்சனேக்
கின்றி டர்வரு மோவென வெண்ணினன். (13)

சீத பங்கயச் செம்மலர் போலவே
யாது மில்லே யிணேவிழி யாமெனக்
காத லோடு மிடந்தொரு கண்ணெனும்
போது புங்கவன் பொன்னடி சாத்தினன். (14)

இன்ன தன்மையைக் கண்டன னெம்பிரான்
மின்னு சூல மிடங்க மிளிர்கதை
துன்னு பாசஞ் சுடர்மழு வங்குச
மன்ன பைய வாதம் விளங்கவே. (15)

அடரும் வெம்புலி யாடை மருங்குறச்
சுடரும் வெண்பொடி மேனி துலங்கவே
படருஞ் செஞ்சடை மோலியிற் பற்றுளை
விடமொ ழுகிய நாகமும் வீக்கியே (16)

பாங்கர் யோசனை நூறு படரெரி
யோங்க வண்ட மசைய வுருத்துளந்
தேங்கு வெஞ்சினச் செந்தழற் கட்கடை
தூங்க வார்த்துக் கதுமெனத் தோன்றினுன். (17)

மங்கை பங்கனைக் கண்டனன் மாதவன்
செங்கை கூப்பித் திருமுடி வைத்தன
னங்கண் மேய வமரர்கள் யாவருந்
தங்கு மச்சந் தலைப்பட வோடினர். (18)

விதுவ ணைந்த விரிசடை விண்ணவ
னதிர்க டற்றுயி லய்யனை நோக்கியே
புதுநி லாக்குறு மூரல் புரிந்தனன்
மதுர மென்கனி வாய்திறந் தோதுவான். (19)

அறுசீர் விருத்தம்.

மென்மல ரொன்று போக விழிமல ரிடந்து சாத்தி
யென்மனங் களிக்கப் பூசை யியற்றினை யினிமற் றுண்டோ
நின்மனங் கருதுகின்ற தறிந்தன னினக்குத் தெய்வத்
தன்மைய தாகுஞ் சோதிச் சக்கரந் தருவ லென்றான். (20)

பொறைவடி வெடுத்துக் கொல்லும் பொருபடை யளிக்கி லன்ன
முறைவழி சாந்த மாகு முழுவதும் வேகம் பொங்கி
நிறைவடி வெடுத்து நல்கிற் படையுமங் நெறியி னிற்குங்
குறைவற வதனால் யாமுங் கோரமெய் வடிவங் கொண்டேம். (21)

நீயுமிவ் வடிவி னென்னை நினைந்துவெஞ் சினத்தி னேடு
மேயபோர் புரியி லாழி விடுகவென் றமலன் சாற்றிக்
காய்கதி ரயுதம் போலக் காந்திசெய் திகிரி யீய்ந்தான்
மாயவ னவனை யேத்தித் திகிரியை வாங்கி னனே. (22)

பின்னரு மகிழ்ந்து ஞானப் பிஞ்ஞகன் கமலம் போலுஞ்
சின்மய வடிவ மாய செங்கணுங் கொடுத்தான் வேரிப்
பொன்னவிர் கமலம் பூத்த பொருப்பினைத் தழுவிக் கொண்டா
னின்னுநல் வரங்கள் யாவுந் தருகுவ லிசைத்தி யென்றான். (23)

முருகல ரிதழித் திண்டோண் முக்கணு னீது கூறத்
திருமகள் கொழுநன் செங்கை சென்னிமேல் முகிழ்த்துச் செப்பு
முருகிய மனத்த ஞகி யுனதுபொற் சரணப் போது
கருதுநல் வாமே வேண்டு மென்னலுங் களிப்பி னீய்ந்தான். (24)

தத்தையங் குதலைத் தீஞ்சொ லுமைதிருத் தாதை யாய
வித்தக மறைக ளோதுந் தக்கனை வெறுத்து விண்ணின்
மைத்தகு முகில வளாவு மணிமுடி யிமையம் போற்றப்
புத்திரி யாகத் தோன்றும் புனைதுழாய் புரளுந் தோளாய். (25)

சதுமறை துதிக்கு நின்பொற் சகோதரி யுமையைப் போதின்
விதிசடங் கியற்ற நீநல் விருப்பொடு மெமக்கு நீதி
வதுவைசெய் விக்கு மந்நா ளுனக்கியான் மகிழ்ந்து செம்பொன்
கதிரொளி கவற்றுந் தெய்வ மணிமுடி கவிப்ப னென்ருன். (26)

எரிமணி மார்ப நீயின் றிசைத்தவா யிரநா மத்தைக்
கருதிநெக் குடைந்தே யுள்ளங் கனிதாக் கழறி னோர்கள்
பரிமக மாயிரஞ்செய் பலத்தினை யடைவ ரென்று
விரிசடைக் கடவுள் சொல்லி மறைந்தனன் விண்ணோ ரார்த்தார். (27)

சூதனிக் காதை யெல்லாஞ் சொல்லிநற் கதியை வேண்டி
லாதா மெழுந்து பொங்கி யாயிர நாமங் கூறி
நாதனுக் குரிய பூசை நாடொறும் புரிதி ரென்று
மாதவர் குழுவை நோக்கி வழங்கலு மகிழ்ந்தா ரன்றே. (28)

விட்டுணு சக்கரம் பெறச் சிவார்ச்சனை பண்ணின அத்தியாயம் முற்றிற்று.

## 10. வசுசுருதன் பத்தியோக மகிமை உரைத்த அத்தியாயம்.

அறுசீர் விருத்தம்.

வண்டுமுா னறுந்தெரியல் வசுசுருதன் வரைகுழைத்து வரிவி லேந்தும்
புண்டரிகக் கரதலத்துப் பெருமானைப் பத்திநனி புரிந்த காதை
விண்டநறை மடற்கமலச் சதுவேதன் வீணைமுனிக் கிசைத்த வண்ணம்
பண்டமறை வாமுனிவர் கேட்கவரு டருதமுனி பகர்வ தானன். (1)

தண்ணறுந் தருவளிக்கும் பசுங்கனக நிழலுமிழ்சத் தியலோ கத்திற்
பண்ணெழுங்கு மிசைவடித்துப் பேரியாழ் கின்னரர்கள் பயின்று பாட
வெண்ணரிய முனிவருந் தேவர்களுஞ் சதுமறையி னிறைஞ்சி யேத்த
வண்ணமடற் செழுங்கமலப் பீடிகைமே லரசிருந்தான் வாணி கேள்வன். (2)

அவிரழலிற் சிவந்தநெடுஞ் சடைமுடிநா ரதன்பரம னவையின் வந்து
துவலைநறு மலர்தூவி யன்னவன்சே வடிக்கமலந் தொழுது வீழ்ந்து
திவவுமணி யாழ்நரம்பு சுரந்தடவி யிசைபாடிச் சேவை செய்தா
னுவகைநெடுங் கடலமிழ்ந்தி முகநோக்கி யொருமாற்ற முரைப்ப தானுன். (3)

அளக்கரிய மறைக்கடலின் கரைகண்டே யுயிர்முழுது மளிக்கு மெந்தாய்
திளைக்கும்வா நதிமுடித்தோன் பத்தியோ கப்பெருமை செப்பு கென்னத்
துளக்கிமுடி கரமுகிழ்த்துக் கயிலைவரைப் பெருமானைத் துதித்துப் போற்றி
விளக்கமுறச் சதுமுகத்தோ னதன்பெருமை கேட்டியென விளம்பு வானுல். (4)

கலிநிலைத்துறை.

எந்தை நாயகன் புத்திவந் தெய்துவ தெளிதோ
வந்த மாதவங் கைவரி னழலிடுந் துரும்பின்
வெந்து நீறெழு மிருவினைப் பகுதியும் விரைந்து
முந்து மாகம மொழிதரு முத்தியு மடைவார். (5)

சித்த மன்புற வருமறை யனைத்தையுந் தெரிதல்
கொத்து வேள்விகள் யோகங்கள் குறைவறப் புரிதன்
மத்த மாடர வசைத்திடும் வானவ னிடத்திற்
பத்தி செய்வதற் கிணையல வுணர்ந்துரை பகரில் (6)

நீண்ட செஞ்சடை நிருமலன் சேவடிக் கமலத்
தீண்டு பத்திசெய் திடுபவ ரெப்பவஞ் செயினுந்
தீண்டு தற்கரி தாகியே புறமிடுந் தீயோர்
மூண்டு சேரினு மவாவினை முழுவது முடிப்பார். (7)

அந்த மண்ணழித் தருளர சைந்தரு நகா
மிந்த நன்னகர் மாயவன் வளநக ரிவைகள்
பந்த மற்றுயர் சிவபிரான் பத்தியோர் பதத்தைச்
சிந்தை செய்பவர் தெரிசனங் கிடைத்தவர் சேர்வார். (8)

பாவ மேற்படப் பயில்கொடும் புலையரா யிடினு
மாவ லோடும்வெண் பொடித்திரி புண்டர மணிந்தோர்
பூவெ டுத்தடி யிணைகளிற் றூவியே புகழ்ந்து
தேவர் யாவரும் பூசனை புரிதருந் தேவர். (9)

துளவ மாயவன் பாவருஞ் சோதியை நோக்கி
யுளம கிழ்ந்திடு தானமற் றுறுசெப முணர்ந்து
புளக மெய்திய தியான நூல் வழிமுறை புரியி
லளவ றுந்தனிப் பலத்தினை யொன்றுவந் தளிக்கும். (10)

கருது மட்டமி சதுர்த்தெசி பூரணை கருநாள்
வருதி னத்தினி லீசனை வந்தனை புரிவோர்
சுருதி சொற்றிடு பாகமனைத் தையுந்துக ளறவே
யரிதி னாற்றிய பலமெலா மொருப்பட வடைவார். (11)

மண்ட லேசுரம் புட்கா மதிமுடி யணவுங்
கெண்ட கைகுருக் கேத்திரங் கெயைதிரி பதகை
தெண்டி ரைக்கடல் கெழுமிடஞ் செங்தளிர்ச் சினைபோய்க்
கொண்டன் மேற்படர் தண்டலை யுருத்திர கோடி. (12)

சாத்தி ரங்கருங் குயில்பயி னயிமிசா ரணிய
நேத்தி ரம்புவிக் கெனுந்தவ நிறைபிர பாச
கேத்தி ரம்பிர யாகையில் வசிப்பவர் கிளக்குஞ்
சூத்தி ரத்தனி மறைப்படி பரிமகந் தொடங்கி (13)

ஆற்று வோர்தமக் கெய்திடும் பலனெலா மானை
யூற்று தெண்ணரு மலரெடுத் தொருபகன் மகிழ்ந்து
போற்று வோர்தமக் கடைந்திடு நாடொறும் பூசை
சாற்று மாகமப் படிசெய்வோர் தகையையா ரறிவார். (14)

நீடு செஞ்சடை நிமலனைப் பூசனை புரிவோர்
தேடி வேறொரு தேவர்கள் பூசனை செய்யி
லேடு லாமலர்க் காத்தொளிர் மணியினை யெறிந்தே
யோடு தேடிய பித்தரி லொருவரென் றுரைப்பார். (15)

எழுசீர் விருத்தம்.

விரிசடைப் பரனை யிலிங்கமா முகத்தில்
வியப்புறு பூசனை புரித
லரியமா தவர்க்கே கிடைத்திடும் பிறர்செய்
யரிச்சனை வேளையி லதனைத்
தெரிசனம் புரிந்து தெண்டனிட் டவருஞ்
சிந்தையி லிருங்களி திளைக்க
வருமறை நெறியிற் பவுண்டரீ கஞ்செய்
பலத்தினை யடைவது சாதம். (16)

ஈசனன் பரைநேர் காண்குறி லவரோ
டின்புற வொருமொழி பகரி
லாசறு மதிராத் திரமக மியற்றும்
பலத்தினை யடைவான் னவரை
நேசமே யின்றி யிகழ்ந்தவ ரழலு
நிரையமே காணிகொண் டிருப்பர்
பூசனை யவர்பாற் புரிந்தவர் சிவனைப்
பூசைசெய் திடும்பல மடைவார். (17)

கடுவிட மொடுக்குங் களத்தின னடியர்
கருதியோர் பிழைபுரிந் திடினு
மடியவர் பிழையென் றமலனே யதனுக்
கமைத்திடுந் தொழில்விளைத் தறுப்பன்
மடலவிழ் மலர்த்தா ரசராற் கொடிய
மறலியால் வருத்தமுற் றிளையார்
தொடருமிந் திரிய மவித்தா னடிக்குத்
தொண்டுசெய் பவர்களே கணங்கள். (18)

வருணமோர் நான்கும் வகுக்குமாச் சிரம
மறுமையும் வழங்குநற் குணத்தின்
பெருமையு மிழந்த நீசரே யெனினும்
பிஞ்ஞகன் பத்தியுள் ளவர்க
ளருவினைப் பிறவிக் கடல்கடந் திடுவ
ரளவிலாச் சமயம்வீழ்ந் திடினும்
விரிசடைப் பரமற் கடிமைபூண் டல்லால்
வீடுபெற் றிடுவதொன் றிலையால். (19)

துள்ளுதெண் டிரைக்கண் டுயில்வளர் முகிலும்
யானும்வண் டுடிக்கரத் தவன்பா
லெள்ளுறும் பத்தி புரிந்திரு பதமு
மடைந்தன நீயுமே சறவே
யுள்ளநெக் குருகி யியற்றிடுங் கருமம்
யாவையு மொழித்தவ னடியில்
விள்ளுதற் கரிய பத்தியே விளக்கில்
விரைவினின் முத்திவந் தடையும். (20)

கலிவிருத்தம்.

ஆடும் பாந்த ளயர்ந்து துயில்கொளச்
சூடுங் கொன்றைத் தொடையிற் சுரும்பினம்
பாடுஞ் செஞ்சடை யோன்பத்தி யோகத்தின்
கேடில் காதையொன் றோதுவன் கேட்டியால். (21)

பள்ள நீர்வய லெங்கும் பாந்துபோய்த்
துள்ளு மீனைத் தொடர்ந்து பசலைவாய்ப்
பிள்ளை தாவப் பெருஞ்சிறை நீக்கியே
யள்ளல் வீழ வணைக்குங் குருகுகள். (22)

கருநெ டுங்கட் கடைசியர் கொய்திடு
முருகி னெய்தன் முளரி முடிக்களைப்
பெருகு நீர்வயற் பிள்ளை நெடுவரம்
பருகு வீழ்த்தலு மன்னஞ் சிலம்புமால். (23)

ஆடல் வண்டின மந்தியுங் காலையுங்
காட லர்ந்த கருங்குவ ளைக்கணு
மேட லர்ந்த விருங்கம லத்தினும்
பாடல் செய்யும் பழனங்கள் பாங்கெலாம். (24)

ஆடு தெண்டிரை யார்கலி யேழுமோர்
நீடு வெண்டிரை நீரக ழாகவே
மாடு சூழ வளர்மதி மண்டலத்
தூடு போய்நிமிர்ந் தோங்கிடு மூதெயில். (25)

செஞ்சி லைக்கைத் திறன்மத னாகம
மஞ்சி லோதியர் சொல்ல வருகிளம்
பைஞ்சி றைக்கிளி பேசும் படர்நெடு
மஞ்சு தோயு மணிநெடு மாடமே. (26)

தாத னுப்பிற் சுரும்பினஞ் சோலைவாய்ப்
போதி ருந்து புதுமது வுண்ணுமென்
றோது காத லுரைக்க மடந்தைய
ராத ரத்தொடு மன்னங் கணிப்பரால். (27)

மற்ற டம்புயம் வாய்ந்த மவுணர்கள்
கற்றை மென்குழற் கன்னியர் நூபுரச்
சிற்ற டித்துணை சென்னி புனைந்தவ
ருற்ற கோபத்தி னூடலை மாற்றுவார். (28)

கறைய டிப்பெருங் காற்றளை நீக்கிநீர்த்
துறைவி டுந்தொறுந் தோகையர் பாலர்மெய்ம்
மறைதெ ரிந்தவர் வாரமென் றெங்கணும்
பறைய டித்திடு மோதை பரம்புமால். (29)

அந்த மங்கையர் மேடையி லங்கணை
சிந்து மன்மதன் றென்றலந் தேர்நெடுஞ்
சந்தி தோறுந் தனிவிளை யாட்டயர்
மைந்த ரூருரு மணிநெடுந் தேர்களே. (30)

எல்லை யின்றி யினையன வாகிய
செல்வ மோங்குமுச் சீனித் திருநகர்
மல்ல லந்நகர் மாமறை நூன்மனுச்
சொல்லு நீதியிற் காத்திடுந் தோன்றலான். (31)

அறுசீர் விருத்தம்.

அத்திரத் தடங்க ணல்லார்க் காடலஞ் சிலைவே ளன்ன
வித்தகக் குருசின் மோட்டு விறல்கெழு வலயத் தோளான்
சித்தம்வைத் தடல்வேன் மன்னர் செருவினில் வணங்குந் தாளான்
சத்தியத் துவச னென்னுந் தார்மணி மவுலி வேந்தன். (32)

அன்னவ னுலகுக் கெல்லா மாவியும் விழியும் போல
மன்னிய காவல் பூண்டு வான்முறை வழாம லாண்டு
பொன்னக ரடைந்தான் பின்ன ரவனருள் புதல்வன் பூத்த
மின்னவிர் வயவாள் வேந்தன் விறல்வசு சுருத னென்பான். (33)

அத்திரு நகரிற் றிங்க ளணிமுடி மாகா ளேசன்
முத்தியை யளிக்கு ஞான முருகுலாங் கமலத் தாளிற்
பத்தியை யிடையறு து பண்ணுவன் பரிந்து பூசை
நித்தியம் புரிவன் வேறோர் தருமமும் நினைதல் செய்யான். (34)

துட்டரை யருளிற் காப்பன் றுகளறு மனத்த ராய
சிட்டருக் கிடுக்கண் செய்வன் றீவினை யீட்டி யீட்டி
வெட்டிவெண் டிரைநீர் சிந்தும் வேலைசூ ழுலகி லுள்ள
மட்டிலா வுயிர்க ளெல்லாம் வருந்தவே வருத்தஞ் செய்வான். (35)

முந்திய மறைக ளோது முறைநெறி......யிலாதே
யந்தணர் புரியும் வேள்வி யவனரா லழிப்ப னந்தச்
செந்தழன் மறையோர் தம்மைக் காண்கினுஞ் சிவந்த தீய
வெந்தழல் விழிகள் சிந்த வெடிபட முழங்கிச் சீறும். (36)

மணிமுடி வேந்த ராற்று மனுமுறை யனைத்து நீங்கிப்
பணிமுடிக் கிடந்த தெண்ணீர்ப் பரவைசூழ் ஞால மெல்லா
மணிமுடி கவிழ்த்தி யாண்டா னுயிரம் பருவம் பின்னர்
தணிமுடி யுடைய னுகித் தளர்ந்துயிர் விடுக்குங் காலை (37)

கவரிலைச் சூல மேந்துங் கடுங்கொலை மறலி தூத
ரவனிடத் தணைத னேக்கி யவிர்மதி சடையிற் சூடுஞ்
சிவகணத் தவர்கள் வந்து தெய்வத வுடல நல்கிப்
பவமறுத் தவனீ யென்னப் பற்றியே மானம் வைத்தார். (38)

ஆங்கவர் செய்கை கண்டா ரந்தகன் கொடிய தூதர்
தீங்குறும் பதகன் றன்னை யித்தகை செய்தற் பாற்றோ
நீங்குவீர் நீவி ரென்ன நெருங்கின ராசன் றன்பாற்
பாங்குறு கணங்க ளன்ன பரிசினைப் பார்த்து நக்கார். (39)

அந்தகன் கொடிய தூத ரகலுமின் னீங்க ளென்னச்
செந்தழ னிறத்த குஞ்சிச் சிறுசடை திரளச் செந்நீ
ருந்துபே ரருவி பாய வுச்சியிற் கதையா லோச்சி
மைந்துறு தடந்தோள் வேந்தை மழுவலா னகரஞ் சேர்த்தார். (40)

வெள்ளியங் கயிலை நாதன் கணத்தவர் விளைத்த வெல்லாம்
வள்ளிலை யலங்கற் சூல மறலிதன் னவையி னெய்தி
யுள்ளவா றுரைத்துத் தூத ருலகுயி ருணங்கக் காய்ந்தா
னெள்ளருந் தரும மீட்டா திழிபவத் தலைமை பூண்டான். (41)

மறுமுறை நடத்தித் தெய்வ மகம்புரிந் தவனே வல்லன்
புனிதநான் மறையோர் தம்மைப் பூசனை புரிந்தோ னல்ல
னினியெடுத் துரைப்ப தென்னே யெத்தவம் புரிந்தான் வேந்தன்
பனிமதிக் கண்ணி யெம்மான் பதிபுகுந் திருக்கப் பெற்றான். (42)

இன்னணம் பதக ரெல்லா மிருங்கதி யெளிதிற் பெற்று
னின்னதி காரஞ் சற்று நடக்குமோ வென்ன நீண்ட
மின்னவிர் தண்ட மேந்தி மிளிர்மணி குயிற்றுஞ் சீயப்
பொன்னணை யிருந்த கூற்றுப் புகாறப் புகல்வ தானுன். (43)

கோச்சகக்கலிப்பா.

வஞ்சி யிடத்தான் மலர்த்தாள் சூடியிருத்து
நெஞ்சி னரையன்றி யெனக்கு நெடுநிலத்தோர்
விஞ்சு மிமையவர்செய் வெவ்வினைகண் டன்னவர்கட்
கஞ்சு துயரூட்டு மதற்கே யதிகாரம். (44)

ஏம வரைத்தடந்தோ ளேந்தல் வசுசுருதன்
மாமறைக ளேத்தெடுக்கு மாகாள நாயகனைக்
காமுறவே முக்காணத் தோடுங் கனிந்துருகித்
தோமறவே பத்தி தொலையாது செய்தனனால். (45)

வேந்தன் புரிந்தருளும் வெவ்வினைக ளன்னதனாற்
காந்துங் கதிரிற் கலந்தபனிப் போலொழிந்தான்
பாந்த ளுயிர்ப்பெறியப் பான்மதியங் கொன்றைபுகுஞ்
சேந்த நெடுஞ்சடையான் றெய்வ நகரடைந்தான். (46)

இன்ற தனைநீங்க ளறிந்தீ ரிலைபோலுங்
கொன்றும் முயிர்குடித்துக் கொள்ளாமை யிவ்வளவு
நன்றி புரிந்தார் நரையே றுயர்த்தபிரான்
வென்றி நெடுந்தடந்தோள் வீரப் பொருகணங்கள். (47)

துங்க மறையோன் சுவேதன் றனக்காக
வங்கை மழுவோ னெனையடர்த்தா னன்றுமுதற்
கங்கை தரித்தோ னடியார் தமைக்காணிற்
சிங்க மெதிர்த்த செருவிலங்கி லஞ்சுவனால். (48)

ஆதிப் பரனடியா ரென்னபவ மாற்றிடினுங்
காதற் கருத்தினொடு நீவிரவர்க் காண்டோறுஞ்
சீதத் தடமலர்க்கைச் சென்னி மிசைமுகிழ்த்துப்
போதப் படுவதுவே புத்தியுமக் கென்றுரைத்தான். (49)

மையொழுகு மேனி மறலி யிவையுரைக்க
வெய்ய கொடுந்தூதர் வெவ்வாய் விடங்கொழிக்கும்
பையரா வஞ்சூடும் பரமன் கணத்தவர்கள்
செய்த வருத்தமெல்லாந் தீர்ந்து மனங்களித்தார். (50)

என்ன மடற்கமலத் தெந்தை யினிதிசைக்க
மன்னு மணியாழ் வரமுனிவ னன்புருகிச்
சென்னி வணங்கித் திசைமுகனைக் கைதொழுது
பொன்ன நகரிற் றனதிருக்கை போயினான். (51)

முற்றும் விடய முனிந்த முனிசூதன்
சொற்றருளு மிக்காதை காதேற்றுச் சூழ்கிரண
நெற்றி யழல்விழியோ னேன்மை ?) நினைவரிதென்
றுற்ற தவத்தோ ருளத்துவகை பொங்கினரால். (52)

வசுசுருதன் பத்தியோக மகிமை உரைத்த அத்தியாயம் முற்றிற்று.

## 11. பிருங்கி பிரதெக்கிண மகிமை உரைத்த அத்தியாயம்.

எழுசீர் விருத்தம்.

சுருதிகற் றுணர்ந்த பிருங்கிமால் விடையூர்
சோதியை வலஞ்செய்த காதை
பொருதிரை யிரட்டும் பொருனையா றுடுத்த
பொதியவெற் புறைதமிழ் முனிக்குப்
பருதியொத் திலகு மார்பினன் வடிவேற்
பண்ணவன் பகர்ந்தருள் வண்ணந்
தெருளுற வுரைப்ப லென்றுமா தவத்தோர்
செவிகொளச் சூதனுண் டுரைக்கும். (1)

துப்புறழ் குடுமி வாரண முயர்த்த
தோன்றல்பொற் றுணையடி பரவி
யிப்பிவண் டுமிழ்ந்த சுடர்மணித் தாள
மெறிதிரைக் கருங்கடல் குடித்தோன்
செப்புகற் றரும மனைத்தினு முயர்ந்து
செனனமு மாணமு மொழித்தே
யொப்பருங் கதியை யளிக்குமோர் தருமம்
புகலென வன்னவ னுரைக்கும். (2)

மறுவறு பிரம சரியமே முதல
வகுத்தவாச் சிரமமோர் நான்கு
முறைதா வியற்ற லரிதரி தாக
மொழிதரு முடிவிலாச் சுருதித்
துறைபடு சோதிட் டோமமே முதல
வேள்விக ளனைத்தையுந் தொடங்கிற்
குறைபடா தவற்றின் விதிவழி திருந்தப்
புரிகுதல் யாவாற் கூடும். (3)

எளிதினி லிழைத்து முத்தியை யடையு
மிருந்தவ மிளநிலாக் கொழிக்கு
நளியமதிக் குழ்வி புரிசடைக் கணிந்த
நாதனை வலனுற வருத

றெளிதா வதன்சொற் காதையொன் றறைவல்
செந்தமிழ்ப் பெருக்கொடுந் தேங்கி
யளிபழுத் தொழுகுஞ் சிந்தைமா முனிவ
கேட்டியென் றறுமுக னறைவான். (4)

மின்னின்வீ ழனைய விரிசடை முனிவன்
பிருங்கியென் றருமறை விருப்போன்
பன்னக மணிந்த பரன்கழல் கருது
பத்திமிக் குயர்ந்தவற் காண்பான்
பொன்னவிர் குடுமிச் சிகரமந் தாம்போய்ப்
புகுந்தனன் புலன்களைந் தடக்கி
மன்னிருஞ் சிறுகால் வாய்மடுத் தமரா
வளருமாண் டயுதமாங் கிருந்தான். (5)

செந்தழ னன்கு திசையினுங் கனலச்
செழுங்கதிர் மேல்வெயில் விரிக்க
வெந்துடல் வருந்தக் கோடைநா ளிருக்கும்
விண்மழை பிலிற்றிடுங் கால
முந்தைநன் னிலத்தின் கொழுந்தளி வதியு
முழுவதும் பெரும்பனி யிருதி
லுந்துவெண் டிரைய குளிர்புன லுறையு
மின்னணந் தவமுயன் றுடைந்தான். (6)

நெஞ்சழல் கொதிக்க வருந்தினன் சிவனைக்
கண்டில னொருவழி நினைந்தான்
வஞ்சகந் தணந்த பெரியரை நேடி
வரதனைக் காண்டல்செய் வண்ண
மெஞ்சலி லியற்று மருந்தவந் தெரிப்பான்
வேண்டுமென் றெழுந்திரு வரையி
லஞ்சிறைச் சுரும்ப ருழக்கிய பொழிலு
மருவியங் கரைகளுந் திரிந்தான். (7)

அவ்வரை யிடத்தி னொருகுகை குறுக
வீரவா சனத்தொடு மலங்கு
செவ்விலஞ் சடையுந் திருந்துகண் டிகையும்
புண்டர நெற்றியுந் திவள

வெவ்வனற் கதிரோ ராயிர மெறிக்கும்
வெய்யவ னெனத்தனி விளங்கும்
பவ்வமுற் றெழுந்த வமுதினின் மறைகள்
பகர்சனற் குமரனைக் கண்டான். (8)

உள்ளநெக் குருகி யுவகையங் கடலி
லாழ்ந்தன னுருப்படக் குழைந்து
தெள்ளுநான் மறையின் முனிவனை வணங்கித்
தெண்டனிட் டுயிர்ப்பறக் கிடந்தா
னெள்ளருந் தவத்தின் பிருங்கியை நோக்கி
வியப்புற விருகையா லெடுத்துக்
கள்ளவிழ் மலரிற் கருகிய மேனி
தழுவினு னாசனங் கணித்தான். (9)

பாங்கரி னிருத்தி யவன்முக நோக்கிப்
பதுமவா னவன்மகன் பகரு
மோங்கிய வுடலந் தசையற வுணங்கி
யுறுப்பெலாந் தெரிதா விருந்தீர்
நீங்கருந் தவத்தான் வருந்தினீர் போலு
மென்கொலோ நிகழ்த்துக வெனலு
மேங்கிய யோகக் கடல்கடந் தனனென்
றருந்தவப் பிருங்கியாங் கிசைக்கும். (10)

இழைப்புறு தவத்தோய் நின்மலர்க் கமல
விணையடி பணிந்தபி னெளியேன்
மழைப்புயன் முகங்கண் டகங்களி துளங்கும்
வரிச்சிறைக் குருகென மகிழ்ந்தேன்
றழைப்பட ரிதழிச் சடிலியைக் காண்பான்
றவம்பல புரிந்திட ருழந்தேன்
கழைச்சிலை மதனைக் கட்டழற் கதுவக்
காய்ந்தருள் கடவுளைக் காணேன். (11)

ஈண்டியான் வருந்தி யெத்தவ மிழைக்கி
லெந்தைவந் தெனக்கருள் புரியு
நீண்டமுள் ளரைத்தா ணெடுமடற் கமல
நிருமலன் புதல்வவென் றிசைக்கத்

தீண்டருங் கனலிற் சிவந்தசெஞ் சடிலச்
செம்மலைச் சிந்தைசெய் திரந்து
பூண்டபே ரன்பு முழுப்பெருக் கெறிய
முனிசனற் குமாரனுங் கியம்பும். (12)

கலிநிலைத்துறை.

புலன்க ளைந்தையு மடக்கிய புனிதமா தவத்தோ
யலங்கு கூர்மழு வண்ணலைக் காண்பதற் கவனை
வலஞ்செ யுந்தவ மல்லது மற்றிலை வருக்கி
னலங்கொ ளத்தவப் பெருமையை நவிற்றுதற் கெளிதோ. (13)
முரிதி ரைக்கடு முழுவது மடங்கிய மூரிக்
கரிய கண்டனைக் காதலி னொடுவலம் புரியும்
பெரிய நற்றவப் பொற்பெறுங் கதியளித் தருள
வரிய மாதவ மில்லென மறையெடுத் தறையும். (14)
மற்றை வானவர் யாவரு மகிழ்தரும் பூசை
யுற்ற வெண்ணிடு வகையுப சாரமென் றுரைக்குங்
கற்றை வார்சடைக் கண்ணுதல் களிப்புறு பூசை
பொற்பி னோடவன் சினகரம் வலஞ்செய்து போதல். (15)
மூவர் மூதெயின் முருங்கழ லூட்டிய முறுவற்
றேவ தேவனை வலம்வரச் சிந்தையி னினைப்போர்
யாவ ராயினு மன்னவ ரியற்றிய கொடிய
பாவ முள்ளவை மருத்துறு விளக்கினிற் பகரும். (16)
பனக கங்கணப் பண்ணவன் பனிமதி தடவுஞ்
சினக ரந்தனை வலஞ்செயிற் சிற்பான் மகிழ்விற்
கனக வொண்மதி ளகத்துறுங் கடவுள ரெவரு
மனம ருங்களிப் பினிதுற வழிவசம் வருவார். (17)
கடமு டைத்திழி கலுழிபாய் கரியத ளுடுத்த
தொடிம லர்க்காத் தோகைதன் பங்குறை சுடரை
யடைவி லன்பொடும் வலஞ்செயி லருளணி மாதி
படரும் பன்னரு முத்தியுங் கைவரும் பகரில். (18)
இத்த வத்தினை யீசனுக் கன்பாய் நின்போன்
முத்தி நேடிய மூதறி வினர்களுக் கன்றிச்
சித்தம் வஞ்சகங் கிளைத்திடத் தீநெறி விளைக்கும்
பத்தி யின்றிய பதிதருக் குரைத்திடற் பாற்றே. (19)

மறிந்த வெண்டிரை வாநதி வார்சடை யோனைச்
சிறந்த தோர்பிர தெக்கணம் வந்திடு செய்கை
யறிந்து செய்யினு மதையறி யாதுசெய் திடினும்
பிறந்த யாக்கையி லிருங்கதி யடைகுவர் பேசில். (20)

என்று மைத்ததன் காதையொன் றிசைக்கு மெவ்விடனு
மொன்று நான்மறை புகலருந் தொழுகுலத் துதித்தோன்
றுன்று வெஞ்சினம் பாதக மனைத்தினுந் துருவிச்
சென்ற சிந்தையன் காலவ னெனுமொரு தீயோன். (21)

ஆக மம்பயி லருமறை நெறிமுழு தகன்றோன்
போக மங்கையர் பூத்திடுங் காலமும் புணர்ந்தோன்
மோக மிக்குறப் பிறர்மனை தழுவிய மூடன்
சேக ருங்குரு பத்தினி யிருநலந் திளைத்தோன். (22)

ஈன்ற தாயையுந் தந்தையு மீர்த்துயிர் துறந்தோன்
றோன்றும் வெவ்விடங் கொடுத்தய லவருயிர் தொலைத்தோ
னூன்ற பால்பொழி யாவின மடுதொழி லமைந்தோன்
கான்ற வெவ்வழல் கட்டிய மனைதொறுங் கலந்தோன். (23)

இன்ன தன்மையன் றீவினை வழிநிதி யீட்டிக்
கன்னல் வேலியங் கழனிசூழ் கலிங்கநா டணுகி
மின்னி னுண்ணிடைப் பரத்தையர் வீதிசென் றடைந்தோர்
பொன்ன மேகலைப் புணர்முலைப் போகமுண் டிருந்தான். (24)

காத லோடுமக் கணிகையைக் கைகலந் துறைந்தே
யோது நாள்பல கழித்தனன் றிகைப்புற வொருநாட்
பாத கனவண் மனையிடத் தந்தகன் பணித்த
தூதர் கைக்கொளத் துணுக்கெறிந் தாருயிர் துறந்தான். (25)

மாண்ட யாக்கையை மந்திர வழற்படுத் தாது
நீண்ட பாசம்வன் கழலிணை பிணித்தய னின்றோர்
தீண்டி வாங்கின ரப்புறந் தெருத்தலை கடந்து
மூண்டு முள்ளடர் முதுவனத் தெறிந்தனர் முடுகி. (26)

தீய காலவற் பற்றிய தென்றிசைக் கொடியோ
ராய தூதர்கள் ரவுரவ மாதிய நிரையந்
தோய வீழ்த்தன ரன்னவ னவையிடைச் சுழன்றுட
பாயுந் தெண்டிரைத் துரும்பெனக் கிடந்தனன் பதைத்தான். (27)

கோச்சகக்கலிப்பா.

அன்னதகை நரகினிடை யளப்பருநாள் கழித்தெழுந்து
கன்னம்வெடி படுங்குரல்வாய்க் கழுதைவடி வெடுத்துழந்து
பின்னாத னுடனீங்கிப் பிறங்குதழற் சுழல்தறுகட்
டுன்னுகுறு மயிரிகல னுருவெடுத்துத் துயருற்றான். (28)

ஓதுமதன் பிறப்பொ ழுவி யொருகோடி விலங்கினத்தின்
றீதுறுபா தகச்சென்னம் வெவ்வேறு சென்மித்து
மாதுயரக் கடற்படிந்து மெலிந்ததற்பின் வனங்கடொறுங்
கோதுறுவெங் கழுகாகி நெடுங்காலங் குலவினன். (29)

இன்னணமா யெருவைசுழன் றிடருறுகா லத்தொருநாட்
பன்னுமறை முறைதெரிந்து பரமனடி யரைப்பணிந்து
பொன்னின்மலர்ப் பதம்வழுத்திப் போனகங்கண் மகிழ்ந்தளித்துத்
தன்னிலையம் புனலடக்குஞ் சங்குகன்ன னெனுமுனிவன் (30)

தெண்ணிலவு முடிப்பானை வந்திப்பான் சிந்தைகளித்
தெண்ணியவ னலயஞ்சென் றுவின்பா லினீர்நெய்
கண்ணுறுதீங் கழைச்சாறு பசுந்தேன்முக் கனிகலவை
நண்ணியசந் தனக்குழம்பு நனிப்பெருக்கி னினிதாட்டி (31)

வாசநறு மஞ்சனநீர் மாமறைமந் திரமாட்டிப்
பூசுசெழுஞ் சாந்தணிந்து பொன்னுடை மருங்கசைத்து
வீசுமரு மலர்க்கமலம் வில்லமுத லனசாத்திக்
காசகலுஞ் சாம்புநதக் கனகமா லிகைவனைந்து (32)

நெய்கலந்த போனகங்கள் பணியார நிவேதித்துச்
செய்யநறும் புகைதீபம் பணிமாறிப் பலிதிருத்தி
நையுமிடை மடந்தையர்கண் டிகைக்கவியம் பலமுழங்க
வையனையெம் பெருமானை யிலிங்கத்தி லர்ச்சித்தான். (33)

விதிமுறைமா தவமுனிவன் வந்தனைசெய் வேலையினின்
முதுகழுகு வெம்பசியா லிரைதேடி முகங்கருகி
மதியணவு சினகரத்தின் மணிமுன்றின் மாத்தடையக்
கதிர்நிலவு பொற்பீடப் பலியடிசில் கண்ணுற்றே (34)

உள்ளமிகுங் களிதுளங்க வொருநொடியிற் பறந்தோடி
வெள்ளமணி சடையார்தம் பலிப்பீட மிசையிருந்து
வள்ளமடுத் திடுமெழுதை வாய்மடுப்ப வயனின்ற
வள்ளிலைய வேற்காளை யொருவனது குறித்தழன்றான். (35)

எந்தைபெரு மான்றிருமுன் பலிப்பீடத் திழிகழுகு
வந்துறைதல் கடனன்றே யென்னவரி சிலைகுழைத்துச்
சிந்துகடுங் கணைபாய்ந்து செங்குருதி தாரணியெழ
முந்துபெருஞ் சிறையடித்து முதுபாரில் வீழ்ந்ததுவே. (36)

குறையுயிர்மென் களந்துடிப்பக் கொழுஞ்சோரிச் செழுஞ்சேற்றி
லிறகொதுக்கி யிருகாலு மெடுத்துதையு மேல்வைக்கண்
டெறுசினவெங் குரன்ஞாளி சிறைவவ்வி யிழுத்திடலும்
பிறிதொறுநா யதுகவரப் பின்றொடர்ந்து பெயர்ந்தோட (37)

வாயுறையுங் கழுகினெடும் வானிமிர்த்துப் பின்னொதுக்கித்
தீயசுவா விரும்பயத்தாற் சினகரத்தை வலனுக
மேயவிளைப் புறப்பலகால் விரைந்தோடும் வேலையினி
லாயுமறை முனிவனுக்குக் கணத்தலைமை யளித்தருள (38)

மேருவரைச் சிலைகுனிக்கும் விண்ணவனே வுதலோடுங்
காரனைய கறைமிடற்றுத் திருநந்தி கணஞ்சூழ
வூருநெடுங் கொடிமான முகைத்தவண்வந் திறங்குதலு
மார்வமொடு சங்குகன்ன னவன்கமல வடிவீழ்ந்தான். (39)

வணங்கியநற் றவத்தோனை நந்திமலர்க் காங்கொடுத்துக்
கணங்கொண்மணி மானத்தின் மிசையேற்றிக் கண்ணுதலோ
னிணங்குதிருச் சினகரத்தை வலஞ்செய்தே யிளைத்துளநா
வணங்குமிரு நாய்களொடுங் கழுகினையு முருமாற்றி (40)

தெய்வவுரு வினிதளித்துச் செந்துவர்வாய்க் கருநெடுங்கட்
டொய்யின்முலை யணங்கினர்சேர் சுடர்மானத் திடைவைத்து
வெய்யதழல் விழிப்பாமன் முன்கொடுபோய் விடுத்திறைஞ்சக்
கையின்மழுப் படையுயர்த்தோன் றிருக்கடைக்கண் கணித்தருளி (41)

தண்ணளிநற் றவத்துறைபோஞ் சங்குகன்ன முனிவனுக்கு
மெண்ணரிய கொடும்பாவ மீட்டியதோர் கழுகினுக்கு
நண்ணியடு கொலைபுரியு நான்றநா நாய்களுக்குங்
கண்மயம்வந் துறவரிய கணத்தலைமை யளித்தனனால். (42)

இனையனபார்த் தருணந்தி யெந்தைமல ரடிபரவி
வினவுமளி பழுத்தெழுகுஞ் சங்குகன்ன வியப்பினெடு
நினைவழுத்து மிருந்தகைய பூசனைநன் னெறிசார்ந்தோன்
மனமுருகி முற்பிறப்பு நின்சரியை வழிநின்றான். (43)

கானுறையுங் கழுகுமுதற் காலவனு கியகொடியோ
னீனமுறு மிருநாயு முன்னருளை யிகழ்ந்துகொடுங்
கூனும்வரி சிலைத்தொழிலா லுயிர்துறக்குங் கொலைவேட
ரானவர்க ளிவைகளுங் கண்புரக்கு மாசாட்சி. (44)

அன்னவனே டொருகாலத் தருள்புரிந்த வதிசெயமீ
தென்னையிது வெளியேனுக் கினிதியம்ப வேண்டுமெனச்
சென்னிநதி திவலைபடக் கம்பித்துச் சிற்பாமன்
புன்னகைகொண் டிதழ்க்கமலப் போதுதிறந் துரைபுகல்வான். (45)

எனக்குமனங் களிப்புவா வியற்றுபெருந் தருமங்க
ளனத்துவச முயர்த்தவனு மாழிநடுத் துயில்வோனுந்
தினைத்துணையா யினுந்தெரிக்கத் தெரியாத செய்கையவா
நினக்கவைக ளுணர்த்துவல்யான் கேட்டியென நிகழ்த்துவனால். (46)

சொல்லரிய தருமங்க டொகுத்துரைக்கிற் பலவுளவா
நல்லபெருந் தருமங்கள் யாவையினு மிதுநாடிற்
பல்வகைய பவநீக்கிப் பரமுத்தி வழிகாட்டு
மெல்லொழியு மாலைபுகுந் தெம்மைவல னுறவருதல். (47)

உரைத்தவிதி வழியெம்மை யொருமுறையா யினும்வலமே
திருத்தமுற வருவோர்க டீயபெரும் பவமொழிப்பர்
கருங்கடலைக் கடத்துமொரு கருதரிய மெய்ஞ்ஞானம்
வருத்தமற வடைந்தெமது மலர்ப்பாத மனைவாழ்வார். (48)

ஈதன்றி விளையாட்டாற் பிறர்க்கஞ்சி யேகுங்காற்
றீதொன்று நிந்தனையான் மற்றொருவர் சேர்கையினாற்
போதொன்று முணராமே யெம்மைவல னுறப்போதிற்
கோதொன்று பவநீங்கி முத்திநெறி கூடுவரால். (49)

தொன்மைதரும் பவமிழைத்த விலங்கேனுந் துகடீர்ந்த
சின்மயமாய் விளங்குபிர தெக்கணமென் றறியாது
புன்மையினாற் புரிந்திடினு மெவையாலும் போகாத
கன்மமெல்லாங் கரிந்தரிய கதியடைதல் கடனன்றே. (50)

என்னவிவை யெந்தைபிரா னந்திதனக் கினிதிசைத்தா
னன்னவனிக் காதையினை யெனக்குரைத்தா னாதலினான்
மன்னுபுல னைந்தடக்கும் பிருங்கிவர மாதவத்தோய்
நின்னிதயச் செயல்கண்டு நினக்கிதனை நிகழ்த்தினனால். (51)

வன்கழுகு மிருநாயு மறியாது மதிமருடப்
பொன்புரையு நிறத்தானை வலம்வந்து பொருவரிய
வின்பமுறுங் கணத்தலைமை யெய்தியவென் ருலிலகி
யன்பிெனாடு மதுபுரிவோர் பெறுங்கதியா ரறிவாரால். (52)

சங்கானை மனங்கனிந்து வலம்புரியுந் தகையன்றித்
துங்கமுறு தவம்வேறொன் றுளதெனச்செய் திடத்துணிவோர்
கங்கைநதி புடைகிடந்த காசிவள நகர்நீங்கிப்
பங்கமுறு கீகடதே சத்தணையப் படர்வாரால். (53)

அறுசீர் விருத்தம்.

இருந்தகைச் சனற்கு மார னின்னணந் தெரித்துக் கூறப்
பெருந்தவ மறைக ளோதும் பிருங்கியன் னவனை யேத்தி
வருந்துவெம் பிறவி மாற்ற வாதனைக் காண நின்றுற்
பொருந்திய வழிகண் டேனென் றத்தவம் புரிவான் போனன். (54)

தும்பிபாட் டயருங் கொன்றைத் தொடைபுனை சோதி நண்ணுஞ்
செம்பொனு லயமொன் றெய்திப் பருவமீ ரைந்து செய்யப்
பைம்பொன் மால்வரையை நாளும் பகல்வலம் வருதல் போல
வும்பர்நா யகனைச் சிந்தை யொருப்பட வலஞ்செய் தானே. (55)

மாதவன் செயலை நோக்கி மதர்மதர்த் தொழுகும் வேற்கட்
காதலி னிமைய மீன்ற கனங்குழை யருகு போதப்
பாதிவெண் மதியஞ் சூடும் படர்சடைப் பரும யானை
சேதகக் கமலச் செங்கேழ்ச் சீறடிக் குறத்தி கேள்வன் (56)

விதிமகன் மகத்தைச் சீறி வெறுந்தரை படுத்தும் வீரன்
முதுதவம் புரிந்த ஞான முறைமுழு துணர்ந்த நந்தி
கதிபெறத் தாதை செம்பொற் கழலிணை தடிந்த தண்டி
சதுமற்ற துதித்துச் சூழக் கணங்களின் றலைவ ரான (57)

முத்தவெண் குடையின் காளா முகாருட் சங்கு கன்னர்
வித்தகத் திறத்தின் மிக்க மயூரகர் மேக ராசி
யொத்தவெங் கரியின் கன்ன ரொழுகொளி திவளும் செம்பு
வத்திரர் பிரகார சேனர் விடூரதர் வாம சேனர் (58)

அனையவ ராதி யாய வருளினோ ரடலின் மிக்கோர்
கனைகதிர் மடுத்து வீசுஞ் சதக்கினி சத்தி கட்க
முனைகெழு பிண்டி பாலந் தோமர முசலங் குந்தம்
வினையடர் சூல நேமி பட்டிசம் வில்லு டங்கம் (59)

கரங்களிற் றுலங்கத் தாங்கிக் கதிர்மணிப் பணிகள் வேய்ந்து
பரம்பியெம் மருங்குந் தெய்வப் பல்லியந் துவைத்துச் சூழச்
சுரும்பிமிர் பூவை மேனித் தோன்றலுங் கமலத் தோனும்
புரந்தான் முதலா யுள்ள புலவரும் பணிந்து போற்ற (60)

என்னையா ளுடைய மூர்த்தி யென்றுகை தொழுது தோன்ற
வுன்னருந் தவத்தின் மிக்க பிருங்கிபே ருவகை பொங்கக்
கொன்னவிர் சூல மேந்துங் குழகனை வலஞ்செய் தேத்தி
யன்னவன் றிருமுன் பாரி னடியறு மரம்போல் வீழ்ந்தான். (61)

அத்தகை புரிதல் கண்டா ளரவுகட் செவிகொண் டேறக்
கொத்துவண் டுழக்கிப் பாடக் கொன்றைதேன் சொரியும் வேணி
மத்தனைப் பரம வாழ்வை மதிபுரை வதன நோக்கி
முத்துறழ் முறுவற் செவ்வா யுமையிவை மொழிவ தானாள். (62)

தண்ணளிப் பரவை தேக்கி யுயிர்ப்பயிர் தழைக்கு நல்கு
மண்ணலே யெளியே னாவிக் காருயி ரான வைய
வெண்ணரு மறைக ளாய்ந்து முனிவா னென்னை நீக்கிப்
பண்ணினான் வலஞ்செய் தேத்தும் பான்மையிப் பதகற் கின்று.(63)

நின்னிரு கடைக்கண் சாத்தி நிறையரு ளளித்தல் வேண்டா
வென்னலு மிறைவன் கூறு மிருந்தவக் குரவ னன்று
சொன்னநல் லுபதே சத்தா லெமைவலஞ் சூழ்தல் செய்தான்
பொன்னவிர் திதலைக் கொங்கை கடுஞ்சினம் பொறுத்தி யென்றான். (64)

என்றலுங் கரிய கூந்த லுமையவ ளிசைக்கு மெந்தாய்
நன்றுநன் றூசா னின்னை வலஞ்செய நவிற்றி னானேல்
வென்றிவாள் விதிர்த்துத் தாதை விரைமலர்ச் சரணம் வீட்டி
யன்றனைப் பணிந்த தண்டி யாதிவா னவர்க ளன்றி (65)

தனிவல னியற்றி னாலும் பேதமாந் தன்மை யோரா
தெனையிகழ்ந் தீது செய்த லென்னையென் றிசைத்துச் செய்ய
கனியிதழ்ப் பவளம் விண்டு குறுநகை கவினக் காட்டிக்
குனிசிலைப் புருவங் கோட்டி விழிக்கடை குறித்து நோக்க (66)

மருந்தினு மினியாய் நின்னைத் தனிவலம் வரைந்து போன
வருந்தவ முனிவன் காண வெனதுரு வாக மோர்பாற்
றிருந்தவே பொலிந்து தோன்றல் செய்குதி பேத மின்றிப்
பொருந்துற வழிபட் டானேற் கருணையாற் புரக்க வென்றான். (67)

மலர்தலை யுலக மெல்லாம் வயிற்றிடைச் சுமந்தே யீன்ற
கலகவே னெடுங்கட் செவ்வாய்க் கவுரியாங் கினிது கூற
நிலவுவெண் டரளக் கொங்கை நேரிழைக் கொருபா னல்கிப்
புலவுமுத் தலைவே லேந்தும் புங்கவன் மகிழ்வு பூத்தான். (68)

விரிசடை யோர்பான் மாலை மென்கருங் கூந்த லோர்பா
லெரிசுடர்த் தடங்க ணோர்பா லெழுதுமை விழிவே லோர்பாற்
பொருமழுக் கரமோர் பாற்பொற் பொன்றொடிக் கமல மோர்பால்
வரிவயப் புலித்தோ லோர்பான் மணிக்கலை யோர்பா லாக. (69)

வடவரை யொருபாற் பச்சை மணிவரை வளைத்த தென்னக்
கடவிடை யரவப் பாயற் கண்வளர்ந் தருளுந் தெய்வ
வடல்விடைப் புரத்திற் றோன்று மமலனை முனிவன் கண்டான்
படர்தரு மிறும்பூ தெய்திப் பரவச மாக நின்றான். (70)

அருமறை யனைத்துஞ் சொல்லு மாகம புராண முற்று
மொருவழி யுணர்ந்து ஞானத் துவரிபுக் கழுந்தி னாலும்
பரிவொடும் வீடு நல்கப் பரமன் வந்தெதிர் நின்றாலுங்
குருமொழி பிழைத்தோர்க் குண்டோ பரகதி கூடுந் தன்மை. (71)

மும்மலக் குடம்பை நீக்கி முனிசனற் குமரன் சொன்ன
செம்மொழி சிதையே னென்னச் சிந்தையிற் றுணிவு கொண்டு
கைம்மலர் சிரத்திற் கூப்பி மறைத்துதி கனிந்து பாடி
மைம்மணி மிடற்றோன் பாக மீளவும் வலஞ்செய் தானே. (72)

தன்னொரு பாதி யன்றிச் சங்கரன் றனது பாதி
மன்னுமா தவத்தான் பின்னும் வலம்வருஞ் செய்கை கண்டான்
முன்னர் நான்மறைக ளேத்து முதல்வனோ டேக மாய
வென்னையீங் கிகழ்ந்தா னென்ன வெம்பெரு மாட்டி சீறி (73)

முனிவனை யிழுதை யாகச் சபித்திட முனிவ தானுன்
பனிமதி நிலவு வேணிப் பண்ணவ னுமையைப் பார்த்துக்
கனிமொழி குருவின் வார்த்தை கடந்திடா தியற்று கின்ற
புனிதமா தவனை யஞ்சச் சபிப்பரோ பொறுத்தி யென்ன (74)

மலர்க்காம் வளைத்துப் புல்கி வழங்கலு மலையின் வல்லி
யிலைக்கவர்ச் சூலத் தைய வின்றுதொட் டென்னை யாரும்
விலக்கியே வலஞ்செய் வோர்க ளதன்கதி மேவா வண்ண
நலத்தகு வரமீ யின்று தருகென நகைத்து நாதன் (75)

அவ்வா மளித்தே மென்ன வலங்கிழை மகிழச் சாற்றித்
திவ்விய மனத்த னுய முனிவனைத் திருந்த நோக்கி
மவ்வல்வா ணகையை நீக்கா தென்னைநீ வலஞ்செய் தென்ன
நவ்வியங் கண்ணி யோடு நாதனை வலஞ் செய்தானே. (76)

முறைபட வலஞ்செய் கின்ற முனிவனைக் கண்டு முத்தப்
பிறைவடங் கிடந்த கொங்கை யுமைபெரி துவகை கூர்ந்தாள்
கறைபடு கதிர்கொள் சூலக் கண்ணுத லவனைக் கூவிக்
குறைபடா தளிப்பல் வேண்டும் வரமினிக் கூறு கென்றான். (77)

சந்தநான் மறைக ளோதுஞ் சதுமுகன் முகுந்தன் காணு
வெந்தையா ருரைத்த மாற்ற முனியிரு செவியி னேற்றுக்
கொந்துலாங் கலசச் செங்கை யுச்சிமேற் குவித்து வீழ்ந்து
புந்தியன் புருகி நின்று துதிமுறை புகல்வ தானன். (78)

போனக முதல வுண்டி போதவுண் டாசைக் காளாய்
மானமில் லாதுசெய்த நன்றியை மறைக்கும் வஞ்சத்
தீனனைத் சுசியொன் றில்லாச் செடனைநெட் டூரஞ் செய்யு
மீனனை யென்னை யாள விரங்குதி யெந்தாய் போற்றி. (79)

எனத்துதி பலவும் பாடி யென்றுநின் னிணைப்பொற் பாத
நினைப்புறு மன்பென் னுள்ள நிறைதர வருள வேண்டு
முனைத்தலை மூன்று கொண்ட மூரிவே லுயர்த்த நாதா
கனக்கருங் கூந்தல் பங்கா வென்னலுங் கருணை சாத்தி (80)

வணங்குநற் றவனுக் குள்ள மகிழ்வா நூறு கோடி
கணங்களுக் கரசு நல்கிக் கயிலையுங் காணி யீய்ந்தான்
றுணங்கையிட் டலகை யாடச் சுடுமுது காட்டி லாடும்
பிணங்குசெஞ் சடையோன் வெள்ளிப் பிறங்கன்மேற் சார்ந்தா னன்றே. (81)

பிறங்கிய வெள்ளி வெற்பிற் சிவனொடும் பிரியா வண்ண
மறங்கிளர் முனிவன் செம்மாந் துறைந்தன னவனன் றேதுந்
திறங்கிள ரமுதத் தீஞ்சொற் றுதியினைச் செப்பி னோர்கண்
மறங்கிளர் மழுவ லான்றன் மலர்ப்பத மெளிதிற் காண்பார். (82)

மாயிருங் கருணை பொங்க வாதனை வலஞ்செய் தேத்து
மேயநற் றவத்தின் றன்மை யனைத்தையும் விளம்ப வேண்டி
லாயிர முகங்கொண் டாலு மறைவதற் கரிதே யென்றாற்
றூயவென் முகமொ ராறுங் கொண்டது சொல்லற் பாற்றே. (83)

கலிவிருத்தம்.

பெருவரை நெடுமுகம் பிளக்க நெட்டயில்
செருகிய சேவக னீது செப்பலுங்
கருதியன் னவன்மலர்க் கழல்க ளேத்தியே
முரிதிரை யிருந்துமா முனிவன் கூறுவான். (84)

நிருத்தனை வலம்வருந் தவத்தி னீர்மையை
யுரைத்தனை யதன்விதி யுரைத்தி யென்னலுஞ்
சிரித்தடை யலர்புர மூன்றுந் தீயெழ
வெரித்தவன் றிருமக னிசைக்கின் றனரோ. (85)

ஈசனை வலம்வருந் தவத்தி னிவ்விதி
பேசினர் யாவருங் கேட்ட பேர்களு
மாசறு குளிர்புன லடைய மூடிய
பாசியி னுயிர்பொதி பாசம் நீங்குவார். (86)

இனையன விதியினை யிறைவ னோதிய
கனிதரு மிசைமறை கழறும் வண்ணமே
நனிதர வறைகுவ னவிலு நற்றமிழ்
முனிவர மகிழ்வொடு முறையிற் கேட்டியால். (87)

சென்னியி லெண்ணெய்நெய் தடவல் சேகறு
பொன்னவிர் கலையதிற் புனைத லன்றியு
முன்னருந் தும்மல்கொட் டாவி யொண்டொடிக்
கன்னியர் தங்களைக் கருத்தி னுடுதல் (88)

கழுத்தினை யொருபுற முடக்கிக் கைத்துணை
யிழுத்திழுத் திருபுற மெடுத்து வீசியே
யொழுக்கமற் றடியிணை யுதறி வைத்திடன்
முழுத்திடு தீதிவை முற்று நீங்கியே (89)

ஓதிய வருணமோர் நான்கி னுற்பவித்
தேதமி லீரிரண் டென்னு மெண்ணிலா
வேதநூல் விளம்புமாச் சிரம மேவியே
யாதிநா யகன்றனக் கன்ப ராகியே (90)

அலைமடுத் தெறிபுன லாடி யாடைசூழ்ந்
திலகிய மேனியி லிடைவி டாதுவெண்
ணிலவுமிழ் வெண்பொடி நிறையப் பூசிவார்
மலைதரு கண்டிகை மாலை சாத்தியே (91)

எண்ணெய்பெய் குடந்தலை யிருத்திக் கைகளைப்
புண்ணுறப் பின்னரிற் பொருந்த வீக்குபு
கண்ணுறு குறுந்தளை காலிற் பூட்டியே
நண்ணுசூன் முதிர்ந்தவர் நடத்தல் போலவே (92)

மெல்லெனு நடையினல் விமலன் செம்மலர்
நல்லபொற் கழன்மன நடுவி ருத்தியே
மல்லலஞ் செழுத்தையும் வழங்கி நாவினற்
சொல்லருந் தோத்திரந் துதித்துப் பாடியே (93)

மஞ்சிவர் பனிவரை யுதவும் வல்லியைச்
செஞ்சடைப் புகர்முகச் செங்கை யானையை
யஞ்சிறை மயிற்பரி நடத்து மண்ணலைக்
கஞ்சநான் முகன்றலைக் கபால மேந்தியே (94)

நிந்தையிற் செருக்கின னீக்கி டாதுசெவ்
வந்திவா னிறத்தனை யருள்பெ ருக்கெடுத்
துந்துபே ரலையெறிந் தொழுகு மூர்த்தியை
யெந்தையைத் தனிவல மிடுத னன்றரோ. (95)

முத்தனை வலம்வருந் தொகைமொ ழிந்திடி
லுத்தம நூற்றிரு பத்தெட் டோதுங்கான்
மத்திம மறுபத்து நான்கு மற்றத
னத்தமா முப்பத் திரண்ட தன்மமே. (96)

தகைபெறு மிவைபுரி யாத தன்மையோர்
வகைபடு தொகைகளிற் பாதி மற்றவை
பகவரு பாதியே யெனினும் பத்தியா
லகமகிழ் வொடுந்தின மாற்றல் வேண்டுமால். (97)

ஆருயிர் துறந்திடு மளவு மய்யனைச்
சீர்பெற வலம்வரு வோர்செய் தீவினை
வேரறு ஞானமும் விளைந்து வெந்துயர்ப்
போழல் வருமெழு பிறப்பு மாறுமால். (98)

குலனுறு பிதிர்கள்வெங் கொடிய கும்பிவீழ்ந்
தலம்வரு கொடுந்துயர் தவிர்த்தன் னேரொடு
மிலகொளி கிளர்சிவ லோக மெய்துவார்
மலைமகள் கொழுநனை வலஞ்செய் வோர்களே. (99)

அள்ளிலை மழுப்படை யானை யைம்முக
வள்ளலை வலஞ்செய வளரு மன்பின
ருள்ளநெக் கோடி பெயர்க்கி லோங்கிய
வெள்ளிவெற் போரடி விரைந்து முன்வரும். (100)

சூரியன் வடவரை சூழ வந்ததின்
சீரிய வொளியடைந் திலகு செய்கைபோ
லாரிபங் கனைவல நடந்து சூழ்வரி
னீர்வினை தொலைந்தவ னியல்பி னெய்துவார். (101)

கண்ணுதற் கடவுளைக் கபிலை யாளியைப்
புண்ணிய மூர்த்தியைப் புனித நாதனை
வண்ணவெள் விடையனை வலஞ்செய் தேத்துவா
ரெண்ணருங் கிளையொடு முத்தி யெய்துவார். (102)

ஓங்கிய யாக்கைமண் ணுழுது ருண்டுமெய்ப்
பாங்குறப் பரமனை வலஞ்செய் பான்மையோர்
நீங்கரு மலமவை மூன்று நீங்கிய
தேங்குநீ ருலகினிற் சீவன் முத்தரே. (103)

கன்னியங் கடம்பலர் கமழுந் தாரினு
னின்னண மயர்வற வெடுத்தி சைத்தரு
ளன்னவா சகஞ்செவி மடுத்த கத்திய
னன்னலங் கனிந்துள நயந்து விம்மினன். (104)

இக்கதை யுரைப்பவ ரினிது கேட்பவர்
மைக்கருங் குழலுமை மடந்தை பங்குறை
முக்கணன் கயிலைமா முடியின் வீற்றிருந்
தக்கணங் களுக்கா சாகி வாழ்வரே. (105)

இருவினை க்டந்தருள் சூத னிக்கதை
தெருளுற வுரைத்திடத் தெளிந்து மாதவ
ருவினைப் பிணிக்கிழங் ககழ வீதொரு
கருவியென் றடிக்கடி களிது ளங்கினர். (106)

பிருங்கி பிரதேக்கிண மகிமை உரைத்த அத்தியாயம் முற்றிற்று.

## 12. இராசா பிரதெக்கிணம் பண்ணின கதை உரைத்த அத்தியாயம்.

அறுசீர் விருத்தம்.

செந்தழலி னிறங்கவரு மிளந்தளிர்வாய் முறைகோதித் தேமாங் கொம்பின்
வந்துகருங் குயின்மிழற்று நயிமிசா ரணியவரா முனிவர் கேட்ப
விந்துநெடுஞ் சடைப்பரனை யொருவேந்தன் வலஞ்சூழ்வந் திறைஞ்சு காதை
புந்திமகிழ்ந் துரைப்பலெனக் கருணைபொழி சூதமுனி புகலு மாதோ. (1)

பெரியவரை யடைந்தோர்க ளவர்கள்வளம் பெறுவரெனப் பேசு மாற்றாற்
றிருவுறையு மன்னகர வளனதுபோன் மான்மதமுஞ் செழுந்தண் சாந்தும்
விரிகதிர்வெண் ணித்திலமு மணிக்குவையு மாடகமும் விரைந்து வீசிப்
பொருதுதிரை புரட்டிநெடுங் கரைமடுத்துப் புடையொழுகும் பொன்னி யாறு.

செழும்பவளக் கொடியிடறிக் குடவளைகள் சினைபிதிர்ந்து சிதறு முத்த
முழும்பகடு கால்வழுக்கி மறுகுமென மள்ளரெடுத் தொருங்கு கூட்டக்
கொழுங்குதலைக் கடைசியர்கள் கூடைமடுத் தயலிடையிற் கொண்டு பெய்யு
மொழுங்குபடு திடரேறி யிளங்குருகு குறுங்கயன்மென் றுலவும் பண்ணை. (3)

மங்குறுநெடு நெடுந்தாழைக் கவிழ்குலைமுப் புடைக்காயின் மந்தி தாவத்
தங்கியநெட் டறவுடைபட் டருவிபொழி தீம்புனலும் வருக்கை சாய்க்குஞ்
செங்கனக நிகர்த்திலங்கு சுளையழிமுட் புறக்கனிகள் சிந்து தேனும்
பொங்குநுரை யாறலைத்து வாழைநெடும் படைப்பைபுகும் பொழில்க ளெல்லாம்.

தொட்டகட லிப்பியுமிழ் வெண்டரளங் கீழருகு துடக்கித் தூங்கும்
விட்டுமழ கதிரெறிக்கு மனவமிடை யிடைகுயிற்றி மிளிரும் பைம்பொற்
பட்டமணி நுதன்மடவார் மவுணரொடும் யாழிசைகள் பயிலு மொற்றை
வட்டமதி வடிம்பிடறி யமுதொழுக்கு மணிமாட மறுகு தோறும். (5)

தேங்குமதுத் துளிபிலிற்றும் பசுந்துளவப் படலையணி செங்கண் மாய
னீங்கரிய வகந்தைகெடச் சிதல்வடிவ மெடுத்தமரா் நிறைந்து கூடி
வாங்குசிலை நாணறுத்து மிதித்தசிரம் பொருந்தியுயிர் வரவே தெய்வப்
பூங்கமலத் தவிசுறையும் பொற்கொடிநற் றவம்வருந்திப் புரிந்த மூதூர். (6)

எத்தலத்து மில்லாத விறும்பூதொன் றதிற்பிறந்த வுயிர்கட் கெல்லாங்
கைத்தலத்து மான்மழுவா தியவுறுப்பு மறைந்திகத்திற் கலந்த வாற்றான்
முத்தலத்து முதன்மையதாற் சுந்தரர்செந் தமிழ்ப்பதிக முடிவி லாத
வத்தலத்திற் பிறந்தவர்க ளெல்லார்க்கு மடியவனென் றறையு மூதூர். (7)

இனையனவா கியகமலத் திருநகரி லெரிமணிவிட் டிமைக்குஞ் செம்பொற்
கனைகழற்கால் வயவேந்த னொருவன்மதி யமைச்சனொடுங் கருது மன்பிற்
சினைமுதிரு முகிறடவு கொடியாடு சினகரத்திற் சென்று திங்கள்
புனையுநெடுஞ் சடிலமுடிப் புற்றிடங்கொண் டினிதிருக்கும் புனிதத் தேனை. ()

செங்கமலப் பதங்களினு லங்கத்தால் வலமகிழ்ந்து செய்யுங் காலைத்
தங்குவிடை யங்கெடுத்துத் தம்முணர்வின் மனநிறுத்து தவத்தின் மிக்க
துங்கமுறும் வரமுனிவர் திருக்கோயி லகத்தடையத் தொழுது வேந்தன்
அங்கவரைக் கொணர்ந்துதே வாசிரிய மண்டபத்தா சனத்தி னேற்றி (9)

அருக்கியங்கண் முதலாய வுபகரணம் பலவமைத்தே யருச்சித் தேத்தி
மருக்கமலத் துணைப்பதங்கள் சென்னிதொடத் தெண்டனிட்டு வணங்கி நின்று
னுருக்குமனக் கருணையொடு மாதவத்தோர் வயவேந்தை யொருங்கு வைத்துத்
திருக்கிளரு முகநோக்கி யரிதாய கதைகள்பல செப்பி னரே. (10)

பலகதையும் பகர்ந்ததற்பின் பாந்தணடு முடிக்கிடந்த பாரி னீட்ட
மிலகுமணி வலையநெடும் புயம்பரிக்கு மிக்லரசே யிதைய மோர்ந்து
நிலவுவனை சடைப்பரனுக் கியற்றுமுப சாரமெல்லா நிற்க நாளு
மலகின்முறைப் பத்தியினில் வலம்புரிந்து வருமாறு மதுவு மன்றி (11)

வாய்ந்தசெழுங் கற்பகப்பொன் வளநகரங் குடியேறி மம்மர் நீங்கக்
காய்ந்தவழ னகைமுகிழ்த்து மூவர்புர மெரித்தருளுங் கடவு ளானை
யாய்ந்ததமிழ்க் கோரடிக்கோ ராயிரம்பொன் னளித்தவனை யாரூர் மேவிப்
பாய்ந்தபெருங் கருணையொடும் வலன்மிகவும் புரிகதையும் பகர்தி யென்றார். ()

மையலறு மாதவத்தோ ரிவையுரைக்கப் பருதிபுரை மாலை மார்பன்
செய்யகனி வாய்திறந்து செப்புவன்யான் முன்னெடுத்த செனனந் தன்னி
லெய்துமிரு நிதியீட்டும் வணிகர்குலத் துதித்தறிவி விழுதை யாகி
வெய்யகொடு வறுமையினுல் வளநகரப் பசுவனைத்து மேய்த்துக் காப்பேன். ()

### கலிநிலைத்துறை.

ஆய காலையி லோர்பகற் கூடிய வாவினின்றே
தூய பால்பொழி வான்பசு வொன்று துணுக்கினோடி
மேய விந்நக ரிற்புற மேவலன் சூழ்ந்துமெல்லப்
போய தெண்ணரும் பன்முறை புல்லருந் தும்பொருட்டால். (14)

பிரிந்து போனது பசுவென வெண்ணினன் பீதியுற்றே
னெரிந்த சிந்தையி னேடொரு தண்டெடுத் தேங்கியேங்கிக்
கரிந்த புன்னெடுங் கானமு மருதமுங் கால்கணேவத்
திரிந்து தேடினன் கண்டிலன் பின்னடிச் செலவுநோக்கி (15)

மருத வேலியி னன்னக ரின்புறம் வந்துதீம்பால்
பெருகு மென்மடி யாவினி னடிச்சுவட் டிற்பெயர்ந்து
பருதி மேற்றிசை யிற்படர் மாலைமட் டும்படர்ந்து
கருதி யேவலஞ் சூழ்ந்தது தேடினன் காண்டல்செய்தேன். (16)

நெஞ்சங் குளிரப் புடைசென்று நெருங்கி மீட்டு
விஞ்சும் பசுவைப் பரிப்போ னிடமே விடுத்தே
னஞ்சுந் தகைதீர்ந் தனனுள்பல வாய பின்னர்
துஞ்சுந் தினம்வந்தென தாவி துறந்து வீய்ந்தேன். (17)

எழுசீர் விருத்தம்.

குடம்புரை செருத்தற் பால்பிதி ரொழுகுங்
குறுங்கணீண் முலைக்கவை யடியி
னெடுங்கயப் பசுவாய்ச் சுரபியொன் றிரிய
நேடியே கமலைமா நகரை
மடங்க......ருத்தாலு மவனுற நடந்த
மாதவப் பெருமையின் வழக்காற்
றடந்திரை யுலகம் புரக்கமுன் னறிவு
தழைதரு வேந்தனு யினனால். (18)

புன்மடுத் தருந்த வலனுறப் போந்த
சுரவியிப் புவியெலாம் புரந்து
மன்முறை செலுத்த வெனக்கருந் துணையா
மந்திரி யாயின னடைவே
யின்னதென் றறியா தியற்றிய தரும
மித்தகை புரிந்தது வென்றூற்
சின்மயப் பொருளைத் தூவெயில் வலஞ்செய்
பெருமையா ளளவுறத் தெரிப்பார். (19)

ஆதலா லரனைக் கமலைமா நகரில்
வலஞ்செய்கே னென்றலு மரிய
கோதிலாத் தவத்தோ ரங்கர் வதிந்து
குழகனை யசைந்தசைந் தாடும்
பூதநா யகனைப் புற்றிடத் துறையும்
பொருவிலாப் புண்ணியப் பொருளைக்
காதலால் வலஞ்செய் தெண்ணிலா வேள்விப்
பலத்தினைக் களிப்புற வடைந்தார். (20)

வையக முழுது மொருகுடை நிழற்றப்
பொதுவறப் புரந்துமான் மழுச்செங்
கையக மிருத்தும் பரனையெத் தலத்துங்
கமலைமா நகரினும் பணிந்து
மெய்யுற விரும்பி வலநடந் திகல்வேல்
வேந்தனு மமைச்சனும் விளங்கு
செய்யபே ரொளியி னுடுக்களா யின்னு
மிருக்குன ருளங்களி திளைத்தே. (21)

விரிதிரை சுருட்டுங் கங்கைநீர் புனைந்த
வேணியின் னவனையன் புருகித்
தெருளோடும் வணங்கி வலஞ்செய்வோ ரொழியாச்
சிற்பர மகத்துவ மடைவா
ரருமறை வழிபோ யைந்தையு மடக்கி
யறத்துறை படிந்தமா தவத்தீர்
பெருகிய வுயிரின் பிறவிநோய் துமிக்க
வீதலாற் பின்னரொன் றிலையால். (22)

எண்ணருந் தகைய வலன்வரல் விழைவி
னியற்றிடிற் றன்னினு முயர்வு
நண்ணிய வருணத் தவரையாட் படுத்தி
நடந்தவ ரொருபது பிறப்பிற்
பண்ணிய பவம்போய் நதிகுலத் துதித்துப்
பண்ணவன் சேவடிக் கமல
முண்ணிறைந் துலவ நிகரிலாத் திருவி
னும்பர்கோ னென்னவீற் றிருப்பார். (23)

அந்தண ரவரின் மகஞ்செய்வோர் துறந்தோ
ரசுவின் டொடுசிரீ சயில
மிந்துவந் தணவும் பொலனெடுங் குடுமி
யேமகூ டப்பொருப் பெவர்க்கு
முந்துதென் புலத்தோர் குரவரீன் றவர்க
ளிவர்களை முறைவலன் புரியி
லுந்துநற் பலமே லொன்றினுக் கொன்று
பதின்மடங் கதிகமென் றுரைப்பார். (24)

இனையன பலத்திற் பதின்மடங் கதிக
மினியதே னருவியூற் றொழுக்
கனைமுறுக் குடைந்து வண்டுபாட் டயரு
நளினமா ளிகையில்வீற் றிருக்கும்
புனையிழை யலங்கற் றிதலையங் குரும்பைப்
பொற்கொடி பொருந்துமார் பினனை
முனைவனைத் தடக்கைப் பசுந்துழாய்ப் படலை
முகுந்தனைத் தனிவல னியற்றல். (25)

சில்லரித் தடங்கட் கவுரியைக் கயிலைச்
சிற்பரன் றனைவல னியற்ற
மெல்லவோர் சரணம் பெயர்த்திட நினையில்
வினையெலா நீறுபட் டொழியு
மல்லல்வெங் கதிர்தோய் சினகரம் புகுந்து
வரிலதன் பலத்தினை வகுத்தே
யெல்லையிட் டுரைக்கப் படுவதோ வழிபா
வினையடர் முத்தியே யதுவே. (26)

வலம்புரிந் திடுங்காற் சோமசூத் திரத்தைத்
துடங்கிமற் றதன்வரை வருதல்
பலந்தரு மதனைக் கடத்தறீ தாகும்
பலியிடப் பண்ணவ னெழுங்கா
விலங்குசெம் மணியின் வாசலே முதற்பி
னெழுந்தது கடக்கினு மியல்பா
நலந்தா வதனுக் கொருமுழ நீங்கி
நடப்பது நன்றென வறைவார். (27)

கலிவிருத்தம்.

அக்க ணிந்த சடைமுடி யண்ணலை
மிக்க நல்வல மாக விளைவுடன்
பக்க மெல்ல நடக்கிற் பதப்பிர
தெக்க ணமென்று ரைப்பர் தெளிந்துளோர். (28)

தொண்டர்க் கேயன் பிரங்கித் துலங்கிய
பண்டைச் சோதியைப் பத்தியி னல்வல
மண்டிக் கீழ்நழக் காரமிட் டேவரிற்
றெண்டப் பேர்ப்பிர தெக்கண மாகுமால். (29)

ஈச னையென தாவிக் கிறைவனை
நேச மோடு நெடுநிலத் தில்வல
மாசி லாதமெய் தோய வருவது
பேசி லங்கப் பிரதெக் கணமென்பார். (30)

தாழ்ந்த செஞ்சடைச் சம்புவை யென்னுளம்
வாழ்ந்தி ருக்கு மணிவிளக் கைவலஞ்
சூழ்ந்து சுற்றிடைக் கால்வைத்துத் தொன்னிலம்
வீழ்ந்து போதன் மிச்சிர மாகுமே. (31)

மேற்றி சைமுக மாய விமலனைப்
போற்றி நல்வல மோர்முறை போதுகிற்
சாற்று மேழ்கடல் சூழுந் தலத்தினை
யேற்று கோடி புரிபல மெய்துமால். (32)

கேடி லாதுயர் கெற்ப கிரகத்தி
னீடு செஞ்சடை நித்தருக் கல்லது
மாடு தங்கும் வாதருக் கேவல
நாடி வேறு நவின்றில நான்மறை. (33)

என்று சூத னியம்பலு மாதவர்
துன்று மாணவத் தொல்வினை நீங்கிட
நன்று நாதனைச் சூழ்வரு நற்கதை
யின்று கேட்ட தெனக்கனி வெய்தினர். (34)

இராசா பிரதெக்கிணம் பண்ணின கதை உரைத்த அத்தியாயம் முற்றிற்று.

## 13. பஞ்சாக்கர மகிமை உரைத்த அத்தியாயம்.

கலிநிலைத்துறை.

வெற்றி மால்விடை விண்ணவ னஞ்செழுத் தியற்கை
நற்ற வம்புரி நந்திமெய்ச் சனற்கும ரனுக்கு
முற்று மோதிய முறைவழி முனிவார் கேட்ப
வுற்ற காதலிற் சூதமா முனிவா னுரைக்கும். (1)

சிற்ப ரத்தனி முதற்கிணை தெய்வமொன் றில்லைப்
பொற்பு றுங்குழ லுமைக்கிணை பூவைய ரில்லை
யெற்று தெண்டிரை பகிரதிக் கிணைநதி யில்லை
மற்பொ ருந்திய வடவரைக் கிணைவரை யிலையால். (2)

இரங்கு வெண்டிரைக் கடற்கிணை யெறிபுன லில்லைப்
புரங்கண் மூன்றையு மெரித்தவன் பத்தியிற் பொருந்த
விரும்பு நற்கதி தருதவம் விளம்பவே றில்லை
வரங்கொ ளஞ்செழுத் துக்கிணை மந்திர மிலையால். (3)

சிவமு தலைவ கைப்படுந் திருவெழுத் தஞ்சு
முவமை யற்றதோர் மந்திர மதனையுச் சரிக்கிற்
பவம கற்றிநற் பாகதி தருமெனப் பழைய
தவல றுஞ்சது மறையுமா கமங்களுஞ் சாற்றும். (4)

அன்ன மந்திர மொருமுறை மறந்தறைந் திடினு
மென்ன பாதக ராயினு முத்தியெய் துவாற்
சொன்ன வேதமுற் றுணர்ந்துளீ ரிதன்கதைத் தொகையின்
மன்னு மோர்கதை வழங்குவன் கேட்குதிர் மகிழ்ந்தே. (5)

மறைக்கு லந்தனி விளங்கிட வந்தவ தரித்தோர்
பொறைக்கோ ராலய மெனவரு பூரண சித்தர்
நிறைக்கு மாதவத் துதித்தவ னித்தனை யகலா
துறைக்கு மன்பினன் சதானந்த னெனுமொரு யோகி. (6)

மூவி தப்படு காரணங்கண் முழுவது மடக்கிப்
பாவ னைப்படும் யோகமம் முறைவழி பயின்றோ
னோவ றத்தனி யுலகங்கள் பார்த்தெலா மொழிந்தோன்
சேவு யர்த்தவன் பதங்களிற் சிந்தையைத் திருப்பி (7)

யானெ னுஞ்செருக் கறுத்தெவை செய்யினு மழியா
வானி ளம்பிறை முடித்தவன் செயலென மதித்தே
யூனி டுமுடம் பொருசுமை யெனமனத் தொறுத்து
ஞான வற்புதக் கடலிடை நலம்பெறத் திளைத்தான். (8)

பின்னு மிப்படிக் கயிலையங் கிரியுறை பெருமான்
பன்னு நான்மறை யாகம முரைத்திடும் படியே
மன்னு பல்வகைக் கருவியு மதீதமு மறுத்தே
யுன்ன ருந்தனி நிட்டையி னுள்பல வுறைந்தான். (9)

ஈது கண்டன னெழுந்தனன் மழவிடை யிறைவன்
சோதி தோன்றலு நிட்டையை நீங்கினன் சுருதி
மாத வத்தினன் சிற்பரன் மலரடி வழுத்தி
யாத ரத்தொடுந் தெண்டனிட் டருந்துதி பகர்ந்தான். (10)

பரவு மந்தணன் மதிமுக நோக்கினன் பரம
னரிய மாதவம் புரிந்தனை யாதலா னின்னைப்
பெரிது வந்தனம் வேண்டிய வரமினிப் பேசிற்
றருவ மென்னலு மாதவ னினிதுரை சாற்றும். (11)

பாறு தங்கிய மூவிலை வேற்படைப் பரம
வேறு நற்றவம் வேண்டுமோ நினைவிரும் பினர்பொன்
னேறு றத்துணைக் கமலமென் னிதயமீ திருத்தி
யூறு மன்பொடும் பாலித்தல் வேண்டுமென் றுரைத்தான். (12)

யோகி யின்னண முரைத்தலுந் திருவுள முவந்தே
யேக நாயக னவனைமெய் யிருகையாற் றழுவித்
தோகை வாகனன் றனக்கிணை நீயெனச் சொல்லிச்
சேக றுங்கனி வாய்திறந் தினையன செப்பும். (13)

நீடு நங்கணத் தலைமையு நித்தியத் துவமு
நாடு வெள்ளியங் கிரிமுத னமதிடந் தோறும்
வீடுந் தந்தன முனக்கென வன்புற விளம்பி
மாட கத்தனி யாழ்மொழி பங்கனு மறைந்தான். (14)

அரன்ம றைந்தபின் னன்னவன் றனையிலிங் கத்திற்
கரும முற்றுற யோகிமெய்ச் சிந்தனை கனிந்து
பாவி யேத்துவ னடியரைப் பழிச்சுவன் பகரும்
வாம றைப்படி நற்றொழில் யாவையும் வகுப்பன். (15)

இத்தி றம்புரி காலையி லோர்தின மிசைக்கு
முத்தி யாகமம் விதித்திடு முறைதொழின் முயன்று
மத்தி யானநல் லடியருக் கன்னமும் வழங்கித்
சித்த மின்புறச் சிவகதை கேட்டனன் றெளிந்து. (16)

மொழிந்த மாக்கதை தன்னில்வெந் நரகிடை மூழ்கி
யழுந்து வோர்துய ரனைத்தையுங் கேட்டுள மயர்ந்தான்
விழைந்தன் னோர்துயர் தவிர்த்திருங் கதியினை விளைப்பா
னெழுந்து தென்றிசைத் தருமனன் னகரினி தடைந்தான். (17)

சந்த விருத்தம்.

செந்த ழற்சிகை திரண்டுசிறு குஞ்சி யெரிய
வெந்த செம்பென விழித்துணை சிவந்து கனல
முந்து வெண்பிறை முறுக்கெயி றிலங்க முசல
முந்து தோள்வரையின் வெய்யதழல் சிந்தி யொளிர (18)

இட்ட பொற்றவி சிருந்துபிணி யென்ற பலவுங்
கிட்டி நின்றணி கிளைத்திரு மருங்கு பணிய
விட்டு வெங்குர லிடித்தொனி வெடிக்க வலறிப்
பட்ட செங்குருதி யோடுதடி சுற்று படரை (19)

கூவி வேறொருவ ரில்விழைவு கொண்டு குறுகும்
பாவி யோர்சரணம் வெட்டுக பணைத்த முலையின்
மேவு கைகளை யரிந்திடுக வீசி யவர்மே
லோவி லாதுமுனை யூசிகள் புதைத்தி டுதிரால். (20)

மோக முற்றயலி னோர்பழிகள் விண்டு புகலு
மூகர் தங்கள்கனல் மூட்டியெரி வாயி லிறுகத்
தேக முட்கியறி வின்செயல் சிதைந்து பதறிச்
சோக மிக்குற விருப்புமுளை துற்றி டுதிரால். (21)

ஏத மற்றவரை யீறில்பழி சொல்லு மிவர்வாய்
மீது வேல்விகட பத்திர நிறுத்தி வெருவப்
போத மூளைதசை சோரிபடர் புனரா கின்வாய்
மோதி மிக்கதலை கீழுற முனிந்தி டுதிரால். (22)

ஈட்டு செம்பொனை நிலத்தினிடை யிட்டு மிகவும்
வூட்ட முற்றுவறி யோரிலெவர் பாலு மறுகிக்
கேட்டி ரப்பவர்கள் கையிணையி லெண்ணெய் கெழும
ஊட்டி வெந்தழ லெரிந்திடவு ருத்தி டுதிரால். (23)

தீய தீவினைக டந்தகுரு வைச்சி வன்முதற்
றாய வானவ ரைப்பழிகள் சொல்லு மிவர்தம்
வாயில் வெந்துருகு செம்பினை மடுத்தி டையறப்
பாய நாவினொடு பற்கடிய விட்டி டுதிரால் (24)

அன்பு வந்தொருவ ரீவது தடுக்கு மவர்வா
யென்பு பற்றநெடு நாவரிக வேதின் மறையோர்
பொன்ப றித்துநுகர் வோர்வயி னகழ்ந்து பொதுள
முன்பி ருப்புமுண் மலப்புழு முகந்தி டுதிரால். (25)

செய்ய மாதவர்கள் வேதியர் விருந்தி னர்சிறந்
தெய்தி நல்லடிசி லுண்ணவளி யாதி னிதுதா
முய்ய வெம்பசி விளைந்திரிய வுண் ணு மிவரை
வெய்ய கும்பிநிரை யஞ்சுட விடுத்தி டுதிரால். (26)

சென்ற டைந்தவர்த மக்கலைவு செய்யு மவரைக்
கொன்றி ளம்புதல்வ ராருயிர் குடித்த விவரை
வென்றி வெங்கதைகொ டெற்றிடுக மிக்க வுடலங்
கன்ற வோவுர வத்திடை கடிந்தெ றிதிரால். (27)

புன்ம யக்கநற வுண் ணுமிவ ரைப்பு லவுநீர்
மன்னு வாய்நரகி லுய்த்திடுதிர் வாழு மறைநூல்
பன்னும் வேதியரை வெங்கொலைசெய் பாத கர்தமை
யின்னல் கொண்டுள ரிருட்டுநா கத்தி டுதிரால். (28)

சீல முற்றகுரு பன்னிமுலை சேரு மிவரை
யேல நற்பொருள் கவர்ந்திடு மிருங்கொ டியரைக்
கால சூத்திர மெனுங்கனல் கதழ்ந்த நரகின்
பாலு டற்பிளவு பட்டெரிய விட்டெ றிதிரால். (29)

எண் ணும் வேதமுணர் நற்றவர்க ளாவி யிரியப்
பண் ணு பாவமுத ஞன்குநனி பண்ணி னரொடு
நண்ணி ஞேரையசி சத்திர மெனுந வில்வதோர்
கண்ண கன்றநா கத்திடை கனன்றெ றிதிரால். (30)

முற்று பாதகரை வெய்யகன லெண்ணெய் முழுக
வெற்றி யன்னவர் முடைத்தசை யிசித்து வளைவாய்ப்
பற்றி மென்சிறை யடித்திடை யெறிந்து பறவை
குற்ற டிக்கொடுழ கோரநா கத்தி டுதிரால். (31)

நாடு நற்றுணைவர் கோவினொடு நன்னு தலினு
ரீட ழிந்துமன ஞேவவுயி ரீரு மிவரைக்
கூட சன்மலி யெனுங்கொடிய தீந ரகமுற்
ருேடு மூளைசித றத்தலை யுடைத்தி டுதிரால். (32)

தாம ணந்தவ ரிருப்பவயன் மாதர் தமையே
காமு றத்தழுவு கையிணை நறுக்கி யெறிக
யாம நன்மனையி லங்கெரி கொளுத்து மிவரைத்
தூம வெங்கனல் சுழன்றநிரை யத்தெ றிதிரால். (33)

வெருவு கோண்மிக விளம்பிநிதி கொள்ளு மிவரைத்
திருகி யேநடுவு ரைப்பது திறம்பு மிவரைக்
கருதி யாருயிர் செகுப்ப விடமூட கலரைப்
பெருகு காளநிரை யத்திடை பெயர்த்தி டுதிரால். (34)

நெடிய வெண்டிரைய வாவிநதி நீரின் முடைவா
யடையு நீர்மலம் விடுக்குமறி வற்ற வர்களைத்
துடிது டித்துயிர் சுழன்றரிய சோக முறவே
கொடிய மிச்சினர கத்திடை குறித்தெ றிதிரால். (35)

கருவ ழித்தவர்கண் மெய்க்கருவி கொண்டு கடிதி
லுருவ முன்னுறதி யுள்ளபடி பண்ணி யுடையத்
திருகை வைத்திடுதிர் சுற்றிடுதிர் செய்ய வுடல
மருவ நல்கிடுக பாழ்நாகின் வாயெ றிதிரால். (36)

ஆறு நற்சுவை தரும்பொருள் பகர்ந்த யர்வுறும்
வீறி லந்தணரை யாலையின் மெலித்தி டுகநூல்
கூறு தம்முறை திறம்புகுல மன்ன வர்தமைச்
சீறி நீருவரி கூவலிடைச் சேர்த்தி டுதிரால். (37)

வெறிகொ டுக்குமது விற்குமிவ ருள்ளம் வெருவ
வுறுபு லாலினொடு மென்புபொடி யாக வுரல்வாய்க்
குறுக வைத்துய ருலக்கைகொடு குத்தி யுதறி
யிறுதி யற்றநா கத்திடையெ டுத்தெ றிதிரால். (38)

சொற்ற வேதியர்க ளாதியுயர் தொன்ம ரபில்வந்
துற்ற பேர்கண்மு னுளத்தறிவு கொண்டு சரணம்
பற்ற நீடிய சதுர்த்தர்கள் பதைக்க வுடல்
மற்று வீழ்வுற வதோமுக மமிழ்த்தி டுதிரால். (39)

பற்றி மற்றொருவர் பாரியை மணந்த விவரைப்
பொற்பு றப்பிறர் புயந்தழுவு பூவை யர்தமைக்
கற்ற வெங்கனல் கனிந்தொழுகு செப்பு ருவநீ
ரற்பி னோடணைகு வீரென வெடுத்த றைதிரால். (40)

எண்ணெய் பஞ்சிவிட மேமநசை யால்வி லைபகர்
பண்ணி றைந்தமறை யந்தண ரெனும்ப தகரை
விண்ணி னூசலென நாற்றிமெலி வுற்று ழலவே
கண்ண கன்கரிய சேற்றிடைக் கலந்தி டுதிரால். (41)

நல்ல தோர்விரத மாற்றியிடை விட்டு நலியும்
புல்லொ ழுக்கினனை யீயிறெடு வண்டு பொலியுந்
தொல்லை மாநிரைய மீதுடல்சு ருண்டு வெருவி
மல்ல லுற்றழு திரந்திட வமிழ்த்தி டுதிரால். (42)

எழுசீர் விருத்தம்.

இன்னணம் பகரு மவையினை நீங்கி
யந்தகன் பொறைவடி வெடுத்துப்
பன்னரு மறையோ னவாவினை நோக்கி
யெதிர்நடந் தடியிணை பணிந்தே
யன்னவன் றனையோர் மண்டப நாப்ப
ணவிர்மணிப் பீடிகை யிருத்தி
மன்னுமன் புருக நறைமல ரெடுத்து
வான்முறை பூசனை புரிந்தான். (43)

ஐந்தையு மடக்கி மனத்திரு ளொழியா
வடியனை யான்கழற் கமலஞ்
சிந்தையுட் படுத்து மரியமா தவரி
லொருவனுத் திருவுளத் தடைத்தே
யிந்துமட் டணவு மானம துகைத்துக்
கணங்களெம் மருங்கினு நெருங்க
வந்திவ ணடைதற் கெத்தவம் புரிந்தே
னெனமகிழ் வொடுமினி திசைத்தான். (44)

மறலிசொற் றிடுதல் செவித்துளை மடுத்து
மாதவ னினையன வழங்கு
மறநெறி தணந்த வுயிர்த்தொகை யீட்டும்
பவமெலா மொருவழி யகற்ற
முறைபுரி யாசு முழுவதும் புரக்க
முக்கணன் குரைகழற் கமல
மிறைவநெக் குருகிப் பணிந்தவ ருலகி
லெவர்களே நினையலா விசைக்கில் (45)

ஆதலால் வந்துன் னுழையடை வதுவோ
வருச்சனை முறைபுரிந் திடவு
நீதியா மெனவே நிகழ்த்தினன் மறலி
நெஞ்சகத் துள்ளுடைந் துருகி

யோதுநான் மறையின் முடிவினை யுணர்ந்தே
யனைத்தையு மொழிந்த மாதவனீ
யாதுகா ரியத்தை நினைந்தெழுந் தருளி
யித்தலம் புகுந்ததென் றறைந்தான். (46)

முக்கனி கனிந்த மதுரமென் குதலை
முல்லைவா ணகைச்செழுந் துவர்வாய்
மைக்கருங் கூந்தல் பங்கினர் புராண
வாருதி படிந்துளந் திளைத்தே
யக்கதை யுணர்த்த நாகுறு மியற்கை
கேட்டன னன்னவை காண்பான்
புக்கடைந் தனனின் னுழையெனப் பகர்ந்தான்
புழுங்கியந் தகனிவை புகலும். (47)

ஈசனை வழுத்தி யஞ்செழுத் துணராப்
பாதக ரன்றியிக் கொடிய
மாசுறு நிரையங் காண்பரோ வடித்து
மறைமுடி வுணர்ந்துநின் போலத்
தேசுறும் பரம நிட்டையிற் பயின்றோ
ரென்றனன் சிறந்தமா தவத்தோன்
பேசின னரகங் காண்பதற் கிரங்கிப்
பின்னரு மொழிப்பெய ரமுதம். (48)

மூளுமும் மலமு ......கழித்த
முனிமிரு கண்டினி தளித்த
காளையம் பருவத் தரசிளங் குமரன்
கருணைமார்க் கண்டனை யடுங்கால்
வாளர வசைத்த சதுப்புய னிடது
மலர்ப்பத மெடுத்தெனை யுதைத்தான்
மீளவு மிரங்கி யிறந்தவா ருயிரு
மேதகு மரசும்வந் தளித்தான். (49)

அன்றுதொட் டெளியே னானடி யவருக்
கஞ்சுவ லருந்தவர்க் காசே
யின்றுநீ மொழிதல் கடக்கல னிரையங்
காண்பதற் கெழுகவென் றெழுந்து

சென்றனன் மறையோன் றன்னொடுந் தரும
னிரைநிரை நரகங்க டொரிய
மன்றலங் கமலத் தாரினன் காணக்
காட்டினன் வகைவகை யெடுத்தே. (50)

ஆங்கவை யளவும் பெயர்களும் படிந்தோர்
துயரமு மன்னவர் பவமு
நீங்கல ராகி யுறையுநா ளளவு
நிகழ்த்தின னிகழ்த்துதற் கரிய
தீங்குறுங் கொடிய ரவுரவா திகளுங்
காட்டினன் சென்றவர் திரும்பா
வோங்கெரி மடுத்துக் கிளரதி கோரத்
தருகுபோய் நின்றன னுரைக்கும். (51)

தெரிபடு நிரயத் தளவையு மவையிற்
சுழல்பவ ரிழைத்திடு தீங்கு
மெரிபடு துயருங் கிடக்குநா ளளவு
முரைத்திடிற் கேட்பவ ரிறப்பர்
விரிபடு நரகத் திரட்கெலா மரசாய்
வெந்துயர் மிகவிளைத் தொறுக்கு
மரிபடு மிவைகள் ரவுரவா திகளீ
தம்மவெங் கனலதி கோரம். (52)

என்றலுங் கருதி மாதவ னிசைக்கு
முன்னுறு நரகினுக் கெல்லா
மொன்றிய வளவு மடைந்தவர் துயரும்
பவங்களு முழல்வுறு நாளு
மின்றுரைத் தனைநீ யிவைகளுக் கவைக
ளியம்பிடா தென்கொலோ வென்றான்
குன்றடு திரள்தோ ளந்தக னிதையங்
கொதித்திட வினையன பகரும். (53)

பாதக ரிவர்கள் பவத்தினைப் பகரப்
படுவதோ பகர்ந்துநீ கேட்கிற்
றீதறு தகைமை முத்தியை யடைவர்
செப்புகே னலனெனத் தெளிந்த

மாதவ னுனக்கென் ணிடத்தினி லுவகை
யுண்டெனின் மறலியன் னவைக
ளோதுநீ யென லு மன்னவன் மறுத்து
முரைப்பதற் கொழுங்கிடா தறையும். (54)

வெஞ்சினப் பதர்க் கின்றுநின் பொருட்டால்
விழைவுறுங் கதிபெற விதியோ
வெஞ்சலின் மறையோ யேழையே .........
......... னருந் தவத்தோன்
விஞ்சிய முத்தி யவாடை கினுமாம்
வெந்துயர் நனிவிளை கினுமா
மஞ்சொளி புரையு மேனியா யவைகள்
வகுத்துரை வழங்கென வலித்தான். (55)

கணங்களுக் கரச னுரைத்திடத் தருமன்
கழறுவ னளவையுங் கலந்தோர்க்
கிணங்குறு துயரு நீங்குநா ளளவு
மியாவரு மளவிடற் கரிதா
லணங்குவெம் பதத்த ரிவர்களஞ் செழுத்தை
யங்குரித் திடும்பி றப்பனைத்தும்
வணங்கியுண் ணினையார் மாபெரும் பாவம்
வழிமுறை பயின்றவ ரென்றான். (56)

கண்டன னரகத் தியற்கையு மவையிற்
கலந்திடுங் கொடியர்வெந் துயரும்
விண்டுளம் பதைக்க வுயிர்த்திவர் பிழைக்க
வேண்டுமென் றொருவழி நினைந்தான்
தெண்டிரைக் கடுவுண் டமுதெனக் களிக்குஞ்
சிற்பரன் றெய்வவஞ் செழுத்தைக்
கொண்டலின் முழக்கி லதிர்ந்திட முழக்கிக்
கூறினன் குலமறைக் குருசில். (57)

திருந்துமஞ் செழுத்தின் முழக்கொலி நடந்து
திசைதொறும் திசைதொறும் பரம்பி
வருந்திவெந் நிரையத் திடைச்சுழல் கொடியர்
வன்செவிக் குறுந்துளை புகுத

விருந்துயர்ப் படுத்தும் நரகம்விட் டெழுந்தே
யிலங்கொளி மானம்விண் ணுகைத்துப்
பரிந்துவா னவர்கண் மலர்மழை பொழியப்
போயினர் பார்த்தனன் றருமன். (58)

நண்ணிய விருபத் தெட்டெனுங் கோடி
நாகமும் பாழ்கிடந் தெரிய
வெண்ணுறுங் கொடியர் மானமீ தெழவே
யென்னையு மிகந்தெரி நுதற்கட்
புண்ணியப் புனிதன் கடவுளஞ் செழுத்தைப்
பகர்ந்தனே பொருந்துமா ருயிர்கள்
பண்ணிய பவங்கண் முறைமுறை கழிக்கப்
பரமனெற் பணித்ததுங் கடந்தாய். (59)

எல்லற விமைக்கும் பெருகொளி தழைக்கு
மேமவெற் பினையொரு தடக்கை
வில்லெனக் குனிக்கும் விண்ணவ னிதனு
லென்னையெத் தகைவெகுண் டிடுமோ
நல்லது விளைத்தா யருந்தவ வெனலுங்
குறுநகை முகிழ்த்துநான் மறையோன்
சொல்லருங் கருணைத் தருமனீ மயங்கிச்
சொல்வதெ னினையன தொகுத்தே. (60)

போக்கொடு வரவு மின்றியே யகண்ட
பூரண மாகியெவ் வுயிர்க்கு
நோக்கரு முயிராய்ச் சகலமு நடிக்கு
நோன்றகைப் பரமநா யகன்றன்
நீக்கில ளருளே யிவையெலாந் திருந்த
விளைத்தது விரிந்தவா னவத்தி
னீக்கமற் றிருக்கு மணுக்கள்யா நமக்கு
நிற்செய லன்றிமற் றுளதோ. (61)

இருவர்க ளிடத்தும் பிழைவரக் கடனே
யில்லையென் றிசைத்தன னிதையம்
வெருவரத் தருமன் பின்னரும் விளம்பு
மிவையெலாம் விண்மதி மிலைத்த

புரிசடைப் பரமற் கிசைத்திட வேண்டு
மென்றனன் பொருக்கென வெழுந்து
மருமலர்த் தருக்கள் கதிரக டுரிஞ்சு
மந்தா கிரியினை யடைந்தான். (62)

யோகமா தவனு மவ்வரை யடைந்தா
னிருவரு மென்னையா ளுடைய
வேகநா யகன்றன் சன்னிதி புகுந்தா
ரிருகாஞ் சென்னிமேன் முகிழ்த்தே
யாகமீ தொழுகு கண்கணீ ரரும்ப
வீழ்ந்தன ரெழுந்தய னின்று
ரோகைமீக் கிளர வெம்பிரா னிவர்பா
லுள்ளம்வைத் தருட்கணோக் களித்தான். (63)

கோச்சகக்கலிப்பா.

முக்கட் கனியே முடிவிலா மூதுணர்வே
செக்கர்ச் சடைப்பவளச் செம்மலையே சேலனைய
மைக்கட் கனிவாய் மலைமடந்தை பங்காளா
திக்கெட்டு மம்பரமாய்க் கொண்ட நெடுந்தேனே. (64)

மாலாவி யுண்டவன்றன் மாயா வுடலேந்துஞ்
சூலா யுதத்தடக்கை கொண்ட சுடரொளியே
வேலா வலைய முகட்டெழுந்து விண்பரக்கு
மாலால முண்டிமையோர்க் காத்தளிக்கு மாரமுதே. (65)

உந்திக் கமலத் துதித்தோனு நாரணனு
முந்தைப் பழமறையுங் காணு முழுமுதலே
நிந்தித் திருப்போர்க ணெஞ்சகத்தி னில்லாதாய்
சிந்தித் திறைஞ்சு மடியவர்பாற் செல்வமே. (66)

அய்யா வுனது கணநாத னாகியவோர்
மெய்யார் மறைதேர் சதானந்த மெய்த்தவத்தோன்
மய்யார் கொடுநரகம் வாழ்வோ ரனைவரையும்
பொய்யாத வஞ்செழுத்துக் கொண்டுபுறம் போகவிட்டான். (67)

நின்பா லதுபுகல வந்தே னெனநிகழ்த்தி
யென்பான் மிகையுறினு மெந்தாய் பொறுத்தருள்கென்
றன்பான் மறலி யிரக்க வமலர்பிரான்
முன்பான் மறையோனை நோக்கி முறுவலித்தான். (68)

செய்ய மறைதேர் சதானந்தன் செய்ததெல்லா
மைய மிலைப்பகரில் யாமே யதுபுரிந்தே
மையகலு மஞ்செழுத்து மாயக் கொடுநரகி
லையு முயிர்பிழைக்க நாம்வகுத்த மந்திரமே. (69)

ஈது விளைந்ததினு னுங்க ளிருவருக்குந்
தீது வாராதுபவ மெவ்வணணுஞ் செய்தாலு
நீதிதரு மாசார நீங்கிடினுங் கண்டிகையும்
பூதியொடு மஞ்செழுத்து முள்ளவரே புண்ணியராம். (70)

அந்தமுடி வில்லாத வஞ்செழுத்தைப் பேசுங்காற்
சிந்தை யறியாது கேட்ட திறத்தோடு
முந்தை வருந்தேவ ரெல்லாரு முன்பணிந்து
வந்தனைக ளாற்ற மகிழ்வுற்று வாழ்வாரே. (71)

தொல்லுலகில் வாழு முயிர்த்தொகையிற் சொல்லரிய
கல்வி யுடையோரே மேலோ ரவர்களினும்
பல்வகையா லெம்மைப் பரவு மடியவரே
மல்ல லுறுந்தகைமை வந்த வழக்குடையோர். (72)

என்னை வணங்கு மடியா ரிருந்தகைமை
முன்ன ருரைத்ததெல்லா முற்று மறந்தனையோ
மன்னு மெனக்கன்பர் மயங்குபவ மீட்டினு
மன்னவரை நானே யவைசோ தனைபுரிவேன். (73)

மற்றையர்க ளீட்டு பவத்தின் வழக்கறிந்தே
யிற்றை முதலாக வெரிநிரையத் தாழ்த்திடுநீ
குற்ற முளதாயிற் காப்பா யெனக்குழைந்து
சொற்ற துதிக்குள்ளந் தொலையாக் களிதிளைத்தேம். (74)

வென்றிவர மின்னுந் தருவேம் விளம்புகநீ
யென்று மறலி முகநோக்கி யினிதிசைத்தான்
றென்றிசையின் காவலன் சிந்தை நனிகளித்துக்
கொன்றைநறுந் தாரோனைக் கும்பிட் டடிபணிந்தான். (75)

எந்தா யெனக்கோ ரினியவர மென்னபிழை
வந்தாலு மப்பிழையை மாற்றி யுனதுமலர்ச்
செந்தா மரைப்பதமென் சிந்தை குடியிருக்கத்
தந்தாள வேண்டுந் தமியேனுக் கென்றுரைத்தான்.' (76)

அண்டர் பெருமா னினக்கிவ் வரமளித்தே
மண்டு பெருங்காதல் பெருக மறைமுறையே
பண்டை யதிகாரம் பாலிப்பா யென்னவரன்
புண்டரிகத் தாள்போற்றிக் கூற்றுப் பதிபுகுந்தான். (77)

செங்குருதி மூவிலைவேற் றென்றிசையோன் போனதற்பின்
றங்கும் பெருமைச் சதானந்த னைப்பார்த்துப்
பொங்கு கருணை பொழிந்தோர் தமக்கொழியப்
பங்கமிலாப் பத்தி விளங்கப் படாதாமால். (78)

தேடுந் திருவெழுத் தஞ்செடுத்துன் சிந்தையினி
னீடு மிரக்க நிறைந்தன்றோ நீணிரையங்
கூடு மவரைக் கரையேற்றிக் கொண்டதுவே
நாடும் பழமறையோ யன்னதனு ளுமகிழ்ந்தேம். (79)

வேண்டும் வரமுனக் கீவேம் விளம்புகென
வாண்ட பெருமா னருளச் சிவயோகி
யீண்டி னினதடியார் தாட்கமலத் தென்னிதையங்
கூண்டு கிடக்கும்வா மீகெனவே கூறினன். (80)

அன்ன வரமளித்தேம் யாமு முமையவளு
முன்னிதையத் துள்ளே யொழியாது வீற்றிருப்பே
மென்ன வமல னிசைத்தனுப்ப வீழ்ந்திறைஞ்சி
மன்னுஞ் சிவயோகி தன்னிருக்கை போய்வதிந்தான். (81)

இக்காதை கேட்போர் சதானந்த னுக்கிணையாய்
மிக்காங் கணம்புரக்கும் வேந்தரென வீற்றிருப்பார்
புக்கார் பதகரிடஞ் செல்லார் பொருவரிய
தக்கார் சமயியொடு புத்திரர்க்குஞ் சாற்றுவரால். (82)

இப்பரிசு காதை யெடுத்துத் தயவினொடு
மொப்பரிய சூத னுரைத்தருள வுண்மகிழ்ந்தே
மைப்பரவும் பாவ மலவிருட்கோர் தீபமெனச்
செப்பரிய மாதவத்தோர் சிந்தை மகிழ்கூர்ந்தார். (83)

பஞ்சாக்கர மகிமை உரைத்த அத்தியாயம் முற்றிற்று.

## 14. சுத்துய்மினன் சிவநாமம் பகர்ந்த மகிமை உரைத்த அத்தியாயம்.

### அறுசீர் விருத்தம்.

துள்ளுந் தரங்கக் கடலவனி தொழுஞ்சுத் துய்மினன் புகழ்ச்சரிதந்
தெள்ளும் பனுவன் மறைக்கிழவன் றிருந்து மிசையாழ் முனிவனுளங்
கொள்ளுந் திறத்திற் பகர்ந்ததெனக் குலவுங் கதிரோன் மனுவினுக்கு
விள்ளுங் கதையைப் புகல்வனெனச் சூத முனிவன் விளம்புவனால். (1)

கொழுத்த மடலுட் பொதிந்துதிரள் குடத்தைப் பொருவித் தளதளத்துக்
கழுத்து விடைத்த நிறைசூற்பைங் கமுகி னெருத்திற் கடைசியர்கள்
பழுத்த மதுரக் குரவையினாற் பதறி வாளை வெடிதாவி
யழுத்தி யுழக்க விரிந்துமது வாறு பெருகக் கயல்குமட்டும். (2)

பின்னித் திரைக ளுவட்டெடுத்துப் பெருகு மடுவிற் கருமேதி
யன்னக் குலத்தி னிரையிரிய வளாறு படுத்து விளையாடிச்
செங்நெற் பசிய குலைகறித்துச் செந்தேன் குவளை முகைகுதட்டிக்
கன்னிக் கமுகின் முதுகுரிஞ்சிக் கதலிப் படப்பை புகுந்துறங்கும். (3)

சூலிற் பணிலம் வயிறுளைந்து சொரியுந் தாள மொடுமுழுநர்
கூலிக் களவி யெடுத்தளக்கக் குளிர்நித் திலத்தின் குவைபொழியும்
வேலிக் கரும்புக் கப்புறம்போய் வெண்பா லடைத்துச் சிவப்பேறிச்
சாலிக் குலைக டலைவணங்குந் தண்ணங் கழனி மருங்கெல்லாம். (4)

வாங்கு திரைக்குண் டகழியினை மறியும் தாங்கக் கடலெனவே
பாங்கர்ப் படர்ந்தே யதிசயித்துப் பையத் திரும்பிப் போவதெனத்
தேங்கி விரியு மலைக்கரத்தாற் றெண்ணித் திலமு மணிக்குவையு
மோங்கி யெறிந்தே யடுத்தொழுகு மொருவன் கொணர்ந்த புனற்கங்கை. (5)

தண்டு மிடைய வடல்கெழுமிச் சமரம் புரிய வெதிரேந்து
தண்ட நிருப ரகங்கவற்றிக் கணைகள் பொழியும் பொறிதாங்கி
யண்ட முகட்டி னளவளந்தே யழலுங் கதிரோன் பரிதடுக்குங்
கொண்டல் கிடந்து விளையாடுங் குடுமி கிளருங் கனகவெயில். (6)

அம்பைப் பழித்துக் கொடுவிடத்தை யல்லற் படத்துங் கருநெடுங்கட்
கும்பக் களபக் குவிமுலையார் கொழுந ரோடும் விளையாடச்
செம்பொற் றகடு படுத்திழைத்த செய்குன் றிறங்கித் தேவரொடும்
பைம்பொற் றருவின் மடந்தையர்கள் பயிலுங் கலவி நலனுகர்வார். (7)

மன்னு மினைய வளம்பொருந்து மறியுந் திரைப்பாற் றடங்கடல்செம்
பொன்னந் துணர்த்தா தகநிறைந்த பூந்தாம ரையின் பொன்றவிசு
கன்னி நறும்பைந் துளவணியுங் கரிய முகுந்தன் மார்பமெனப்
பின்னை பிறந்து குடியிருக்கும் பிரதிட் டான வளநகரம். (8)

இனைய நகர மளித்தருளிந் திரத்துய்ம் மினனென் றெழுதீவும்
புனையுங் கழற்கால் பணிந்திறைஞ்சப் பொதுவி லாது தனிபுரந்தோன்
றனைய னறமு மனுநெறியுந் தங்கித் தழைத்த பெரும்புகழான்
றுனையுங் கதிர்வாள் வயமீளி சுத்துய்ம் மினனென் றொருவேந்தன். (9)

முந்தார் கலிநீர் புடையுடுத்த முதுபா ரனைத்து முதலுகத்திற்
சிந்தா மணியு மிருநிதியுந் திவலை துளிக்குஞ் செழுந்தேறற்
பைந்தா தலர்த்துங் கற்பகமும் பரிக்கு மாச னெனப்பொலிந்தே
யந்தா ரலங்கற் குடைவேந்த னளிக்கு நாளி லாங்கொருநாள் (10)

கொங்கை சுமக்க லாற்றாது குடிபோ மிடையென் றடிச்சிலம்பு
சங்கை பிடித்துக் கிடந்தாற்றுந் தண்ணந் தளிர்ச்சீ றடியிமைய
மங்கை யிடத்துப் பிரியாத மணியைச் சிவந்த வளர்சடைமேற்
கங்கை முடித்த பெருமானைக் கழற்கால் வழுத்தி யினிதிருந்தான். (11)

அக்கா லையினிற் றுரிசறுத்தே யைந்து புலனு மகத்தடக்கு
மிக்காங் கருணை பொழிகிரண விந்து முனிவ னவணடைந்தான்
கைக்கா ருரிவை புனைந்தபிரான் கழற்கால் வழுத்தன் முடித்தரசன்
முக்கால் வணங்கி நிலம்வீழ்ந்து முனிதன் மலர்த்தா ளருச்சித்தான். (12)

சோரி குடித்துத் தசைகுதட்டுஞ் சுடர்முத் தலைய சூலத்தோன்
வேரி மலர்த்தாள் விருப்பகலா வேத முனியே யெளியேனின்
றேருந் தனியா கமமுரைக்கு மொழியா முத்தி யடைவதற்கோ
வாருங் கருணை பெருக்கெடுப்ப விவண்வந் தடைத லெனவறைந்தான். (13)

உள்ள நெகிழ்ந்து வழிந்துவழிந் துவகை பெருகி யுவட்டெடுப்பத்
தெள்ளு மறைதேர் முனிவரனைச் செஞ்சொற் றுதிகள் பலசெய்தான்
பிள்ளை மதியஞ் சடைக்கணிந்த பெருமா னடியர் மனங்கருதிக்
கொள்ளும் படிக்கு முடியாத பொருளொன் றுளதோ கூறுங்கால். (14)

இவண்வந் தடைந்த காரியநீ யிசைத்தி யெனலும் வரமுனிவ
னுவகை பெருகி யினிதுரைக்கு முலகம் புரக்கும் வயவேந்தே
சிவனை வணங்கும் பத்தியினி லுன்போ லொருவர் செகத்துளரோ
தவமுந் தவமுன் னுடையவர்க்கே தனியே சாரத் தகுமன்றே. (15)

உனது சரித மதுகேட்டே னுள்ளம் பெருகக் களிதிளைத்தேன்
கனைவுண் டிமிர்ந்து குடைந்தாடுங் கண்ணி புனையுங் கதிர்வேலே
யனைய சரித மனைத்தினையு மடைவே கேட்பான் புகுந்தனன்யா
னெனலும் வணங்கார் மனங்கவற்று மிகல்வேந் திசைப்ப தாயினன். (16)

அறுசீர் விருத்தம்.

முந்திய பிறப்பின் வேடர் முழுக்குலத் துதித்தே னன்னோர்
சிந்தையின் மகிழ்ந்து போற்றத் தீத்தொழி லரச னாகி
வெந்திறற் புலையன் கோதா விரிக்கரை வைகி வாழ்ந்தே
னெந்தைகே ளெனது நாம மிசைத்திடிற் சுவவி யாதன். (17)

புண்ணிய மறியே னந்த வழியிடைப் பொருந்து ஞான
நண்ணிய முனிவர் கற்பி னரிய ராதி நாயேன்
கண்ணுறு மவரை யெல்லாங் கடிந்துயிர் துறந்தேன் பின்னும்
பண்ணிய பவத்தைக் கேட்கிற் பகர்நாட் கோடி வேண்டும். (18)

இத்தகை புரிந்து வாழ்நா ளொருபக லிறந்தேன் றூதர்
மைத்தகு கரிய மேனி மறலிமுன் விடுத்தா ரன்னோன்
கைத்தலத் தண்டு சுற்றிக் கனியித முதுக்கித் தின்று
பைத்தனன் சிவந்த கண்ணாற் பார்த்தனன் பயந்து நின்றேன். (19)

தொத்தலர் மாலை சூடுஞ் சூலவெங் தடக்கைக் கூற்றுச்
சித்திர குத்தன் றெய்வச் செழுமலர் வதன நோக்கி
வித்தகத் திறத்தோ யிந்த வெவ்வினைப் பதகன் செய்த
வுத்தமத் தரும முண்டோ வுழுந்தள வேனு மென்றான். (20)

எனுமுரை கேட்டா னன்னோ னிவனறி யாது செய்த
நினைவருந் தரும மொன்றுண் டய்யனே நிகழ்த்தக் கேட்டி
தினமன மிடைவிடாது தெறுசினங் கனல நின்று
வனநடு வழியிற் போவோ ரெவரையு மறித்துக் கொண்டே (21)

அன்பறப் பொருளை நாடி யாகா வென்பன் மூண்டு
பின்பிடித் தோடி யோடிப் பிரகா வென்பன் றீய
வன்புற வுரைக்குஞ் சொல்லி லரவென வருதல் செய்ய
பொன்படர் சடில நாத னுமமாய்ப் பொலிந்த தன்றே. (22)

இந்தனக் குவையிற் சற்றே யெரிப்பொறி கலந்தா லோடி
வெந்தற நீறி நீறி வெண்பொடி யாகு மாபோற்
சந்திர மவுலி நாம நாவினாற் சாற்ற லாலே
வந்துறு பாவ மெல்லாம் வழக்கறக் கரிந்த வன்றே. (23)

என்றவன் மொழிந்தான் பின்ன ரந்தக னென்னைச் செய்ய
குன்றியிற் சிவந்த கண்க ளருண்மழை கொழிக்க நோக்கி
நன்றுவெள் விடையோ னமம் நவிற்றினை நலிந்து நிற்ற
லன்றுனக் கமைத்த தென்ன வாசனத் திருத்திக் கொண்டான். (24)

பரிந்துசற் கார நாடிப் பன்முறை முகமன் சொல்லிப்
புரிந்தன னைய காலை விண்ணவர் பொன்வி மானந்
திருந்தவே கொணர்ந்தா ரேறிச் செம்பொன்மா நகாஞ் சென்றே
யிருந்தன னவர்க ளாண்டி லயுதமாங் கின்பந் துய்த்தேன். (25)

கந்தநாண் மலரோ னுட்டி லன்னவன் கற்ப முற்றும்
புந்தியின் மகிழ்வு கூர வுரைந்துநற் போகந் துய்த்தேன்
முந்துபுண் ணியத்தின் சேடத் தாலிவை முழுதுந் தோன்ற
விந்திரத் துய்ம னென்போ னின்புறும் புதல்வ னானேன். (26)

அடுந்தொழி லதற்குங் கையா லடித்திடும் வினைக்கு முன்ன
ரிடும்பெய ரிணையி லீச னமமு மிருந்த வாற்றாற்
கொடுந்தொழி லதற்குக் கூறக் கொலைகள வாதி யாய
தொடும்பவந் தொலைந்த வென்றாற் சிவன்செயல் சொல்லற் பாற்றே. (27)

இன்னண மன்றி யென்னை யிருவினை துடைத்தே யாளுங்
கன்னிவண் டுழக்குங் கொன்றை கமழ்சடைப் பரம னமை
மன்னுமன் பொழுகிப் பொங்க மனத்தறி வோடுஞ் சொற்றோர்
பன்னுதற் கரிய முத்தி பரிப்பதற் கைய முண்டோ. (28)

மணித்தட றுருவு தோறு மாற்றலர் மருளும் வானா
னணைத்திவை யுரைத்தான் ஞான மாதவ னிருக்கை யாலே
யணைத்தட லாசன் மேனி யடிக்கடி தழுவிக் கொண்டான்
பணைத்தருப் பொதுளி நீண்டு படருமாச் சிரமம் போனான். (29)

தொங்கலந் தடந்தோ ளான்சுத் துய்ம்மினன் சரிதங் கேட்போர்
பொங்குதே னொழுகும் பச்சைப் புதுநறுந் துளப மாலைச்
செங்கனு னுந்தி வந்த திசைமுக னுலகம் வைகி
யங்கண்மா தவர்கள் போற்ற வளவிலா வின்பந் துய்ப்பார். (30)

பொன்னுறழ் கொடியிற் றாழும் புரிசடைச் சூத னோர்ந்தே
யின்னநற் காதை கூற விமையவெற் பளித்த தெய்வக்
கன்னிபங் கமர்ந்தோன் றன்மை கணிப்பதற் கரிதென் றெண்ணி
மன்னுமெய்த் தவத்தோர் சிந்தை மகிழ்ந்ததி சயித்தார் மாதோ. (31)

சுத்துய்மினன் சிவநாமம் பகர்ந்த மகிமை உரைத்த அத்தியாயம்
முற்றிற்று.

## 15. விபூதி மகிமை உரைத்த அத்தியாயம்.

கலிநிலைத்துறை.

பவந்தொ லைத்திடும் பூதியின் மான்மியம் படருஞ்
சிவந்த செஞ்சடை யெம்பிரான் சிலைபிரா கவனுக்
குவந்தி சைத்திடும் படிபுகல் வேனென வுலவாத்
தவந்த ரும்புகழ்ச் சூதமா முனிவரன் சாற்றும். (1)

ஆதி நாயக னடிதொழு தாழிசூ ழிலங்கை
காதி மூதெயி லடர்த்தவ னினையன கழறுந்
தீது றும்பவம் பரம்பிய வுயிர்க்கெலாஞ் சிரத்திற்
கோதில் சித்திர குத்தனுய்ந் தெழுதிய குறிகள். (2)

உனது பூசையாற் றவறுபட் டொழிந்திடு முண்மை
யெனது சிந்தையிற் புலப்பட விசைத்தியென் றிரப்பத்
தனது தாள்பணி தசரதன் றனையனை நோக்கி
யனது பேசுவ னென்னையாண் டருளிய வமலன். (3)

நரக யாதனை தவிர்ந்திடு நல்லிழை வகுத்த
விரியும் வெண்படத் தெழுத்தினை வெந்தழல் கதுவத்
திரியுந் தன்மையிற் றிரிந்திடுந் தீவினை யெழுத்துப்
பரவும் வெண்டிரு நீற்றினைப் பரிவொடுந் தரிக்கில். (4)

திருந்து வெண்டுக ளாற்றிரி புண்டரஞ் சிரத்திற்
பரிந்து நெற்றியிற் புனைந்திடிற் படருமென் களமேற்
பொருந்து றப்பினி லீட்டிய பவமெலாம் போக்கு
மிருந்த டக்கைமேற் படிலவை புரிபவ மிரியும். (5)

உரத்திற் பூசிடின் மனத்தினி லுறுபவ மொழியுந்
தரிக்கி லுந்தியி லிங்கத்தின் வருபவந் தவிரும்
விரித்து வெண்ணிடிற் சகனத்தின் விரிபவம் விலங்கு
மருத்தி யாலிரு பக்கமு மன்னதை யணியில் (6)

பரம டந்தையர்த் தழுவிய பாவங்கள் பாறு
மரிய புண்டர மூன்றையும் வேறுவே றறையிற்
பொருவி லக்கினி மாலயன் வடிவெனப் புகல்வார்
விரியு முக்குண வடிவமு மெனவிளம் புவார்ால். (7)

ஆய தோர்திரி புண்டர மகிமையா ரறிவார்
தூய வெண்டிரு நீற்றினைச் சொற்றிடு முறுப்பி
னேய மோடுமப் புண்டர மாகவே நிலவி
மேய தேதரித் திடுபவர் வீடுமே வுவரால். (8)

நிலவு பூதியின் றானநற் சயனமெய்ந் நிறைந்தே
யிலகு தூளன மெனறிவை யிசைக்கின்முக் கியமாஞ்
சொலவி ளங்கிய மூன்றினுந் தானத்திற் றொடரும்
பலப வங்களுங் கதிருறு பனியெனப் பாறும். (9)

படம்ப ரப்பிய பாந்தள்வாய் முதலவங் குரிக்கும்
விடங்கள் யாவையுங் கரிந்திடும் வெந்துயர் விளைக்கத்
துடங்கு பூதமு மலகையும் பதைத்துயிர் சோர்ந்தே
யடங்கும் வெண்டிரு நீறெனுந் தனியரு மருந்தால். (10)

பூவை மேனியன் பூசனை புரிபவ ரேனும்
யாவ ராயினும் வெண்டிரு நீற்றிருந் தான
மேவ வேபுரிந் தப்பொடி மெய்யுற மிலைந்தோ
ரோவி லாதவெக் கருமமும் புரிவதற் குரியார். (11)

கெட்ட சீவனும் பொருந்தியே மெய்யுறக் கிளைக்கும்
பட்ட பாவமுங் கரிந்திடும் பரிவொடு மகிழ்ந்தே
யட்ட போகமு மருந்துவா ருடன்கதி யடைவர்
தொட்டு வெண்டிரு நீற்றொளி மெய்யுறத் துலங்கில் (12)

என்று கூறினன் பின்னரு மெம்பிரா னிசைக்கு
மன்று போர்புரி யரக்கனை யணிமுடி தொலைத்த
வென்றி வெஞ்சிலை யிராகவ விதன்கதை விளங்க
வொன்று பேசுவன் கேளென வுளமகிழ்ந் துரைக்கும். (13)

பெருமை மாதவன் வசிட்டன்மா மரபினிற் பிறந்தோன்
றரும நீதியன் றனஞ்செய னெனப்பெயர் தரித்தோ
னுரிமை மாதர்க ணூறுபேர் தமையுள மகிழ்ந்தே
கரும முற்றுற வான்முறை கடிமணம் புரிந்தான். (14)

முற்று காதலி னன்னவர் முழுநலந் திளைத்தா
னுற்ற மாதரின் முன்னவள் சலாகையென் றொருத்தி
பற்று மன்பினன் கருணனென் றொருவனைப் பயந்தாண்
மற்றை மாதருந் தனித்தனி மைந்தரை வகுத்தார். (15)

மைந்தர் யாவரு மறைகளுங் கலைகளும் வடித்துச்
சிந்தை செய்தன ரன்னவர் திறனெலாந் தெரிந்த
தந்தை தன்னுடைப் பொருளெலாந் தாந்தாம் பகுத்து
முந்து மைந்தனு டியர்க்கெலா முறைமுறை யளித்தான். (16)

வளமு றும்பொருள் வழங்கிய வகையினை நோக்கி
யுளநி றந்திலாக் கருணனுக் கதிகமென் றுணர்ந்தே
யினைய மைந்தர்க ளவனொடு மாறுகொண் டிருந்தா
ரளவு நாள்பல கழிந்தபின் னந்நகர் மறையோர், (17)

பம்பு தெண்டிரை பொருபவ நாசினிக் கரையி
னம்பு மாதவர் பணிநர சிங்கரைப் பணிவான்
...............................................
............................................... (18)

பொருவி லன்னவர் தம்மொடுங் கருணனும் போனான்
முருகி னக்கினி வாங்கின னுசியின் முகந்தா
னருகு நின்றிடு மறையவ ரனைவரு நோக்கித்
திருகு சிந்தைய ராயினர் கருணனைச் சினந்தார். (19)

பருவ மோர்சத மீயுரு வாகெனப் பகர்ந்தார்
மருவு சாபமெய்த் ததீசியாற் றவிர்ந்திட வலித்தார்
வெருவு சாபம்வந் தடைந்திடக் கருணனும் வெருக்கொண்
டுருவ மீவடி வாகியே தன்மனை யுற்றான். (20)

மனைவி தன்முகம் பார்த்தனன் கண்கணீர் மல்கச்
சினவி வேதியர் பருவமோர் சதமெலாந் திரிய
வெனைமு னிந்திக மீவடி வாகவே சபித்தார்
நினைவி னோடருங் காவனீ புரிகென நிகழ்த்தி (21)

ஈயி னத்தொடுந் திரிந்தனன் றிரிந்திடு மேல்வைத்
தீய பின்னவ ரிச்செய லறிந்தனர் செகுப்பா
னுய வஞ்சனை நினைந்தன ரெண்ணெயி லமிழ்த்தித்
தூய சிந்தையன் கருணனை வதைத்துயிர் துறந்தார். (22)

ஈது கண்டவன் மனையவ ளிருகர நெரித்தாண்
மோதி வீழ்ந்தன ணிலத்திடை முகத்தினி லறைந்தா
டீது செய்தனர் பாதக ரினியுயிர் திறம்பிப்
போது வேனின துழையெனத் தனிப்புலம் புவளால். (23)

கோச்சகக்கலிப்பா.

மாதவத்தின் வசிட்டமுனி மரபுதித்த தனஞ்செயற்குக்
காதலனு கப்பிறந்து கலையனைத்துங் கரைகண்டாய்
நீதிதரு நெறிநின்றாய் நிலையாகி யழியாத
வேதமுதற் பொருளுணர்ந்தா யுனக்கிதுவோ விளைந்ததுவே. (24)

பின்னுதித்த கொடியர்மனைப் பெண்கள்பெரி துவகையுறப்
பொன்னிழைத்த மணியொளிர்நாண் மஞ்சளொடும் புனைந்திருக்க
வென்னிழைத்தேன் மலர்ப்பிரம னென்கழுத்துக் கின்றமுதன்
மின்னெறிக்கு மணியொளிர்நாண் வெண்கலையோ விதித்தனனே. (25)

எண்ணெயினின் னுயிரிறக்க விழைத்தகொடும் பாதகவன்
கண்ணரெனு மும்பியர்கள் கருதியது முடித்தாரோ
தண்ணளிதா தாட்டயருந் தடங்காவுங் கடிமனையும்
பண்ணைநெடுங் கழனிகளும் பெருவாழ்வு பரித்தாரோ. (26)

நிறத்தழகு நறுந்தெரிய னினைந்தாலு மொருவர்மனைப்
புறத்தொழுகாத் தவமுனக்குக் கைமீது பொருந்தியதோ
வறத்தொழுகா தவர்போல வீவடிவா யாவிகெட
மறத்தொழிலாற் கொடுஞ்சாபம் வகுத்தார்கண் மறையோரே. (27)

முப்புரிநூன் முறைகிடக்கு முழவுறழுந் தடந்தோளா
யொப்பரிய வடிவழகி னுருவமிறந் தொழிந்தனையே
விப்பரிசென் வினையிருந்தா லென்செய்வே னெளியனெனத்
துப்புறழுங் கனிவாயா ளுயிர்துறக்கத் துணிவுற்றாள். (28)

கலிவிருத்தம்.

வஞ்சி யிருந்து வருந்துதல் கண்டே
யஞ்சொ லருந்ததி யாயிழை வந்தா
ளஞ்ச விலாதித னுருயி ரீவேன்
றுஞ்சலை நீயென நன்மொழி சொன்னாள். (29)

வேமழ காகிய வெண்டுகள் கேட்டாள்
காமுற வேகரு ணன்மனை யாட்டி
யோம முறும்பொடி யோடி யளித்தா
டாமரை யொத்த தடங்கையில் வாங்கி (30)

மிருத்துவை வென்றிடு மோனம் விளம்பி
யருத்தியி னுவி யழிந்திடு மீயின்
விரித்திடு மென்சிறை மெய்யினில் வீச
வொருப்பட வோடி யுயிர்த்தது சீவன். (31)

வெண்டுகள் பண்டுயிர் மீண்டெழு தன்மை
கண்டன ளக்கரு ணன்புணர் காந்தை
தெண்டன ருந்ததி தேவிமுன் வீழ்ந்தாண்
மண்டுவ கைப்பெரு வாரி திளைத்தாள். (32)

ஆச்சிர மத்தி லருந்ததி போறு
வீச்சில கால மிருந்த ததற்பின்
மாச்சரி யத்தொடு பின்னவர் மாயாத்
தீச்சுடர் நெஞ்சு செறிக்க விருந்தார். (33)

ஓதிய தோர்பரு வத்தொரு நூறுந்
தீதற வேமுடி யுஞ்செயல் கண்டார்
காதின ரீயின தாவி கலந்தா
ரீது விளைந்ததை யேதற வெண்ணி (34)

அக்கரு ணன்மனை யாருயிர் கண்டாள்
மிக்க கொடுந்துய ராலுடல் வெந்தா
ளிக்கவ லைக்கட லின்று கடக்கத்
தக்க புணைத்தகி சிப்பெய ரென்று (35)

புந்தியி னோர்ந்துயிர் போகிய வீயைச்
செந்தளி ரங்கை திருந்திட வேந்திச்
சந்த மறைத்தகி சிப்பெயர் பக்கல்
வந்தன ளீயைமுன் வைத்தனள் வீழ்ந்தாள். (36)

அறுசீர் விருத்தம்.

தண்ணளி வடிவ மான ததீசிமா முனிவன் பாதம்
பண்ணளி குடையும் போது தூவியே பாவி நின்று
ளெண்ணரு மறையோர் முன்னங் கருணனை யீயாய்ப் போக
நண்ணிய சாபங் கூறும் வாவையும் நவிற்றிப் பின்னர் (37)

தனஞ்செய னிளைய மைந்தர் விளைந்ததும் சாற்றி நின்பொ
னினந்தரு கமல பாதஞ் சரணென வடைந்தே னெந்தாய்
மனங்கொடுந் துயரந் தீர வீயது வடிவ மாற்றி
யனங்கனிற் கருண னுக்கி யாவியு மளித்தி யென்றாள். (38)

முகிழ்முலை நவில ஞான முனிவரன் மொழியும் வேதம்
பகர்சம தக்கி னிப்பேர் காசிபர் படரும் விண்ணோர்
புகலரும் பூதி யாலே பிழைத்துயர் புனித ரானார்
நிகரில்வெண் டுகளால் யானு மித்தகை நிறைந்தே னென்றான். (39)

பூதியா லன்றி யிந்தத் தீவினை போகா தென்ன
வோதியே சிவத்தி யான மொருப்பட நினைந்து கொண்டு
கோதிலா முனிவ னுள்ளங் குளிரவஞ் செழுத்தை யெண்ணித்
தீதுறு மீயின் மெய்யிற் றடவினன் றிருவெண் ணீறு. (40)

அருந்தவ முனிவன் கைக்கொண் டணிந்திடு திருவெண் ணீற்றான்
பொருந்திய சாப நீங்கி முன்னுருப் பொலிந்து தோன்றிப்
பிரிந்திடு மாவி பெற்றான் கருணைப் பெரியோன் வேட்ட
கருந்தடங் கண்ணி னாளுங் கருத்துறக் களித்தா ளன்றே. (41)

இருவருந் ததீசி செம்பொ னிணையடிக் கமலம் போற்றி
வருகவென் றழைத்துத் தங்கண் மனையினா சனத்தின் வைத்தே
யருமறை பகர்ந்த வண்ண மருச்சனை மகிழ்வி னாற்றிப்
பொருவறு சுவைக ளாறாற் போனக மருத்தி னாரே. (42)

குறைவற விவர்கள் செய்யும் பூசைகொண் டருளி ஞான
மறைமுனி யிருக்குங் காலை வானவர் கோடி மேனி
நிறையவெண் டுகளிற் பூசிச் சீடராய் நிலையி னின்று
முறைமுறை தவத்தினானை வழுத்தியே மொழிவ தானார். (43)

மகமள விலவா யாற்றுங் கவுதமன் மனைவி யாய
வகலிகை தனக்கு மாலா யவளையு மடைந்தி டாதே
பகருவன் முனிவன் சாப மென்னவே பயத்தா லோடித்
துகளறு துருவா சாவி னிருக்கையைத் துருவிச் சார்ந்தேம். (44)

கொடிச்சடை முனிவன் முன்னங் குறுகினே மவன்பொற் றாளி
லடிக்கடி வணங்கி வீழ்ந்தே மெங்களுக் கபய நல்கிப்
பிடித்திடு மாசை யாய பெரும்பவந் தீர்ந்து ஞானந்
துடித்தர வருள்வே னென்னா வமிழ்தினிற் சொல்லி னானே. (45)

தெய்வவெண் டுகளை யள்ளிச் செழுமலர்க் கரத்தா லெங்கண்
மெய்யினி லணித லோடும் வெந்துய ராசை யாய
மையறு மாயை நீங்கி வாந்திகழ் ஞானம் பெற்றே
யையவிவ் விறும்பூ தாய்ந்தே யளியருக் கறைதி யென்றார். (46)

என்றலுஞ் சதீசி வெள்ளேற் றெம்பிரான் றிருவெண் ணீற்றி
ஞென்றிய பெருமை முற்று முரைக்கநாட் கோடி வேண்டு
மின்றதன் காதை யாஞென் றியம்புவன் கேட்க வென்ளு
வென்றிவா னவரை நோக்கி யினையன விளம்ப லுற்றான். (47)

கலிநிலைத்துறை.

ஆதி நான்முக ஞெடுங்கிய பிரளய மதனின்
மோது தெண்டிரைப் புனலிடை மணிநிற முகுந்த
ஞேது மண்டங்கள் பலபல வுறுப்பினி லுறையச்
சீத நாண்மல ருந்தியஞ் செவ்விமண் டலத்தில் (48)

இருந்து ரோமச ராதிய ரருந்தவ மியற்றப்
பொருந்து கூர்விழி துயின்றனன் முடிவுநாள் போகப்
பிரிந்தி யாவையும் படைத்திட நினைந்தனன் படைக்கத்
திருந்து தன்மையொன் றறிந்தில னுளந்தனிற் றிகைத்தான். (49)

இடிமு ழக்கென வழுதன னழுதிடு மெல்லை
முடிவி லாத்தனி முழுமுதன் முக்கணெம் பெருமான்
கூடிகொள் பைந்துழாய்க் கண்ணியன் கருத்துறு காத
லடைய வோர்ந்தன னிரங்கின னத்தகை யளிப்பான். (50)

ஊரத்தி னண்டங்கள் பலபல மாலையி னுலவக்
க்ரத்தி னண்டங்கள் சிலவெடுத் தம்மனை கடுப்ப
நிரத்தி மேலெடுத் தெறிந்தெறிந் தழகுறு நெடுமெய்
பாத்து வெண்ணிலா வெங்கணும் பரம்பிருள் பருக (51)

மணிகு யிற்றிய கலன்களு மவுலியும் வயங்கப்
பணிந டம்புரி பண்ணவன் முன்னவர்வந் துறலு
மணிப சுந்துழா யண்ணலங் கய்யனை நோக்கித்
தணிவி லாவடி வினனிவ னெவனெனத் தளர்ந்தே (52)

அய்ய நின்னையா ஞரென வறிகில னறிய
மெய்யு ணர்த்துதி யென்னலு முணர்வினை விழுங்கு
மையன் மாயையின் மறைந்தன னிவனென மதித்துப்
பைய வேநகை முகிழ்த்தொரு வாசகம் பகர்வான். (53)

பெருகு மிப்புனன் மூழ்கிநீ பிறங்கொளி திளைக்குந்
திருவெண் ணீற்றினிற் றனமுஞ் செய்தனை யாயின்
மருளு ளாழ்ந்திடச் சிந்தையின் மூடிய மாயை
யொருவி ஞானம்வந் துறையுமின் றுனக்கென வுரைத்தான். (54)

திங்கள் வேணியன் வாசகஞ் செவிப்படத் திருமால்
பொங்கு மித்தடந் திரைப்புனல் குடையயான் புகுதிற்
றங்கு மென்னிரு குறங்குகள் வாயினுஞ் சாரா
திங்கு மூழ்கவான் பெரும்புன லருள்கென விசைத்தான். (55)

ஈது கேட்டன னெம்பிரான் புன்சிரிப் பெழவே
போதி னுந்தியம் பொருப்புடல் குறுகிடப் பொருந்து
சோதி நெற்றியங் கண்ணினாற் பார்த்தலர் துளவோய்
மோது மிப்பெருந் திரைப்புனன் மூழ்கென மொழிந்தான். (56)

அப்பெ ரும்புனல் பார்த்தன னாழியங் கரத்தோ
னிப்பெ ரும்புன லிறங்குதற் கரிதென வேங்கி
முப்பு ரந்தழல் கொளுத்திய முதல்வனை நோக்கிச்
செப்ப ரும்புன லிறங்குதற் கொருவழி திருத்தி (57)

அருள்க வென்னலு மவிர்மதிச் சடையினா னறையு
மருவு மோசனை கோட்டமேன் மறிந்தெழு புனலை
யிருகு றங்குகள் வாயினு மில்லெனப் பகர்நீ
வெருவு கின்றதெ னிப்புன லிடைவிழுந் தாட (58)

எனவி சைத்திது வெண்விர லளவைமற் றில்லைக்
கனைக முற்கழ னீட்டுவல் காணெனக் காட்டி
மனம்வெ ருக்கொள நீக்கியென் வார்த்தையைப் படியா
நனைந றுந்துழாய் நம்பிநீ யிறங்கென நவின்றான். (59)

தேவ தேவனீ துரைத்தலுந் திருமறு மார்பன்
யாவர் வார்த்தையைப் படியென விறங்குவ னெனலும்
பாவ னைப்படி வார்த்தையை படிபடி யாக
நீவ குத்ததி னிறங்கென நிகழ்த்தின னிமலன். (60)

மைத்த கும்புயன் மேனியன் வரன்மொழி மேற்கொண்
டத்தி றம்பெரும் புனல்படிந் தாடிய பின்னர்
கைத்த லங்கொடு பூதியைக் கடவுளஞ் செழுத்தா
லுத்த மாங்கமெய் முழுவது மொளிபெறத் தடவி (61)

கருணை நோக்களித் தீசனு டாவனைக் கரியோய்
நிரும லத்தொடு மென்னைநீ நெஞ்சினிற் றியானம்
புரிதி யென்னலும் புரிந்தனன் றுளவணி புனித
னொருத னிச்சுடர் விளக்கினி லுதித்ததவ் வுளத்தில். (62)

அத்த னிச்சுடர் கண்டபின் னங்குவெள் வளைக்கை
வித்த கப்புயல் விமலனை நோக்கியே விளம்பு
மொத்த ரும்பிய விளக்கினி லொருசுட ருலவிச்
சித்த முள்ளுற வெழுந்தது வெனத்தெரிந் துரைத்தான். (63)

சூல பாணிய னிவ்வுரை செவிப்படச் சொலலு
நீல மேனியி னெடியவ னீபுரி தியானஞ்
சால முற்றிய பக்குவஞ் சார்ந்ததில் லெனவே
கோல வெண்டிரு நீற்றினை யருந்தெனக் கொடுத்தான். (64)

ஈந்த வெண்டுக ளருந்தின னீர்ந்துழா யவன்மெய்
பாய்ந்த சேப்பொளி விளர்த்தனன் பக்குவம் பழுத்து
வாய்ந்த ஞானம்வந் தடைந்திடத் தியானமன் முறையே
யாய்ந்து சிந்தையிற் புரிந்தனன் புரிந்திடு மளவில் (65)

இருக ரங்களு முக்கணு மிலகுவெண் ணிலவு
பொருவு மேனியங் கலன்களும் புன்னகைப் போதுந்
திருவு யிர்த்திடப் பருவமைந் துடைச்சிறு வனிலோர்
பரம மூர்த்தியைக் கண்டன னுளங்களி பரம்ப. (66)

ஆதி மாயவ னிவ்வுருக் கண்டபி னமலன்
யாது கண்டனை யென்னலு மீர்ந்துழா யிறைவன்
சோதி நல்லுருத் தோன்றிய வடிவினைச் சொற்றான்
பாத தாமரை பணிந்தனன் பரமனைப் பரவி. (67)

பிறைநெ டுஞ்சடைப் பிஞ்ஞக நினதுவெண் டுகளி
னறைபெ ருந்தகை யளவிடற் கரியதை யென்றான்
மறைகள் யாவுமோர்ந் துணர்வதற் கரியநின் மகிமை
சிறிய னெத்திற மறிகுவ னெனத்துதி செய்தான். (68)

கரிய நாரணன் றுதியினிற் சிவனுளங் களித்தா
னரிய தாகிய சிருட்டிசெய் துலகெலா மளித்தி
மருவ ருந்துழாய் மாயவ வெனவரங் கொடுத்தா
னுரிமை நல்வர மின்னமுங் கேளென வுரைத்தான். (69)

மங்கை பங்கொரு வானவ னிவ்வுரை வழங்கச்
சங்க மேந்திய தடங்கிரி நினதுபொற் சரணிற்
பொங்கு மார்வமே தழைதா வருள்கெனப் புகல
வங்க ணாயக னவ்வர மினிதுற வளித்தான். (70)

தூய வெண்டுக ளிடைவிடா தணிகெனச் சொன்ஞன்
மாய னவ்வுரை மேற்கொடு வாதனை வணங்கி
நேய மோடுவெண் டுகள்விடா நெற்றிய ஞகி
யாய வண்டங்கண் முறைமுறை படைத்துயி ரளித்தான். (71)

என்று மாதவத் ததீசியாங் கிவையெடுத் துரைப்ப
நன்று நன்றென வானவர் தனிமன நயந்தே
யன்று தொட்டுவண் பூதியே கதியென வணிந்தார்
துன்று செஞ்சடை முனிவனைத் தொழுதுவிண் ணடைந்தார். (72)

விடையு கைத்தவ னித்தகை விளம்பலுந் திகிரிப்
படையு யர்த்தவன் பானிலா வண்பொடி மகிமை
யடைவு கேட்டன னதிசயித் தார்வமுற் றமலன்
புடைவ லஞ்செய்து பொன்னடி வணங்கினன் போஞன். (73)

இன்ன மாக்கதை படிப்பவர் கேட்பவ ரெவரு
மன்ன வூர்தியுந் திருமகள் கொழுநனு மறியாச்
சென்னி வெண்பிறை மிலேச்சிய சிற்பா னருளான்
மன்னு முத்தியை யடைவரொன் றருமறை வழங்கும். (74)

ஞான மாதவன் சூதனிக் காதையை நவில
வீன வெம்பிற விக்கடற் கொருபுணை யெனவே
கான நான்மறை முனிவரர் களிப்பொடுங் காதாற்
பானம் பண்ணின ரளப்பரும் பரவச மடைந்தார். (75)

விபூதி மகிமை உரைத்த அத்தியாயம் முற்றிற்று.

## 16. உருத்திராக்ஷ மகிமை உரைத்த அத்தியாயம்.

கலிநிலைத்துறை.

அந்தி வேணியன் கண்ணெனு முருத்திர வக்கந்
தந்த மேதகு பெருமையைச் சாற்றுவ னெனவே
முந்து மாதவத் துறையுளோர் கேட்கநன் முறையிற்
சிந்தை யன்பொடு சூதமா முனிவரன் செப்பும். (1)

ஆதி நாயகன் கண்ணினிற் ரேன்றலா லதனுக்
கோது நற்பெய ருருத்திர வக்கமென் றுரைப்பர்
பாத கங்களாம் படர்கிழங் ககழ்ந்திடும் படையா
மேதின் மாமணிப் பெருமையை யியம்புதற் கெளிதோ. (2)

மற்று ரைப்பதெ னுருத்திர வக்கத்தின் மகிமை
சொற்ற மேலவர் சொற்றிடுங் காதையைத் தொடர்ந்து
முற்றுங் கேட்பவர் கேட்டது பிறர்க்குற மொழிவோர்
கற்றை யஞ்சடைக் கண்ணுதல் கயிலைசென் றடைவார். (3)

அரிய நன்மணி மகிமையை யறிந்தவ ரேனு
முரிய தன்மையி னிலையுண ராதவ ரேனுங்
கருதி யோர்மணி யாயினுந் தரித்திடிற் கடவுள்
பரிவி னற்பதம் யாவையு மவர்க்கெனப் பணிக்கும். (4)

சிரத்திற் காதினிற் றிருந்திய களத்தினிற் றிரண்ட
கரத்தின் மார்பினில் விதிமுறை துகளறக் கணித்தே
வரத்தி னன்மணி யணிபவர் வள்ளிலை யலங்க
லரத்த மூறிய சூர்ப்படை யமலனென் றறைவார். (5)

ஒற்றை மாமணி காந்தரித் தோருருச் செபிக்கிற்
கற்ற மந்திர மொன்றொரு கோடியிற் கவைக்கும்
பொற்பி னன்மணி சிரத்தினிற் புனைந்துநீர் புகுதிற்
சுற்று தெண்டிரைக் கங்கையா டியபலந் தொகுவார். (6)

தூய மாமணி மஞ்சன மன்றியே துரிசற்
றூயு மாகம விதிமுறை யருச்சனை யாற்றிற்
பாயுங் கங்கைநீர்ப் படர்சடைப் பரமனைப் பரவி
மேய பூசைசெய் புண்ணிய மிக்குயர்ந் தடைவார். (7)

தீதி லாமணிப் பெருமையைத் தெரிதரத் தெரித்தே
யோதி னுமொரு கோடிமேற் கடப்பினு மொழியா
தாதி நான்மறை யந்தணி ரதன்கதை யொன்று
பேதி யாவகை பேசுவன் கேட்கெனப் பேசும். (8)

இடிக்கு மைம்முகில் படர்வரை யெறுழ்வலிச் சீயம்
பிடிக்கு லங்களின் பின்செலுங் கடகரி பிளிற
வொடிக்கும் வெண்மருப் புதறிவெண் கவரியீர்த் தொழுகி
நடிக்கும் வெண்டிரை நிரைதரு நருமதை யாறு. (9)

மோட்டு வெற்பொளிர் வயிரங்க ளிடையற முகந்து
நீட்டு வெண்டிரை நிமிர்தலி னெடுங்கடற் சிறுவன்
கோட்டு மால்வரை தேரெனக் குலவுமட் டயராப்
பூட்டு வச்சிர வடமெனப் பொலிந்ததப் புனலே. (10)

வரைத்த லைப்படர் வானவர் மடந்தையர் கொணர்ந்த
விரைக்கொள் கற்பக நறுமலர் வெளியற வாலிற்
றிரைக்கட் புவிமகள் முலைபுனை தெரியலிற் குலவி
நிரைத்த டந்திரை சுருட்டிவாய்ந் தொழுகுமந் நெடுநீர். (11)

அப்பெ ருந்திரு நதிக்கரை யாயிட மென்னு
மொப்ப ருந்தனி வளநக ரதனிலோர் வணிகன்
செப்ப ருந்திறல் விச்சுவ சித்தனென் றுரைப்போ
னிப்பெ ரும்புவிக் கறமெனத் தனியுரு வெடுத்தான். (12)

ஈச னன்பரைக் காண்டொறு மிணையடி பரவி
யாசி லாவமு துறுசுவை யொடுநனி யருத்தித்
தூசு கோவண மன்னவ ருளங்களி துளங்க
நேச மோடுமீய்ந் தீட்டிய நிதிபல வளிப்போன். (13)

கருகு வெஞ்சுரத் திரும்புனற் காவணங் கலங்காப்
பொருவ ருந்தனிக் கூவநீள் புனன்மடுப் புரிவோ
னிரும ருப்புவெள் ளேறுடை யெம்பிரான் கமல
வரும றைக்கழ லல்லது கருத்துற வமையான். (14)

இனைய தன்மைய னெறிதிரைக் கங்கைநீ ராட
நினைவு பற்றின னெட்டக நிரைகா மிவையின்
மனவ மாநிதி யேற்றுவோன் வகுத்தொரு காத்திற்
புனையு ருத்திர வக்கவண் பொதியுமேற் றினனால். (15)

நடக்குங் காவத மொன்றறை கடந்தபி னனிவான்
கிடக்குந் தண்டலை விந்தையம் பொருப்பினைக் கிட்டி
முடக்குங் கான்மடித் தேறலின் முற்றிய தசையாற்
கடக்க லாமையி னப்பொருப் பிறந்ததக் கழுதை. (16)

துறந்த கத்தபத் தாருயிர் காலன்வெந் தூதர்
நிறைந்து பற்றினர் தென்புலத் தெய்திட நினைந்தார்
சிறந்த வெள்ளியங் கிரியுறை கணத்தவர் திரண்டு
பறந்து வந்தனர் வெருண்டனர் காலன்வெம் படை. (17)

வெங்க ரத்துரு வெடுத்தெனவ் விந்தையி லிறந்தெ
னங்க ளையக னுருத்திர வக்கமே சுமந்தா
னுங்கள் கைப்படுந் தரத்ததோ ........ வன்றிமைக்குந்
தங்க வொண்மணி மானமேற் றட்டினி லிருத்தி (18)

கொண்டு சென்றனர் கயிலையங் குலகிரி யடைந்தா
ரண்டர் நாயகன் சன்னிதிப் படுத்தின ரமலன்
விண்ட செந்துவர்ப் பவளவாய் மெல்லென நகைத்துக்
கண்ட வானவர் கைதொழக் கணத்தகை யளித்தான். (19)

கற்ப நூற்கன கயிலையி லிருந்தது கருதிச்
சுற்றி நூலதிற் கோத்துயிர் துறந்திடு மெனவும்
பற்றி யன்புற வணிந்தவர் பரகதி யடைவர்
மற்றி தற்குமுண் டோதவ றெனவுரை வழங்கல் (20)

வெங்கொ லைத்தொழிற் பாதக ராயினும் வெய்ய
பொங்கு,மன்பிலா வஃறிணை யாயினும் பொருந்த
வங்க மேற்பட வுருத்திர வக்கமே யணியிற்
செங்கண் மால்விடை யெம்பிரான் றெரிசனத் தவரே. (21)

பின்ன லஞ்சடைப் பிஞ்ஞக னன்றிமற் றொருவ
ரன்ன மாமணிப் பெருமையை முழுவது மறியா
ரென்ன வோதினன் சூதனிக் காதைகேட் டிறைஞ்சிப்
பன்னு நான்மறை முனிவரர் பரிந்துளங் களித்தார். (22)

உருத்திராக்ஷ மகிமை உரைத்த அத்தியாயம் முற்றிற்று.

## 17. சோமவார விரத மான்மியம் உரைத்த அத்தியாயம்.

அறுசீர் விருத்தம்.

அரிய வணுவுக் கணுவாகி யகண்ட பரிபூ ரணமாகித்
துரிசற் றுயர்ந்த மதிச்சடையோன் சோம வார விரதத்தின்
பெருமைத் திறநா னுரைப்பலெனப் பேசு மறைதேர் வரமுனிவர்
கருதிப் பரவ வுவகையொடுஞ் சூத முனிவன் கழறுவனல். (1)

முன்னம் பகரு முறையனைத்து முற்று முணர்ந்தே யவைவடித்துச்
சொன்ன நெறியி னுயரொழுக்க முழுதும் புரிவோன் சுடர்த்திங்கட்
சென்னி முடித்த பெருமானைச் சிந்தித் திறைஞ்சி யவனடியார்க்
கன்னங் கருணை யொடுமுதவி யாடை நிதிய மளித்திடுவோன். (2)

துத்திப் படத்துக் கதிர்மனவச் சுடிகை யுரகர் பாதலமுந்
தத்திப் புரட்டித் திரைகொழிக்குந் தாங்கக் கடல்சூழ் தாரணியுங்
கொத்துச் சொரிதேன் மலர்த்தருக்கள் குலவு மிமையோர் வளநாடும்
பொத்திப் படர்ந்த நிலவெனவே புள்வாய் மடுக்கப் புகழ்விளைத்தோன். (3)

கலிவிருத்தம்.

வானளி வாய்மடுத் தருந்த வார்நறுந்
தேனிழி தாமரைத் தெரியன் மார்பினு
ஞனிலப் பாப்பெலா நடக்கு மோர்பெயர்
தானிய பட்டனென் றுரைக்குந் தன்மையான். (4)

முதுமறை நெறியற முழுது முற்றுற
வதிர்திரை யுலகினி லளித்து வாழுநாள்
விதிவழி நீதியின் வியந்து நேடிய
நிதியமும் வளங்களு நீங்கி வாடினன். (5)

முந்துமுழ் விளைத்திடு முறையின் வண்ணமே
வந்திடும் வறுமையை மறுப்பர் யாரெனச்
சிந்தையிற் றளர்ந்திலன் றினமு நூல்வழி
யந்தணர் கருமங்க ளனைத்து மாற்றியே (6)

அந்நகர் மனைதொறு மையம் வாங்குவன்
மன்னிய நெல்லிரு நாழி வந்தபின்
றன்னெடு மனையிடைச் சார்ந்து வார்குழற்
பன்னிசெங் காத்தினிற் பரிந்து நல்குவான். (7)

மறையவ னளிக்குநெல் மகிழ்ந்து வாங்கியே
பொறையெலா மொருவடி வெடுத்த பூங்கொடி
நிறைதா வழுங்குமந் நெல்லி னுற்றினங்
குறைவறத் துன்னுறு குடும்பந் தாங்குவாள். (8)

இன்னணஞ் சிலபக லிரியல் போக்கினன்
பின்னொரு தினத்தினிற் பெருகு நான்மறை
பன்னிய சார்த்தரொன் றொருவர் பத்தியான்
மன்னிய சோமநா தரைவ ணங்கவே (9)

எண்ணின னன்னவ னேகுங் காலையிற்
கண்ணுற மறையவ னதனைக் கண்டனன்
பண்ணவன் புதுமலர்ப் பதுமத் தாடொழ
நண்ணிய கருத்துற நாடி னனரோ. (10)

போந்துதன் மனையிடைப் புகுந்து பொற்புறு
காந்தையை மதிமுகங் களிப்பி னோக்கின
னேந்திழை சோமநா யகரை யேத்துவான்
சாந்தநற் குணத்தினர் சார்த்த ரென்பவர் (11)

போவது புரிந்தன ரவரொ டும்புகுந்
தோவற வேகியே யுமையி டத்தவன்
சேவடி யிறைஞ்சியே திரும்பு வேனென
மாவடு வகிர்ந்தன வரிகொள் கண்ணினாள். (12)

நன்றிது நினைந்தது தரும நாடுத
லென்றுநுங் கருத்தினுக் கிசைந்த தாகுமே
துன்றுசெஞ் சடைமுடிச் சோம நாதரைச்
சென்றுநீ ரிறைஞ்சியே திரும்பு வீரென (13)

கோதுமை மாவினிற் குழைத்துப் பண்ணிய
வேதறு சுவைப்பணி யார மைந்தியை
பாதெய மெனப்பரிந் தளித்துப் பற்றிய
வாதர வொடுநடந் தனுப்பி னாளரோ. (14)

மாதவ ளனுப்பிய பின்னர் மாதவ
வேதியன் மனையிடை விட்டு நீங்கியே
போதலு மொருவழி புத்தி யெண்ணினான்
காதலின் பின்வரு கனிட்டன் செல்வத்தான். (15)

உருத்திர பட்டனென் றொருவ னன்மனைக்
கருத்திய னடைந்தன னவனைக் கண்டனன்
சுரிக்குழ லவன்மனைத் துன்ம தியொடுந்
தெரித்திர மனைத்தையுந் தெரித்துக் கூறினான். (16)

சுடர்மழு வுயர்த்தருள் சோம நாதர்பொன்
னடியிணை தொழச்செல்வா னரிய தொர்வழிக்
கிடருறு வறுமைதீர்த் தினிய வாம்பொருள்
கொடியிடை தருகெனக் கூறி னனரோ. (17)

அவ்வுரை கேட்டன ளழன்று பாதகி
வெவ்வுரை வழங்கினள் விரைவி னில்லெனக்
கவ்வையின் கொழுந்தழற் கதுவு சிந்தைநொந்
தெவ்வகை போவலென் றிரங்கி யேங்கினான். (18)

தண்ணளிப் பெருங்கடற் சார்த்தர் தம்மொடும்
வண்ணநான் மறையவன் மைத்து னனொடு
நண்ணினன் வழிவன நாப்பணோர் நெடுங்
கண்ணக னுடையங் கரையிற் சென்றனன். (19)

கலிநிலைத்துறை.

அன்ன வான்புனத் துளவள முரையினி லடங்காப்
பன்னி வெண்டிரை யோடையின் வளஞ்சில பகர்வேன்
கன்னி வண்டினங் கருஞ்சிறை விரித்துழு துழக்கும்
பொன்ன நாண்மலர் பொதும்பரெம் மருங்கினும் பொலிந்த. (20)

சிறிய கூருகிர்த் தாளுடைச் செவ்வியஞ் சிரலை
யுறுதி யோடிருஞ் சிறையடித் துயர்ந்துயர்ந் தாடிக்
குறுகி நீரிடை மூழ்குறக் கொழுங்கயல் குதித்து
மறுகி வீழ்தலுந் தாமரை வண்டின மருளும்.

படர்ந்த வெண்சிறை விரிதரப் பைப்பயப் பறந்து
தடந்தி ரைப்புனல் குலவிய வாரலைத் தாவித்
தொடர்ந்து சேறலு மன்னது தொள்ளியி லொளிக்க
நடந்த யற்பெடை நோக்கியே வெள்குறு நாரை (22)

பத்தி பத்தியின் சிறையொடு சிறைதொடப் பாத்தி
முத்து யிர்த்திடுஞ் சுரிமுகப் பணிலங்கண் முழுங்கத்
தத்தி யோடிய நெடுங்கரை நிரைநிரை சாய்த்துக்
கொத்தி மெள்ளெனக் குறுநீடை பயில்வன குருகு. (23)

நெட்டு டல்விதிர்த் தொதுக்கியே யிடங்கர்வா னிமிர்த்து
வெட்ட வெங்கணும் வெருண்டிள வாளைகள் வெடிபோய்
முட்ட நீண்டுயர் தாழையின் முப்புடைப் பசுங்காய்
விட்டு வான்மழைத் தாரையி னறும்புனல் விடுக்கும். (24)

காண்டம் வாய்விடக் கதுமெனக் கருந்தலை மலங்கு
வெருண்டு தாவுற விரைவொடும் பாய்ந்தடு நீர்நாய்
திரண்ட மேனியிற் பற்றலு மதன்மெயிற் றிருக்கிச்
சுருண்டு வீழ்வன மற்றொழின் முறைதொகுப் பனவாம். (25)

இனைய வோடையைக் கண்டதி சயித்திருங் கரைமேற்
சினையின் மஞ்சிவர் கூவிளஞ் செறிந்தவோ ரிடையின்
வனையும் வெண்பிறை வேணியன் வந்தனை புரிய
நினைவு ணர்ந்தன னெடுந்திரை யோடையின் மூழ்கி. (26)

விரிந்த மூவிலை வில்லமிட் டய்யனைப் பூசை
புரிந்து போனக மருத்துவான் குடலையிற் பொதிந்தே
யிருந்த நற்பணி யாரங்க ளேந்தினி லெரியின்
முரிந்த செஞ்சடை முன்னவன் றனக்கென வொன்றும். (27)

தழைந்த மாதவச் சார்த்தருக் கென்னவோ ரிரண்டுங்
குழைந்த சிந்தையன் றனக்கென விரண்டையுங் குறித்து
விழைந்த விழ்த்தன னன்னவை மிளிருமொண் ணிறத்தி
னிறைந்த பத்தரை மாற்றினிற் செம்பொனா யிருந்த. (28)

ஈது கண்டன னதிசயித் தீர்மதி புனைந்த
சோதி வானவன் சோமநா தன்செய லென்னாத்
தீதில் சிந்தையி னினைந்தன னித்தகை திருந்த
வாத பத்தொடு சார்த்தருக் கறைந்தன னன்பால். (29)

பேன மொத்திடு நெய்நிறை பெருகியூற் றிருப்பத்
தான நற்பணி யாரமொன் றவர்கையில் வாங்கி
யேன வெண்பிறைக் கோடணி யெம்பிரான் றனக்கு
வானி லைக்கலத் தருத்தினன் வந்தனை முடித்தான். (30)

பொங்கு நற்பணி யாரங்க டிரிந்திடும் பொன்னிற்
றிங்கள் வேணியன் றனக்கென வொன்றையுந் தெரித்தான்
றங்கு மாதவச் சார்த்தருக் கெண்ணிய விரண்டு
மங்க வன்கரத் தளித்தன னினைந்திடு மடைவே. (31)

மற்றி ரண்டையுந் தனக்கென வெடுத்துமைத் துனன்றன்
பொற்பு றுங்கரங் கொடுத்துநல் குரவினிற் பொருந்திக்
கற்பு றுந்தனி மனைவியு மக்களுங் கருகா
திற்பு குந்தவள் கரத்தினி லளித்திடென் றிசைத்தே (32)

ஆங்க வன்றனை யனுப்பின னன்னவன் புகுமுன்
னோங்கு வெம்பசி வெந்தழ லுருத்துருத் தழல
வேங்கி யேங்கிநின் றழுதிடு மக்களுக் கிரங்கி
வீங்கு பூண்முலை யூட்டுதற் குணவின்றி மெலிந்தே (33)

கொல்லை சென்றுமென் குறுந்தளிர்க் கீரைமென் கிழங்கு
கல்லு மேல்வையிற் கண்ணுதல் கருணைவைத் திரங்க
வல்லி யங்கம லக்கொடி யவனிடத் தடையச்
செல்வ மாநிதி கண்டன ளெடுத்தன டிரும்பி. (34)

போய கம்புகுந் திருந்தனள் புந்தியிற் களித்தா
ளாய காலையி லன்னவன் கொழுநனுங் கனுப்பு
மேய மாநிதி சகோதரன் விருப்புற வளித்தா
னேய்வி லாதவ னதிசய மனைத்தையு முரைத்தான். (35)

ஆங்கெ னந்தணர்க் கருநிதி யடைந்திடு மடைவு
மீங்கெ னக்குவந் திரும்பொரு ளெய்திய வியல்பும்
வாங்கு வெண்டிரை மறிவிட முழுவதுங் களத்திற்
றூங்கு சங்கரன் செயலெனக் களியுளந் தழைத்தாள். (36)

சென்ற தன்கொழு நனுக்குமங் கலம்புணர் திறத்து
நன்றி யாவையும் புரிந்துபா னறுஞ்சுவை யடிசி
லொன்று மக்களுஞ் சுற்றமு மருந்திட வூட்டி
யின்றெ றருதிர வலர்க்கமு தளித்திருந் தனளால். (37)

இனைய ளின்னண மிருந்தனள் வனங்கடந் தேகித்
தனைநி கர்ந்திடு மந்தணன் சார்த்தர்தம் மோடும்
புனைபு கழ்ச்சவு ராட்டதே யத்தினிற் புகுந்து
கனைநெ டுந்திரை மேல்சமுத் திரக்கரை கண்டான். (38)

## அறுசீர் விருத்தம்.

அந்தநெடுந் தடங்கரையிற் பிரவாசக் கேத்திரத்தை யடைந்து தேவர்
கந்திருவர் திரள்விலகிச் சினகரத்தி னுட்புகுந்து கரைந்த வன்பிற்
சந்திரன்வந் தடிபரவத் தண்ணளிசேர் சோமேசர் சரணம் போற்றி
வந்தனைமுன் னாகமத்தின் முறையாற்றி யுளமுருகி வணங்கி னானே. (39)

அத்திரத்திற் பூசைமுடித் தவிர்மணிவா யிற்புறத்தி னடையுங் காலை
வித்தகமா தவமுனிவ னொருவனவ னெதிர்வாலும் விருப்பி னோடுங்
கைத்தலமுச் சியிற்கூப்பித் தெண்டனிட்டான் வரமுனிவன் கருணை கூர்ந்து
பத்தியினாற் பரவுதல்செய் தானியபட் டனைநோக்கிப் பகர்வ தானான். (40)

வேதியனீ யிவணடைந்த காரியமென் னின்மனத்தின் விருப்ப மென்னே
யோதுகெனக் களிப்பினொடுந் தானியபட் டன்முதனா ளுள்ள வண்ண
மேதகைய பெருஞ்செல்வங் கிளைத்ததுவும் பின்வறுமை விளைந்த வாறு
மாதரவி னொடுமுரைத்தான் சோமேச னடிக்கமல மருச்சித் தேத்தி. (41)

வந்தனனிக் காலையென வழங்கிடலும் வரமுனிவன் மகிழ்ந்து கூறு
மெந்தைபிரான் சோமேச னடிபரவ நீமனத்தி லெண்ணு முன்னே
முந்துகொடு வறுமையெலாந் தீர்ந்தனைநின் னிதயமலர் முளரி மீதே
கொந்துமல ரிதழியணி கோடீரத் தெம்பெருமான் குடிகொண் டானால். (42)

ஆயினுமோர் சிவவிரத முபதேச முறையுனக்கே யறைவன் கேட்டி
மேயவருள் சுரந்தளிக்குஞ் சோமேசன் றனக்குரிய விரத மாகுந்
தூயநிலாக் கலைநிறைந்து சோமனுமன் னதுபுரிந்து துகடீர்ந் துய்ந்தா
னுயதினந் தொறுமுதையஞ் சோமவா ரமெனப்பே மரிய பாவம். (43)

விரிச்சிகமே முதலாக மேடத்தின் விளங்குகதிர் மேவு காலுந்
தெரித்துரைக்குந் தினந்தோறு முதையத்திற் றெண்ணீரிற் றிளைத்து மூழ்கி
யருத்தியொடு நியதிமுடித் தபிமுகமேற் காகியவா லயத்தி னெய்திப்
புரித்தசடைப் பெருமானை யவனுமை மனைத்தினையும் பொருந்தச் சொல்லி (44)

கூவிளத்தாற் கிழுவையான் மாவிலங்கா னொச்சியாற் குளிர்வி ளாவா
லாவலுட னருச்சித்துத் தெண்டன்வலஞ் செய்தல்விதி முறையி னாற்றி
மேவரிய சந்திரவா ரத்தினத்தில் விசேடமுற மிளிர்பொற் கோயி
றீவியபொன் னுடையினான் மாலையினா லலங்காரந் திருந்தச் செய்தே (45)

கருதரிய பரமனுக்கே யபிடேகம் பலபலவுங் களிப்பி னாட்டிப்
பொருவரிய பஞ்சவில்லத் தொடுஞ்செழுந்தேன் மடற்கமலப் புதுப்போ தாதி
மருவலர்கள் பலவெடுத்தே யருச்சித்து மணித்தூசு வனைந்து பின்னர்
திருவமுது பரமான முதலான போனகங்கள் சிறப்பி னூட்டி (46)

பரிமளிக்கு நறுந்தூப தீபமொடு பணிமாறப் பண்ணி மிக்க
தெரிவரிய நமக்காரம் பன்னிரண்டும் வலம்வரலீ ராறுஞ் செய்தே
யருமுறையின் மடந்தையர்கண் டனமோடு மைந்துதரம் பூசை யாற்றி
யொருவரிய வுணவொழிந்து மற்றைநா ளொலிதிரைய புனலின் மூழ்கி (47)

நஞ்சொளிருங் களத்தானைப் பஞ்சவில்லத் தாற்கமழு நறுந்தேம் போதா
லஞ்செழுத்தா லருச்சித்தே கோதுமையாற் பணியார மைந்து பண்ணி
யெஞ்சலற வருத்துவித்துப் பூசைமுடித் ததன்பின்ன ரிணர்ப்பொற் போது
நெஞ்சுகளித் திருங்குரவ னடிதூவிக் கதையவனா னிகழ்த்தக் கேட்டே (48)

அன்னவனுக் கிருநிதியம் பணியாரத் தோரிரண்டு மன்பி னீய்ந்து
பின்னார னடியரொடும் பாரணவூ ணருந்துவதே பேசு நீதி
யின்னபடி யிந்நோன்பு மைந்தர்மட மாதர்மன மிசைந்து நோற்கிற்
கன்னியிடத் துறைந்தபிரான் பலவளனு மினிதளித்துக் கதியு மீய்வன். (49)

இப்பரிசு நோன்பினைநீ நோற்றிடுக வவ்வளமுங் கதியு மெய்து
மைப்பழகு மணிமிடற்றுச் சோமநா யகர்கமல மலர்த்தாள் போற்றி
யொப்பரிய விந்நோன்பு குட்டரோ கத்துழலு மொருவ னேற்றுச்
செப்பரிய வடிவடைந்தான் முன்னமென வுரைத்து முனிதிரும்பிப் போனான்.

இனையமொழி மேற்கொண்டா னக்காலம் விருச்சிகத்தி லிரவி யெய்த
மனமொருப்பட் டோதியதோர் கற்பமுறை விரதமந்த மாத மட்டு
நனைமலரி னிதழிபுனை சோமநா யகர்கமல நடத்தாள் போற்றித்
தனதுவள நகரடைந்து தம்பிதிரு மனையிடத்திற் சார்ந்தா னன்றே. (51)

அம்மனையிற் குறுகுதலுந் தம்பியைக்கண் டிலனவனா ருயிராந் தேவி
செம்மைநிதி யிவனிடத்திற் சேர்ந்ததுகண் டாதரவிற் சிந்தை கூர்ந்தே
யிம்மனையி லூணருந்தி யிடுதியென வாசனமிட் டிருத்திச் செய்ய
கைம்மலருச் சியிற்குவித்தா டம்பியைக்காண் குறுமாசை கலந்த வாற்றால். (52)

அவ்விடத்தில் விரதமுறை யவிர்மதிவே ணிப்பரனை யருச்சித் தேத்தி
மவ்வனகை மடமயிலைக் கூவிவரு சந்திரவா ரத்தி னேன்பு
செவ்விவளங் கதியளிக்கு மங்ஙோன்பு யானோற்கச் செய்கின் றேனற்
றவ்வலற வதன்சரித முரைத்திடநீ கேட்டியெனச் சாற்றி னனே. (53)

பொற்றிதலைக் களபமுலைப் பொருநெடுவேற் கருநெடுங்கட் பூவை யன்னோன்
சொற்றமொழி மேற்கொள்ளா திகழ்ந்திட லு மனநடுங்கித் தோகை கேட்டி
சிற்பரனேன் பதன்கதையை யிகழ்ந்தனைநின் மனையுண்டி செய்யே னேதுங்
கற்பமுறு மீனமதி யதனிலிந்தச் சிவவிரதங் கணித்து முற்றும் (54)

அத்தகைய திங்களினிற் கொழுநனொடும் வருதியென வறைந்து ஞானத்
தத்துவமுற் றுணர்ந்தருளுஞ் சதுமறையோன் றனதுமனை சார்ந்தா னில்லிற்
புத்தமுத மனையமொழிப் பூவையது கண்டரிய புளகம் பூத்தாள்
கொத்துமல ரவனடிதூய்த் தெண்டனிட்டாள் விழியமுதங் கொழித்து
நின்றாள். (55)

காதடர்ந்த கலகவிழிக் கற்புடைய் மயில்கேட்கக் காதல் கூரச்
சீதமதிச் சடிலமுடிச் சோமநா யகர்பதஞ்சே வித்த வாறு
மாதவத்தின் வரமுனிவன் சந்திரவா ரவிரதம் வலித்த வாறு
மாதரத்தி னொடுமுரைத்தா னன்னதுகேட் டவளுவகைக் கடலி னாழ்ந்தாள்.()

மீனமதி யதனிலிந்தச் சிவவிரத விழவுமன விருப்பி னேடுங்
தானியபட் டன்முடித்தா னதற்குவருந் தமர்களொடுந் தம்பி சிந்தை
மானமழிந் திருநிதிபோய் வறுமையொன்று மடைந்தனனவ் வாறு நோக்கிக்
கூனன்மதி முடித்தபிரான் விரதமிவன் மனையிகழ்ந்த குறையென் றெண்ணி()

பின்னவனைக் கரந்தழுவி மதிவார விரதகற்பம் பேச வேநின்
பன்னியைமுன் கூவியபின் னதுகேளா திகழ்ந்தனளப் பான்மை யாலே
யின்னலுறும் வறுமையுனக் கெய்தியதவ் விரதமினி யிழைத்தாற் செல்வ
முன்னரினு நனிகிளைக்கும் புரிதியெனக் கற்பமுறை மொழிந்தா னன்றே.(58)

நெறியகலா முன்னவன்கூ றியபடியே விரதமந்த நீதி யாற்றி
வறுமையெலாந் தவிர்ந்துபெரு வளமனைத்து மவனடைந்தான் வரிவண் டாடு
நறியகருங் கூந்தலொடு மைந்தரொடும் புகழளகை நகர வேந்தி
லுறுநிதிய நனியீட்டித் தானியபட் டனுந்தவத்தோ டுறைந்தா னன்றே. (59)

ஆய்ந்துரைத்த வின்னகதை கேட்பவர்க ளுரைப்பவர்க ளளகை வேந்தில்
வாய்ந்தபெருஞ் செல்வமொடு மினிதிருப்ப ரெனச்சூதன் மகிழ்ந்து கூறப்
பாய்ந்தபுனற் செஞ்சடைப்பண் ணவனுட லங்கமலப் பதத்தான் மாயை
காய்ந்தபெருந் தவமுனிவ ருவகைநெடுங் கடலமிழ்ந்திக் களித்தா ரன்றே.(60)

**சோமவார விரத மான்மியம் உரைத்த அத்தியாயம் முற்றிற்று.**

## 18. கமலாலய மான்மியம் உரைத்த அத்தியாயம்.

கலிநிலைத்துறை.

முரிந்த வெண்டிரைப் பகிரதி முடிபுனை முதல்வ
னிருந்து மாநடம் புரிதரு கயிலையென் றிசைக்கும்
பெருந்த கைத்திறந் தருங்கம லாலயப் பெருமை
பரிந்து மாதவச் சூதமா முனிவரன் பகரும். (1)

உலக நாப்பணின் றோங்கிய வொருமக மேரு
வலகில் வெற்பெலா மழைத்துநுங் களுக்கர சாக
மலைவி லென்மக வாகிய மந்தர வரைக்கே
யிலகு நீண்முடி சூட்டுதல் வேண்டுமென் றிசைப்ப (2)

நீண்ட மால்வரை மேருவி னுரைக்குநெஞ் சழன்றே
யாண்டு விந்தைநின் றடல்வலி குறைந்தமந் தரத்துக்
கீண்டு போர சடங்குமோ வெனவெடுத் திசைத்து
மீண்டு தன்னிடைப் புகுந்துயர் மேருவெற் பினுக்கே (3)

வலியின் மிக்குறு வளத்தினின் மகிமையிற் குறையெ
னலரி வானவன் வலம்வர லொன்றுமே யதிகங்
குலவு செங்கதிர்த் தேரினைக் கொடுமுடி யுயர்த்தி
விலகி யென்னையும் வலஞ்செய்விப் பேனென விரைந்து (4)

விந்தை மால்வரை மேருவெற் பினின்மிக வளர்ந்தே
யுந்து நீண்முடி யாதவன் மண்டலத் துருவிச்
சிந்து வெங்கதிர் வானவ னென்னையுந் தெரிக்கி
லந்த மேருவிற் குலவரை யென்பது மறிவாய். (5)

எனையு மவ்வணம் வலம்வரல் வேண்டுமென் றிசைக்கக்
கனைநெ டுங்குரற் கடும்பரி யேழுடைக் கதிரோ
னனைந றும்பொருட் டந்தணன் றிருட்டிசெய் நாளி
லனைய மேருவை வலஞ்செயும் வழியெமக் கமைத்தான். (6)

கூறு மப்பரி சன்றியு மதன்கொடு முடிக
வேறு முன்னதம் யாவரு மிசைப்பதற் கரிதா
மாறி லாதபொன் மேருவை வலஞ்செய்வ தல்லாற்
சீறி யுன்னையான் வலஞ்செயே னெனத்தெரித் துரைத்தான். (7)

என்று கூறிட விந்தையம் பொருப்பெரி யெழவே
கன்று வெஞ்சின முருத்துநீ கடக்கரி தெனவே
நின்று தங்கிய கொடுமுடி பலபல நீட்டிச்
சென்றி டாவகைச் சூரியன் றேரினைச் செறுக்க (8)

ஓங்கு மால்வரை விந்தைசெய் திடுஞ்செய லுணர்ந்தே
தீங்கி ழைத்திடு மிவ்வகை யாணவஞ் சிதைக்க
வீங்க கத்திய னன்றிமற் றிலையெனக் கதிரோ
னூங்க வன்னுறை தருகுருக் கேத்திர மடைந்தான். (9)

தரும வேதமுந் தமிழையு மளந்தமா தவத்தோன்
பெரும கம்பல வியற்றிய புகைக்கரும் பெயலின்
மரும லர்ப்பொழி லிவர்ந்திடு மிருக்கையின் வாயில்
விரிசெ ழுங்கதிர் விண்ணவன் விதிர்ப்புற நின்றான். (10)

அறுசீர் விருத்தம்.

மைய றுஞ்சுடர் வானவ னிருக்கையின் வாயினின் றதுநோக்கிச்
செய்ய கேள்விய னகத்திய னழைத்தயல் செம்பொனு சனநல்கி
யைய நீயிவ ணடைந்ததென் னின்மனத் தருந்துய ரெவனென்ன
வெய்ய வன்கனி வாய்திறந் தினையன விளம்புவன் விரைவோடும். (11)

பைம்பொன் மால்வரை யதனொடும் விந்தையம் பருப்பத மாறுகி
யும்ப ரென்னெடுந் தேர்செலும் வழியினைத் தடுத்ததா லுளமாழ்கி
வெம்பு மேனியு மெலிந்தன னவ்வரை விளைத்தவா ணவந்தீர்ப்பா
னிம்பர் நின்னிடை யடைந்தன னையநீ யெழுந்தரு ளுகவென்றான். (12)

வருந்தி யாதவ னிவ்வுரை வழங்கலும் வாமுனி யதுகேட்டு
விரிந்த செஞ்சடை யசைந்திட நடந்துயர் விந்தையி னிடத்தெய்தித்
திருந்து மால்வரை கேட்டியான் றென்புலச் சிவதலந் தெரிசிப்பான்
பொருந்த வேகுதற் கொருவழி விடுகெனப் புகன்றனன் பொலன்விந்தம். (13)

அஞ்சி யையநீ யெழுந்தரு ளுகவென வடங்கியஞ் சலிசெய்யச்
செஞ்சொன் முத்தமி ழுணர்ந்தவ னின்னிடைத் திரும்பியான் வருகாறும்
விஞ்சி நீண்டிடா தித்தகை யிருக்கநீ யில்லையேல் வெகுண்டுன்னை
யெஞ்ச வேசபித் திடுவனென் றலும்வரை யிருந்ததத் தகையின்றும். (14)

புல்லு மாநிதி வரம்பற வீட்டிவெம் புலவுவேற் படைதாங்கி
வெல்லும் வேந்தராய் வெண்குடை கவித்தெழு மேதினி புரந்தென்னுங்
கல்லு மெய்குழைந் தூரைப்படி நிலத்தினிற் கரந்துபோ யதுவென்றாற்
சொல்லு மாதவப் பெருமையித் தகையெனத் தொகுத்துரைத் திடற்பாற்றே.

முனிவ னின்னணம் புரிந்தபின் றென்றிசை முகந்தனில் விரைந்தேகிக்
கனியுஞ் சிந்தைய னுகிமா முனிவரன் கமலைமா நகரெய்திப்
பனிநி லாவணி புற்றிடங் கொண்டருள் பரமனை யடிபோற்றி
யினிய நல்லருட் குறிதன தரும்பெய ரிசைத்துவே றருச்சித்தான். (16)

அறந்த ரும்புகழ்க் கமலைமா நகரினின் முனிவனின் னணமாற்றிச்
சிறந்தி ருந்திடுங் காலையில் வானவர் தம்மொடுஞ் செருச்செய்ய
மறந்த ருந்திறற் காலகே யப்பெய ரசுரர்கள் வளைந்தீண்டிப்
பறந்த லைச்சமம் புரிந்தனர் புரிந்திடும் பான்மையைப் பகர்கின்றேன். (17)

### அறுசீர் விருத்தம்.

அசுரர்க ளிறைவன் காலப் பிரபுவென் றறையும் பேரான்
பசியபொன் னுடை செய்ய மருங்கினிற் படரச் சுற்றி
யொசிதரு கொய்யஞ் சாத்திக் கொடுக்கிரு புறமு மோட்டி
வசியுறு வயிர வொள்வாட் கச்சொடும் வதிய வீக்கி (18)

ஆதவர் மழுங்குஞ் செம்பொ னவிர்மணி மகுடஞ் சூடி
மேதகு வயிரப் பட்ட நெற்றியின் மிளிர வீக்கிக்
காதினிற் சிவப்புச் சிந்துங் கதிர்மணிக் குழைகள் சாத்திச்
சோதிநித் திலத்தின் கண்ட சரங்களுந் துலங்கப் பூட்டி (19)

மணியெழு வளைய தோளில் வச்சிர வலையம் பூட்டி
யணிகெழு கடகஞ் சேர்த்தி யலரிளம் பருதி மார்பிற்
பணிபல விழைத்த செய்யப் படரொளிப் பதக்கஞ் சாத்திப்
பிணைதலிட் டிணக்குஞ் சன்ன வீரமும் பிறங்கச் சூழ்ந்து (20)

ஒட்டற வுருக்குஞ் செம்பொ னுதரபந் தனமும் வீக்கிப்
பூட்டிய கோதை நீண்ட விரலினிற் புதையச் சுற்றி
வீட்டியா ருயிர்சிந் தம்புத் தூணியும் வெந்நிற் சேர்த்துக்
கோட்டிய வரிவில் லோடும் படைபல குனித்துத் தாங்கி (21)

சில்லியந் தடந்தேர் கோடி நிரைநிரை திரண்டு சூழ
மல்லலங் களிநல் யானை யளவற மருங்கு பாய்ப்பக்
கல்லற மிதிக்கு மெண்ணில் கடும்பரித் தொகுதி சுற்றப்
பல்லியந் துவைக்கும் வீரர் படுகடற் பரப்பிற் றேன்ற (22)

கருமலை நடந்த வென்ன கண்கனற் பொறிகள் சிந்த
வெரியழற் சிதற வெள்ளை யெயிறொடு மெயிறு தாக்க
விரிசுடர் வடிவாட் குந்தங் கப்பணம் வேல்க ளேந்திப்
பொருபுயம் புடைத்து வீரர் புணரியோ ரேழிற் போத (23)

வெய்யவ னுலகந் தொட்டு வீசிய கொடிக ளோங்குங்
கொய்யுளை மடங்கல் யானை குதிரைபூ தங்கள் பூண்ட
வையமேற் கொண்டு தூளி மறிகடற் பாவை தூக்க
................................................ (24)

விண்ணவர்க் கரைசன் செய்ய விரைநறுந் தருக்க ளீன்ற
கண்ணிசூழ் தெய்வச் செம்பொற் கதிர்மணி மவுலி வேய்ந்தே
யண்ணலங் குழைகள் பூட்டி யவிர்மணி வலயஞ் சேர்த்தி
யெண்ணரும் பணிகள் யாவும் வகைவகை யெடுத்துப் பூண்டான். (25)

துந்துமி முழங்க மற்றைப் பல்லியந் துவைத்துச் சூழ
வந்தாத் திமையோர் தத்த மடற்படை யேந்திப் போதச்
சந்திர வமுதந் தோய்த்துத் ததைந்தவெண் கவரி வீச
மைந்துறும் படைக ளோடும் வச்சிரம் வயங்கத் தாங்கி (26)

முடிநெடுங் கவிகைத் தெய்வ முழுமதி நிலவு காலுங்
கொடிநெடுந் திண்டே ரேறிக் குறுகினன் குலவி, விண்ணும்
படிகளு நாகர் வாழும் பாதல நகரு மொன்று
யிடிபட முழங்கி யார்த்தே யெதிர்ந்தன விருவர் சேனை. (27)

சந்த விருத்தம்.

மைம்மு கிற்பொழியு மாரியினில் வாளி யிமையோர்
கைம்ம டக்கலற வெய்தனர் கனைத்த குரல்வீட்
டம்ம டற்பகழி யற்றிட வடற்சி லிமுகம்
வெம்மை யிற்செல விடுத்தன ரரக்கர் விறலோர். (28)

காலு றக்கனல் கடுஞ்சின முருத்த தெனவே
சூலம் விட்டனர் சுறுக்கொள நெருக்கி யிமையோர்
மேலெ திர்த்தபடை துண்டம்விழ வன்ன வைவிடுத்
தால மொத்தெழு மரக்கர்க ளறுத்த னர்களால். (29)

மிக்க வெங்கதிர் சுழன்றுவரு வெம்மை யெனவே
சக்க ரம்பலவெ றிந்தனர் தழங்கி யிமையோர்
தொக்க வெம்படை துணிந்துபிறை யென்ன விழவே
யக்க ணங்கொள் படைவிட்டன ரரக்க ரடலோர். (30)

பைத்த லோடுமடல் வானவர் பாந்து படையான்
மத்த மாகரி வயப்புரவி கொன்று நறவக்
கொத்து மாலைநெடு வேலசுர ரென்ற கொடுமைச்
சுத்த வீரர்கண் முடித்தலை துமித்த னர்களால். (31)

ஏறு கொண்டவி னிடக்குர லெழுப்பி நிருதர்
சீறி வெங்கணை சொரிந்துபொரு தேவ ருடலங்
கூறு கொண்டனர் முடித்தலை குறைத்த னர்குனித்
தூறு செங்குருதி யாறென வுவட்டொ ழுகுமால். (32)

வேல றுத்தனர்கொல் வில்லினை யறுத்த னர்விறற்
சூல றுத்தனர் சுடர்க்கணை யறுத்த னர்துணைக்
கால றுத்தனர் காத்தினை யறுத்த னர்கலா
மால றுத்ததிறல் வானவரை வஞ்ச நிருதர். (33)

மண்டி யேறின ரரக்கர்கைம் மடக்கி வயிரத்
தண்டு சுற்றின ரடித்தனர் தகர்ந்து தலையுட்
கொண்ட மூளைசி தறச்செறி கொழுங்கு ருதிவாய்
விண்டு கக்கினர்க ளோடினர்கள் விண்ண வர்களே. (34)

நிற்க நிற்கவென விந்திரனி றுத்தி யவரை
விற்கை கொண்டனன் விடுத்தன னநேக விரதம்
புற்கை கொண்டிடுவர் போவரினி நீச ரெனவே
மற்கை வண்புய மடித்தனர்கள் வான வர்களே. (35)

விண்ண வர்க்கரைச னித்தகை புரிந்தி டவெகுண்
டெண்ணும் விற்கா மெடுத்தன னெதிர்க்க விரத
மண்ண டுக்குற நடத்தினன் பிடித்த னனிதழ்
கண்ண ழற்பொறி கனன்றுசொரி கால வசுரன். (36)

மைந்து றுங்கொடு வரிச்சி லைகுழைத் திருவரு
முந்தை நாணொலி முழக்கினர் மலைக்கு வடுக
ளிந்தி ரன்பகழி யெய்தன னிலக்க மறவே
யந்த வெங்கணை யறுத்தன னரக்கர் தலைவன். (37)

உள்ள நெக்குற வுவப்பினொடு பூசை கருதி
வெள்ளை வாரணன் விரிஞ்சன்முத லோர்கள் கணைக்
ளள்ளி யாருயிர் குடிக்கவிட வன்ன வைகளாற்
கள்ள வஞ்சனு மடர்த்தமர் கடிந்த னனரோ. (38)

ஆயி ரங்க ணடற்சிலை குனித்து விடுமோர்
மாய வெங்கணை யிலக்கமற வந்து றவதிற்
பேய்கள் வெங்கணமொர் கோடிகள் பிறந்து துருவி
மேய தானவர்கள் சேனையை விழுங்கி வருமால். (39)

வஞ்ச நீசவெல் வரிச்சிலை குழைத்து விடுமோர்
விஞ்சை வாளியள வற்றநெடு வெங்க ணைகளா
யஞ்ச வோடவத ளித்தகண மாடு மலகை
துஞ்ச வானவர்க ளாருயிர்கள் சூறை யிடுமால். (40)

இருவர் தேருமவர் சேனையினை மாறி யிகலிக்
குருதி யோடியகு டற்றசை குழம்பி யொழுகக்
கருதி மண்ணிடை யரைக்குமொரு கைந்நொ டியிலே
யரிய சாரிவரு மண்டகட கத்த ளவுமே. (41)

கட்டி டிக்கொடி முழங்கவொளி காலு மிரத
முட்டி நீசனொரு தோரணி முறிந்து சூலைய
விட்டு விண்ணவர் பாரவவரு வேள்வி முதல்வன்
மட்டி லாதசுடர் வச்சிரமெ டுத்த னனரோ. (42)

ஈது கண்டன னெயிற்றினை நெரித்தெ வர்களுஞ்
சேதி யாதவொரு தேரின்மிசை யேறி நிருதன்
கோத டர்த்தவலி கொண்டுகுல வுங்கு லிசனைக்
காதி யெஃகடு கருந்தடிகொ டெற்றி னனரோ. (43)

வன்றி றற்றடிகொ டெற்றலகன் மார்பு புதைய
வென்றி யிந்திரன் வெயர்த்துயிர்க ளைத்து விழலு
நின்ற தோதனை மாதலி நெடுங்க கனமீ
தொன்ற வேகடவ வோடினர்கள் வான வர்களே. (44)

தேவ ரோடியது கண்டுதிரை யாழி துயிலுங்
காவ லெந்தைகரு டன்பிடரி னேறி விரைவின்
மேவ வோடியகல் விண்ணவரும் வந்து மிடையக்
கூவி நீசனெ டெதிர்த்தனர் பொரக்கு லவியே. (45)

சந்த விருத்தம்.

சேலடர் திரைதுயிலுஞ் சிலைமுகில் விடுகருடன்
காலடி படவிழுவார் கடுவளி சுழல்சிறகர்
மேலடி படவிழுவார் கவர்தர விரிதருமோர்
வாலடி படவிழுவார் வருமட னிருதர்களே. (46)

கடிகமழ் துளவணியுங் கருமுகில் காகமலத்
தடிபட வடிமுரசந் தகர்வன பலவுயிருங்
கொடியொடு குடைசிதறிக் குறைவன பலவதனு
விடிபட மடமடெனு விறுவன சிறுவிரதம். (47)

நீடுறு கதையடியா னெடுகிய தலைகெரிபட்
டோடுவ பலகரிக ளதனடி முடியுறவே
கோடுக மிகவலறிக் குழைவன பலபரிகள்
பாடுற நிலமிசையே படிவன பலபடையே. (48)

மலர்மகள் புணர்கொழுநன் வரிசிலை தொடுகணைகள்
பலபல கரியுருளப் பரிபல பலவுருளக்
கொலைபுரி கொடுநிருதர் குறையுட லொடுமுருளச்
சிலசில முடியுருளத் திரிவன சிலசிலவே. (49)

கொண்டலை நிகர்குழகன் குளிர்மல ரிதழ்படுமோர்
தெண்டிரை யமுதமெனத் திவளுறும் வளையொலியா
லண்டமு முடைபடவே யடுசமர் முடிவெனவே
மண்டைகள் வெடிபடவே மடிவார் நிருதர்களே. (50)

கொழிதிரை நுரைசிதறிக் குருதிசெந் நதியினிமிர்ந்
தொழுகிட நரிநிலைகெட் டுருள்பட வொருநிரைபோ
யிழுதொடு குடர்பருகி யிடையிடை தெளிபடவே
கழுகுகள் காணமிடக் கணநிரை கதறிடுமால். (51)

மறலியு மருளுறவே மாயவ னிதுபுரியத்
திறலுறு மசுரர்கொடுந் திசைதிசை செலவவனு
மறைகட லெனவொலிசெய் தளவற வணியணியாய்
விறனனி கெழுமினராய் விண்ணவர் குழுமினரே. (52)

சந்த விருத்தம்.

நன்று நன்றிது விளைத்தல் மாயனென நக்கு வெஞ்சின முருத்திதழ்
தின்று தின்றிரு புயங்கள் கொட்டியடு திண்டி றற்சிலை திருத்தியே
வென்றி துன்றிய சிலைக்கை மாயனெதிர் விடுக தேரென நடத்தினு
னின்று நின்றுபொர வருதி யென்றுகரு நெடிய மாயனை யழைத்தனன். (53)

அசுர னின்னண முரைக்க வூழியி னழற்பி ழம்புவிழி சிந்தவே
பசிய குல்லைபுனை மாயன் வேகமொடு பறவை யூர்திமுன் விடுத்தனன்
பிசித முண்ணுமொரு சக்க ரங்கொ டுடல்பிளவு செய்திட வெறிந்தனன்
விசையி னோடிவரு சக்க ரந்தவற வசுரன் வெங்கணை விடுத்தனன். ()

கடனி றத்தவ னிறத்தி லெண்ணரிய கணைக ளூடுற நிறுத்தினன்
மடன்ம லர்க்கம லமங்கை கொண்கனுட லல் வாடி யுள்ளமு மயங்கினு
னடல்வ டிக்கணையின் மாரி மூவுலகு மடைய வீரமொடு தூவினு
னுடல்வி திர்ப்புற வெகுண்டு விண்ணவர்க ளோடி யெங்கணு மொளித்தனர்.()

செங்கண் மாயவன் மயங்கி நொந்ததகை திருவு ளந்தெரிய வெண்ணிஞ
னங்க ணுன்குதிசை யும்ப டார்ந்தெழ வளப்ப ரும்பெரிய பூதர்கள்
சங்கு பேரியமி டக்கை துந்துமி தடாரி சல்லிய முழக்கவே
துங்க மால்விடை யுகைத்து மிக்கதொரு சோதி நாயக னெதிர்ந்தனன். (56)

சந்த விருத்தம்.

பாலா ழிக்கும் பைம்பொ னகர்க்கும் பகையுண்டேன்
மேலா நிற்கு மெந்தை தவிர்க்கும் வேறுண்டோ
வாலா லத்தை யொத்த வரக்க னழிவின்றே
யேலா வைச்ச மென்று களித்தா ரிமையோர்கள். (57)

கண்டான் வஞ்ச னிற்பதை யற்பங் கவின்மூரல்
கொண்டா னம்பொன் வெற்பொரு செங்கை கொடுநின்றோன்
றண்டா விக்கு நிருதர் குலத்துத் தலைவோனு
னுண்டா விக்கச் சூல மெறிந்தே யுயிர்கொன்றான். (58)

அந்த வரக்கன் பட்ட வதற்பி னரன்வாளி
சிந்த வெதிர்க்குந் தானவ ரெல்லாஞ் சிதைவுற்றார்
பிந்தி யொளித்துப் போன வரக்கர் பிறழாதே
முந்து திரைப்போர் வாருதி யூடே மூழ்குற்றார். (59)

கன்னி யிடத்தான் செங்கம லக்கைச் சூலத்தா
லென்ன தவத்தா லிவனுயிர் விட்டா னென்கின்றார்
சென்னி யிடத்துக் கைக்கண் முகிழ்த்தார் சிவன்மூழ்க
மன்னு தருப்பைம் பூமழை பெய்தார் வானோர்கள். (60)

அறுசீர் விருத்தம்.

வச்சிரக் காத்தி ஞனு மறிதிரை மணிச்செஞ் சூட்டு
நச்சா வதனிற் றுஞ்சு நறுந்துழாய்ப் படலை பூத்த
பச்சைசமே னியனு முள்ளம் பருவா லொழிந்து பைம்பொன்
கச்சுலா முலையாள் பங்கன் கழலிணை துதித்தா ரன்றே. (61)

வெள்ளைமால் விடையோ னென்னர் விளம்பிய துதியாற் செய்ய
வுள்ளநெக் குருக வார்வ முவந்தினி தனுப்ப வன்னோ
ரெள்ளருங் கனக நாடு மிமிழ்வரை யிடமுஞ் சேர்ந்தார்
வள்ளிலைச் சூல மேந்தும் வாதனுங் கயிலை சேர்ந்தான். (62)

இத்தகை விளைந்து நண்ணுஞ் சிலபக லிரிந்த பின்னர்
தத்துதெண் டிரையி னூடு கரந்ததா னவர்க ளெல்லா
மைத்தகு மிருளில் வந்து வளைந்துயிர்க் கிடுக்க ணூற்றி
வித்தக மறையோர் செய்யும் வேள்வியை யழிப்ப தானர். (63)

அந்தணர் வேள்வி யாற்று மவியமு தழிந்த வாற்றாற்
பைந்தரு நகரத் துள்ளோர் படர்வலி குறைந்தா ரன்றோ
ருந்துதெண் டிரையி னுள்ளே யொழித்திடு மசுர ராவி
சிந்திடிற் பிழைப்போ மென்னுச் சிந்தையி னுணர்ந்தா ரன்றே. (64)

தொடுகடற் சுலவு தெண்ணீர் சுவற்றியே யசுரர் தம்மை
யடுதொழில் விளைக்க வேண்டு மன்னது புரிய வோங்குந்
தடவரை யடக்குங் கும்பத் தமிழ்முனி யன்றி மற்றைப்
படியினில் விசும்பி லுண்டோ பார்க்கிலத் தகைய ரோர். (65)

எனமனத் தெண்ணித் தெய்வக் குறுமுனி யிருக்கு நீளக்
கனைவரிச் சுரும்பர்ச் சோலைக் கமலைமா நகர நண்ணி
மனமுறும் விடையம் வென்ற வாமுனி யிருக்கை யெய்த
வனையவன் றடக்கை கூப்பி யாசிக ளுரைத்துச் சொல்வான். (66)

அடிகணீ ரிவண்வந் தெய்து மதிசய மறைதி ரென்னக்
கொடியகா லேயர் தம்மிற் பிழைத்திடுங் கொலைசெய் தீயோர்
முடவுவெண் டிரைநீ ராழி யொளித்திருட் போது மூண்டிப்
படியினை யலைத்து வேதம் பகர்மக மழிக்கு மாற்றால் (67)

புண்ணிய வவியூ ணின்றிப் பொருவலி குறைந்து நிற்பா
னண்ணினேம் புணரித் தெண்ணீர் நான்மறை முனிவ நீசென்
றுண்ணிலாங் கவர்க ளாவி யொழிப்பது புரிவோ மென்று
வண்ணல்வா னவர்கள் கூற வகத்திய னறைவ தானன். (68)

நிருதர்க ளாவி மேய்ந்து நிணப்புனல் குடிக்குஞ் சூலக்
குருமணிச் சடையி னன்பொற் குரைகழல் வழுத்தி யேத்தி
விரிகடற் றெண்ணீர் மாந்தும் வித்தையை யடைந்து பின்னர்ப்
பருகுவன் பருவ மொன்று பொறுக்கெனப் பகர்ந்தா னன்றே. (69)

நற்றவ னுரைக்கத் தேவர் நன்றென வாசி கூறிப்
பொற்பதி யடைந்தார் தண்ணம் பொதும்பர்சூழ் கமலை தன்னிற்
சிற்பமயமாம் பீடந் திசையிரு நான்குந் தாபித்
தற்சனை புரிந்தான் றெய்வ வருந்தமிழ் முனிவ னன்றே. (70)

உணர்ந்திடும் பருவ மொன்று கடந்தபி னுமைபொற் கொங்கை
மணந்தவன் வெளிப்பட் டன்ன வித்தையை வழங்கி ஞானற்
குணந்திகழ் முனிவ னுள்ளங் கொழுங்களி திளைத்தான் பின்னக்
கணங்கொள விமையோர் கூடிக் கமலைமா நகாஞ் சார்ந்தே. (71)

முனிவரீ யளக்த ருண்பான் வருகென மொழிய ஞானப்
புனிதன்மா தவத்தோன் சென்று புகழ்ந்துவிண் ணோர்க ளாடக்
குனிதிரைப் புணரி நீரோர் குடங்கையா சமன மாகக்
கனியிதழ் திறந்து கொண்டான் கலங்கின வசுர ரீட்டம். (72)

தண்ணளி முனிவ னைசைத் தடங்கடல் குடித்த பின்னர்
விண்ணவ ரசுரர் தம்மை வெஞ்சம ருருக்கி வீட்டிப்
பண்ணுறு மறையால் வாழ்த்திப் பரிந்துமா தவனை நோக்கி
யெண்ணரும் பெருமை செய்தா யுனக்கிணை யெவர்க ளுள்ளார். (73)

எனத்தனி முகமன் கூறி யெவ்வரம் வேண்டு மென்ன
மனத்திடுங் கருணை யோடும் வந்தியான் வழுத்தும் பீட
மனைத்தையு மருச்சித் தோர்க டெரிசன மணுகிச் செய்வோர்
நினைத்திடுங் கரும முத்தி நிலைபெற வேண்டு மென்றான். (74)

அருந்தவ னீது கூற வவ்வரம் வழங்கி விண்ணோர்
தெரிந்தொரு பீடத் துக்குச் சித்திர பீட மென்னப்
பரிந்துபே ருரைத்துச் செம்பொற் பைந்தரு நகாஞ் சார்ந்தார்
பொருந்துமத் தலத்தின் றன்மை யெவர்களே புகலற் பாலார். (75)

கலிநிலைத்துறை.

அறைந்த விக்கதை யன்றியு மப்பதி பொருந்துஞ்
சிறந்த தேவதீர்த் தக்கதை யொன்றுசெப் பிடுவே
னிறைந்த வன்பொடு முனிவரீர் நீவிர்கேட் கெனவே
துறந்த சிந்தையன் சூதமா முனிவரன் சொல்லும். (76)

புரைசை மால்வரை யிருநிதி திரைகொடு பொரும்பா
ரரசு றங்கிட முரசுறங் காமனின் றதிரும்
வரைசு ருங்கிட வுயர்நெடுங் கோபுர வாயில்
விரைசெய் தார்த்திரி சங்கெனும் வென்றிவேல் வேந்தன். (77)

ஓது சாபமேற் கொண்டுவெம் புலையுரு வெடுத்துத்
தீது தீர்த்துட லோடும்வா னகரிடைச் செல்லக்
கோதி லாமுனி கோசிக னருளுமென் றெண்ணி
மாத வன்னுறை திருமறைக் காட்டினில் வந்தான். (78)

அரிய மாதவ னிருக்கையின் பாங்கர்சென் றணுகி
யுரிய மெய்த்தவ நின்னடிக் கபயமென் றுரைத்து
விரிம லர்க்கர முச்சிமேன் முகிழ்ந்தனன் வீழ்ந்தான்
கருதி யின்னணந் தெரித்துரை கழறுவ தானன். (79)

ஆக்கை யோடுநற் றுறக்கவீ டடைவது கருதி
வீக்க முற்றிடு மறிவினன் வசிட்டனை வினவ
நீக்க நெஞ்சினி னினைந்துதன் புத்திர ரிடத்திவ்
வாக்கி சைத்தியென் றென்முக நோக்கினன் வலித்தான். (80)

குரவன் வாசக மேற்கோடு குமார்தழ் மிருக்கை
மருவி யிவ்வுரை வழங்கலு மன்னவர் மறுத்தார்
பெருகு நன்னெறி சீடர்கள் விழைந்திடும் பேற்றை
யருள்வ தேயிருங் குரவருக் கடைவென வறைந்தேன். (81)

மொழியு மிவ்வுரை கேட்டபின் முனிந்துவெஞ் சாப
மிழிகு லத்தலைப் புலையனுய்ப் போகென விசைத்தார்
பழிகொள் சாபம்வந் தடைந்திடப் பழையமே தகைமை
யழிவு றுந்திரி சங்கெனத் தன்பெய ரறைந்தான். (82)

பெருகு மாதவ வசிட்டனீன் றருளினோர் பேசு
மரிய சாபமுந் தவிர்ந்தியா னுக்கையோ டளிக்குந்
தருவ னந்தரு துறக்கமேற் சார்ந்திடுந் தகைமை
புரிதி யென்றனன் கோசிக னினிதுரை புகல்வான். (83)

அஞ்சல் பார்த்திப வவ்வண்ண மளிப்பலென் றறைந்தான்
செஞ்சொ லுன்மறைத் திசைமுக னவையினிற் சென்றே
விஞ்சு மெய்ப்புகழ் கிளர்திரி சங்கெனும் வேந்தன்
றஞ்ச மென்றெனை யடைந்தன னன்னவன் றனக்கே. (84)

தொக்க வாக்கையி னோடுநற் றுறக்கமெய் திடவே
மிக்க வேள்வியா னியற்றுவ லவணுற மேவித்
தக்க வானவிப் பாகநீ வாங்கெனச் சாற்ற
நக்க நான்முக னினையன வாசக நவிலும். (85)

நீச னுக்குமுண் டேமறை நெறிபயில் வேள்வி
மாசு பற்றிய வாக்கையை நீக்கியே மறைதே
ராசின் மாமகம் புரிந்திடில் வருவன்மற் றன்றிப்
பேசும் வேள்விநீ புரிதியேற் பெருகுசெங் கழலில் (86)

அவிய னைத்தையு மளித்திடுமென் றறைந்தன னதனைச்
செவிம டுத்தனன் கோசிகன் வெடிபடச் சிரித்துக்
கவிசெ ழுந்தரு நகரினி லுடலொடுங் கலக்கப்
புவியி னன்மகம் புரிகுவன் புரவலற் கென்றே. (87)

யானி ழைத்திடுந் தவவலி யெளிதல வெனவே
யான னங்குறு வேர்வெழ விழிசிவப் பாக
நான்மு கத்தவ னவையினி னவின்றன னடந்தான்
மீன வெண்டிரைத் திருமறைக் காட்டினின் மேவி (88)

இருந்த வம்புரி முனிவரா ரெவரையு மழைத்தே
பொருந்தும் வேந்தனுக் கினிதுறத் தீக்கையும் புரிந்து
திருந்து சத்திர மாமகம் புரிந்தனன் றேவ
ரருந்த வந்தில ரவியினை யழலிடத் தளித்தான். (89)

தரும மாமக முடித்தவ பிருதத்தா னமும்போர்
கருது காவலன் புரிந்திட வருளினன் களித்து
விரித ருஞ்சடை முனிவனை நோக்கியே வேந்த
னரிய வேள்வியின் பலத்தினை நின்பொருட் டடைந்தேன். (90)

மனம்வி ழைந்திடு காரிய முடித்திலன் வசிட்டன்
றனையர் காண்குறி னகைப்பர்யான் றாணிகாத் தளியே
னினைவ ருந்தவத் தாலுயிர் நீக்குவ லெனலு
முனிவன் வெள்கின னரசனை நோக்கினன் மொழிவான். (91)

நின்னை யிவ்வுட லோடும்யா னிழைனறுந் தருவின்
பொன்ன கர்ப்புக வருள்வனென் றபயமும் புரிந்தான்
பின்ன ரண்டங்கள் படைத்திடப் பிஞ்ஞகற் பரவிப்
பன்னு நான்மறை துதித்தன னெதிர்ந்தனன் பரமன். (92)

எவனி னைந்தனை யென்றலு மெம்பிரா னெனக்குத்
தவல றும்படி புகழ்த்திரி சங்குவின் பொருட்டுப்
புவனம் யாவையும் புடைப்பதற் கருள்கெனப் புகலச்
சிவன துபுரிந் தருளியே மறைந்தனன் றிரும்பி. (93)

எந்தை யின்னண மறைந்தபின் முனிவர னெரியிற்
சிந்து வெஞ்சினந் தலைக்கொள வுலகெலாந் திருட்டித்
திந்தி ரப்பெய ரிருவுகை படைத்திட வெண்ண
வந்து தோன்றினர் பிரமனிந் திரன்முதல் வானோர். (94)

பிரமன் மாதவ முனிவனை நோக்கியே பேசு
மிருவ கைப்பட நீபடைத் திடும்படைப் பெல்லா
மொருவ லன்றியே யுய்ந்திடக் கடவவீங் கினிமேற்
றிருகி நீபுரி திருட்டியை நிறுத்தெனச் செப்ப (95)

தாங்கு மாக்கையி னெடுதிரி சங்கெனு மாச
னேங்கு பொன்னுல குறைந்திடி னிறுத்துவ லெனவே
யாங்கு மாதவ னுரைத்திட வருமறைக் கிழவன்
வீங்கு மன்பொடு நன்றென வேந்தனைக் கொடுபோய் (96)

தெய்வ மாநகர்க் கமலையிற் றெய்வதீர்த் தத்தி
னெய்தி யாட்டினன் பொன்னகர் நாப்பணி னிருத்தி
யையன் றன்னக ரடைந்தன னரசனுங் களித்தான்
வெய்ய கோபமுந் தணிந்தருண் முனிவனும் வியந்தான். (97)

அண்ணன் மாதவச் சூதன்மா லடல்விடை யுகைக்கும்
பண்ண வன்கம லாலயப் பெருமையைப் பகர
நண்ணு மாசமந் தழைந்திடு நயிமிசா ரணியத்
தெண்ண ருந்தவ முனிவர ருளங்களித் திருந்தார். (98)

கமலாலய மான்மியம் உரைத்த அத்தியாயம் முற்றிற்று.

## காஞ்சிபுர மான்மியம் உரைத்த அத்தியாயம்.

### எழுசீர் விருத்தம்.

வச்சிர மிமைக்கு மிமையவெற் பளித்த
 மடக்கொடி யன்புவாய்ந் தொழுக
வச்சணங் கெறியுஞ் சுடர்க்கவ ரிலேவே
 லையனை யருச்சனை புரியும்
பச்சிளங் கமுகம் வெள்ளியந் தகட்டிற்
 பாளையீன் றிடும்பொழி லுடுத்த
கச்சிமா நகரின் பெருமையைத் தெரித்துச்
 சூதமா முனிவரன் கழறும். (1)

குற்றமற் றுயர்ந்த முனிவரர் மறைதேர்
 கோசிக முனிவனை வினவி
வெற்றியைங் கரத்து விநாயகன் றனக்குக்
 கரிமுகம் விளைந்தமே தகையு

மற்றமில் புகழார் காஞ்சிமா நகரி
　　லத்திவெற் பிடத்திலன் னவன்வந்
துற்றுவீற் றிருந்த தன்மையு முரைத்தி
　　யென்னலு மருந்தவ னுரைக்கும். (2)

முன்னமோர் காலங் கருங்கட னிறத்தின்
　　முகுந்தனே முதலவா னவர்கள்
பொன்னகர்க் கிடர்செய் கொடியதா னவர்கள்
　　புரிந்திடுங் கருமங்க ளவையு
மன்னுற வாலாற் சிந்தைநொந் துணர்ந்து
　　வாடின ரொருவழி நினைந்தா
ரென்னையா ளுடைய வெள்விடை யுகைக்கு
　　மெம்பிரான் றிருவுள மிரங்கி (3)

சிந்தையி லெளியே நினைந்திடுங் கரும
　　முடிக்கவுந் தீதுறுங் கொடிய
வெந்திற லசுரர் விழைந்திடுங் கருமஞ்
　　சிதைக்கவும் வித்தகத் திறத்தோர்
மைந்தனை யளிக்கி லினிதுயிர் பிழைப்போ
　　மென்னவே மந்தர மடைந்து
கந்தரங் கறுத்துப் புரிசடை சிவந்த
　　கண்ணுதற் கடவுளைப் பணிந்தார். (4)

வணங்கிய முகுந்தன் முதலவா னோரை
　　மழுவலான் கடைக்கணித் தருளிக்
கணங்கொடு நீவி ரிவணடைந் ததுவென்
　　கழறுதி ரென்னலுங் கரியோ
னிணங்கமழ் சுடர்வே லசுரர்கள் யாது
　　நினைக்கினு மன்னது நிலைபெற்
றணங்குற வளியர்க் கின்னல்செய் வதனு
　　லையநின் சன்னிதி யடைந்தோம். (5)

செந்தழற் பிழம்பிற் றெறுசினங் கொதிக்குந்
　　தீதுறுங் கொடியதா னவர்கள்
புந்தியிற் கருது கருமங்க ளவையுஞ்
　　சிதைக்கவு மடியர்கள் பொருந்த

முந்துறு மிதையங் கருதுகா ரியங்கண்
முடிக்கவு மொருவழி கருதி
யெந்தைநீ யளித்தி யெனக்கா முகிழ்த்தே
யிரங்கலு மிளமதிச் சடையோன் (6)

கலிவிருத்தம்.

வண்ணமென் குறுநகை வழங்கி நீர்மனத்
தெண்ணிய வண்ணமே யளிப்ப னென்றனன்
கண்ணனை முதலிய களிது ளங்கிடு
விண்ணவர் பதிபுக விடைகொ டுத்தனன். (7)

ஆழியான் முதலிய வமரர் யாவரும்
வாழிமா மறைகொடு வாழ்த்தி யேகினர்
சூழிமால் வரையுரித் துடுத்த தோன்றலான்
வீழிவா யுமைதிருக் கோட்ட மேவினன். (8)

அன்னதி னுப்பணந் தப்பு ரத்தினோர்
பொன்னிழைத் திருஞ்சுவ ரெடுத்துப் பொற்புற
மன்னிய வச்சிர வளைக ளோடிவான்
மின்னகு செம்மணி மேய்ந்தி ணக்கியே (9)

எண்ணரு முலகமேழ் கோடி மந்திர
மண்ணன்மந் திரத்துரு வான தெய்வதம்
விண்ணவர் தச்சனால் விளங்கத் தீட்டிய
தண்ணறுஞ் சித்திரச் சாலை சார்ந்தனன். (10)

அத்திர விழியுமை யணங்குக் காங்கருஞ்
சித்திரத் துலகெலாந் தெரித்துக் காட்டினன்
வித்தக மந்திரம் விரித்துத் தீட்டிய
பத்தியி னடைந்தவை பகுத்துக் கூறினன். (11)

அந்தமந் திரங்களு மவையின் றெய்வமும்
பைந்தொடி பார்த்தனள் பரனைத் தன்னொடு
முந்திய தெய்வமா முறையிற் றீட்டிய
நந்தலில் பிரணவம் பின்னு நாடியே (12)

அடிக்கடி நோக்கின ளார்வ மீதெழப்
புடைத்தெழு வனமுலை புளகம் பூத்தனள்
விடைக்கொடி யுயர்த்தருள் விமலன் செம்முகங்
கடற்கயல் விழித்துணை கதுவக் கூறுவாள். (13)

அருநெறி மந்திரத் தடியிற் றீட்டிய
திருவெழுத் தன்னதின் றெய்வ மாகிய
வுருவநம் வடிவினி லொளிரு மேதகை
வான்முறை விளங்கவே வழங்கு வாயெனா (14)

உரைத்தன ளவ்வுரைக் குவகை பொங்கியே
திரைக்கடு வருந்திய செம்மல் செங்கையால்
விரைக்குழன் மடந்தையை மெய்த்த ழீஇக்கொடு
வரைக்கொடி கேளென மகிழ்ந்து கூறுவான். (15)

ஓதுமந் திரமெல்லா முதிக்கு மிவ்வெழுத்
தாதிமந் திரம்பெரு கருளி னோருருக்
காதலா லருமறைக் கணங்கள் கூப்பிடும்
பேதியாப் பெயர்பிர ணவமென் றாகுமால். (16)

முத்தொழி னடத்திட மூன்று மூர்த்தமு
மொத்தளித் திடுமென துருவ மாயிடுஞ்
சித்திகண் மூவருந் தழையும் வண்ணமே
யத்திறத் துயிர்க்கநின் னாதி சத்தியாய் (17)

கலிநிலைத்துறை.

மூன்று காலத்தின் வடிவமு மிதுமுழு முதலாய்த்
தோன்று மென்னையு முன்னையுந் துகளறக் களித்தே
யீன்ற வன்னையுந் தந்தையு மாகுமிவ் வெழுத்தே
யூன்றி யின்னதி னுண்மையை யாவரே யுணர்வார். (18)

சொல்லு மிவ்வெழுத் துருவினிற் றுளங்குமெம் புழைக்கை
வெல்லு மானையி னுருக்கொடு நாமுளம் விரும்பிப்
புல்க வேண்டுமென் றிசைத்தனன் பொற்கொடி பொருந்தி
நல்ல தென்றன னாதனுங் களிற்றுரு வெடுத்தான். (19)

மலைம டந்தையும் பிடியுரு வெடுத்தனண் மணிக
ணிலவு சித்திர சாலையி லழகுற நிறைந்து
குலவு மன்பொடு புணர்ந்தனர் கோற்றொடி வயிற்றி
னுலவு குஞ்சரத் திருமுகப் பிள்ளையங் குதித்தான். (20)

கரிமு கத்தவன் பிறந்தது கண்டுகண் களித்தே
யிருவ ருந்தனி முன்னுரு வெடுத்தன ரிசைந்து
சுரிம லர்க்குழற் றோகைநின் றெடுத்தன டுலங்கு
திருமு கத்தொடு மணைத்தனள் சிவன்கையிற் கொடுத்தாள். (21)

எந்தை வாங்கினன் சிறுவனை முத்தமிட் டிமையப்
பைந்தொ டிக்காங் கொடுத்தனன் கலன்பல திருத்தி
மைந்தன் வாயித்தழ் மலர்க்கடை தொறும்வழிந் தொழுகு
முந்து பூண்முலைப் பாலமுத ருத்தினண் முதல்வி. (22)

அருத்து பாலமு துண்டபி னைங்காக் குழவி
விரித்த செம்மலர்த் தடங்காங் கொட்டியே விளங்க
நிருத்த மாடின னிருவரு நெஞ்சுறக் களித்தார்
சுரித்த பூங்குழ லுமையவ ளினையன தொகுப்பாள். (23)

மழுவு யர்த்தருள் வாதநின் மைந்தனுக் கின்னே
பழுதி லண்டமுங் கணங்களும் பரிவொடுங் கரத்தாற்
றொழுது போற்றிடு தனியா சருள்கெனச் சோதி
முழுது மன்பொடு முத்தலைச் சூலவேற் கணங்கள் (24)

குனிதி ரைக்கடற் கண்டுயில் குல்லையந் தொடையோ
னினிய தேனவிழ் தாமரைப் பொகுட்டுறை யிறைவன்
பனிநி லாத்தெறு வச்சிரப் படையுடைப் பகவன்
முனிவ ருள்ளவ ரெவரையு முறைமுறை யழைத்தான். (25)

தந்தி மாமுகச் சிறுவனை மடியுறத் தாங்கி
வந்து சூழ்ந்திடு கணங்களை மாயனு தியரைப்
புந்தி யன்புற நோக்கின னுங்களைப் புரக்க
மைந்த னுக்கொளி மணிமுடி கவிப்பனென் றுரைத்தான். (26)

ஈச னிவ்வண முரைத்திடக் கணங்கண்மா லிமையோ
ராசி கூறினர் நன்றென வகங்களி திளைத்தார்
மூசி வண்டின மிடைந்திடு மிதழிமோந் தலைத்து
வீசு வெண்டிரை நதிபுனை வேணியெம் பெருமான் (27)

அரும றைப்படிக் கருமங்க ளனைத்தையு மாற்றிக்
கரிமு கத்தொரு குழவியைக் கைகளா லெடுத்தே
யெரியி மைத்திடு மணியரி யணைமிசை யிருத்தி
விரிசெ ழுங்கதி ரெனமிளிர் மணிமுடி மிலைத்தான். (28)

தனது முத்திரை யாவமுந் தண்ணிலா மதியும்
புனைந றுந்துண ரிதழியு மணிமுடி புனைந்தா
னினைவ ருங்கணத் தலைமையு நெடியவன் முதலோர்
மனமொ ருப்பட வணங்கிடு மரசுமே வழங்கி (29)

எண்ண ருப்பல விக்கினங் களுக்கிறை யாக
நண்ணு தன்மையு மளித்தன னறுந்துழாய் வனையுங்
கண்ண னான்முக னிந்திரன் முதலிய கடவுள்
விண்ண கத்துளீர் நீவிரெக் கருமமும் விரும்பி (30)

மனத்தி லெண்ணிய வண்ணமே முடிக்கமற் றசுரர்
நினைத்த காரியம் விக்கினப் படுத்திநின் றவரைச்
சினத்து வெஞ்சமம் புரிந்திடச் சிந்துர முகத்தோன்
றனக்கி ருந்தகை யளித்தன னெனப்பகர்ந் தனனால். (31)

பவள வார்சடைப் பண்ணவ னின்னணம் பகர
வுவகை பொங்கினர் கரியவன் முதலிய வும்பர்
சிவன ளித்தருள் சிந்துரத் திருமுகத் தவன்பொன்
னவிர்சி லம்படி வணங்கினர் நறவுமி ழலரால். (32)

தெண்டி ரைக்கடற் றெள்ளமு தக்கட முதல
வுண்டி யன்னவற் கடியுறை கொடுத்தன ரொளிருந்
துண்ட வெண்பிறைச் சடிலியைத் திரும்பவுந் தொழுதா
ரண்டர் நாயக னனுப்பவன் னவர்பதி யடைந்தார். (33)

இவைவி ளைந்தபி னிறைவியை யமலனை யிறைஞ்சிக்
கவள வாரணத் திருமுகன் கணத்தவ ரோடுந்
தவல ரும்பெருந் தனிவிளை யாட்டயர்ந் திருந்தா
னுவகை பொங்கினன் புனல்விளை யாடவென் றுணர்ந்தே. (34)

பொருத வெண்டிரைப் பாற்கடல் புகுந்தது கலக்கிப்
பரும வெம்பனைப் புழைக்கர மடுத்தனன் பதறிக்
கரிய மாயனுங் கமலையுஞ் சேடனுங் கலந்து
திரியு மீனமுங் காத்துளைச் சுழியொடுஞ் செறிந்தார். (35)

கடையிற் றோன்றிய காலெனக் கடுவளி யுயிர்த்துப்
படரும் பாற்புன றிரும்பவும் பண்ணவன் விடுத்தா
னெடிய மாயனும் படைகளு நீங்கருந் திருவும்
விடவ ரவமு மீனமும் விழுந்தன வேறாய். (36)

அன்ன காலையிற் பாஞ்சசன் னியத்தையைங் காத்தோன்
மன்னும் வெங்கணத் தவர்காம் பற்றினர் மறுகப்
பொன்னங் கொம்பொடு சேடனும் பூவைமே னியனு
மின்ன றீர்ந்தொரு புனப்பிறப் பெனக்குழு மினரால். (37)

பொற்பொ லங்கொடி புணர்முலை மார்புறக் கரியோன்
மற்ற டம்புயந் தழுவினன் சேடனும் வணங்கிச்
சொற்ற ருந்துதி துதித்தனன் றிகிரிவெஞ் சுடர்வாள்
விற்பொ ருங்கதை யெடுத்தனன் வெள்வளை காணான். (38)

பாணி றத்தொளிர் வலம்புரிக் குளம்பதை பதைத்து
நீணி றத்தின னெடுங்கடன் முழுவது நேடி
மான முற்றுற வருந்திடுங் காலையின் மகிழ்ந்தே
யானை மாமுகன் கணத்தவ ரதுமுழக் கினரால். (39)

ஆர்த்த பேரொலி வலம்புரி யொலியென வறிந்தே
தீர்த்தன் றன்கணத் தலைவரைத் திருமுகங் குளிரப்
பார்த்து வாரண முகத்தவன் கணங்களைப் பாவி
வார்த்தை யின்புற வழங்கிவெள் வளையினை வாங்கி (40)

வருதி ரென்றலு மன்னவர் வல்விரைந் தேகிக்
கரிமு கத்தவன் கணங்களைக் கைம்முகிழ்த் திறைஞ்சி
யரிம லர்க்கா வளையிது வளியருக் கிரங்கித்
தருதி ரென்றலுங் கொடுத்தில ரன்னவர் தளர்ந்தார். (41)

திரும்பி மாயவன் றிருமுனஞ் சிந்துர முகன்றாள்
விரும்பு மெய்க்கண மளித்தில வளையென விளம்பச்
சுரும்பு மூசிய துளவினன் சுடர்வளை யளித்த
வருப்பு வாணகை பயந்தரு ளானைமுன் னடைந்தான். (42)

இறைவ வென்வலம் புரியினை யருள்கென விசைக்கப்
பிறைநெ டுஞ்சடைப் பிஞ்ஞக னளித்தருள் பெருமா
னறைதல் வேண்டுவ தல்லயா னளிக்கில னெனலு
நிறைய ழிந்துளம் வருந்தின னெடியகார் முகுந்தன். (43)

வளைந்த பொற்சிறைக் கருடன்மேற் கொண்டுவா னணவுங்
கிளர்ந்த வெள்ளியங் கிரிமுக டடைந்தனன் கிட்டிக்
களங்க னியினிற் கறுத்திடுங் கண்டனைக் கண்டா
னுளங்க னிந்தனன் பூசனை யாற்றிநின் றுரைப்பான். (44)

அண்ண னின்னரு ளாற்றிரை யாழியிற் றுயின்றேன்
வண்ண வாரண முகத்துநின் மதலையாங் கடைந்து
தண்ண றும்புனற் றனிவிளை யாட்டயர்ந் ததனை
லெண்ணி யோதுதற் கரியதொ ரின்னல்பட் டிடைந்தேன். (45)

ஆய வெல்வையில் வலம்புரி யிழந்தன னதைநின்
சேயி டத்துறை கணத்தவர் செங்கைதொட் டெடுத்தார்
போயி ரத்தலும் புகர்முக னளித்தில னவனை
நீயழைத்தினி வாங்கியே யருள்கென நிகழ்த்த (46)

அறுசீர் விருத்தம்.

தொல்லு மழவெள் விடையுகைத்தோன் குளிர்வெற் பளித்த கோற்றேனூர்
சொல்லி கமல முகநோக்கிச் சற்றே நகைத்துத் துழாய்மாலை
புல்லு மருமக் கரியநெடும் புயலைத் திரும்பி முகம்பார்த்து
வெல்லுந் திகிரித் திருமாலே கேட்டி யெனவே விளம்புவளால். (47)

இமைய மளித்த பசுங்கொடிக்கு மெமக்குங் கரியின் முகத்தோன்பா
லமைவி லாத பெருவிருப்ப மதனா லொன்று மறைகிலனீ
கமையி னுருவாய் விழிதுயிலுங் காஞ்சிப் பதியி லத்திகிரித்
தமர வரிவண் டிசைமுரலுந் தண்ணம் பொழில்சூழ் தடங்குகையில் (48)

உனது தவள வலம்புரிப்பே றுரைத்து மதவா ரணமுகனை
யெனது மொழியா கமப்படிநீ யிறைஞ்சில் வளைதந் திடுவனென
நினது மொழியாற் றுயர்தீர்ந்தே னென்ன நிமல னடிவணங்கித்
தனது மலர்க்கண் டுயில்காஞ்சித் தடவெற் படைந்தான் சக்கரத்தோன். (49)

அந்த வரையின் பெருங்குகையி லானைமுகத்தோன் றனிவிம்பஞ்
சிந்தை மகிழ்ந்து தாபித்துத் தெய்வ மறையின் விதிப்படியே
முந்து பெரும்பூ சனையாற்றி முன்னந் தரைவீழ்ந் திடவிரங்கித்
தந்தி முகத்தோன் வெளிப்பட்டுச் சற்றே முறுவ னகைத்தருளி (50)

பையா யிரங்கொண் டயர்வுயிர்க்கும் பாம்பிற் றுயிலும் பசும்புயலே
மெய்யார் மறையின் படிபூசை விளைத்த விருப்ப முரைத்தையெனக்
கையார் முளரி யிதழ்புதைப்பக் கண்ணீர் ததும்பக் கருத்திளகி
யையா யெனது வலம்புரிநீ யருள்க வெனலு மதுவளித்தான். (51)

கன்னங் கருணை மதங்கரைக்குங் களிறு கரிய நெடுமாலே
யின்னம் வரங்கள் வேண்டுவன தருவல் கேட்க வெனலுமலர்ப்
பொன்னங் கொடிசேர் மணிமார்பன் புகலு நகரோ ரேழினுஞ்சீர்
மன்னுந் தகைசே ரிக்காஞ்சி யத்தி கிரியின் மணிக்குகையில் (52)

பொருந்துந் திருப்புண் ணியகோடி யீசன் பொலன்சன் னிதியின்மகிழ்ந்
திருந்து புவனத் துயிர்ப்பயிர்கட் கெல்லா வாமு மளித்தியெனத்
திருந்துங் கருணை யுவட்டெடுக்கச் செம்ம லவண்வீற் றிருந்தனன்வண்
டருந்து நறவத் துளவோனு மன்பு கொழித்தே யவணிருந்தான். (53)

சொல்லுங் கதையைப் படிப்போர்கள் கேட்போ ரெவருந் தொலையாத்
செல்வங் கிளைத்து நனிவாழ்வா ரின்னு மினைய திருநகரின்
மல்லன் மகிமை தருங்காதை யொன்று புகல்வேன் மால்விடயம்
வெல்லுந் தவத்தீர் கேட்கவெனச் சூத முனிவன் விளம்புவனால். (54)

## கலிவிருத்தம்.

விரிதிரை முகட்டெழும் விடத்தை வெள்விடை
யொருதனி யெம்பிரா னுண்ணு முன்னமே
பெருகுமவ் விடத்தினாற் பிறங்கு மாயன்மெய்
கருகிட வகந்தழல் கதுவ வாடினன். (55)

கழனியின் வளமுறு கச்சிய மேவியே
யழகிய விலிங்கமொன் றமைத்துத் தன்பெய
ரெழிறிகழ் கிருட்டிண விலிங்க மென்றழைத்
தொழுகிய வன்புவாய்த் துள்ள நெக்குற (56)

பூசனை புரிந்தனன் புரியுங் காலையின்
மாசறு மதிமுடி வாதன் றோன்றின
னேசற நின்பெய ரிலிங்கத் தென்னைநீ
நேசமோ டருச்சனை யியற்று நீணெறி (57)

உரைக்குதி யென்னலு மாய னோதுவான்
றிரைக்கடன் முகட்டினி லெழுந்த தீவிட
மருத்தியி னையநீ யருந்து முன்னமே
யெரித்தெழு காலையி னெனது மேனியும் (58)

கறுத்தது வகந்தழற் கதுவு வெஞ்சுரம்
பொறுத்திட லரியதாற் பூசை செய்தன
னொறுத்திட வெந்தழ லுருத்த வெஞ்சுர
மறுத்திடல் வேண்டுமென் றுரைவ ழங்கினன். (59)

விண்டிவை பகர்தலும் விமலன் கூறுவான்
பண்டரு மொழியுமை பரிந்து பூசைசெ
யெண்டிசை புகழுமே காம்ப ரப்பெயர்
கொண்டதொ ரிலிங்கத்திற் குலவி நாடொறும் (60)

வாழுவே மன்னதின் மருங்கி லெம்மிருந்
தாழ்சடைச் சந்திர சமீபத் தெய்தியக்
கேழ்கிளர் மதிப்பெயர் கெழும வைகுதி
சூழ்கனற் சுரமகஞ் சுடுத றீருமால். (61)

என்னிடை முன்னம்வந் துன்னை யேத்துவோர்
மன்னிய வைகுந்த மருவி வாழுவார்
நின்னுடைப் பெயரினு னீயி றைஞ்சிய
தன்னிக ரிலிங்கத்தை வணங்கித் தாழுவோர் (62)

முத்தியை யடைவரென் றுரைத்து மூசுதேன்
மத்தலர் சடையினன் மறைந்து போயினு
னத்தகைக் கரியவ னவண டைந்தன
னெத்திசை யவர்களு மிறைஞ்சி வாழ்த்தவே. (63)

ஈதலா லொருகதை யின்னு மப்பதிக்
கோதுகே னுளத்துரி சறுத்து முத்தியிற்
காதலார் முனிவரீர் கருதிக் கேட்கெனச்
சூதமா முனிவரன் சொல்லு வானரோ. (64)

மிக்கவெம் பணிக்குலத் துதித்த மேன்மையான்
றக்கவண் புகழ்மகா காளன் றண்பொழின்
மைக்கரும் புயலுலாம் வான மேற்படு
தெக்கண கயிலையிற் சிவனை யேத்தினன். (65)

அன்னவ னேத்தலு மமல ஞெக்கியே
யென்னைநீ விரும்பின தெனலு மேழையேன்
மன்னிய பணியுரு மாற்ற வேண்டினன்
புன்னெடுஞ் சடைமுடிப் புனித வென்றனன். (66)

என்றலு நாதனுங் கிசைக்குங் காஞ்சிபோய்ப்
பொன்றிக ழிலிங்கமொன் றமைத்துப் பூசனை
துன்றிருங் கனியுளந் துளங்க நீசெயி
ஞென்றிரும் பணியுரு வொழியு மென்றனன். (67)

செஞ்சடை யெம்பிரா னீது செப்பலு
நஞ்சடை யெயிற்றுடை நாகர் கோமகன்
கஞ்சம்விண் டலர்மலர்க் காஞ்சி நண்ணியே
பஞ்சதீர்த் தக்கரைப் பரப்பின் பாங்கரின் (68)

பெருகொளி யிலிங்கமொன் றமைத்துப் பெட்புறக்
கருதிவண் பெயர்மகா காள வீசனென்
றுரிமையி னுரைத்தன னுள்ள நெக்குறப்
பொருவரு பூசனை புரிதல் செய்தனன். (69)

இன்னணம் பூசனை யியற்ற வேயதி
பன்னக மெனுங்கொடும் படிவ நீங்கினு
னன்னலந் தருசுரர் வடிவ நண்ணினுன்
பின்னரு முத்தியின் பேறும் பெற்றனன். (70)

அறுசீர் விருத்தம்.

பகருமிக் காதை யன்றி யின்னுமப் பதிக்கு வேறு
நிகாருங் காதை யொன்று நிகழ்த்துவெ னெறியி னேடு
முகமலர்ந் தின்று ஞான முனிவரீர் கேட்க வென்னுத்
துகளறுத் துயர்ந்த தெய்வச் சூதமா முனிவன் சொல்லும். (71)
சோரிவேற் றடக்கை ஞானச் சுந்தர முருகப் பிள்ளை
தாருகா சுரனை வீட்டித் தனிவிளை யாடல் செய்து
சீருலாங் கயிலை நாப்பண் சினகர மடைந்து நாதன்
வேரிநாண் மலர்ப்பொற் பாதம் வியப்புற வணங்கி நின்றான். (72)
நறைமலர்க் கடப்ப வேளை நயந்துசெங் காத்தால் வாரி
யிறைவியுங் கலைவெண் டிங்க ளிவர்சடை யெம்பி ரானு
முறைமுறை சீராட் டாடி முற்றிய பின்ன ரன்னு
னிறையொளி யிமைக்கும் பைம்பொ னெடுநிலை வாயில் வந்தான். (73)
மணிக்கடைப் புறத்து ஞான வாரண முகத்தோன் கண்டே
யணிக்காத் தெடுத்துச் செய்ய வானனத் தணைத்து மோந்து
தணிப்பருங் காதல் பொங்கத் தழுவினன் விடுக்க நீங்கிக்
கணிப்பருங் கணங்க ளோடுங் கருதியாட் டயருங் காலை (74)
செந்துணர்ப் பசும்பொற் றேட்டுத் தெய்வதக் கமல மேய
வந்தணன் முனிவ ரோடு மமலனை யிறைஞ்ச வாங்கு
வந்தனன் முருக வேளை வணங்கிடா துள்புக் கெய்தி
யெந்தையைப் பூசை யாற்றித் திரும்பவு மேகுங் காலை (75)
முருகனுங் கவனை நோக்கி முகிணகை சிறிது கோட்டி
யருகழைத் தெவன்கொ னீயுன் னம்பொனு டேது நாடி
யொருவுரு தெந்த வித்தை யுணர்ந்தனை யுரைத்தி யென்னத்
திருமகள் கொழுந னுந்தித் திசைமுக னுரைப்ப தானுன். (76)
பண்ணுறு மறைக ளோதும் பங்கய னென்ப ரென்னைத்
தண்ணறுந் தாரு வோங்குஞ் சத்திய லோக மென்னு
டெண்ணரும் வித்தை யீச னிசைத்திட வுணர்ந்தே னென்னக்
கண்ணழல் கதுவ நோக்கிக் கந்தவே ளுரைப்ப தானுன். (77)

சொற்றிடும் வித்தை யெல்லாந் துகளற வுணர்ந்தா யென்னின்
முற்றுமவ் வித்தைக் கெல்லா முதலெழுத் துரைத்தி யென்னப்
பொற்றுணர்க் கமல மேய புங்கவன் பொருவி லாத
பெற்றியின் சிறந்த தெய்வப் பிரணவ மாகு மென்றான். (78)

அவ்வெழுத் ததனுக் கோது மரும்பொரு ளுரைத்தி யென்னக்
கொவ்வையங் கனிவாய் வாணி கொழுநனுங் குரைக்குந் தாவு
நவ்வியங் கண்ணி பங்கன் வடிவுமென் வடிவு நாராப்
பவ்வமேற் றுயிலு மாயன் வடிவுமாம் பகரி லென்றான். (79)

என்றலுங் கனன்று சீறி யெறிசுட ரிலைவே லெந்தை
நின்றிடுங் கணங்க ளுக்கிப் பிரமனை நீர்மை யெல்லாங்
குன்றிடச் சிறையில் வைக்க வென்னலுங் கொடுபோய் வைத்தார்
துன்றிய புவன முற்றும் படைத்தனன் றேகை யூர்தி. (80)

இன்னண நடந்த வெல்லா மிருந்தவ முனிவ ரேகித்
தென்னிடு சுரும்பார் கொன்றைச் சிவனிடத் துரைத்தா ரன்னோன்
மன்னிய முனிவர் செம்பொன் மலர்முக நோக்கிக் கூறும்
பன்னிய மறைக்கு முன்னும் பிரணவம் பகுத்துச் சொல்லில் (81)

என்னுறு வடிவுஞ் செவ்வே ளிருந்தகை வடிவு மென்று
முன்னுறு மறைக ளெல்லா மொழிந்தன மறந்தான் போலு
மன்னவன் பிழைத்து மாற்ற மறைந்தது பொறுத்தோ மென்னாப்
பன்னியாங் குரைத்து ஞான நந்தியைப் பார்த்து நீபோய் (82)

கந்தனுக் குரைத்து வேதன் கவலுறு சிறைநீக் கென்ன
நந்திநா யகன்போய்ச் செவ்வே ளறைமலர்ச் சரணம் போற்றி
யெந்தையா ருரைத்தார் வேத னிருஞ்சிறை விடுக்க வென்ன
மைந்துறு தடந்தோட் செவ்வே ளவ்வுரை மறுத்தா னன்றே. (83)

சூலந் தடக்கை நந்தி திரும்பினன் சுருதி யோனை
வீரவே ளிவல் காவல் விடுத்திலெ னெனவே பச்சை
யாரணி சடையி னுக்குரைத்தன னயன் சற்றே
மூரல்செய் துமையா ளோடு முருகவேள் கோவில் புக்கான். (84)

தந்தைதன் வரவு நோக்கித் தடம்புயம் பொரும வோடி
யெந்தைபொற் கமல பாத மிமையவெற் பளித்த தெய்வப்
பைந்தொடி சரணப் போது பாவியே நிலத்தின் வீழ்ந்தான்
மைந்தனைக் கமலக் கையால் வாரியே யெடுத்துக் கொண்டார். (85)

நவமணி நகுபொற் கோயி னுப்பனோர் பீட மேறிக்
கவர்மதி நுதலி யோடுங் கண்ணுத லிருந்தான் பொங்கு
முவகையோ டுமையாள் வாங்கி யுச்சிமோந் தவனை ஞானச்
சிவனது மடியிற் கோலச் செங்கையா லெடுத்து வைத்தாள். (86)

விரிசடைப் பவள மேனி விண்ணவன் சிறுவன் றன்னை
யிருகையாற் றழுவிக் கொண்டா னிளநிலா முறுவல் பூத்தான்
முருகநின் முனிவு தீர்ந்தே முளரியங் கோயின் மேய
வருமறைக் கிழவன் றன்னைச் சிறைவிடுத் தளித்தி யென்றான். (87)

பாறுதொட் டுலவுஞ் சூலப் பண்ணவன் வார்த்தை மேற்கொண்
டாறுமா முகத்தோன் கூறு மருமறைக் கிழவன் றன்பாற்
சீறிய முனிவு தீர்ந்தான் சிறைவிடுத் தவனைச் செங்க
ணேறுயர்த் தவர்முன் கொண்டு விடுத்தன னிறைவ னோக்கி (88)

புன்னகை புரிந்து வேதப் புனிதனை யனுப்பிப் பின்னர்
கொன்னவிர் வடிவே லேந்துங் குழகனை வதன நோக்கி
யென்னுரை முன்னர் நீத்த பிழையினுக் கிளவ னீபோய்க்
கன்னலங் கழனி சூழுங் காஞ்சிமா நகா ரண்ணி (89)

அருள்பெறு மிலிங்கந் தாபித் தருச்சனை புரிதி யென்று
வரிவளை மடந்தை யோடு மழுவலா னிருக்கை சேர்ந்தான்
முருகவே ளுவகை பொங்க முதல்வனை யுமையை யேத்திக்
கரியமஞ் சுறங்குஞ் சோலைக் காஞ்சிமா நகரஞ் சார்ந்தான். (90)

அந்நகர்க் குடபால் வைகு மழுகொளி மாகா ளேசன்
சன்னிதி மருங்கு ஞானத் தகையரு ளிலிங்க மொன்று
மன்னுற வமைத்துத் தன்பேர் வழங்கிடு மவையி லோர்ந்து
பன்னிய தேவர் சேனு பதிப்பெய ரினிது சாற்றி (91)

பூசனை புரிந்தா னந்தப் புண்ணிய நகாந் தன்னிற்
பேசரு மிருக்கை யொன்று பெருவளத் தோடுஞ் செய்தே
யேசிலாக் குமா கோட்ட மெனப்பெய ரிசைத்துக் கோல
வாசிலாப் பிரம சாரி யாகவாங் கமர்ந்தா னன்றே. (92)

கந்தவேண் மருவு கோட்டங் கண்ணுறத் தெரிசித் தோர்கள்
வெந்தொழிற் புலைய ரென்னில் விரவிய பிறப்போ ரேழு
மந்தணர் தலைவ ராவ ரந்தண ராதி யாய
முந்திய குலத்தோ ரென்னின் முத்தியை யடைவர் மாதோ. (93)

மருந்தினு மினிய தீஞ்சொல் வரிசிலைப் புருவ மேந்துங்
கருந்தடங் கண்ணி பங்கன் காஞ்சிமா நகரின் காதை
திருந்தவே சூதன் சொல்லத் தெய்வத மறைக ளோது
மருந்தவ முனிவர் யாரு மதிசய மடைந்தா ரன்றே. (94)

காஞ்சிபுர மான்மியம் உரைத்த அத்தியாயம் முற்றிற்று.

## 20. திருக்காளத்தி மான்மியம் உரைத்த அத்தியாயம்.

கலிநிலைத்துறை.

சிகரம் வானணா வியதிருக் காளத்தி மகிமை
மகா வார்திரை விடமயின் றவன்வசிட் டனுக்குப்
பகரும் வண்ணமே பரிவொடும் பகருவ னென்ன
நிகரி லாத்தவச் சூதமா முனிவா னிகழ்த்தும். (1)

கணிகொள் பூம்பொழி லுடுத்தகாஷ் மீரகண் டத்தி
லணிகொள் பொன்னகர்க் கிணையொரு வளநக ரதனிற்
றிணித டம்புயத் திறல்கெழு சூத்திர னொருவன்
றணிவி லாப்பெரும் பாதகத் துருவெனச் சமைந்தான். (2)

உயிர னைத்தையுங் கொடுவினைத் துயர்விளைத் தொறுப்போன்
முயலு மாதவம் பயிலுமுற் பிறப்பிழைத் ததனன்
மயமு ழிந்திட வழிநடந் திளைப்பினில் வருந்துஞ்
செயிர றுத்துய ரொருசிவ யோகியைக் கண்டான். (3)

கண்ட காலையி னன்னவன் கழலிணை வருடி
யுண்டி நல்லுண வளித்தவ னுள்ளமோர்ந் துவப்பத்
தொண்டு செய்தனன் சூத்திரன் மலர்முக நோக்கிப்
பண்டை மாதவம் பயில்சிவ யோகிசொற் பகரும். (4)

எனக்கி யற்றிய தொண்டினு னீயிழைத் தடைந்த
நினைக்க ரும்பவ மனைத்துமே வெந்துநீ றான
கனக்க ரும்புய றவழ்திருக் காளத்தி வரையின்
மனக்கொ ளன்பொடும் வதிக்கின்மா முத்திவந் தடையும். (5)

அதனி லேகென வுரைத்தன னருந்தவ னடைந்தான்
கதிர்கொண் மாதவன் போனபின் கருதியே சதுர்த்தன்
புதிய தேமொழி மனைவியாம் பொற்கொடி யோடு
மதித வழ்ந்திடு காளத்தி வரையினில் வந்தான். (6)

பொருது வெண்டிரை புரட்டுபொன் முகரியிற் குடைந்து
கருதி நூற்றெட்டு முறைவல னடந்துபூங் கடுக்கைப்
புரிச டைப்பரன் பொன்னடித் தாமரை யிறைஞ்சி
மருவி யத்தலத் திம்முறை தினஞ்செய்து வதிந்தான். (7)

மாசித் திங்களின் மகத்தினின் மற்றுள மகத்தி
னேசத் தொடுமுன் முறையினு மதிகமே நினைந்து
வீசு தெண்டிரை சிதறுபொன் முகரிவீழ்ந் தாடி
யீசற் கன்பொடு பூசனை வலஞ்செய்த லியற்றி (8)

அரன டியவர்க் கந்தணர்க் கருநிதி யாடை
கரிய வெள்ளொடும் பொன்பல களிப்புற வளித்துப்
பரவி யின்னண மிருந்தனன் பற்பகல் கழித்தான்
மருவு மாசிமா மகத்தினி லாருயிர் மடிந்தான். (9)

பொன்ன கரினி தளித்திடும் புரந்தர னாகிக்
கன்னன் மென்மொழிச் சசிநலங் கலப்புறத் திளைத்தான்
முன்ன ரீட்டிய வினையுணர்ந் திருங்கதி முழுக
மன்னு மன்பொடுங் காளத்தி மணிவரை யடைந்தான். (10)

சந்த விருத்தம்.

முரித ரங்க முதறு செம்பொன் முகரி சென்று முழுகினான்
கரிய கண்டன் முளரி வென்ற கழல்வ ணங்கி விதியினோ
டரிய வன்பின் வலன்மு ழுங்கு மருவி சிந்து பொழில்களார்
கிரியை வந்து பொருவி லன்பு கெழும வங்கண் மருவினான். (11)

வளம லிந்த குலிச னிந்த வகைபு ரிந்த தகைமைகண்
டுளம கிழ்ந்து சுரர்க டங்கள் குரவன் விண்ண மொருவியே
தளவம் விண்டு விரைசெய் யன்ன சயிலம் வந்து புகுதலு
மிளகி நெஞ்ச மதனை யண்ட ரிறையெ திர்ந்து பரவினான். (12)

இருமை தங்கு குரவ னன்பி னிறையை யாசி கூறினான்
றிரைத ரும்பொன் முகரி சென்று தெருள்வி ளங்க மூழ்கினா
னரனை விண்ட மலர்க டூவி யடிவ ணங்கி யமரர்கோன்
வரைம ருங்கி னுறையி ருக்கை வயிர னோடும் வைகினான். (13)

கலிநிலைத்துறை.

தேவர் கோமகன் கருத்தினை முழுவதுந் தெரிந்தான்
மூவர் நாதனைக் காளத்தி முதல்வனை வணங்கிப்
பூவ லர்ந்தகற் பகங்காப் பவன்முக நோக்கி
யாவன் மிக்குறச் சுரர்குரு வினையன வறையும். (14)

அழுந்து மும்மலக் கிழங்கினை யகழவம் புவியின்
கொழுந்து வேணிய னஞ்செழுத் தலதிலை குறிக்கி
லெழுந்து காலையிற் சதமொடு மெட்டுரு விசைக்கிற்
கழிந்து வெந்திடு மீட்டிய பாவவெங் கருமம். (15)

நீச ரேனுமம் மந்திர மொருதர நிகழ்த்திற்
பேசும் வெம்பவம் நீங்கியே பெரியவ ராவா
ராசி லாமறை நான்கையு மளந்தவ ரேனு
மீச னஞ்செழுத் திசைத்திடா ரிருங்கதி யிழந்தார். (16)

சகத்தி ரத்தொடு மெட்டுருத் தினந்தொறுஞ் சாற்றி
னிகழ்த்து தற்கரும் வேதியர் வதைமுத னீறு
மிகுத்த ருந்துயர்ப் படுத்திடும் வெம்பிணி யகலு
மகத்து வந்தரு வசியமொ டாறும்வந் தடையும். (17)

தீங்கி லாவணி மாதியெண் வகைப்படுஞ் செல்வ
மோங்கு முத்தியு மடையுமிம் மந்திரத் துரிமை
யீங்கி சைப்பதற் கெளிதல வெனப்பல விசைத்து
நீங்கி டாதிது விலக்கலீ துறவொடு நிகழ்த்தில் (18)

முத்தி காளத்தி முக்கண னருளுமென் றிசைத்துப்
புத்தி யன்புறச் சுரர்குரு விண்ணிடைப் போனான்
மத்த வெள்ளிப விந்திர வளமெலாந் துறந்து
பத்தி மிக்குறக் காளத்திப் பரமசன் னிதியில் (19)

இலக்க மன்னமந் திரஞ்செபித் திதழ்நறுக் கமலத்
தலர்க்கண் வைகிய வந்தணன் றனதுழை யடைந்தா
னலத்த குஞ்சுரு திக்கிறை திருவுள நயந்து
மலத்து வத்தினை நீக்கியே நிட்டையை வழங்க (20)

அயில்கொள் வச்சிர னதுவடைந் தவனடி வணங்கிக்
கயிலை மால்வரை மருவின னிதுகணித் துயர்ந்தே
பயிலு நான்மறை முனிவரர் வானவர் பலர்வந்
தெயிலொர் மூன்றையு மடர்த்தவன் காளத்தி யெய்தி (21)

அருங்க தித்திற மடைந்தன ரத்தல மடைந்து
சுரும்பு மூசிய நறைமலர்த் தொடைபுனை யளகக்
கரும்பு மென்மொழிப் பங்கனைக் கழலிணை வழுத்த
விரும்பி டாதவர் மனிதரோ ஞமலிமென் புழுவே. (22)

சாதி தாழ்ந்தவர் பெரும்பவத் தலைமையோ ரேனு
மாதி நாயகன் காளத்தி வரையினை யடைந்தோர்
வேத முள்ளுறு முத்தியை யடைந்தவர் விரும்பி
யோது மத்தல நீங்கியே முத்தியு ணினைந்து (23)

வேறு மோர்தலம் புகுந்தவர் வீட்டினை வெறுத்தோர்
மாறி லாமறை யடிக்கடி மயர்வற வகுத்துக்
கூறு மிக்கதை யெவர்களு முய்ந்திடக் குறித்தே
யாறு சூடிய வற்புதன் வசிட்டனுக் கறைந்தான். (24)

மிக்க தீவினை வசத்தினுற் சிவன்கழல் விரும்பாத்
தொக்க பாதகற் குரைப்பதன் றகங்களி துளங்க
முக்க ணாயக னடியவர் மூதறிவி னர்க்கே
யிக்க தைத்திற முரைப்பது தகைமையீ தல்லால் (25)

தெள்ளு மிக்கதை யுரைத்திடிற் றீவினைச் செருக்கா
லெள்ளல் செய்பவ ரெரியழ னிரையம்விட் டேறு
ருள்ள மன்புறக் கேட்பவ ரொளிநிலா வுறுகூன்
வெள்ளை வெண்மதி வேணியன் முத்திபெற் றிடுவார். (26)

தாது துற்றிய தண்ணறு மலர்க்குழற் சயில
மாது பங்கினன் மகிழ்திருக் காளத்தி மகிமை
சூத ரோதலு மிருசெவித் துளைமடுத் தரிய
போத மாதவ ரவன்பதந் தோத்திரம் புரிந்தார். (27)

திருக்காளத்தி மான்மியம் உரைத்த அத்தியாயம் முற்றிற்று.

## 21. சிரீசயில மகிமை உரைத்த அத்தியாயம்.

### கலிநிலைத்துறை.

*மந்த மாருதங் கற்பக மலர்மது மடுத்துச்*
*சிந்தி யெங்கணுந் தவழ்சிரீ சயிலத்தின் மகிமை*
*முந்து மாதவ ரனைவருங் கேட்கமு தறிவோ*
*ரெந்தை யாகமம் பயில்புகழ்ச் சூதனுண் டிசைக்கும்.* (1)

*அலங்கு வச்சிரன் சுதர்மையென் றிசைத்திடு மவையிற்*
*பொலன்செய் பொற்றொடி புகழ்விசு வாசியென் றொருத்தி*
*நலங்கொ ணாடகம் பயின்றன ளதற்குள நயந்தே*
*யுலங்கொ டோள்வரை யிந்திர னுவகைமீக் கிளர* (2)

*மணங்க மழ்ந்திடு கருங்குழற் பவளவாய் வடிக்க*
*ணணங்கி னாட்டிய நன்றென வதிசயித் தறைந்தா*
*னிணங்கு பேரவை யெய்திய வியக்கர்கந் திருவர்*
*கணங்கொள் விண்ணவ ரெவர்களுங் களித்துரை பகர்ந்தார்.* (3)

*விழைவு றுந்திற லான்விசு வாவசு மரபு*
*தழைய வந்தவன் சுபத்திர னெனப்பெயர் தரித்தோ*
*னழகி லங்கணைக் கிழவனு மழுங்குற வமைந்தோன்*
*மொழிப கர்ந்திட வூமனுங் கவண்முக நோக்கி* (4)

*சிரமுஞ் செங்கையு மசைத்தசைத் துளங்களி திளைத்தா*
*னரம டந்தைய ரதுகுறித் தவன்முக நோக்கி*
*விரிநி லாநகை விளைத்தன ராதலால் வெள்கித்*
*தருண மாமணி யவையினைப் பொள்ளெனத் தணந்தான்.* (5)

*கவலை கொண்டனன் பேசுதற் குளத்தினிற் கருதி*
*நவைய றுங்கதிர்ச் செம்பொன்மா நகரினை நழுவித்*
*தவமு யன்றிட வொருதல நேடினன் றளர்ந்தே*
*யுவமை யில்லதோர் யானமூர்ந் தும்பரிற் றிரிந்தான்.* (6)

*திரியுங் காலையின் மல்லிகார்ச் சுனவரை தெரியக்*
*கரிய கண்டனீண் டுவப்புறுந் தலமெனக் கருதி*
*விரியும் பூந்துணர் மலர்ப்பொதும் பர்களிடை மிடைந்த*
*கிரியின் றென்புறத் திறங்கினி திருந்தனன் கெழுமி.* (7)

வாத முண்டுயர் வானவர் பருவமோர் நூறு
காதன் மிக்குறச் சிவன்கழல் கருத்தினி லிருத்தி
மாத வம்பயின் றிளைத்தன னன்னவன் வருத்த
நாத னோர்ந்தன னருள்செயத் திருவுள நயந்தான். (8)

நம்பி நீபுரி தவத்தினுக் குளநனி களித்தே
மம்பொ னூட்டின ரதிசயித் தளிப்பவர்க் களித்தே
மிம்ப ரெம்மைநீ தோத்திரம் புரியவென் றெடுத்தே
யும்பர் வாணிகொண் டுரைத்தனன் சுபத்திர னுருகி (9)

உள்ள மார்வமுற் றினியவாக் கடைந்தெடுத் துரைத்துத்
தெள்ளு நான்மறை புகழ்திருச் சயிலத்திற் சிவன்பொற்
கள்ள ருமலர்க் கழலிணை துதித்தனன் கருதிப்
பொள்ளெ னப்புகுந் தமரர்கள் பூமழை பொழிந்தார். (10)

மாக வெண்மதி மிலைச்சிய செஞ்சடை வாத
னோகை பொங்கிட வுணர்வரு மருந்தவ முயற்றி
மூகை தீர்ந்தனை யுனக்கிணை யாரென மொழிந்தார்
போக நன்னகர்க் கெழுகென வவரொடும் போனான். (11)

## அறுசீர் விருத்தம்.

சொற்றவிக் காதை யன்றி யின்னுமோர் காதை சொல்கே
னற்றவர் கேட்க வென்னச் சூதனுண் ணயந்து கூறும்
பொற்றுணர்ப் பொதும்பர் சூழு மவ்வரைப் பொருவில் கீழ்பாற்
கற்றையஞ் சடில நந்தி கருதுசா ரூபம் வேண்டி (12)

அரியவூ ணொழிந்தி யோக வளப்பரு நெறியி னூடிப்
பெருவிர னிலத்தி னூன்றிப் பெருந்தவ மிழைத்து நின்றான்
றெரிதரு கால நீடிச் சென்றபின் சென்னி விண்டே
யெரியுறு புகைகா லோடி யெழுந்தது விசும்பின் மேலும். (13)

அருந்தவப் பெருமை நோக்கி யதிசயித் தடலே றூர்ந்து
பெருந்தகைப் பரமன் கோலப் பெய்வளை யோடும் வந்தான்
றிருந்திய வருளி னோக்கி நந்திநீ தவத்தாற் றேம்பி
வருந்தினை யாது வேட்டாய் வழங்குதற் கிசைத்தி யென்றான். (14)

நிலவொளிர் சடிலி யீது நிகழ்த்தலு நந்தி யன்னோன்
மலரடி வணங்கி யெந்தாய் வழங்குசா ரூப மென்னப்
புலவுமூ விலைவே லைய னத்தகை யளித்துப் போனான்
கலைமறை முழுதுந் தேர்ந்த நந்தியுங் கயிலை சேர்ந்தான். (15)

கலிநிலைத்துறை.

கல்வி மாதவச் சூதன்மெய்த் திருவுளங் கனிந்து
வெல்லு மால்விடை யுகைத்தருள் வேதியன் மகிழு
மல்லி கார்ச்சுன மணிவரை மகிமையை வகுத்துச்
சொல்ல நான்மறை முனிவரர் தொழுதகங் களித்தார். (16)

சிரீசயில மகிமை உரைத்த அத்தியாயம் முற்றிற்று.

## 22. உருத்திரகோடி மான்மியம் உரைத்த அத்தியாயம்.

எழுசீர் விருத்தம்.

மஞ்சுதொட் டுயரு முருத்திர கோடி
மகிமையை யிடபயோ கிக்குப்
பிஞ்சுவெண் மதியப் பிளவணி சடிலப்
பிஞ்ஞகன் பேசிய வண்ணஞ்
செஞ்சொனுன் மறைதேர் முனிவர ரரிய
சிந்தையிற் களிப்புறக் கேட்க
விஞ்சைமா தவத்தின் றலைமைபெற் றுயர்ந்த
சூதமா முனிவரன் விளம்பும். (1)

மைக்கனிந் தொழுகு மணிமிடற் றமல
னிடத்தினின் மழகதி ரெனவே
முக்கணுஞ் சடையுஞ் சதுப்புய வரையு
மூரிவெங் கதி[ர்தவழ்] மழுவு
மிக்கதோர் மானும் விளங்கிட வள்ளல்
விறல்வலி கெழுமிமே தகைய
தொக்கவா னவர்க ளெவர்களும் பரவ
வுருத்திர கோடிதோன் றினரால். (2)

தோன்றிடுங் கடவு ளுருத்திரர் முகம்பார்த்
தெம்பிரான் றெடுகட லுலகி
லான்றவல் லசுரர் தம்முயிர் முருக்கி
யாருயி ரளிக்கநீ ரெனலுங்
கான்றசெஞ் சுடர்வெங் கனலினிற் புனலிற்
கடுவளி யிடத்தின்மா நிலத்தி
லேன்றிடுந் திசையிற் பொருந்தவாங் கிருந்தே
யாருயி ரினிதுகாத் தளித்தார். (3)

இன்னண மிவர்க ளுலகெலாங் காக்க
வெண்ணிலாக் கற்பங்கள் கடந்த
பின்னர்வா னவர்க ளமுதம்வாய் மடுப்பப்
பெருந்திரைப் பாற்கடல் கடைய
மன்னுமந் தரத்தை யெடுத்தன ரதன்கீழ்
வழியினூற் பிலத்துறு மசுரர்
துன்னிவந் தெவணுந் தோன்றினர் நிலனுந்
துறக்கமு நடுக்குற வதிர்ந்தே. (4)

பலபல முடியுங் கரங்களுங் கரத்திற்
பற்றிய படைகளும் வயங்க
மலையிடித் துடைத்து நெடுங்கடல் கலக்கி
மாயைக ளளவற விளைத்தே
யுலகெலாம் வருந்த வுயிர்துறந் தொழித்தா
ரிதனைவா னுலகில்விண் ணவருங்
கலகவே னெடுங்கட் கலைமகள் பதியுங்
கயிலைசென் றமலனுக் குரைத்தார். (5)

வண்டுவீழ்ந் தரற்றக் கவுட்சுவ டுடைத்து
மதமுவட் டருவிவாய்ந் தொழுகுந்
திண்டிறற் புழைக்கைக் கரியத ளுடுத்த
சிற்பர னவ்வுரைக் கிரங்கி
யண்டமுய்ந் தருளக் கோடிபே ராய
வுருத்திரர் தங்களை யழைத்து
மண்டமர் புரிந்தே யசுரரை வதைத்தீ
ரென்னலு மவர்மறுத் துரைப்பார். (6)

கலிவிருத்தம்.

அண்ணல்கே ளசுரர்க ளரிய மாதவம்
பண்ணின ரவருயிர் துறக்கிற் பாவங்க
ணண்ணுறு வகையது நவில்க வென்றனர்
கண்ணுத லொருமொழி கருதிக் கூறுவான். (7)

வஞ்சக ரசுரரை மாய்த்துப் பின்னர்நீர்
விஞ்சிய குவடுயர் வேத வெற்பினைச்
செஞ்சொனூன் மறைப்படி பூசை செய்திடி
லஞ்சிடும் பவநுமை யடைந்தி டாதென்றான். (8)

விடைகொடுத் தருளினன் விடையின் மூர்த்தியைச்
சுடர்மழு வுருத்திரர் தொழுது போயின
ரடல்கெழு மசுரரை யாவி வீட்டினர்
தடமணி வேதமால் வரையைச் சார்ந்தனர். (9)

அணிவரை யமலனை யருச்சித் தேத்தினர்
பணிநெடுஞ் சடைக்கணி பரமன் றேன்றின
னுணர்வரு ளுருத்திர கோடி யென்னவே
மணிவரைக் கொருபெயர் வழங்கி னனரோ.

அருட்பெரு குலகரு ளாசிக் கப்பெயர்
தெரித்துரை மொழிந்தனன் சேணிற் செந்தழல்
பெருத்திடும் வடிவெனப் பிறங்கி நின்றன
னுருத்திர ரனைவரு மதனி லொன்றினர். (11)

ஆதலா லவ்வரை யடைந்து பண்ணிய
மாதவம் வேள்விகள் வழங்கு தானங்க
ளோதிடி லொன்றொரு கோடி யாகவே
மேதகு பலநனி விளங்கி யோங்குமால். (12)

அன்னமால் வரையிடத் தரனை வந்தனை
பொன்னரு மலர்கொடு புரிந்து போற்றியே
சின்மய மடைந்திடு தேவர் மாதவ
ருன்னருந் தொகையினை யுரைக்கற் பாலதோ. (13)

கருத்தினி லிருங்கதி கருதி டாதிருள்
விரித்திடு மலத்தின ரேனும் விண்டொடு
திருத்தகு மவ்வரை சிவணி லன்னவ
ருருத்திர ராவரென் றுரைக்கு நான்மறை. (14)

கலிநிலைத்துறை.

நீருத்த னென்வினைப் பிறவியை நிலைகெட நீக்கு
மொருத்தன் மேவிய வுருத்திர கோடியின் மகிமை
யருத்தி யோடுமெய்ச் சூதமா முனிவர னறைய
விரித்த செஞ்சடை யருந்தவர் தமதுளம் வியந்தார். (15)

உருத்திரகோடி மான்மியம் உரைத்த அத்தியாயம் முற்றிற்று.

## 23. கோதாவிரி மகிமை உரைத்த அத்தியாயம்.

கலிநிலைத்துறை.

கொழித டந்திரை புரட்டுகோ தாவிரி மகிமை
யிழுது மிழ்ந்திடு கொழுந்தசை யெறிசுட ரிலைய
மழுவு யர்த்தவன் குமரனுக் குறைதரும் வண்ண
மொழிவ லென்றுமெய்ச் சூதமா முனிவரன் மொழியும். (1)

பாடல் வண்டுழு மிதழியப் படர்சடைப் பரம
னுட லந்துணைப் பதந்தொழ வறுமுக னெந்தாய்
தேடு வண்புகழ் விந்தையங் குலவரைத் தென்பா
னீடு தீர்த்தங்க ளெத்துணை யுளவென நிகழ்த்த (2)

செங்க ணேறுடைச் சிற்ப னிகழ்த்துவன் றிளைக்கும்
பொங்கு தெண்டிரை புரட்டுகோ தாவிரி புகலும்
பங்க மற்றுயர் பயோட்டினி பரக்கும்வீ மாதி
துங்க பத்திரை யாதிய வுளதொகுத் துரைக்கில் (3)

உள்ளு தீர்த்தங்கள் பலவினு மிகவுமுத் தமமாந்
தெள்ளு தெண்டிரை சுருட்டுகோ தாவிரித் தீர்த்தம்
விள்ளு மன்னதின் பெயர்விரி கவுதம கங்கை
தள்ள ருங்கதி தரும்வசிட் டிணவிமா கேசி. (4)

பூத லம்புகழ் தாவரு புராமியென் றுரைப்ப
ரீதி லாடுந ரிருநதி முத... வழிப்போர்
மாத ராதிய பிதிர்க்களை வந்தனை புரிவோர்
தீதி லாதுயர் சிவகதி யடைவது திண்ணம். (5)

எனலு மெம்பிரான் றிருமுக நோக்கியீ ராறு
கனக வெற்புறழ் தடம்புயன் பின்னருங் கழறு
மனைய மாநதி யுற்பவம் பகர்தியென் றறையப்
புனையுந் திங்களம் புரிசடைப் புங்கவன் புகலும் (6)

திருந்து நான்மறைக் கவுதமன் றெண்டகா வனத்தி
லருந்த வம்புரிந் திருந்தன னத்தவ நோக்கிப்
பெருந்த கைக்கம லாலயப் பிரமனுங் கடைந்தான்
பரிந்து மாதவ னவன்றனை யன்புறப் பணிந்தான். (7)

பரவு மாமுனி மலர்முக நோக்கினன் பதும
னரிய நற்றவம் புரிந்ததற் கதிசய மடைந்தேன்
கருது நல்வரம் யாதுநீ விழைந்தனை கழறிற்
பெரிதி னவ்வர மளிப்பன்யா னுனக்கெனப் பேச (8)

ஞான மாமுனி நவிற்றுவ னுயக வெனக்கிக்
கானம் வித்திடுஞ் செந்நெலோ ராறுகன் னலிற்காய்த்
தான நற்றிரம் விளைந்திட வேண்டுமென் றறைய
வான நான்முக னவ்வரம் வழங்கினன் மறைந்தான். (9)

சதுமு கத்தவன் போனபின் றண்ணளி முனிவன்
புதிய செந்நெலப் புனத்திடை நாடொறும் பொலியக்
கதிரு தித்திடுங் காலையில் விதைத்தறு கடிகை
விதிமு றைப்படி சென்றிடு மளவையில் விளைய (10)

அறுத்து வைகளைத் தந்நெலை யரிசிசெய் தசனஞ்
சிறுத்த முல்லைமெல் லரும்பினிற் சமைத்தெவர் செவினு
மறுத்தி டாவறு சுவையொடும் வேண்டுவ வழங்கி
நிறைத்த வன்புமீக் கொழுந்துற நெடிதறம் வளர்த்தான். (11)

கருணை மாதவ னின்னண மியற்றிடுங் காலந்
தரையி னுருயி ரீட்டிய பவந்தலைப் படலாற்
றிரைநெ டுங்கடற் படிந்துதெண் ணீர்நனி தேங்கப்
பருகி வான்மழை பொழிந்தில பன்னிரு பருவம். (12)

ஆத லாற்றிரை புரட்டுநாற் கடல்களு மன்றிப்
பேது யர்நதி கூவல்கள் பெருக்கற வறந்த
மேதி னிப்பிறந் தவர்கள்பைங் கூழ்விளை வின்றி
யேத முற்றெழு பசியினு லிலக்கமற் றிறந்தார். (13)

சுரபி மும்மதந் துளும்பிய துளைக்கைமால் யானை
புரவி யொட்டகம் வெங்கா மிவையெலாம் பொசித்து
வரைத லின்றியே நாரையு மனிதர்வாய் மடுத்தார்
விரவு வெம்பசி தேவருங் கடப்பரோ விளம்பில். (14)

இன்ன காலையிற் றுருகா வனத்திருந் தவத்தோர்
மன்னு நான்மறைக் கவுதம னிருக்கைபோய் வதிந்தா
ரன்ன வத்திர மகிழ்வொடு மளித்தரு மகவிற்
பொன்னெ டுஞ்சடை முனிவர னவர்களைப் புரந்தான். (15)

அறுசீர் விருத்தம்.

இப்பரிவிற் சிலகால முனிவர்கவு தமனிருக்கை யிருந்த பின்னர்
மைப்புயல்வா னனிபொழிந்து மேதினியின் வரைப்புவள மலிந்து மல்க
வொப்பரிய வரமுனிவர் தங்களொழி லிருக்கைபுக வொருப்பட் டெண்ணித்
துப்புறமுஞ் சடைமுனிவன் சாண்டிலிய னெடும்வினவச் சொல்வ னன்னோன்,

வானமுகில் வளஞ்சுரவா வறுங்கால நமக்கடிசில் வழங்கிக் காத்த
ஞானமுனி கவுதமனே தாதையவற் கேளாம னடப்ப தாமோ
வானவருந் தவற்கியம்பி யவனனுப்பப் போவதுவே யதிர்ந்து வீசும்
பேனநெடுந் திரைக்கடல்சூழ் பேருலகின் முறைமையெனப் பேசி னனே.(17)

இனையமொழி கேட்டதற்பின் மாதவத்தோர் கவுதமனல் லினிமை பேசி
மனமுருகு மாதரவா லேகும்வகை மறுப்பனென மதித்துத் தீய
நினைவினராய் மாயையினு லொருபசுவைப் படைத்துவிளை நெல்லிற் றூண்டிப்
புனமலியுஞ் சாலியையோர் பசுக்கறிப்ப தெனமுனிபாற் புகன்றூர் மாதோ.(18)

துங்கமுனி வரர்மொழிந்த மொழிகேட்டுக் கவுதமன்போய்ச் சுரவி தன்னைச்
செங்கையினிற் புனன்மடுத்து வீசியகன் றிடும்படிக்குச் செய்ய வந்தப்
பைங்கணெடும் பசுவலறி விழுந்துபதைத் துயிர்துறந்த பான்மை நோக்கி
யங்கமெல்லாம் விதிர்விதிர்ப்ப வுளம்பதறி மாதவனு மறிவு சோர்ந்தான். (19)

இன்னணமப் பசுவிறந்த தகைநோக்கி முனிவரர்சூ ழிரக்கத் தோடு
மன்னுநெடுஞ் சுரவியினை வதைத்தீரும் முழையினிநாம் வதியே மென்னப்
பன்னியெடுத் துரைத்தகலும் பரிசினைப்பார்த் தவர்கள்பதம் பணிந்து போற்றி
முன்னமறித் துமைப்பரவு மெளியனைவிட் டகலுவது முறைமைத் தாமோ. ()

என்றுரைத்து மறுத்திடலும் வரமுனிவ ரெடுத்திசைப்ப ரிரங்கா தர்வைக்
கொன்றபவம் போமளவு மும்முழையா மிருந்தடிசில் கொள்ளே மென்றூர்
துன்றுநெடுஞ் சடைமுனிவன் கவுதமன்மீண் டினிதறையுஞ் சுருதி யோர்ந்து
நன்றுதரும் பரிகார மிதற்குரைத்தே யிருக்குதிர்நீர் நயந்தீங் கென்ன (21)

நற்றவத்தோர் கங்கையினைக் கொணர்ந்திறந்த பசுவுடல நனைந்தா லுய்யும்
பொற்பினெடு மதுவிளக்க வெனவுரைத்துத் தமதிருக்கை போவ தானர்
கற்றமறை முறைதெரியுங் கவுதமனீங் கிதுவரக்கா ரணமே தென்றே
வுற்றறிய ஞானவிழி யாற்றெரிந்திவ் வஞ்சமெல்லா முணர்ந்தா னன்றே. (22)

கமையின்வடி வெனமொழியுங் கவுதமன்மா தவர்புரிந்த கபடத் தாலே
யமைவரிய சினந்திருகித் தலைக்கொளுந்தப் புருவநெரித் ததரந் துள்ள
விமைகருகப் பொறிசிதறிச் சிவந்திருக ணெரியழல்விட் டெரிக்கக் காந்தித்
தமரநெடுங் கடனுன்குஞ் சுவறியவெம் புகைவெளிபோய்த் தவழ்ந்த தன்றே.()

மாயையினாற் பழிவிளைத்த மாதவத்து வரமுனிவர் வதன நோக்கித்
தேயுமிளம் பிறைமுடித்தோன் றிருவடியி லவனுறையுந் திருவிம் பத்தி
லாயுநெறி யஞ்செழுத்தி னுமத்தி லருண்ஞானத் தடைவிற் சேர்ந்த
காயுமழற் கதிருறிஞ்சு சினகரத்திற் கண்டிகையிற் கருது நீற்றில் (24)

அரனடிய ரிடத்திலவன் றனையிலிங்கத் தருச்சிக்கு மடைவிற் றெய்வச்
சுருதியினின் மிருதியினிற் புராணத்தி னேயமறத் துறந்து தீமை
புரியுமரு ளுளம்பித்துப் புராரியிலு மேலாய பொருளென் றெண்ணிக்
கரியவனுக் காளாகிக் கருத்திலுறு முணர்வழிந்து கணையத் தோளில் (25)

சங்கமொடு சக்கரமுத் திரைதரித்துக் கொழித்தரைத்த தவள மண்ணால்
வெங்கொலைய சூலம்போ லிளம்பிறைபோ னெற்றியினில் விளங்கச் சாத்திப்
பங்கமுறும் பாஞ்சராத் திரமுதலா மதங்கணனி பயின்று வெம்மை
பொங்குகொடுங் கழிக்குறும்பு கலித்துநெடும் பசியினுடல் புலர்ந்து வாழ (26)

தந்தைவிருப் புறுதாயர் தீர்த்தங்க ளரிதியற்றுந் தரும மீன்ற
மைந்தர்மணந் திடுமாதர் தம்மையெல்லாம் விலைகூறி வருந்தி விற்று
முந்துபொருள் வாங்கியுண வருந்துதிர்நுங் குலத்தினது முறையே நாளும்
வந்துபிறப் பவருமின்ன தகையடையக் கடவிரென வலித்தான் சாபம். (27)

கலிவிருத்தம்.

கோதி லாத்தவக் கோதமன் கூறிய
பேதி யாக்கொடுஞ் சாபம் பிடித்திடத்
தீது ளர்ந்திருஞ் சிந்தை தளர்ந்தரு
மாத வத்தினர் வாடினர் போயினர். (28)

முனிவர் போனபின் கோதமன் மீண்டுவெண்
பனியி மையப் பருப்பதப் பாங்கரிற்
கனிவி னோடிருங் கங்கை கொணர்ந்திட
வினிய பூசை யெமக்குப் பரிவொடும் (29)

பருவ மோர்சதம் பண்ணிய பின்னர்யாந்
துரிச றுத்த முனிவன்முன் றோன்றிநீ
கருது நல்வரம் யாது கழறுதி
தருவ லென்னத் தனிமுனி சாற்றுவான். (30)

சடையிற் றங்கிய கங்கை தருகெனப்
புடவி கொண்டவன் போத வொருதுளி
கடுக மாதவற் கீயவக் கங்கைநீ
ரடைவிற் பின்செலப் போயின னந்தணன். (31)

கோவி றந்த தலத்திற் கொணர்ந்துநீர்
மேவ வன்னதின் மேனி நனைத்தன
ஞெவெ ழுந்தத சைந்தடி யிட்டதாற்
றேவ ரீட்டந் திரண்டனர் பாங்கெலாம். (32)

அறுசீர் விருத்தம்.

இறந்திடும் பசுவி ஞவி திரும்பவு மெய்தி வாழ
வறந்தருந் தவத்தா லீச னணிநெடுஞ் சடையிற் கங்கை
சிறந்திடக் கொணர்ந்தாய் நின்போற் சிந்தையின் மயக்கந் தீரத்
துறந்தவ ரெவர்க ளென்ன முனிவனைத் துதித்தார் மாதோ. (33)

மாதவன் கொணர்ந்த தெய்வ வாநதிப் புனலின் மூழ்கிப்
பூதலங் குலுங்க வார்த்துப் புனிதவா னவர்க ளெல்லாம்
பேதியா ததற் கிரண்டு பெயர்பெரி துவகை யோடுங்
கோதம கங்கை கோதா விரியெனக் கூறிப் போனார். (34)

இத்திறங் கடுக்கை வேணி யெம்பிரா னியம்ப வள்ளி
முத்தலர் களபப் பொம்மன் முலைக்குவ டுழக்குந் தோறுங்
கொத்தலர் கடம்பு விண்டு குளிர்நறுத் திவலை தூற்றும்
பத்திரு காத்துச் செவ்வேற் பண்ணவன் மகிழ்வு கூர்ந்தான். (35)

பொறியா வணியு மெந்தை புரிசடை யிருந்து போது
மறிதிரை சுருட்டுங் கோதா விரிநதி மகிமை முற்று
நெறிதரு தவத்துச் சூத னிகழ்த்தலு முனிவோர் தூய
வறிவுவட் டெடுக்குஞ் சிந்தை யருட்களி துளங்கி ஞரே. (36)

தண்ணளி கொழிக்கு நாதன் சங்கர விலாசந் தன்னி
லெண்ணுமோ ரெழுத்தே யேனு மிதையமன் பிளகிக் கேட்போர்
பண்ணரும் பாவ மீட்டு பாதகப் புலைய ரேனும்
புண்ணிய ராகி யீசன் பொன்னடிக் கமலஞ் சார்வார். (37)

கோதாவிரி மகிமை உரைத்த அத்தியாயம் முற்றிற்று.

சங்கர விலாசம் முற்றிற்று.

# பெயர் அகராதி.


| பெயர் | பக்கம் |
|---|---|
| அக்கினி | 101 |
| அகத்தியன் | 96, 171, 178 |
| அகலிகை | 155 |
| அங்கிரா | 46, 67 |
| அணிலாதன் | 78, 89, 97 |
| அத்திரி | 46, 47 |
| அந்தகன் | 32, 34, 37 |
| அருந்ததி | 33, 153 |
| அயிராணி | 24 |
| அறுபத்து மூவர் | 3 |
| இடபயோகி | 200 |
| இந்திரன் | 11, 24, 174 |
| இந்திரத்துய்மன் | 147 |
| இரணியவன்மன் | 14 |
| இராகவன் | 150 |
| இருபு | 67 |
| இளையபிள்ளையார் | 2, 192 |
| ஈசானதேவன் | 4 |
| உபமன்னியர் | 7, 16, 22 |
| உமை | 99 |
| உரோமசர் | 156 |
| கசகன்னர் | 120 |
| கண்ணப்பன் | 6 |
| கருணன் | 6, 151 |
| கலைமகள் | 1, 4, 36 |
| கவுதமன் | 32, 46, 96 |
| கற்கி | 93 |
| காலகேயர் | 172 |
| காலப்பிரபு | 172 |
| காலவன் | 116 |
| காளாமுகர் | 120 |
| கிரணவிந்து | 147 |
| குபன் | 52, 56, 62 |
| குபேரன் | 107 |
| கோசிகன் | 46, 179 |
| சங்குகன்னன் | 118, 120 |
| சத்தியஞானி | 3 |

| பெயர் | பக்கம் |
|---|---|
| சத்தியத்துவசன் | 6, 109 |
| சதானந்தயோகி | 6, 133 |
| சலாகை | 151 |
| சன்னிபாதன் | 34 |
| சனகர் | 67 |
| சனற்குமாரன் | 8, 28, 43 |
| சாண்டில்லியன் | 206 |
| சார்த்தர் | 163 |
| சித்திரகுத்தன் | 148, 150 |
| சிலாதன் | 63 |
| சுக்கிரன் | 90 |
| சுதரிசன் | 33 |
| சுத்துய்மினன் | 6, 143, 149 |
| சுந்தரர் | 2, 127 |
| சுபத்திரன் | 199 |
| சுயசை | 77 |
| சுவவியாதன் | 148 |
| சுவாயம்பு | 98 |
| சுவேதன் | 5, 37 |
| சூதமுனி | 4, 7, 8 |
| சேரமான் பெருமான் | 14 |
| சோமநாதன் | 163 |
| ஞானசம்பந்தர் | 2 |
| தக்கர் | 67 |
| தக்கன் | 104 |
| தசரதன் | 150 |
| தண்டி | 120 |
| தத்துவநாதன் | 4 |
| ததீசி | 5, 50, 67 |
| தருதமுனி | 104 |
| தருமன் | 135 |
| தனஞ்செயன் | 151 |
| தாம்ரவத்திரர் | 120 |
| தாரகாசுரன் | 192 |
| தாருகருஷிகள் | 43 |
| தாணியபட்டன் | 6, 168 |
| திரிசங்கு | 179 |

| பெயர் | பக்கம் |
|---|---|
| திருமாளிகைத்தேவர் | 3 |
| திவ்வியை | 92 |
| துருவாசர் | 31, 89, 96 |
| துற்சகன் | 14 |
| துன்மதன் | 13 |
| நகுடன் | 32 |
| நந்தி | 6, 8, 21, 26 |
| நாரதன் | 80 |
| நாவுக்கரசர் | 3 |
| நிரம்பவழகியர் | 3 |
| பரவையார் | 2 |
| பாண்டியன் | 3 |
| பார்க்கவன் | 55 |
| பார்வதி | 2 |
| பிரகாரசேனர் | 120 |
| பிரமன் | 11, 174 |
| பிருகு | 6, 81, 46 |
| பிருங்கி | 6, 112 |
| புசக்கிருது | 67 |
| புலகன் | 46, 67 |
| புலத்தியன் | 46 |
| பூம்பாவை | 2 |
| மயூரகர் | 120 |
| மரீசி | 18 |
| மன்மதன் | 6, 13 |
| மாகாளேசன் | 109 |
| மாண்டவியர் | 32 |
| மாணிக்கவாசகர் | 3 |
| மார்க்கண்டன் | 139 |
| மாவலி | 88 |
| யாதவர் | 51 |
| வசிட்டன் | 16, 26 |
| வசுக்கள் | 32 |
| வசுசுருதன் | 6, 104 |
| வயிரவன் | 82 |
| வள்ளி | 208 |
| வளவன் | 11 |
| வாமனன் | 88 |
| வாமசேனர் | 120 |
| விச்சுவசித்தர் | 161 |
| விசுவாவசு | 199 |
| விசையைநாரணன் | 5 |
| விட்டுணு | 78 |
| விரோதர் | 120 |
| வியாக்கிரபாதர் | 75 |
| வியாசன் | 8, 79 |

# இடப்பெயர் அகராதி.


| பக்கம் | பெயர் | பக்கம் | பெயர் |
|---|---|---|---|
| அத்திகிரி | 189 | பிரபாசம் | 106 |
| ஆரூர் | 6, 128 | பிரயாகை | 106 |
| இராசை | 7 | புட்கரம் | 106 |
| இலங்கை | 150 | பெரும்பற்றப்புலியூர் | 13 |
| உச்சீனி | 109 | மண்டலேசுரம் | 106 |
| உருத்திரகோடி | 7 | மயிலை | 2 |
| கமலாலயம் | 128 | மல்லிகார்ச்சுனம் | 199 |
| கலிங்கம் | 116 | ஏமகூடம் | 130 |
| காசி | 15, 31 | கயிலை | 170 |
| காஞ்சி | 182 | சிரீசயிலம் | 6, 130 |
| காளத்தி | 6 | மந்தரம் | 143 |
| காஷ்மீரம் | 195 | மேரு | 170 |
| கீகடம் | 120 | விந்தம் | 161 |
| குமரகோட்டம் | 194 | கங்கை | 81, 120 |
| குருகேத்திரம் | 106 | காவிரி | 127 |
| கெயை | 106 | கெண்டகை | 106 |
| சவுராட்டம் | 167 | கோதாவிரி | 7, 148 |
| சிதம்பரம் | 13 | திரிபதகை | 116 |
| சுவேதத்தீவு | 96 | துங்கபத்திரை | 204 |
| தாருகாவனம் | 28 | நருமதை | 160 |
| திருமறைக்காடு | 181 | பவநாசினி | 152 |
| தில்லை | 13 | பொருனை | 160 |
| நைமிசாரணியம் | 106 | பொன்முகரி | 196 |
| பயோட்டிணி | 204 | வீமா | 204 |
| பிரதிட்டானம் | 147 | | |


# நரகவகை.


| பெயர் | பக்கம் | பெயர் | பக்கம் |
|---|---|---|---|
| அசிசித்திரம் | 136 | கும்பிகிரயம் | 136 |
| அதிகோரம் | 140 | கோரகிரயம் | 136 |
| அதோமுகம் | 137 | சன்மலி | 136 |
| காலசூத்திரம் | 136 | ரவுரவம் | 136 |
| காளகிரயம் | 137 | | |

# பிழைதிருத்தம்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 44 | 4 | பாய | பாயு |
| ,, | 5 | கரந்தக் | கரந்த |
| 48 | 3 | வெருக்கொள் | வெருக்கொள |
| 56 | 1 | (பக்க எண் 56 இடமாறுக) | |
| 64 | 17 | பிரம்னும் | பிரமனும் |
| 66 | 11 | லாமேர | லாமோ |
| 70 | 27 | வருந்தந் | வருத்தந் |
| 75 | 2 | கலிவிருத்தம் | கொச்சகம் |
| 80 | 15 | ஞன்கென | ஞன்கென |
| 118 | 9 | பிறிதொறு | பிறிதொரு |
| 121 | 14 | தழைக்கு | தழைக்க |
| 122 | 16 | தாஞன் | தாஞள் |
| 123 | 4 | தென்ன | கென்ன |
| 124 | 28 | மெண்ணிலர | மெண்ணிலா |
| 126 | 10 | கபிலே | கயிலே |
| 128 | 15 | மிக்லரசே | மிகலரசே |
| 135 | 21 | புனைர | புன்னர |
| 141 | 6 | பதர்க் | பதகர்க் |
| 151 | 7 | மெணறிவை | மெண்றிவை |
| 157 | 24 | வார்த்தையை | வார்த்தையைப் |
| 176 | 6 | தொடு | தொடு |
| 179 | 27 | பொரும்பர | பொரும்பா |
| 181 | 28 | புடைப்ப | படைப்ப |
| 190 | 11 | கச்சிய | கச்சி |